# பூந்துணர்

கலை இலக்கிய சஞ்சிகை

## நறவம் – 06

2016



வெளியீடு

பூநகரி பிரதேச
கலாசாரப் பேரவை

பிரதேச செயலகம்
பூநகரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூந்துணர்

## நறவம் - 6

பிரதம ஆசிரியர்

திரு. சி. சூரியதாஸன்

துணை ஆசிரியர்கள்

திரு. ஞா. போல் அன்ரன்

திருமதி. ரேணுகா சக்திதாஸ்

PUBLIC LIBRARY KARACHCHI KILINOCHCHI
015173

வெளியீடு :

பூநகரி பிரதேச கலாசார பேரவை,

பிரதேச செயலகம்,

பூநகரி.

2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்


| | | |
|---|---|---|
| சஞ்சிகையின் பெயர் | : | பூந்துணர்நறவம் – 06 |
| அட்டைப்படம் | : | திரு. பா. முகுந்தன்,<br>பிரதேச செயலகம், பூநகரி |
| பதிப்புரிமை | : | பூநகரி பிரதேச கலாசாரப் பேரவை,<br>பிரதேச செயலகம், பூநகரி. |
| முதலாவது பதிப்பு | : | நவம்பர்– 2016 |
| பிரதிகள் | : | 300 |
| பக்கங்கள் | : | 310 +xvii |
| வெளியீடு | : | பூநகரி பிரதேச கலாசாரப் பேரவை,<br>பிரதேச செயலகம்,<br>பூநகரி. |
| அச்சுப்பதிப்பு | : | ஸ்ரீமாருதி பிறிண்டேர்ஸ்,<br>ஆனைப்பந்தி |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Source: Department Of Survey

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Rise to Serve · நிறைதரு பணிபுரி · පිරුන් සේවාවන් ඉටුකරමු

Divisional Secretariat · பிரதேச செயலகம்-பூநகரி · ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராடுங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுயிரும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா எழுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

ஆக்கம்

**- திருமதி மனோன்மணி சுந்தரம்பிள்ளை -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இருப்பவர்கள், இடமிருந்து வலமாக : திருமதி.ச.சர்மிலா (செயலாளர்), திரு.இ.செல்வராசா (உப செயலாளர்), R.C.அமல்ராஜ் (உதவி பிரதேச செயலாளர்), சி.ச.கிருஸ்ணேந்திரன் (பிரதேச செயலாளரும், பேரவைத்தலைவரும்), திரு.பி.பிரேமச்சந்திரன் (உள்ளகக் கணக்காளர்) திரு.கா.கார்த்திகேசு (பேரவை உப தலைவர்) திரு.த.ஜெகநாதன் (பேரவை நிர்வாக உறுப்பினர்)

நிற்பவர்கள் இடமிருந்து வலமாக : திருமதி.ப.கிருஜா (இந்து கலாசார உத்தியோகத்தர்), திரு.எஸ்.கனகராசா (பேரவை நிர்வாக உறுப்பினர்), திரு.எஸ்.ஸ்ரீவனபன் (பேரவை நிர்வாக உறுப்பினர்), திரு.எஸ்.சரண்பன், (பேரவைப் பொருளாளர்), திருமதி.S.சுகந்தினி (பேரவை நிர்வாக உறுப்பினர்), செல்வி.V.கோபிகா (பேரவை நிர்வாக உறுப்பினர்) திருமதி.ம.கவிதா (பேரவை நிர்வாக உறுப்பினர்), திரு.சி.யசிந்தன் (பேரவை நிர்வாக உறுப்பினர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச கீதம் – பூநகரி

சந்தம் :- தனனதன தனனதன தனன தான
தானதன தானதன தானா!

**பல்லவி**

பசுமை பொங்கி பசிதுரத்தும் வயலும் - தெங்கு
பனைகள் அரண் அமைக்க நீளும் கடலும்
சிந்துநடை கலை மலியும் தலமும் - கொண்டு
சந்ததமும் பூநகரியில் புகழ் ஒளிரும்

**அனுபல்லவி**

வாழிய பூநகரி வளமுடன் வாழிய
வையகம் போற்ற வளர்ந்தெம்மை ஆளுக!

**சரணங்கள்**

சோழர்குலக் குறுநிலமாம் அன்று எங்கள்
தொல்பெருமை சொல்லும் கோட்டை இன்று!
வாழும் கல்வி.... கேள்வி ஞானம் வென்றுதமிழ்
வாசல் வயல் கடலில் இன்றும் உண்டு
(வாழிய)

பரம்பரை மரபும் வழிபாடும் - பார்வை
பார்த்தல், கைமருந்து, கிராம வாழ்வும்
இறங்குதுறை கேந்திர முக்கியமும் - கொண்ட
இயற்கையோடு இணைந்தெம் வாழ்வும் நிமிரும்! (வாழிய)

பூநகரி மொட்டைக் கறுப்பன் என்றால் - இன்றும்
பொன்மலையாய்க் குவியும் மணல்கண்டால்
ஊரின் புகழ்... உலகறியும் தன்னால் - நாங்கள்
உயர முயன்றுழைத்திடுவோம் இன்நாள் (வாழிய)

ஆக்கம்

**த. ஜெயசீலன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு

1. **திரு. சி. ச. கிருஸ்னேந்திரன்**
   பிரதேச செயலரும், கலாசார பேரவைத் தலைவரும்,
   பிரதேச செயலகம், பூநகரி.

2. **திரு. R.C. அமல்ராஜ்**
   உதவிப் பிரதேச செயலர்,
   பிரதேச செயலகம், பூநகரி.

3. **திருமதி சர்மிளா சுசிகுமார்**
   கலாசார உத்தியோகத்தர்,
   பூநகரி.

4. **திரு. சி. சூரியதாசன்**
   பிரதம இதழாசிரியர்,
   பூநகரி.

5. **திரு. ஞா. போல் அன்ரன்**
   துணை இதழாசிரியர்,
   பூநகரி.

6. **திருமதி சக்திதாஸ் ரேணுகா**
   துணை இதழாசிரியர்,
   பூநகரி.

7. **திரு. கா. குலசேகரம்**
   கலாசார பேரவை உறுப்பினர்,
   பூநகரி.

8. **திரு. கு. குகேந்திரன்**
   கலாசார பேரவை உறுப்பினர்,
   பூநகரி.

9. **திரு. பத்மராசா**
   கலாசார பேரவை உறுப்பினர்,
   பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூந்துணர் சஞ்சிகையின் மலர்க்குழுவினர்



நிற்பவர்கள் , இடமிருந்து வலமாக : திரு.க.பத்மராசா, திருமதி.ச.றேனுகா (துணைஆசிரியர்) திருமதி.ம.கவிதா

இருப்பவர்கள் இடமிருந்து வலமாக : திரு.எஸ்.சூரியதாசன் (பிரதம ஆசிரியர்), திரு.ஞா.போல்அன்ரன் (துணை ஆசிரியர்), திரு.R.C.அமல்ராஜ் (உதவி பிரதேச செயலாளர்), திரு.சி.ச.கிருஸ்ணேந்திரன் (பிரதேச செயலாளர்) திரு.பி.பிறேமச்சந்திரன் (உள்ளகக் கணக்காளர்) திரு.கா.குலசேகரம், திரு.கே.சுகேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நறவத்திற்கோர் அறிமுகம்

பண்பாடுகளின் உறைவிடமான வன்னி மண்ணின் நுழை வாயிலாகத் திகழும் புலநகரி நன்னகர் மண்ணில் முதுசங்களைப் பேணிப் பாதுகாக்கும் பூநகரிப் பிரதேச கலாசாரப் பேரவை யானது ஆண்டுதோறும் பிரசவிக்கும் இம்மலரினுள் பெருமை பேசும் பல விடயங்களை தொகுத்தளிக்கும் இப்பணியினுள் பிறந்து தவழ்ந்து வீறுநடை பயிலும் நறவம் - 06 ஆனது ஆசிரியர் குழாமினும், நலன்விரும்பிகள், பிரதேசத்தின் விருட்சங் களும் விழுதுகளும் உயர்நிலைக் கல்விமான்களும் எழுத்தாணி கொண்டு பல அறிவுத் தேடல்களை, பண்பாட்டுச் சிதைவுகளை எதிர்காலத்திற்குக் கையளிப்பதற்காக ஆக்க இலக்கியங்களாக வளங்கியுள்ளமையானது பெருமைக்குரியது.

எழுத்தியல் வடிவத்தின் தனித்துவத்திற்குள் அகப்படத் துடிக்கும் நறவம் - 06 ஆனது வரலாறு, புவியியல், அரசியல், அறிவியல், பொருளாதாரம், இலக்கிய நோக்கு, சமய நோக்கு, வைத்தியம், பண்பாடு எனும் தொனிப்பொருட்களில் கவிதை நயத்திலும் உரைநடை வடிவிலும் தமிழர் தம் பண்பாட்டையும் பூநகரிப் பிரதேசத்தின் தனித்துவத்தினையும் பல பார்வைகளில் வெளிக்கொண்டு வருவதையிட்டு மனமகிழ்வடைகிறோம்.

இவ்வரும் பணியானது இனிதே சிறப்புப் பெற்று வளர்ச்சி யுறுவற்கு வாய்ப்பளித்தோர்க்கும் கைகொடுத்தோர்க்கும் நன்றிகள் கூறுவதோடு எதிர் காலத்தில் இவ்வாக்க இலக்கியங்கள் கடல் கடந்தும் செல்வதற்கு வழிவகுக்க வேண்டு மெனக் கூறுவதோடு உள்நுழைவதற்கு உணர்வுகளைத் தேடு வீராக.

- நூலாசிரியர்கள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின் வாழ்த்துச் செய்தி

பூநகரிப் பிரதேச கலாசாரப் பேரவையால் வருடாந்தம் வெளியிடப்படும் **'பூந்துணர்'** மலர் வெளியீட்டுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இம்மலரானது பூநகரிப் பிரதேசத்தில் கலை, கலாசார, பண்பாடு, நம்பிக்கைகள், சடங்குகள், இடப்பெயர்கள், பழமொழிகள், தொல்லியல் வரலாறுகள், உணவு நடைமுறைகள், வைத்திய முறைகள், நாட்டார் நடைமுறைகள், பிரதேச ஆலயங்களின் அற்புதத் தன்மைகள் முதலான பல்வேறு தகைமைகளையும் வெளிப்படுத்தி ஆவணப்படுத்தும் நோக்குடன் வெளிவருகின்றது.

காலத்தின் தேவை அறிந்து முன்னெடுக்கப்படும் இம் முயற்சியானது எழுத்தாளர்களுக்கு களம் அமைத்து கொடுப் பதுடன் பிரதேச அபிவிருத்தியின் முக்கிய பதிவாக இருக்கும் என்பது பேருண்மையாகும். இம்மலரானது தொடர்ந்தும் வெளி வர வேண்டுமென எல்லாம்வல்ல இறைவனை வேண்டி இச் செயற்பாட்டினை முன்னெடுத்து வரும் பிரதேச செயலர், கலாசார உத்தியோகத்தர் மற்றும் கலாசாரப் பேரவையினர் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இ. ரவீந்தரன்**
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாவட்ட அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

ஆல்போல் தழைத்து அறுகு போல்
வேரூன்றி கலைஒளி வீசும்
பூந்துணர்வாழி பல்லாண்டு!

நீர்வளமும் நிலவளமும் கொண்டு கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப்பிரதேசம் விளங்குகின்றது. இப்பிரதேசத்தின் ஊற்றாக கலாசாரப் பேரவையினால் வருடாவருடம் வெளியிடப்படுகின்ற பூந்துணர் நூலுக்கு வாழ்த்துச் செய்தி தெரிவிப்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இலக்கியம் காலத்தின் கண்ணாடி என்பதனால் குறித்த காலத்தின் கலாசாரம், பண்பாடு மற்றும் சமூக விழுமியங்களினை உயிர்ப்புடன் வெளிக்காட்டி நிற்கின்றது. கலைகளும் அவற்றினை வளர்த்தெடுக்கும் கலைஞர்களினதும் கலாமன்றங்களினதும் பங்களிப்பு அளவிடமுடியாதவை. இவை உணர்வுகளின் ஊடாக ஆழ்ந்த அவதானிப்பின் அடிப்படையிலேயே இரசித்து வெளிப்படுத்தக் கூடியதொன்று.

இளம் தலைமுறையினரிடையே மறைந்து வரும் கலைகள் அதனோடன்றிய கலாசார நெறிமுறைகள் காலத்தால் அழியாது வளர்த்தெடுப்பதற்குரிய பாலமாக பூநகரிப் பிரதேச வாழ் கலைஞர்களுக்கு இப்பூந்துணர் நூல் கிடைக்கப்பெற்றுள்ளமை ஒரு வரப் பிரசாதமே. இதனை தக்க முறையில் பயன்படுத்துவது படைப்பாளிகள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

பூந்துணர் நூல் சிறப்பாக வெளிவர அயராது சேவை செய்த பிரதேச செயலர் மற்றும் கலாசார பேரவையின் அர்ப்பணிப்புமிக்க சேவையினைப் பாராட்டி பூந்துணர் வரலாற்றில் தடம்பதிக்க மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சுந்தரம் அருமைநாயகம்**
அரசாங்க அதிபர் / மாவட்ட செயலர்
கிளிநொச்சி மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

காலவோட்டத்தின் மத்தியில் ஒவ்வொரு காலங்களிலும் கலைகளின் தேவைகள் நன்கு உணரப்பட்டுள்ளன. ஒவ்வொரு கலைகளையும் நாம் எடுத்து நோக்கினால், அந்தக் கலையின் இயல்புகள் அன்றைய காலவோட்டத்தின் தன்மையினையும், மக்களின் பண்பாட்டியல் முறைமைகளையும், தொன்மையினையும் நன்கு வெளிப்படுத்தக்கூடியதாக அமைகின்றது. அந்த வகையில் காலத்தின் தேவைக்கேற்ப குறிப்பிடத்தக்க கலை பண்பாட்டியல் முறைமைகளை மிளிரச் செய்யும் வகையில் பூநகரி பிரதேச கலாசார பேரவையினால் வருடந்தோறும் வருடாந்த கலாசார விழாவில் வெளியிடப்பட்டுவரும் **"பூந்துணர்"** மலர் இவ்வருடமும் "நறவம் 6" ஆக வெளிவருகின்றமை மிகவும் வரவேற்கத்தக்க ஒரு விடயமாகும்.

இம்மலரானது பூநகரி பிரதேசத்தின் கலை, கலாசாரம், பண்பாடு, நம்பிக்கைகள், சடங்குகள், இடப்பெயர்கள், பழமொழிகள், தொல்லியல் வரலாறுகள், உணவு நடைமுறைகள், கைவைத்திய முறைமைகள், நாட்டார் நடைமுறைகள், பிரதேச ஆலயங்களின் அற்புதத் தன்மைகள் முதலான பல்வேறு தகவல்களையும் வெளிப்படுத்தி ஆவணப்படுத்தும் நோக்குடனும் கலை, பண்பாட்டியல் ஆர்வலர்களுக்கு அவர்களது திறன்களை வெளிக்கொணரும் வளர்நிலைக் களமாகவும் அமைந்துள்ளமை மிகவும் சிறப்பான அம்சமாகும். அத்துடன் இது போன்ற ஆவணப் படுத்தல் என்பது எமது மூதாதையர்களால் பேணிப் பாதுகாக்கப் பட்டு வந்துள்ள இன்றைய இருப்புக்களை நாம் அடுத்துவரும் எமது சந்ததியினருக்கு கையளிப்புச் செய்ய வேண்டியவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாகவும் காணப்படுகின்றோம். அழிந்தும், மறைந்தும், மறைக் கப்பட்டும், அழிக்கப்பட்டும் பல சவால்களை எதிர் கொண்டுள்ள கலைகள் இது போன்ற நூல்கள் மூலம் தனித்துவம் மிக்கதாக எம்மிடத்தில் மிளிர்ந்து ஒளிவீசுகின்றன.

அந்த வகையில் சிறப்புமிக்க கலை பண்பாட்டு அம்சங் களைக் கொண்டு இருப்புக்களை வெளிப்படுத்தும் வகையில் "பூந்துணர்" மலரானது வெளிவருதில் எனது மனமார்ந்த வாழ்த் துக்களையும், ஆசிகளையும் தெரிவித்துக் கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். மேலும் இந்நூல் வெளியீட்டினை முன்னெடுத்துள்ள பிரதேச செயலாளர் உட்பட அனைத்து ஏற் பாட்டாளர்களிற்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் பாராட் டுக்களையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வடைகின்றேன்.

**திருமதி வனஜா செல்வரட்ணம்**
உதவி பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

கலை இலக்கியப் பயணத்தின் ஊடாக எமது வரலாற்றை நிலைநிறுத்த வேண்டும் என்ற உயரிய நோக்கோடு எமது கலாசாரப் பேரவை ஆண்டுதோறும் பெருவிழாக் கண்டு வருகிறது. இவ்விழாவிற்கு மகுடம் வைத்தாற்போல் பூந்துணர் என்ற கலை இலக்கிய சஞ்சிகை வெளிவருவது வழக்கம். இவ்வாண்டு மலர இருக்கும் பூந்துணர் நறவம் - 06 ற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகிறேன்.

இன்று நாம் பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறோம். பண்பாடு சீர்குலைந்துவிட்டது, மனிதம் மரணித்துவிட்டது, முதியவர்கள் முன்மாதிரியாக இல்லை, இளைய தலைமுறையினர் பாதை தவறிவிட்டார்கள் என்று பல குற்றச்சாட்டுகள் எம் சமுதாயத் தின்மீது சுமத்தப்பட்டிருக்கிறது. இத்தகையதொரு சூழ்நிலையில் தான் பூந்துணர் உங்கள் கைகளுக்கு வருகிறது. எமது மொழியை, மொழி தந்திருக்கின்ற இலக்கியங்களை, இலக் கியங்கள் காட்டுகின்ற வாழ்க்கை முறைகளைக் கூடவே உயரிய ஆத்மீகத்தை உணர்ந்து கடைப்பிடித்து ஒழுகும்போது நாம் எதிர்கொள்ளுகின்ற சவால்களுக்கு அல்லது எம்மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகளுக்கு உரிய தீர்வு கிடைக்கும். இத்தகைய சிந்தனைகளோடு பூந்துணரைப் பார்க்கும்போது அதன் வெளியீட்டின் முக்கியத்துவம் உங்களுக்கு புரியும் என நான் நம்புகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இம்மலர் பிரதேச எழுத்தாளர்களின் ஆக்கங்களுக்கு தளம் அமைத்து அவர்களை ஊக்கப்படுத்தி இலைமறை காயாக உள்ள எழுத்தாளர்களை இனம் காட்டுவதோடு மட்டும் நின்றுவிடாது துறைசார் ஆற்றல் கண்டோரின் ஆக்கங்களையும் கொண்டு வருகிறது. அதேவேளை எமது பிரதேசத்தின் தொன்மத்தை ஆவணப்படுத்தல், நீண்ட வரலாற்றுப் பாரம் பரியத்தை பறைசாற்றுதல் என்பனவற்றிலும் பூந்துணருக்கு காத்திரமான இடமுண்டு என்பதை நாம் ஏற்றுத்தான் ஆக வேண்டும். கருப்பெற்று உருப்பெற்று 6ஆம் ஆண்டில் அடி எடுத்து வைக்கும் பூந்துணர் சஞ்சிகையின் ஆக்கத்திற்காய் பாடுபடும் மலர்க் குழுவினர், கலாசாரப் பேரவையினர், எழுத்தாளர்கள் மற்றும் அலுவர்கள் அனைவருக்கும் எனது உளம் நிறைந்த நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்"

**திரு. சி. ச. கிருஸ்னேந்திரன்**

பிரதேச செயலாளரும்,
கலாசார பேரவையின் தலைவரும்
பிரதேச செயலகம், பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேரவையின் செயலாளரின் உள்ளத்திலிருந்து...

பூநகரி பிரதேச கலாசார பேரவையினால் வெளியிடப் படும் பூந்துணர் நறவம் - 6 ற்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்சியடைகிறேன். பூநகரி பிரதேச எழுத்தாளர் களுக்கும், கலை, இலக்கிய ஆர்வலர்களுக்கும் நற்களமாக பூந்துணர் அமைந்துள்ளது.

2011ஆம் ஆண்டிலிருந்து குழந்தையாக பூந்துணர் நறவம் - 1 எனும் பெயரில் தவழ்ந்து மெல்ல நடைபயின்று பூந்துணர் நறவம் - 6 ஆக தற்போது வளர்ச்சி பெற்றுள்ள மையை எண்ணும்போது பேருவகை அடைகிறேன்.

தேன்துளிகளாக தன் மகத்துவத்தை இழக்காது பூநகரி வரலாற்று பதிவை படம் பிடித்துக் காட்டுவதோடு எதிர்கால வாய்ப்புக்கான கருத்தியல்புகளையும் தொகுத்து வெளிவரும் இச்சஞ்சிகை தனக்கென்ற தனித்துவமான நடையுடன் தொடர்ச்சி யாக மலர்ந்து தேன்சொட்ட எல்லாம் வல்ல இறைவனிடம் இறையாசியை வேண்டி வாழ்த்துகிறேன்.

**திருமதி சுசிகுமார் சர்மிளா**
கலாசார உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


☆ நறவத்துக்கானவை

☆ வரலாறு சார் வரைபுகள்

01. தென்னாசியாவின் அடையாளக் கட்டுமான நிர்மாணத்தில் தொல்லியற் பண்பாடு விளக்கமும் விளைவுகளும். 01

02. வரலாற்றுக்கு முற்பட்ட கால தொல்லியல் ஆய்வுகள். 27

03. வட இலங்கை பற்றிய வரலாற்று ஆய்வில் நாணயங்களின் முக்கியத்துவம். 37

☆ புவியியல் சார் வரைபுகள்

04. விவசாய நிலம் கைவிடப்படுவதில் பௌதீக மானிடவியல் காரணிகளின் பங்கு. 44

05. Global Warming Climate Change and Lessons. 63

☆ அரசியல் சார் வரைபு

06. இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பின் 19வது சீர்திருத்தச் சட்டம். 71

☆ பொருளாதாரம் சார் வரைபு

07. ஜெயபுரப் பிரதேச மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளும் தீர்வுக்கான ஆலோசனைகளும். 76

☆ முகாமைத்துவம் சார் வரைபு

08. அலுவலகம் ஒன்றைத் திட்டமிடுவதற்கான மூலோபாயங்கள். 83

09. அலுவலக உற்பத்தித்திறன் மேம்பாட்டுக்கான காரணிகள் 95





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ கல்வியல் சார் வரைபு

10. பூநகரிப் பிரதேசத்தில் தற்கால கல்வி நிலை 100

11. ஒளிமயமான தேசத்தை உருவாக்குவோம் 125

12. க.பொ.த. உயர்தரத்தில் தொழில்நுட்பவியல் பாடத்துறையின் அறிமுகம் 137

13. இலங்கையின் முன்பள்ளிப் பருவக் கல்வியின் வளர்ச்சிப் போக்குக்களும் சவால்களும் 151

★ நவீன தொழில்நுட்பம் சார் வரைபு

14. புற்றுநோய்ச் சிகிச்சைக்குரிய நனோ - தொழில்நுட்பம் 161

★ முத்தமிழ் சார் வரைபு

15. தமிழ் இலக்கிய வரலாற்றில் 'சங்கம்' பற்றிய செய்திகளும் அவற்றின் உண்மை தன்மைகளும். 165

16. கோவலன் ஊழ்வினை தொடர்பான சில குறிப்புக்கள் 174

17. நாட்டார் இலக்கியங்கள் 184

18. முரண்பாடு - தீர்வு 187

19. பிரச்சனைகளைத் தீர்த்தல் 190

20. தமிழ் வாழ்வியல் நவீனத்துவ கலாச்சாரத்தின் தாக்கம். 195

21. விடியலை நோக்கி - சிறுகதை 202

22. திருந்திய உள்ளம் - சிறுகதை 206

23. வெள்ளை உடை அழகுகளே கேளுங்கள் - பாடல் 210

24. ஏங்கித் தவிக்கின்றோம் - கவிதை 213

25. முதியோர் இல்லத்தில் ஓர் முனகல் - கவிதை 214



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. பூநகரியின் சிறுவர் அரங்கச் செயற்பாடுகளும் கற்றல் கற்பித்தலில் சிறுவர் அரங்கின் சிறப்பியல்புகளும் 216
27. ஏமாறாதே - நாடகம் 228
28. ஊனம் - நாடகம் 233

☆ ஆன்மீகம் சார் வரைபு
29. நாட்டார் வழிபாடும் நம்பிக்கையும் 242
30. ஸ்கந்த புராணத்தின் தனித்துவம் 252
31. பூநகரிப் பிரதேச சிறுதெய்வ வழிபாட்டு மரவடியும் பண்டமெடுத்தலும் 260
32. எமது சைவ சமயம் வளரவும் வாழ்வியல் சிறக்கவும் சிந்திப்போம், செயற்படுவோம், பயன்பெறுவோம் 263
33. கோவில்களும் பண்பாட்டு வளர்ச்சியும் 269

☆ சட்டம் சார் வரைபு
34. தேச வழமைச் சட்டம் ஓர் அறிமுகம் 273

☆ வைத்தியம் சார் வரைபுகள்
35. சித்தர்களின் நாடி வைத்தியம் 285
36. உணவாக உண்ணக் கூடிய காட்டுத் தாவரங்கள் பூ வகைகள். 291
☆ வழக்காறு சார் வரைபுகள்
37. அருகி வரும் கிளை மொழிகள் 292
38. பூநகரிப் பிரதேசத்தின் வேளாண்மைச் சடங்குகள் 295
39. கலைநகரி விருது பெறுவோர் 303
40. விடைபெறும் தருணம் 310



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாசியாவின் அடையாளக் கட்டுமான நிர்மாணத்தில் தொல்லிற் பண்பாடு விளக்கமும் விளைவுகளும்



**பேராசிரியர் செ. கிருஸ்ணராஜா,**
துறைத்தலைவர், வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**பிரச்சினை பற்றிய விளக்கம்**

இறைமை, தன்னாட்சியுரிமை மிக்கதும், பன்மை சமூகத்தினைப் பலபக்க மத – பண்பாட்டு வடிவத்துடன் தத்தமது தேசியமாக்கிக் கொண்ட வகையிலுமான எட்டு நாடுகளை உள்ளடக்கிய ஒரு பிரதேச அலகாகத் தென்னாசியா இன்று விளங்குகின்றது. புவியியல் ரீதியில் இந்து சமுத்திரப் பரப்பினால் சூழ்ந்துள்ள வகையில் மேலைத் தேய காலனியாதிக்கத்திற்குள் அகப்பட்டு ஐரோப்பிய – ஆசிய பண்பாட்டுக் கலப்பும், சங்கமிப்பும் நிகழ்ந்த ஒரு பிராந்தியமாகவும் இத்தென்னாசியா இன்று காணப்படுகின்றது. காலனித்துவ ஆதிக்கவாதம் வலுவிழந்த நிலையில், நவகாலனித்துவக் கோட்பாடுகளை உள்வாங்கி இருபதாம் நூற்றாண்டைக் கழித்துவிட்ட இத்தென்னாசியப் பரப்பானது இருபத்தோராம் நூற்றாண்டில் சர்வதேச மயமாக்கல் கோட்பாட்டுடன் சர்வதேச இன்ரநெற் வலைப்பின்னலுள் தன்னை இறுகப்பிணைத்த வண்ணம் பிரதான செய்திப் பரிவர்த்தனைத் தளமாகவும் செயற்பட்டுக் கொண்டிருப்பதைக் காண்கின்றோம். இச் சர்வதேச இயங்கியற் தளப் பகைப்புலத்தில் தொல்லியல் என்ற நவீன அறிவியல் துறையானது இன்னும் இனத்தூய்மை பற்றிப் பேசுவதற்கும், மொழிச்சிறப்பையிட்டுப் பெருமை கொள்வதற்கும் இதிகாச – புராணக்கதை வடிவங்களுக்கு ஆதாரசுருதி சேர்க்கும் பெட்டகமாகவும் இத்தொன்னாசியப் பரப்பில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற பரிதாபநிலையைக் காண்கின்றோம்.

இந்நாடுகள் ஒவ்வொன்றுமே தத்தமது தேசியத்தின் அடையாளத்தினை ஐரோப்பிய குடியேற்றவாத முறையின் அந்தத்திலிருந்தே மீளமைப்புச் செய்திருந்தன என்றால் அது மிகையாகாது. கிறிஸ்தவ மதம் கீழைத்தேயத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் ஏற்படுத்தியிருந்த மூளைச் சலவைத் தொழிற்பாட்டுக் கெதிராக (White Man Job and Burden) சுதேசிய மதவாதிகளினால் ஆரம்பிக்கப்பட்டிருந்த மதச் சீர்திருத்த இயக்கமே தென்னாசிய நாடுகளில் தேசியத்தின் அடையாளமாகப் பரிணாமம் பெற்றது. அவ்வகையில் தத்தமது தேச எல்லைகளுக்குப் பழமைச் சாயம் இட்டு, தேச எல்லைகளை மீள்பகுப்புச் செய்து, புவிசார் அரசியலில் தம்மை நாடுகளாக்கி, பிரகடனமும் அவை செய்துவிட்டிருந்தன. அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்ட அத்தகைய எல்லைகள் பற்றியதும், நாடுகள் பற்றியதுமான பிரகடனங்கள் பன்மத, பல்லின சமுதாயங்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளைத் தீர்க்கவில்லை என்பதனை அண்மைக்கால வன்முறை நிகழ்வுகளும், அரசியற் படுகொலைகளும் உறுதிப்படுத்தி நிற்கின்றன.

தென்னாசிய நாடுகளில் பெரும்பாலும் பல முனைப்பட்ட பிரச்சினை களும், ஆயுதப் போராட்டங்களும் நிகழ்ந்தே வருகின்றன. அந்த வகையில் ஐரோப்பியரின் குறிப்பாகப் பிரித்தானியரின் காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுதலை பெற இன், மத, மொழி வேறுபாடு இன்றி, அந்நிய ஏகாதி பத்தியத்திற்கெதிராகப் போராடும் சக்திகளாக இருந்த இந்நாடுகள், சுதந்திரத்தின் பின் பல பிரச்சினைகளை எதிர்நோக்கியும், பிளவுபட்டும் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். தென்னாசிய நாடுகளுள் எல்லாவற் றிலுமே இந்தியாவானது இன, மத, மொழி, கலாசார அடிப்படையில் ஏதோ ஓர் அம்சத்தினால் மற்றைய அங்கத்துவ நாடுகளுடன், தொடர்புற்றிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

"இவ்வாறு தென்னாசிய அரசுகளில் முதன்மை பெறும் இந்திய அரசும், சிறப்புப்பெறும் பாகிஸ்தான், மற்றும் இலங்கை அரசுகளும் பல்லின, மத, மொழி, கலாசாரப் பிரிவுகளைக் கொண்ட நாடுகளாக விளங்குகின்றன. பல இனங்களும் பல சமயத்தவரும் வாழும் இம்மூன்று நாடுகளிலும் ஒன்றுக் கொன்று முரண்பட்ட சமயக் கருத்துக்களையும், பண்பாட்டு முறைகளையும் மரபுகளையும் பின்பற்றும் அச்சமூகங்கள் தத்தமது தனித்துவத்தையும், பாரம்பரியத்தையும் காப்பாற்றுவதில் அதிகம் அக்கறை செலுத்த முற்படும் போது இனங்களுக்கிடையேயான பிரச்சினைகள் எழுகின்றன". தேசியம், தேசிய இனங்கள் என்ற கருத்துருவத்தில் காணப்படும் வியாக்கி யான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபாடுகளே தென்னாசியாவில் பெரும்பான்மை மொழிவழித் தேசியத்திற்கும் ஏனைய மொழி வழிவந்த அலகுகளுக்கிடையே பகை முரண்பாடு தோற்றம்பெறக் காரணமாகியது.

சுகந்திரத்திற்குப் பின்னைய தேசக் கட்டுமானப் பணியிலிருந்து பெரும்பான்மை மொழி வழிவந்த தேசிய இனங்கள் அல்லாதவர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு, உரிமைகள் அற்றவர்களாகவும், நாடுகள் அற்றவர்களாகவும் அரசியற் பகடைக் காயாக்கப்பட்டு, நீக்கப்பட்டமையே இன்றைய ஆயுதக் கலாச்சாரத்திற்கு வித்திட்ட அம்சமெனலாம். இங்கே பண்பாட்டுத் தேசியவாதக் கட்டுமானத்தில் சிறுச்சிறு தேசிய இனங்கள் தொல்லியலைத் தமது இருப்பிற்கான பெட்டகமாக்கியதோடு நின்றுவிடாது Building Blocks Theory எனப்படும் புதிய பண்பாட்டுக் சட்டகங்களை அடுக்கி, விரும்பிய இடத்தில், விரும்பிய வடிவத்தில், விரும்பிய தரத்தில் தேசியவாதக் கருவை வளர்த்தெடுக்க முற்படுவதையும் காண்கின்றோம். இங்கு தொன்மம், தொல்லியல் ஆய்வுகள் என்பன அர்த்தமற்றவையாகி விடுகின்றன. (ஜப்பானியத் தேசிய வாதம் இக்கருத்திற்குச் சிறந்தவோர் உதாரணமாக அமைந்து விட்டது).

**இதிகாச - புராணக் கருவில் இருப்பைத் தேடும் தென்னாசியா**

தென்னாசியப் பிராந்தியத்தில் காலனியாதிக்கம் முற்றுப் பெற்று, நவகாலனித்துவ வாதம் தலையெடுக்கத் தொடங்கிய காலத்திலிருந்து "கோட்பாடுகள்" (Policies) இயல்பாகவே பிராந்தியச் சூழ்நிலைக் கேற்பப் பரிணாமம் பெற்று, மக்கள் வாழ்வில் செல்வாக்கினைச் செலுத்தவாரம்பித்தன. மேலைத் தேயக் கோட்பாடுகள் கீழைத்தேயத்தில் காலனியாதிக்கம் வரைக்கும் ஒரு வகையான கருத்து நிலையினையும் (ideology) நவகாலனித்துவத்தின் பின்னணியில் சற்றுப்பரிணாமம் பெற்று அதே சுரண்டற் கோட்பாட்டின் மாற்றுவடிவத்துடன் இன்னொரு கருத்து நிலையினையும் கொண்டு விளங்கியமையைக் காண்கின்றோம். போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், பிரான்சியர் எனத் தொடர்ச்சியான வகையில் வந்த ஐரோப்பியரால் காலனியாதிக்கவாதக் கொள்கைக்குள் அகப்பட்டு, மீண்ட தென்னாசிய நாடுகள், சுதந்திரத்தின் பெறுகை நிலையின் பின்னரும், கடைப்பிடித்து நடைமுறைப்படுத்தும் பிராந்திய வல்லரசுக் கோட்பாட்டை வலுப்படுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்கும், தத்தம் பிரதேச எல்லைகளை விஸ்தரிப்பதற்கும் ஆன முயற்சி களுக்கு "மூதாதையர் நாடு" (Ancester's Land) என்றவொரு கோட்பாட்டை முன்வைத்துத் தொல்லியல் என்ற எடுப்பார் கைப்பிள்ளையை அரவணைக் கின்ற முறைமையையே காண்கின்றோம்.

தென்னாசிய நாடுகள் தத்தமது தேச நிர்மாணப் பணிகளுக்காக மதத்தை முதலிலும், சர்வதேச ரீதியில் ஒப்புவிப்பினைப் பெறுதற்காகத் தொல்லியலைப் பின்னரும் இரு பிரதான ஊடகங்களாகப் பயன்படுத்தி வருகின்ற முறையைக் காண்கின்றோம். ஆரிய வர்த்தம், இராமராஜ்ஜியம், ஸ்ர்வர்த்தி ஷேத்திரம், தம்மது வீப(ம்) என்றெல்லாம் புராண – இதிகாசக் கருத்துக்களுக்கு மெருகூட்டி, ஆதாம் பாலம் அல்லது இராமரணை என்று ஐதீகச் சுவடி – தீட்டி அகன்ற இந்தியாவின் ஆள்புலப் பரப்பினை இந்து சமுத்திரத்தினைச் சூழ்ந்துள்ள தீவு நாடுகளுக்கும் (Inland Nations) அகட்டுவதற்குரிய முன்நடவடிக்கையாகச் செய்திகளை வெளியிடுகின்ற போக் கினையும் காண்கின்றோம். தர்மச் சக்கரத்தைத தாங்கிய சிங்கபோதிகை யைக் கொண்ட கொடி, வாளேந்திய சிங்கக் கொடி, நந்திக் கொடி, பிறைக்கொடி, வீணைக் கொடி, புலிக்கொடி எனப்பலவாறாக இனத்தின் அடையாளம், தேசியத்தின் வடிவமாக வெளிப்படுத்தப்படும் தொடர்நிலை யிலேயே இற்றைவரைக்கும் தென்னாசியாவில் நிகழ்ந்து கொண்டிருப்பது முறையே ஹிந்து(தி) பௌத்த, அரிய பௌத்த (திராவிட பௌத்தம்) சைவ, இஸ்லாமிய, வீரசைவ, சாக்த மதங்களின் மேலாதிக்க முனைப்பினையே வெளிப்படுத்தி நிற்கின்றதெனலாம். மதத்திற்கும் தேசியக் கொடிகளுக்கு மிடையே காணப்படும் உறவு நிலைகளைக் கவனிக்கும்போது தென்னாசியா வில் இன்றும் அடிப்படைவாதமும் கருத்துநிலை வாதமும் அரசியலிலும் அரசாங்கத்திலும் வெளிப்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பதனைக் காண் கின்றோம்.

சுருக்கமாகக் குறிப்பிடுவதாயின் ஆசியாவில் தோற்றம் பெற்ற பல்வேறு மதப்பிரிவுகளை எல்லாம் தென்னாசியத் தேசக் கட்டுமானத்திற்குள் அகப்படுத்தியதோ, மக்களின் அந்தரங்கமான உணர்வுகளை வெளியே இழுத்துவைத்து, மிருக வெறியாக மாற்றுவித்ததுடன், மண்ணுக்காக –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதத்திற்காக மரணிக்கத்தக்க சூழலில் வாழ்வதற்கேற்ற அரசியல் முறைமையையும் உருவாக்கித் தந்த நிகழ்வுகளுடன் தொல்லியல் என்ற அறிவியலையும் இணைத்து வைத்த வகையைக் காண்கின்றோம். தொல்லியற் கோட்பாடுகள் இங்கு குறிப்பிட்ட இனமொன்றின் இருப்பிற்காகவோ, பண்பாடொன்றின் பழமையை உறுதிப்படுத்துவதற்காகவோ நியாய வடிகாலாக்கப்பட்ட வரலாறாகவே அவை பயன்படுத்தப்பட்டுள்ளன. இன்றும் அந்நோக்கிலேயே அவ்வறிவியற்றுறை கையாளப்பட்டுக் கொண்டும் வரப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாய்வுக் கட்டுரையில் மிக விரிந்த பரப்பினைத் தென்னாசியா என்ற பிரயோகம் குறிப்பிட்டு நின்ற போதிலும், இங்கு குறிப்பாக இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் ஆகிய மூன்று இறைமைமிக்க, வாணளவான தேசிய இனங்கள் வாழும் பிராந்திய அரசுகள் எவ்வாறு தொல்லியல் என்ற அறிவியலைத் தேச நிர்மாணத்திற்காகக் கையாள்கின்றன. அவ்வாறான கருத்தமைவினால் ஏற்பட்ட விளைவுகள் யாவை என்பதனை விபரிப்பதாகவே இச்சிறு ஆய்வுக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது. மொழி, தேசியம், பண்பாடு, தாயகக் கோட்பாடு ஆகிய நான்கு உறுப்புக்களையும் இணைத்து நிற்கும் தொல்லியல் என்ற அறிவியற்புலம் எந்தளவிற்கு இப்பிராந்தியத்தில் அதன் யதார்த்தமான செயற்பாட்டை ஆற்றிவருகின்றது என்ற வினாவிற்கும் இங்கு விடையளிக்க வேண்டிய தேவை உருவாகியுள்ளது. ஏனெனில் தொல்லியலை அரசு தனது நிர்வாக இயந்திரத்தின் "தன்னாதிக்கத் தொண்டு நிறுவனமாகவே" ஆக்கிச் செயற்பட வைத்துள்ளது என்பதனாலாகும்.

**அயோத்தி - அரசியல் - தொல்லியல்**

இந்துத் தீவிரவாதிகளினால் 06.12.1992 அன்று, (கி.பி 16ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட) உத்தரப் பிரதேசத்தில் உள்ள அயோத்தியில் பாபர் மசூதி இடித்தழிக்கப்பட்டது. இந்நிகழ்வு ஓர் இந்திய அரசியற் குழுவின் திட்டமிட்ட நடவடிக்கையின் வெளிப்பாடாகும். இந்நிகழ்வின் விளைவாக ஓர் இரத்தக்களரி ஏற்பட்டதுடன் சர்வதேச கருத்துத் தொடர்புச் சாதனங்களிலும் முக்கிய இடம் பிடிக்கக் காரணமாயிற்று. அயோத்தியிலுள்ள தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த பாபர்மசூதி இடிக்கப்பட்டதன் எதிரொலியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயல்நாடான பங்களாதேசிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியதோடு மட்டுமன்றி, அங்கு நூற்றுக் கணக்கான இந்துக்கள் முஸ்லிம்களால் கொல்லப்படுவதற்கும் வழிவகுத்து நின்றது.

மொகலாய சாம்ராச்சியத்தை இந்தியாவில் ஸ்தாபித்த பாபராலேயே கி.பி 1528இல் அம்மசூதி அமைக்கப்பட்டது. அயோத்தியில் அமைக்கப்பட்ட அம்மசூதியானது பிற்காலத்தில் இந்து முஸ்லீம்களது பரஸ்பர வெறுப் புணர்விற்கும் அடித்தளமிட்டுக் கொடுத்திருந்தது. அதாவது விஷ்ணுவினுடைய ஓர் அவதாரமான இராமனது பிறந்தவூரில் அமையப் பெற்றிருந்த இராமர் கோவிலை இடித்தழித்த பின்னர் அதன்மீதே பாபர் மசூதி கட்டுவிக்கப்பட்டது எனப் பெரும்பாலான இந்துக்கள் நம்பினர். இந்துக்களுடைய இந்நம்பிக்கை யின் பிரகாரம் மொகலாயப் பேரரசன் பாபர், இராமர் கோவிலை இடித்தழித்த ஒரு நடவடிக்கைக்குப் பொறுப்பாளியாக்கப்பட்டதோடு முஸ்லீம் சமூகத்தின் மீதான இந்துக்களின் வெறுப்புணர்வினையும் ஈட்டிக் கொள்வதற்கும் வழிவகுக்கப்பட்டிருந்தது.



**பாபர் மசூதி**

1947 இல் அதாவது பிரித்தானியாவிடமிருந்து இந்தியா அரசியல் சுதந்திரத்தினை அடைந்த காலத்தின் பின்னர் இம்மசூதியானது சடங்கு ரீதியாகப் புனிதமாக்கப்பட்டு இந்துக்கள் வணங்கும் கோவிலாக மாற்றப்பட்டிருந்தது. பின்பு ஒரு சிறிது காலம் வரைக்கும் "புனித மாக்கப்பட்ட அவ்விந்துக் கோயில்" வழிபாடுகளினின்றும் மூடப்பட்டிருந்தது. 1986ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு வரைக்கும் இந்நிலை தொடர்ந்து வந்தது. மீண்டும் இந்தப் புனிதமாக்கப்பட்ட இந்தக் கோயில் 1987 இல் ஒரு நீதிபதியின் கட்டளைப் பிரகாரம் இந்துக்களின் வணக்கமுறை களுக்காகத் திறந்து விடப்பட்டது. இந்நிலையில் முஸ்லீம்கள் அந்நடவடிக்கைக் கெதிராகத் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வந்தனர். இவ்விரு சாராரின் மோதல்களின் விளைவாக 1990 இல் இந்திய அரசாங்கமானது இரு தரப்பினருக்குமிடையே ஒரு சமரச உடன்படிக்கையை எட்டச் செய்து அப்பிரச்சினையைத் தற்காலிக மாகத் தீர்த்து வைத்தது. இப்பேச்சுவார்த்தையின் போது இரு முக்கியமான அம்சங்கள் முன்வைக்கப்பட்டன. அவையாவன:-

1) உண்மையிலேயே மொகலாயப் பேரசனான பாபரால் அயோத்தியில் இருந்து இந்து ஆலயம் இடிக்கப்பட்டதா?

2) இடிக்கப்பட்ட இவ்விந்து ஆலயத்தின் மீது தான் மசூதி கட்டப்பட்டதா? என்பனவாகும். இவ்வாறு முன்வைக்கப்பட்ட இரு சந்தேக வினாக்களுக் குரிய மேலதிகத் தகவல்கள் எவையும் சேகரிக்கப்படாமல், அப்பிரச் சினை அவ்வளவுடன் கைவிடப்பட்டிருந்தது. இதுவே உண்மை. ஆனால் டிசம்பர் 1992இல் இந்துத் தீவிரவாதிகள் பாபர் மசூதியை இடித்துத் தரைமட்டமாக்கி விட்டிருந்தனர்.



**பாபர் மசூதி கலவரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மசூதி இடித்துத் தரைமட்டமாக்கப்பட்ட அடுத்த நாள் இந்தியப் பிரதம மந்திரி நரசிம்மராவ் இடித்தழிக்கப்பட்ட அம்மசூதி மீண்டும் கட்டப்படும் என்று முஸ்லீம் மக்களுக்கு வாக்குறுதி கொடுத்திருந்தார். இருந்தும் அவ்வாக்குறுதி ஆகஸ்ட் 1993 வரைக்கும் நிறைவேற்றப்படாமலேயே இருந்தது. இந்த நாள் வரைக்கும் இடிக்கப்பட்ட அம்மசூதி தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்காதவொரு நிலையில் 1993இல் இந்திய சுப்ரீம் கோட்டிற்கு அப்பிரச்சினை முன்னெடுத்துச் செல்லப்பட்டது. ஆனால் சுப்ரீம் கோட் இப்பிரச்சினையை ஏற்று நியாயம் வழங்குவதற்கு மறுத்துவிட்டதோடு, மீண்டும் அரசாங்கத்திடமே அதனை ஒப்படைத்தும் விட்டது. இது நாள் வரைக்கும் அப்பிரச்சினை தீர்க்கப்படாமல் அரசாங்கத்தின் வசமே உள்ளது. கடந்த மூன்று மாத காலமாக இந்திய மத்திய அரசினால் பணிக்கமர்த்தப்பட்ட தொல்லியல் அகழ்வுக்குழு தமது அறிக்கையில் பாபர் மசூதிக்குக் கீழ்ப்படையில் இராமர் ஆலயம் காணப்பட்டிருக்கவில்லை என்ற முடிவினைத் தெரிவித்துள்ளமையும் நினைவுகூரத்தக்கது.

உத்தர பிரதேச மாநிலத்திலுள்ள அயோத்தி மொகலாயப் பேரரசனான பாபருடைய நடவடிக்கைகள் எத்தகையதாயிருந்தன என்பதனைக் கண்டு கொள்வதற்குரிய இலக்கிய – கல்வெட்டுச் சான்றுகள் நேரடியாக எவையும் கிடைத்திருக்காதவொரு நிலையிலேயே, தொல்லியல் அடிப்படையிலான அகழ்வுச் சான்றுகளின் உதவி கோரப்பட்டிருந்தது. இதனால் தொல்லியல் என்ற அறிவியற் துறையின் பங்கும் பணியும் பற்றிய முக்கியத்துவம் இப்பிரச்சினை பற்றிய முக்கியத்துவம் இப்பிரச்சினை பற்றிய ஆழ – அகலத்தைப் பற்றி அறிவதற்குக் கூடிக்காணப்பட்டது. அயோத்தி யிலுள்ள பாபர் மசூதி வளாகத்தில் பல தடவைகளில் தொல்லியல் மேலாய்வுகள் நிகழ்த்தப்பட்டன. 1969 – 70 இல் ராய் என்ற இந்தியத் தொல்லியலாளரால் ஒரு சிறிய அகழ்வு மண்படையடுக்கியல் முறையினூ டாகச் செய்யப்பட்டது. இரண்டாவது அகழ்வு B.B. லால் என்பவரால் 1970 களின் நடுப்பகுதியில் நிகழ்த்தப்பட்டது. 1992 இல் அம்மசூதி இடித்தழிக்கப்பட்ட போது ஒரு தொகுதி இந்துச் சிற்பங்கள் அம்மசூதி வளாகத்தில் இருந்து அகழ்ந்தெடுக்கப்பட்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகழ்வாய்வுகள் முடிந்தவுடன் வெளியிடப்பட்ட அறிக்கையில் வெளியிடப்பட்ட தொல்லியல் மூலகங்கள் பற்றிய விளக்கங்கள் மிகப் பரவலான இருந்தமையினைக் கவனிக்க முடிந்தது. கி.பி 11ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட காலத்தைய தொல்லியல் மூலங்கள் பற்றியதாகவே அவ்வறிக்கையில் விபரிக்கப்பட்டிருந்தமை இங்கு விசேட கவனத்தில் கொள்ளக்கூடியதாகவுள்ளது. 1990 இல் B.B லால் என்பவரால் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரையொன்றில் "தான் மசூதிக்கு அடியில் உள்ள மண்படையடுக்கொன்றினுள் தூண்கள் நிறைந்த ஒரு கோயிலைக் கண்டு கொண்டதாகக்" குறிப்பிட்டுள்ளார். தன்னால் கண்டு பிடிக்கப்பட்டதாகக் குறிப்பிடும் தொல்லியல் எச்சங்கள் பாபர் மசூதிக்குக் கீழ் இராமனுடைய பிறந்த மையத்தினைக் (Birth place) குறிப்பிட்டு நின்றதா என்ற கேள்விக்கு லால் பதிலாகக் குறிப்பிடும்போது "நான் அவ்வாறு சொல்லவில்லை, ஆனால் எனது அகழ்வுக் கரண்டி (spade) அப்படிச் சொல்கிறது" என்று இருகருத்துப்படக் குறிப்பிட்டிருப்பது தொல்லியலில் அவர் பின்பற்றிய நெறிமுறை பற்றிய நோக்கில் சந்தேகத்தினையே ஏற்படுத்திவிட்டது.

B.B. லால் மேற்கொண்ட அகழ்வுக்குழிகளைப் பார்வையிட்ட ஏனையோர் (தொல்லியலாளர்கள்) அவரது அகழ்வு நெறி முறையில் ஏற்பட்ட தவறுகளைச் சுட்டிக்காட்டியிருந்தமை இங்கு மிகவும் குறிப்பிடத் தக்கது. ஒரு சிறிய, (Purported Room with colums) தூண்கள் நிரம்பிய சதுரமான அறையொன்றின் அமைப்பினையே B.B லால் பாபர் மசூதிக்கடியில் காணப்பட்ட இந்துக்கோவில் என வர்ணித்திருப்பது தொல்லியலில் அதன் நோக்கின் அடிப்படைகளைச் சிதறடித்துவிட்டிருந்தது. அதே நேரத்தில் அதன் அடிப்படையிலிருந்து மீட்கப்பட்ட ஒரு சிறிய சிற்பத் தொகுதியைப் கி.பி 11ம் நூற்றாண்டுக்குரியது என அவர் பாகுபாடு செய்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் B.B லாலினால் எடுத்துக் காட்டப்பட்ட வேறும் சில தொல்லியல் தரவுகள் அகழ்வாய்வு அறிக்கையில் எந்தவிடத் திலும் நிரைப்படுத்தப்படாத நிலையில் இருந்தமையும் (unauthorized and undo comented archaeological context) கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இப்பின்னணியிலேயே 04.12.1994 அன்று டெல்லியில் நிகழ்ந்த உலகத் தொல்லியல் மாநாட்டில் இப்பிரச்சனை வெளிப்படுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில உலகத் தொல்லியல் மாநாடு டெல்லியில் ஆரம்பித்திருந்த பிற்பாடும் அயோத்திப் பிரச்சனை பற்றிய வெளிப்படையான ஆய்வுகள் நிகழ்த்தப்படுவதற்கு அங்கு எவ்விதத்திலும் அனுமதி வழங்கப்படவில்லை. இருந்தும் உத்தியோக பூர்வமாக அம்மகாநாடு தொடங்குவதற்குச் சில நாட்களுக்கு முன்னரேயே நிர்வாக குழுவின் தலைவரான J. Golson என்பவர் இம்மகாநாட்டின் எந்த ஒரு Forum இடத்திலும் அயோத்திப் பிரச்சனை பற்றிய கலந்துரையாடல்கள் நடைபெறமாட்டாது என அறிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்து இப்பிரச்சினையை உருவாக்கிய இரு பக்கங்களிலிருந்தும் தத்தமக்குச் சார்பான தீர்மானங்களை அச்சிற்பதிப்பித்து அம்மாநாட்டில் பங்குபற்றியிருந்த அங்கத்தவர்கள் - அறிஞர்கள் பல பேருக்கும் விநியோகித்தனர். (a barrage of back-and-forth statement) இவற்றுள் இரண்டு உதாரணங்களை இங்கே கொடுப்பது உகந்தது.

1) "The circular which effectively bans a free and fair accademic discussion of issues arising from vandalism at Ayodhya and the role played by certain archaeologists and historians is reprehensible. (Issued by a group of Indian Historians; cited in The Pioneer, December, 5, 1994)

2) "People have discussed this topic (Ayodhya) for two years now and have still not reached any conclusion. The supreme court also could not reach any conclusion, so, why waste time on it? If we have time after all the papers, we will see what we can do". (B.B. Lal, quated in <u>The Asian Age</u>, December, 7, 1994)

சுருக்கமாகக் குறிப்பிடுவதாயின், பிரச்சினைக்குரிய மையம் தொடர்பாக, தொல்லியலும், தொல்லியலாளர்களும் புலமை வாத அல்லது (academic discipline) அதற்க்கும் அப்பால் உள்ள நெறி முறையில் ஒழுகி அதனைச் சுப்ரீம் கோடு வரை இழுத்தும் சென்றமையால் அதற்குரிய செலவீடாக 100க்கு மேற்பட்ட மனித உயிர்களை (அப்பிரச்சினை தொடர்பாக) இழக்க வேண்டியேற்பட்டது. இவ்வாறான சூழ்நிலையில் தொல்லியல் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் துறையின் செயற்பாடு நடைமுறையில் எவ்வாறு இருந்திருக்க வேண்டும் என்பது இங்கு பிரதான கேள்வியாகின்றது.

**தொல்லியலின் கடப்பாடு**

அயோத்திப் பிரச்சினையானது மிகத் துல்லியமான வகையில் பழமையை (பண்பாட்டு) அடையாளக் கட்டுமான முறைக்குப் பயன் படுத்தப் பட்டமையையே கோட்டிட்டுக் காட்டுகின்றது. குறிப்பாக, பழமையை அடையாளக் கட்டுமானத்திற்குப் பயன்படுத்தும் முறை எவ்விதத்திலும் ஒரு சமத்துவ / பாகுபாடற்ற முறையில் அமைந்திருக்கவில்லை என்பதனையே அயோத்தி பாபர் மசூதி விவகாரம் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது. ஏனெனில் இந்திய அரசின் நிலையற்ற அரசியல் ஸ்திரத்திற்கும், தற்பொழுது அவ்வரசியல் அமைப்பிற்குரிய மேலாண்மைக்கும் பங்கம் விளைவிக்கக் கூடிய தாகவே இச்சம்பவம் நிகழ்ந்து விட்டிருந்தமையைப் பல விமர்சகர்கள் எடுத்துக் காட்டியுள்ளமையினாலாகும். ஆனால் மாறிவரும் உலக நிலையின் ஒழுங்கமைவில் இனத்துவரீதியானதோ அல்லது தேசிய அடிப்படையிலான அடையாளம் தேடும் முயற்சிகளானவை நீண்ட காலம் நிலைக்கப் போவது இல்லை. அது ஒரு தம்மளவிலான சான்றாகவும் (Self-evident) மாறப் போவதுமில்லை.

அடையாளம் காணலில் உள்ள முரண்பாடுகளானவை எப்பொழுதுமே மிகமிகச் சிக்கலானதும், கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதுமான அம்சமாகும். ஏனெனில் ஒரு குழுவினது / சமூக ஒழுங்கமைவினது தம்மளவிலான இருப்பினை உறுதிப்படுத்தும் அடிப்படை அலகுகளை அம் முயற்சியானது ஆதாள பாதாளத்தில் கொண்டு சென்ற சேர்த்துவிடும் என்பதனாலாகும். இதுமட்டுமல்லாது குழும மட்டத்திலான பயமுறுத்தல் நிகழ்வுகளும் எதிர்க் குழுமங்களை நோக்கி விஸ்தரிக்கப்படுவதற்குரிய காரண–காரியத் தொடர்புகளும் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் உருவாகும். கால ஓட்டத்தில் குழுமங்களின் பயமுறுத்தல் நிரந்தரமான இருப்பாக மாற்றம் பெறுவதோடு, ஏனைய சிறுச்சிறு குழுமங்களின் மீதான எதேச்சாதிகாரமான போக்கினைக் காலப்போக்கில் ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய வாய்ப்பு அளித்துவிடும் என்பதில் சந்தேம் இருக்கமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Friedman என்பவர் குறிப்பிடுவது போன்று அடையாளக் கட்டுமானப் பணியானது (Identity Building) ஓர் உத்தேச–தற்சார் புடமையான பரவலாக்கம் செயல்முறையின் ஒரு மூலாதாரமாகும். ஏனெனில் அடையாளம் காணலுக்கான தோற்றப்பாடானது ஒரு வெறும் வெளியிலிருந்து உருவாக்கப்படுவதில்லை. பதிலாக, அதற்கும் முற்பட்ட பண்பாட்டுப் படிம அலகுகளிலிருந்தே உருவாக்கப்படுவதாகும். புதிது – புதிதாக உருவாக்கப்பட்ட அடையாள வெளிப்பாட்டின் தாக்கமானது எப்பொழுதுமே மற்றைய குழுமங்கள் மத்தியில் தத்தமக்குரிய தொன்மைக்குரிய இடத்தினைத் தேடுவதற்கான தூண்டலினை ஏற்படுத்திக் கொண்டேயிருக்கும். இதே போன்று, நிகழ்கால அடையாளக் கட்டுமானப் பணிக்கு பழமையைப் பயன்படுத்தலானது எந்நேரமும் அக்காலத்தைய கருத்தமைவு – வடிவ வெளிப்பாட்டிலேயே தங்கியுள்ளது. மானிடவியலாளர் பலரும் இக்கருத்தினைப் பெரிதும் வற்புறுத்தியுள்ளனர். Kus (1986) Creamer (1990) Hark (1993) ஆகியோர் இவ்விடயத்தைப் பற்றி மிகத் தெளிவாக ஆராய்ந்துள்ளனர். Creamer தனது நூலில் OLD EQUALS BEST என்று வர்ணித்திருப்பது அடையாளக் கட்டுமானப் பணிக்குப் பழமை எந்தளவிற்கு இன்றியமையாதது என்ற கருத்தின் ஆழத்தினை வெளிப்படுத்தி நிற்கின்றது.

அயோத்தி நிலமையைப் பெறுத்தவரையிலும் அக்கோட்பாட்டின் நடைமுறையினையே அக்காலக் கருத்தமைவிற்கேற்பக் காண்கின்றோம்" பாரதத்தின் பண்பாட்டு உருவாக்கத்திற்கு அதன் மூதாதையர்களால் வழங்கப்பட்ட பங்களிப்புக்கள்மீது முஸ்லீம்கள் என்ற "ஐதீக வடிவக் குழுமத்தவரால் பல பாதகமான காயங்கள் ஏற்படுத்தப்பட்டன என்பதே அக்கால கருத்தமைவாக அமைந்தது. இற்றையிலிருந்து 500 வருடங்கட்கு முன்னர் (மொகலாயர் காலத்தில்) பாரதத்தின் மரபு ரீதியான பண்பாட்டுப் படையில் ஊடே நிலைநாட்டப்பட்ட / செருகப்பட்ட தவறான முஸ்லிம் பண் பாட்டுக் கருத்தமைவிற்குரிய நேரடியான பதில் விளைவாகவே 1992 இல் நிகழ்ந்த பாபர் மசூதி அழித்தொழிக்கப்பட்ட சம்பவம் அமைந்தது. இது பழம் பாரதத்தில் நிகழ்ந்த பண்பாட்டுக் காயங்களை ஆற்றுவதற்கு மேற்கொள் ளப்பட்ட ஒரு முயற்சியாகும். அதற்காகப் பழமையை உதவிக்கு வரவழைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடு, அதன் அடிப்படையில் சட்ட பூர்வமான பழிவாங்கலை நிகழ்த்திய ஒரு செயலையும் இந்நிகழ்வு குறிப்பிட்டு நிற்கின்றது எனலாம்.

ஆனால் இந்நிகழ்வானது இந்திய முஸ்லிம்கள் மத்தியில் அக விளைவுகளையும் ஏற்படுத்தியுள்ளது என்பதில் சந்தேகமில்லை. இந்தியாவில் வாழ்கின்ற முஸ்லீம்கள் மொகலாயர்களுடைய வருகையுடன் குடியேறியவர் களாக ஆக மட்டுமல்லாது இந்துக்களாக இருந்து இஸ்லாத்திற்கு மதம் மாறியவர்களாகவும் அனேகமானோர் உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. மதமாற்றத்தினூடாகக் கீழ் மட்டத்திலுள்ள – வாழ்க்கைத் தரம் குறைந்த இந்துக்கள் தமது நோக்கில் ஒரு சிறந்த உயர்ந்த வாழ்க்கைத் தரத்தினைப் பெற்று விடலாம் – மதமாற்றம் அதற்குச் சிறந்த ஒரு சமூக நிலைமையைத் திறந்து தரும் என அவர்கள் நம்பியதாலுமே இந்துக்கள் முஸ்லீம்களாக மாறுவதற்கு வழி வகுத்தது. இந்நிலையில் இந்திய முஸ்லீம்களது இருப்பிற்கும் – அடையாளக் கட்டுமானத்திற்கும் பழமையை எந்த எல்லை வரைக்கும் கொண்டு செல்லலாம் என்பதும் மீள்பரிசீலனைக்குரியது என்பதும் தெளிவாகின்றது.

அயோத்தியைப் பொறுத்தவரையில் பழமையை நோக்கிய கீழ் மட்டம் தழுவிய காலவரையறையைப் பொறுத்தமட்டுமல்லாது நவீனத் துவத்தை நோக்கிய மேல் நிலைபற்றிய கால வரையறையை நிர்ணயம் செய்யப்பட்ட முறைகளில் பல தவறுகள் காணப்பட்டன. "சாகேத்ரா" என்ற பெயருடன் அயோத்தி கி.பி 5ஆம் நூற்றாண்டு வரைக்கும் அழைக்கப் பட்டிருந்தது. பின்னர் பேரரசுக் குப்தர்களே பாடலிபுரத்திலிருந்து சாகேத்ரா விற்குக் கி.பி 5ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தலைநகரை இடம் மாற்றியதிலிருந்தே அயோத்தி என்ற பெயர் சாகேத்ராவிற்கு இடப்பட்டது. இதிகாசமான இராமாயணத்தின்படி அது இராமனுடைய பிறந்த மையம் (Birth Place) என அறிகின்றோம்.

பேரரரசன் ஸ்கந்த குப்தனே அந்த "ஐதீக நிகழ்வினைக் குறிப்பதற்காகத் தனக்குரிய விருதுப் பெயர்களுள் ஒன்றினை கொண் டிருந்தான். ராவ் குறிப்பிட்டது போன்று இராமாயணத்தில் குறிப்பிடப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயோத்திக்கு (Mythical Ayodhya) நிகராகக் கொள்ளப்படும் இந்த இடம் இன்று யதார்த்தத்தினைக் கொண்டு விளங்குகின்றது. அவ்வகையில் புராதன காலத்தில் நிகழ்ந்த இதிகாச நிகழ்வுகளின் இணைப்பாகவே இன்றைய அயோத்தி நிகழ்வுகள் அமைந்து கொண்டன. இதுவே இந்துக்களின் கருத்து அமைவியலின் முரண்பாட்டுக்கும் அடிப்படையாயிற்று.

## இலங்கை – அடிப்படை வாதமும் அகழ்வுகளும்

தென்னாசியாவின் தென்கோடியில் இந்து சமுத்திரத்தின் முத்துப் போல் இருக்கும் இலங்கைத் தீவில் தொல்லியல் என்ற அறிவியற்துறை பெயரளவில் அப்பணிக்குரிய குறியீட்டினைக் (spade) கொண்டிருந்தாலும் இன்னும் அத்துறையானது அடிப்படைவாத இணைவிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடியாதவோர் அரசியற் பொருளாதார சூழலுக்குள் அகப்பட்டுள்ளது. 1920களின் பின்னர் இலங்கையின் அரசியற் பொருளாதார அடிப்படைகளிலிருந்து உருவான பெரும்பான்மை – சிறுபான்மை பற்றிய கருத்தமைவுகளின் தோற்றமும் வளர்ச்சியுமே இலங்கையின் தொல்லியல் துறை வளர்ச்சியினைப் பெருமளவுக்குப் பாதித்த அம்சமாகக் காணப்பட்டது.

"இலங்கையின் அரசியற் பொருளாதாரத்தை இன உணர்வுகளுக்கும் அவற்றை அடிப்படையாகக் கொண்ட இனவாதமுமே கூடியளவில் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. ஏனைய பல நாடுகளையும் போன்றே வர்க்க அமைப்பும், வர்க்கங்களுக்கிடையிலான போராட்டங்களுமே போராட்டத்தை வலுப்படுத்தியிருந்தாலும், வர்க்க உணர்வுகளை இன உணர்வுகளை படிப்படியாக ஆட்கொள்வதே இலங்கை அரசியற் பொருளாதார வரலாற்றின் முக்கிய அம்சமாகத் துலங்குகின்றது. இந்த வர்க்கங்கள் தமது வர்க்க நலன்களைப் பேணும் பொருட்டுக் கையாண்ட நடவடிக்கைகள் மரபு வழிப்பட்டனவாக இருக்கவில்லை. அதற்குப் பதிலாக இன உணர்வுகளைத் தூண்டி அதன் வழி தமது வர்க்க நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளும் ஓர் ஆபத்தான போக்கு குடியேற்ற நாட்டுவாத காலம் முதலே தோன்றியிருந்தது. இலங்கைச் சமூக அமைப்பிலான பொதுவான இன வேறுபாடுகளுக்குப் புறம்பாக நாட்டின் தொழிலாளர் வர்க்கம், அந்நியர், குறிப்பாக இந்தியர் வருகையால், இன அடிப்படையில் பலவாறு பிளவுபட்டிருந்தமை அதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்பான களமாயிற்று. இக்களத்தின் பின்னணியிலும் தொல்லியல் இணைந்திருந்து. இனப் பிறழ்வினை மேலும் மேலும் அகட்டிச் சென்றதோடு, அடையாளக் கட்டுமானத்தில் பரஸ்பரம் இரு சமூகங்களுக்கிடையே ஓயாத மோதல்களையும் உருவாக்கத் தவறவில்லை.



**தக்கண விகாரை - அநுராதபுரம்**

பௌத்த–சிங்களப் பண்பாட்டு இருப்பினை அதற்குக் கீழும் அதற்கு மேலும் இருந்திருக்கக்கூடிய பண்பாட்டுப் படை அலகுகளிலிருந்து தனித்துவமாகப் பிரித்தெடுத்து, அதன் தனித்துவத்துடன் தொல்லியலை ஒன்றிக்கச் செய்த பெரும்பணியே இன்றைய பின்– நவீனத்துவவாதிகளின் பங்களிப்புக்களாக அமைந்துள்ளன. 1960 களுக்குப் பின்னர் உலகத் தொல்லியல் வரலாற்றில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு நேர் எதிராக, இலங்கைத் தொல்லியல் வரலாற்றில் புனிதப் பிரதேசப் பிரகடனங்களை உறுதிப்படுத்தல், எல்லாளன் சமாதியில் துட்டகைமுனுவின் சாம்பலை (ash) கண்டுபிடித்தல், கல்வெட்டுக்களில் பொறிப்புக்களுக்கிடையே புதிய வாசகங்களுக்குரிய வரிகளைக் கண்டுபிடித்தல், (Inter-liner inscriptions) இந்து – திராவிடக் கலையம்சங்களை அகழ்வின் பொழுதோ தற்செயல் நிகழ்வின் பொழுதோ ஆவணப்படுத்தலின்றி மறைத்துவிடுதல் போன்றவற்றில் அதன் பணி மிகவும் சிரத்தையாயிருந்தமையைக் காணலாம். தென்னாசியத் தொல்லியல் வரலாற்றில் காணப்படாத ஒரு சிறப்பு அம்சம் இலங்கைத் தொல்லியல் வரலாற்றில் உண்டு என்றால் அது பௌத்த குருமார் தமது மத அங்கியுடன் அகழ்வுப் பணிகளில் நேரடியாக ஈடுபவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தீவின் "வசிப்பிடமாதல்" என்ற கருத்தமைவில் "ஆரியர்" "திராவிடர்" என்ற எண்ணக்கருக்கள் வலுவூன்றியிருந்தமை இலங்கையின் "மூதாதையர்" யார் என்ற பிரச்சினையைக் கிளறிவிட்டிருந்தது. ஆரியரும் திராவிடரும் இரு வேறு இனங்கள் என்னும் பொதுவான எண்ணம் தவறானதென அறிஞர்களால் நிராகரிக்கப்பட்டுள்ளது. ஆயினும் அது பொதுமக்கள் உள்ளத்திலும், அறிஞர்களின் சிந்தனையிலும் ஆழமாகப் பதிந்துள்ளதுடன் அது தொடர்ந்தும் பரவலாகச் செல்வாக்குச் செலுத்தி வருகின்றது.

"ஆரியர் – திராவிடர் பற்றிய தவறான எண்ணக் கருவானது இலங்கைச் சூழலிற் (இந்தியச் சூழலிற்போல்) முற்றிலும் தவறாக நவீன கருத்து விளக்கங்கள் வரலாற்றிலே ஊடுருவி விடப்படுகின்ற விதத்திலும், இலங்கையில் வாழும் சிங்களவர் – தமிழர் ஆகிய இருபெருந் தேசிய இனங்களுக்கு வரலாற்று அங்கீகாரம் வழங்குவதில் முக்கிய பங்காற்றுகின்ற வகையிலும் வெளிப்படுகின்றது. இதனோடு தொடர்பான விவாதங்கள் உங்களுக்கு முன்னே நாங்கள் இங்கு வாழ்ந்தோம்" இது எமது புராதன தாயகம்" என்னும் தர்க்கங்களிலிருந்து உருவெடுத்த புராதன வரலாற்று இருப்பை அடிப்படையாகக் கொண்ட பிரதேச உரிமை கோரல்களை மையமாகக் கொண்டிருந்தன. முன்னேறிய நவீன தேசங்களின் வரலாற்றில் இன அடிப்படை பற்றிய பிரச்சினை எழுப்புகின்ற இத்தகைய முன்மொழிவுகளின் தகுதி பற்றி ஒரு போதும் கேள்வி எழுப்பப்படவேயில்லை. ஆய்வாளரின் அக்கறை இம்முன் மொழிவுகளின் மெய்மை – பொய்மை பற்றி ஆராய்வதில் மாத்திரம் சென்றதே தவிர நவீன தேசங்களின் உருவாக்கற் செயன்முறையில் புராதன வரலாற்று இருக்கையின் தொடர்பு – தொடர்பின்மை பற்றிச் செயற்படவில்லை.

இங்குதான் தொல்லியலின் நோக்க விதானங்கள் அதன் வரையறைக்குள்ளிருந்து வெளியே கொணர்ந்து ஓரினத்தின் கருத்தமைவினை மேலும் மேலும் உறுதிப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்ற செயன்முறையை இலங்கையில் காண்கின்றோம். ஜப்பானியப் பேராசிரியர் ஒருவர் இத்தன்மையை நன்கு அவதானித்ததன் அடிப்படையில் மிகப்பொருத்தமாகவே "A political dig" என்று குறிப்பிட்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் "Political dig" இலங்கையில் தொடர்வதற்குரிய சாதக நிலைமைகளில் ஒன்று தமிழர் வாழ்வியலில் இருந்து பௌத்த மதம் தனது தொடர்பினை இழந்தமையாகும். இற்றையிலிருந்து 900 ஆண்டுகளுக்கு முன்னரிலிருந்தே அந்நிலை ஆரம்பித்து விட்டிருந்ததிலிருந்து தமிழர் "பௌத்தம்" என்றால் "சிங்களம்" என்ற ஐதீகக் கருத்தமைவு வடிவினைத் தமக்கு கற்பிதமாகக் கொண்டு தமது அரசியல் பொருளாதார இருப்பிற்கான தேடலில் ஈடுபட்டு வந்துள்ளனர். இதற்கான பண்பாட்டுப் பகைப்புலமாக வடக்குக் – கிழக்குக் தாயகக் கோட்பாடு முன் வைக்கப்பட்டது. இக்கோட்பாட்டை முறியடிப்பதற்குப் சிங்கள பௌத்த புனிதமையப் பிரகடனங்களைக் காலத்திற்குக் காலம் இலங்கையின் அரசியல் திட்டத்தினூடாகப் பௌத்த சாசன அமைச்சு உருவாக்கி வந்ததோடு, இலங்கைத் தொல்லியற் திணைக் களத்தினை அப்பிரகடனங்களின் பின்னணியில் வைத்துச் செயற்படுத்துவதன் மூலம் ஆதாரசுருதியாகப் பயன்படுத்தி வந்தது. இந்நிலையே இன்றைய நவீன ஸ்ரீ லங்காவில் இன மோதல்களுக்கும் பரஸ்பர நம்பிக்கையீனத்திற்கும் அடிப்படையாக தொல்லியல் நடைமுறை அமைந்தது என்றால் அது மிகையாகாது.

"தமிழர்களுக்கு எதிரான சிங்களவர்களின் எதிர்பின் ஊற்று மூலம் வேறுபட்டது. வரலாற்று ரீதியாக தமிழருக்கும் சிங்களவருக்கும் மத்தியில் நிலவிய மோதல், இன அடிப்படையைவிட அரசியல் அடிப்படையிலானது. ஆட்சியாளருக்கு இடையிலான போராட்ட வடிவத்தையே அது எடுத்தது. "அதில் மூன்று கருத்து அமைவுகள் பிரதான அங்கம் வகித்தன. அவையாவன:

1) "ஆரிய இனம் பற்றிய கருத்தமைவும் சிங்களவர்கள் இன ரீதியாக "ஆரியர்கள்" என்று நோக்கும், நிலையும்

2) "சிகதீப" என்ற கருத்தமைவு – அதாவது விஜயன் இலங்கை வருகை யுடன், சிங்கள இனம் நிறுவப்பட்டது பற்றிய ஐதீகமும்.

3) "தம்மதீபக்" கருத்தமைவு – புத்தர் இலங்கைக்கு மும்முறை வருகை தந்தமையும், அவருக்கும் இத்தீவுக்குமிடையிலான விசேட உறவுகள் பற்றிய ஐதீகமும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மூன்று கருத்தமைவுகளின் அடிப்படையிலேயே மகாவம் சத்தைத் தழுவிய வகையிலான சிங்கள–பௌத்தப் பண்பாட்டுப் பாரம்பரி யத்தை நிலைநிறுத்தும் நோக்கில் இலங்கையின் தொல்லியல் அகழ்வுகள் பெரும் எடுப்பில் நிகழ்த்தப்பட்டுக் கொண்டு இருப்பதைக் காணலாம். "Cultural Triangle" கலாசார முக்கோண வலயம் எனக் கண்டி – பொலனறுவை – அனுராதபுரம் ஆகிய மையங்கள் இணைத்து நிற்கும் முக்கோணப் பரப்பினுள் யுனெஸ்கோ ஆதரவுடன் பல அகழ்வுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப படுவதும் நோக்கத்தக்கது. வடக்கு – கிழக்கு மாகாணப் பரப்புகளில் அவ்வாறான அகழ்வுகள் எப்போதுமே முன்னெடுக்கப்பட்டது கிடையாது. அவ்வாறான சந்தர்ப்பங்கள் ஏற்படும் நிகழும் தொல்லியத் தலங்களில் பௌத்த பண்பாட்டு எச்சங்களை வழங்கும் மண்படையுடன் அகழ்வு நெறியினை வடக்கிலோ அல்லது கிழக்கிலோ நிறுத்தி விடுவது தொல்லியல் திணைக் களத்தின் மரபாக இருந்து வருகின்றது. வடக்கில் யாழ்ப்பாணக் குடா நாட்டிலுள்ள கந்தரோடை மீதான அகழ்வு இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். இங்கு "பௌத்த இடுகாட்டு" எச்சங்களை குறிப்பிட்ட அம்மண் படையுடன் மட்டும் அகழ்ந்து வெளிப்படுத்தியபின் தொல்லியல் திணைக்களம் அகழ்வுகளை நிறுத்திக் கொண்டது. அக்குறிப்பிட்ட மண் படைகளுக்குக் கீழ் வேறொரு பண்பாட்டு பரிமாணத்திற்குரிய எச்சங்கள் காணப்பட்டிருந்தமை யினைப் பென்சில் வேனியப் பல்கலைக்கழக அகழ்வாய்வியலாளரான விமலாபெக்லியின் ஆய்வுகள் எடுத்து நிரூபித்துள்ளன. இவ்வாறு இலங்கைத் தொல்லியற் திணைக்களம் பௌத்த சிங்கள அடிப்படை வாதத்திலிருந்து இன்னும் விடுபட முடியாத நிலையில் தொல்லியல் நெறியினை வளர்த்தெடுத் துச் செல்வதற்கு மிகச் சிறந்த ஓர் உதாரணமாக "எல்லாளன்" சமாதியினுள் துட்டகைமுனுவின் சாம்பல்" பற்றிய பிரச்சினை அமைந்து கொண்டமையைக் குறிப்பிடலாம்.

**இலங்கைத் தொல்லியல் வரலாற்றில் ஒரு பின்னடைவு எல்லாளன் சமாதியில் "துட்டகைமுனுவின் அஸ்தி"**

அடையாளக் கட்டுமானப் பணியில் (identity Builing) தொல்லியல் என்ற அறிவியல் மிகமிகப் பொறுப்பு வாய்ந்த ஓர் அலகு என்பதனை இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்த்திய நிகழ்வானது அநுராதபுரத்தில் அமைக்கப்பட்டிருந்த சமாதி (Sohona) எல்லாள மன்னனுடையதா? அல்லது துட்டகைமுனு மன்னனுடையதா? என்ற பிரச்சினை கையாளப்பட்ட வகையில் வெளிப்பட்டது. "தக்கிண விகாரை" என்றழைக்கப்பட்ட ஒரு பிரமிட் வடிவினையொத்த செங்கல் அமைப்பானது இலங்கையின் தொல்லியல் வரலாற்றில் ஒரு பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்திருந்தது. இச்சர்ச்சையானது கிறிஸ்தவ சகாப் தத்திற்கு முன் அநுராதபுரத்தில் ஆட்சி புரிந்த இரு பெரும் மன்னர்களுடன் தொடர்புபட்டதாகவும் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. எல்லாளன், துட்டகைமுனு என்ற மன்னர்களே அவர்களாவர்.

பிரச்சனைக்குரிய பொருள் என்னவென்றால் தக்கிணவிகாரை (Sohona) யின் அடித்தளத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இறுகிப் படிந்து போயிருந்த சாம்பல் படை எல்லாள மன்னனுடையதா? அல்லது துட்டகைமுனு மன்னனுடையதா? என்பதேயாகும். இப்பிரச்சினை ஒரு பெரும் சர்ச்சையாக எழுவதற்கும் அடிப்படையாக விளங்கியவர் காலஞ்சென்ற S. பரணவிதான என்பவராகும். இலங்கையின் வரலாற்றிலும், தொல்லியலிலும் "பெரும் சர்ச்சைக்குரியவராக" இவரை வெளிப்படுத்தக் காரணமாக இருந்த சம்பவங்கள் இரண்டாக அமைந்திருந்தன. அவையாவன:

1) Inter-Linear Inscriptions
2) Dutugement "ash" found at Dakkina Thupa

இந்த இரண்டாவது நிகழ்வே அவரது "தொழிற்துறை நேர்மையை" பகிரங்கமாக்க உதவியிருந்து அம்சமாக அமைந்தது. 1948 ஆம் ஆண்டில் பரணவிதானவினால் முன்மொழியப்பட்ட இப்பிரச்சினை தொடர்ந்தும் அவரது "தொல்லியல்" மாணவர்களால் வளர்த்து எடுக்கப்பட்டுச் சென்றதன் பின்னணியில் 1978 ஆம் ஆண்டில் ஓர் அமைச்சரின் ஏற்பாட்டின் பேரில் "சர்ச்சைக்குரிய சாம்பல்" ஐச் சூழ்ந்துள்ள தொல்லியல் வரலாற்றுப் பின்னணியை வெளிக் கொணர்வதற்கென ஒரு செயற்குழு உருவாக்கப்பட்டிருந்தது. அக்குழு தொழிற்படத் தொடங்கி 6 மாதங்களின் பின்னர் அறிக்கை ஒன்று அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அவ்வறிக்கையைப் பரிசீலனை செய்த ஜனாதிபதியும், அமைச்சரவையும் 20.02.1980 இல் உத்தியோக பூர்வமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் அறிக்கையை Ceylon Daily News வாயிலாக வெளியிட்டனர். அது பின்வருமாறு

## Yesterday's Cabinet Decisions

"The ashes of king Dutugemunu are to be laid to rest in the Dakkhina Thupa where they were found. Tests conducted in paris by the Goverment of Sri Lanka established that ashes are nearly 2002 years old.

Other historical facts prove that are the ashes of king Dutugemunu".

ஆனால் இந்தப் பிரகடமானது ஓர் அறிக்கையாகத் தொல்லியல் திணைக்களத்திற்குரிய பதிவுகளிலோ அல்லது வரலாற்று நூல்களிலோ வெளியிடப்படவில்லை. இந்தக் குழுவில் அங்கம் வகித்தவர்களின் பெயர்கள் பின்வருமாறு

1) கலாநிதி நந்திதேவ விஜயசேகர (தலைவர்)
2) திரு. V. V. அபயகுணவர்த்தன (செயலாளர்)
3) வண. கலாநிதி ஹெரண வஜிரஞான தேரர்
4) கலாநிதி அபய ஆரிய சிங்க
5) கலாநிதி சத்த மங்கல கருணாரட்ண
6) பேராசிரியர் P.L. பிரேமதிலக
7) பேராசிரியர் ஸ்ரீவிமல் ரணவெல
8) திரு. றோலண்ட் சில்வா
9) பண்டிதர் குணபால சேனதீர
10) திரு. M.H. சிறிசோம
11) திரு. சரத் வத்தல
12) திரு. டக்லஸ் ரணசிங்க

இவர்களுடைய அறிக்கை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப் பட்டுச் சில வருடங்களுக்குப் பின்னர் 12-08-1980இல் Ceylon News பத்திரிகையில் ஓர் அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. அதில் "அரசாங்கம் துட்டகைமுனுவினது அஸ்தியைப் பாதுகாப்பதற்காக அநுராதபுரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிடம் ஒன்றை நிறுவுவதற்கு உத்தேசித்துள்ளது. துட்டகைமுனுவின் அஸ்தி மோட்டார் கார் பவனியில் கொழும்பு தேசிய அருங்காட்சியகத்திலிருந்து துட்டகைமுனுவின் பிறந்த மையமான மகரகமை (திஸ்ஸ மகரகம) யூடாக அநுராதபுரத்திற்கு எடுத்துச் செல்லப்படும். அஸ்தி குண்டு துளைக்காத கண்ணாடிப் பெட்டியினுள் பொது மக்கள் தரிசனத்திற்காக வைக்கப்பட்டு எடுத்து வரப்படும். 8 லட்சம் ரூபா செலவில் அஸ்தியைப் பாதுகாப்பதற்கான கட்டிடம் அமைக்கப்படும்".

இவ்வாறாக 2000 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையின் அரசியல் வரலாற்றில் நிகழ்ந்த ஒரு சம்பவம் தொல்லியல் என்ற "அறிவியல்துறை வாயிலாக நியாயப்படுத்தப்பட்டு, ஒரு குறிப்பிட்ட இனத்துவ மக்களின் வரலாற்று இருப்பிற்கு வழி வகைகளைத் "தேடித்" திரியும் தொல்லியலாளர்களின் கருத்து நிலை சிங்கள – பௌத்த – தேசியம் என்ற நிலையில் வளர்ச்சி பெற்றுச் செல்வதனை இற்றை வரைக்கும் இலங்கையில் காணலாம்.

கி.மு. 161ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 44 வருடங்களாக இலங்கையின் தலைநகரான அநுராதபுரத்திலிருந்து ஆட்சி செய்த ஒரு தமிழ் முடியரசனே எல்லாளன் ஆவான். இவனுடைய ஆட்சிக்காலம் மகாவம்சக் கூற்றுப்படி மிகவும் செல்வநிலை பொருந்தியதாகவும், "மனுதர்ம நெறியில்" அமைந்ததாகவும் விளங்கியது என்பது தெளிவாகியது. இத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழ் மன்னனை வெற்றி கொண்டு, அவனைக் கொன்று, அநுராதபுரத்தில் "துட்டகைமுனு" எனக் குறிக்கப்பட்ட துட்டகைமுனு அல்லது துட்டகாமினி என்பவன் சிங்கள முடியாட்சியை மீண்டும் ஆரம்பித்து வைத்தான். இந்நிலையில் "மகாவம்சத்தினை" எழுதிய பௌத்ததேரர் – மகாநாமர் அம்மன்னனையே அந்நூலின் "காவியத் தலைவனாக" உருவகித்து அம் மன்னனது சாதனைகளை விபரித்துள்ளமையைக் காண்கின்றோம்.

அரசியலடிப்படையிலான ஆட்சி மாற்றம் எல்லாளனிடமிருந்து துட்டகாமினியின் கைக்கு மாறிய சம்பவம் இலங்கை வரலாற்றில் பண்பாட்டிலும் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த சம்பவமாக அமைந்தது. போரில் இறந்த முடியரசன் எல்லாளனுடைய அந்திமக் கிரியைகளை எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜமரியாதையுடன் செய்து முடித்த துட்டகாமினி அம்மன்னனுடைய ஞாபகார்த்தமாக அநுராதபுரத்தில் ஒரு விகாரையையும் (சமாதி) அமைத் திருந்தான். மகாவம்சத்தில் அது தக்கிண விகாரை (Elara Sohona) குறிப்பிடப் பட்டிருந்தது. அவ்விகாரையின் முகப்பில் ஒரு தூண் சாசனமும் நிறுத்தப் பட்டிருந்தது. "இவ்வழியால் பயணத்தை மேற்கொள்ளும் மனிதர், இளவரசர், விவசாயிகள் எதிர்காலத்தில் தமது இசை வாத்தியக் கருவிகளை நிறுத்தி, தத்தமது வாகனங்களிலிருந்து இறங்கி (மரியாதையின் நிமித்தம்) நடந்து செல்ல வேண்டும்" என அவ்வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது. எல்லாள னுக்கும் துட்டகாமினிக்கும் இடையிலான போராட்டம் ஒரு வெறும் அரசியல் அடிப்படையை மட்டும் கொண்டிருந்தது என்பது தெளிவாகின்றது. கி.பி. 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரைக்கும் அவ்வழியால் செல்வோர் குறிப்பிட்ட விதிமுறைகளை அனுசரித்தே வந்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

19ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் H.C.P. பெல் என்ற ஆங்கிலேயத் தொல்லியலாளரினால் இக்குறிப்பிட்ட சமாதி கண்டுபிடிக்கப் பெற்று அகழ்வாய்விற்குட்படுத்தப்பட்டது. S.M. Burrows என்பவர் பெல் இற்கு முன் இலங்கைத் தொல்லியற் பகுதியில் கடமையாற்றியிருந்தார். அவரது இலங்கைப் படத்தில் 'எலராவினது சமாதி' குறிக்கப்பட்டிருந்தது. ஆனால் 1946இல் S. பரணவிதானவின் வருகையுடன் எலாராவின் சமாதி பற்றிய குறிப்புக்கள் மெல்ல மெல்ல மறையத் தொடங்கின. பெல் திட்ட வட்டமான முறையில் தனது அறிக்கைகளில் 'எல்லாளனது அஸ்தி'அம்மன்னன் கொல்லப் பட்ட இடத்திலேயே வைத்துக் கட்டப்பட்ட செய்தியைக் குறிப்பிட்டிருந்தார். அதனையே பெல் தக்கிண தூபம் என்னும் குறிப்பிட்டிருந்தார்.

கலாநிதி ஜேம்ஸ் ரி. ரட்ணம் மேலே கூறப்பட்ட இப்பிரச்சினையை மிகவும் ஆணித்தரமாகவும், விரிவாகவும் எடுத்துக் காட்டியதோடு, தொல்லிய லில் சிங்களச் சமூகத்தைச் சேர்ந்த அறிஞர்கள் நிகழ்த்திய தவறுகளையும் சுட்டிக் காட்டியுள்ளார். உலகமே வெட்கித் தலைகுனியும் அளவிற்கு இலங்கையில் தொல்லியல் என்ற துறை அதன் சட்டக நிலைகளுள்ளிருந்து விலக்கப்பட்டு, அடிப்படைவாதக் கருத்துக்களை வன்மை பெறச் செய்வதற் காகப் பயன்படுத்தப்படுவதனை இங்கு காண்கின்றோம். கலாநிதி ஜேம்ஸ் ரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரட்ணம் எழுதி வெளியிட்ட The Tomb of Elara at Anuradhapura என்ற நூல் அப்பிரச்சனையை நன்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

அடையாளக் கட்டுமானப் பணியில் தொல்லியல் நடைமுறையின் பயன்பாடானது எந்தெந்தத் தொடர்ச்சியான முறைகளைக் கொண்டுள்ளது? "எல்லாமே கருத்துநிலை ஆதலால் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ள முடியாது" என்று ஒரேயடியாகக் கூறிவிடுவதற்கும் இல்லை. மானிடவிய லாளர் என்ற நிலையில் இருந்து நோக்கும்போது அக்குறிப்பிட்ட குழுவினர தும் அவர்களைப் பற்றிய அடையாளம் காணலுமானது நிச்சயமற்றதும், கற்பனை ரீதியானதும், வரலாற்று ரீதியில் மாற்றமுறக்கூடியதுமாகும். மோதிக் கொண்டிருக்கும் குழுக்களுக்கிடையேயான அவர்களது பழமையினதும், புதுமையினதும் அடையாளக் கட்டுமானமானது நெகிழக்கூடியதும் மாற்ற முறக் கூடியதுமாகும்.

மேலும் உசாத்துணை விபரங்கள் குறிப்பிடுவதாவது, புராதன காலத்தில் இக்குழுமங்கள் பின்பற்றியிருந்த தத்தமது அடையாள உருவாக்க மானது (பெருமளவுக்கு இரவலாகப் பெறப்பட்டதாகவும், ஏற்புடமையாக்கப் பட்டதாகவுமே) அகில உலக ரீதியில் காணப்படுகிறது. இது இயல்பானதாக இல்லாது தெரிவு செய்யப்பட்டதாகவே காணப்படுகிறது. அவை சில குறிப் பிட்ட இலக்குகளை அடைவதற்காகவே தெரிவு செய்யப்பட்டு இணைக்கப் பட்டனவாகும்.

தொல்லியலாளர்கள் புராதன – தற்காலத்து குழுக்களினதும், அவர்களின் அடையாள இருப்புப் பற்றியதுமான விடயத்தில் அவை "நிலையானவை" "நிலை – நிறுத்தப்பட்டவை" என்ற பிரபல்யம் வாய்ந்த "கோஷத்திற்கு" மாறாக அவை "இலகுவானவை" எளிதில் மாற்றமடையக் கூடியவை என்ற கருத்துப்பட எடுத்து விளக்க வேண்டும். இத்தகைய நோக்குடைய வேலைத் திட்டங்களே கட்டாயமாக எல்லோருடைய எதிர் பார்ப்புக்களையும் அதாவது புராதன – நவீன கால குழுக்களின் அடையாள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்புப் பற்றிய விடயத்தில் உருவாக்கம் மற்றும் அடையாளம் காண்கின்ற தொழிற்பாட்டில் தொல்லியலாளரின் நடைமுறைகளைக் பற்றிய எதிர்பார்ப்பையும் நிறைவு செய்யும்.

தொல்லியலாளர்களின் உதவியை எல்லா வகையான அடையாள இருப்பு வரலாறு மீதான நுணுக்கமான வெளிப்பாட்டிற்காகக் கோரும்போது, குறிப்பிட்ட புராதன காலத்திற்குரிய சர்ச்சைக்குரிய பிரச்சினை பற்றிய விடயத்தில் அவர்களுக்கிருக்கக்கூடிய ஆர்வம், கருத்துக்களில் இருந்து தொல்லியலாளர்களைத் தூரத்தே நிலை நிறுத்தக்கூடாது. உதாரணமாகக் குறிக்கபடுவதாயின் அமெரிக்க சுதேசிகளுக்கு (groups) எதிராக நிகழ்த்தப்பட்ட பாகுபாடான துன்பம் – துயரங்கள் மத்தியில் அவர்களால் கோரப்பட்டு நின்ற கோரிக்கைகளுக்கு தொல்லியலாளர் தொல்லியல் ரீதியாக அவர்களைப் பண்பாட்டுக் குழுமங்களாக இனங் காணக்கூடியதாகவிருந்த தொல்லியல் சவ அடக்க எச்சங்களை அகழ்ந்து எடுத்து அவர்களது கோரிக்கைகளுக்கு ஈடாக, சாத்தியமான வகையில் எடுத்துக் காட்டினர். அந்த வகையில் எவ்வாறெனினும் நாமும் அயோத்தி – பாபர் மசூதிப் பிரச்சினை, இலங்கையில் எல்லாளன் – துட்டகாமினி அஸ்திப் பிரச்சினை ஆகியவை தொடர்பாகத் தொல்லியலாளரின் உதவியைக் கொண்டு பணியாற்றும்போது இதே உதாரணத்தைப் பின்பற்ற முடியும்.

தம்மைத் தாமே வரலாற்றுப் பழமையுடன் வரையறை செய்து கொண்ட ஒரு நவீன குழுமம் எனக் கொண்ட ஒரு பகுதியினரது ஏற்றுக் கொள்ளத்தக்க எதிர்பார்க்கையைக் கோரிக்கையானவோ அன்றி சர்ச்சைக்குரிய விவாதமாகவோ கொள்ளாது தொல்லியலாளர்கள் தொழிற்பட வேண்டும். இதே கருத்தினை அயோத்திமீது பிரயோகிக்கும்போது ஒருவர் ஓர் அடிப்படையை அதாவது இந்துத் தீவிரவாதிகளின் பின்புலத்தில் மறைந்திருக்கும் வெளியே சொல்லப்படாத (Tacit Assum ption) ஓர் உள்ளக் கிடக்கையான 16ஆம் நூற்றாண்டுக்குரிய முஸ்லீம் குழுமங்கள்தான். "இன்றைய இந்திய முஸ்லீம்கள்" ஆக வந்ததனை ஒரு சவாலாக ஏற்றுக் கொள்ளமுடியும். அதே நேரத்தில், ஏற்கனவே தனிநாடு எடுத்துக் கொண்ட பாகிஸ்தானிய முஸ்லீம்கள் இத்தகைய தங்களது அடையாள இரும்புப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய கோரிக்கையிலிருந்து பிறழ்ந்து தமது சொந்த நோக்கத்திற்காக (இந்து, பௌத்த தீவிரவாதிகளைப் போன்று) இது வரையில் தம்மினத்தின் அடையாளம் தொடர்பாகக் கண்டு கொண்டவற்றில் சந்தேகம் கொண்டு அதனை மீளாய்வு செய்வதற்கு முயலக்கூடும். (அதாவது இந்துப் பள்ளத்தாக்கு நாகரிக அடிப்படையைப் பாகிஸ்தானிய முஸ்லீம்கள் தமது அடையாள இருப்பிற்காக இனிமேல் பயன்படுத்தக்கூடும் என்பதே இங்கு தெளிவாகின்ற மற்றொரு கருத்தமைவாகும்.)

"ஓர் உபகுழு" என்ற அடிப்படையில் இருந்து இக்குழுமங்களுடைய எல்லா வகையான கோரிக்கையும் நன்கு ஆராயாமல் பழமையைப் பற்றி எடுத்துரைக்கும் வசதியாகத் தொல்லியலாளர் தொழிற்படக்கூடாது என்பது எமது பொருளடக்கமாகும். இவ்வாறு ஓர் அளவீட்டில் செயற்படும் போதுதான் "ஏனையவர்கள்" பற்றியதுமான, அடுத்த முதிர்ச்சியிலுள்ள பண்பாட்டுக் குழுமத்துக்குரியவர்களைப் பற்றிய சரியான அளவீட்டினை எவ்விதமான உள்ளக முரண்பாடுகளுமின்றித் தீர்த்து வைக்கமுடியும். மேலும், மேலைத்தேயத் தொல்லியலாளர்களுக்கு அவ் அயோத்திப் பிரச்சினையானது ஒரு சிறந்த பாடமாக அமையும். ஏனென்றால் பழைமையை மீளமைக்கும் போக்கில் தொல்லியலாளர் மட்டும்தான் ஓர் தனியான, மேலாதிக்கமுள்ள, சட்டபூர்வமான ஓர் ஊடகம் இல்லை என்பதாகும். இவ்வரையறை பின்பற்றப்படாத பட்சத்தில் தொல்லியலின் நெறிமுறை தொடர்பாக இதுவரையில் தொல்லியல் என்ற அறிவியலை நிலை நிறுத்துவதற்கு மேற்கொண்ட தேட்டங்களையும், மதிப்பீடுகளையும் உண்மையிலேயே பாதித்து அழித்துவிடும்.

உண்மையில் இத்தகைய கோரிக்கைகளைத் தொல்லியலாளர் ஏற்றுத் தொழிற்படுபவனைக் கைவிட்டுவிட வேண்டும். அதாவது நவீன – மேலைத்தேய – பண்ட ரீதியான பண்பாட்டு அடிப்படையிலான ஆக்கங்கள் – உற்பத்திகள் இவற்றினூடே அதனை நுகர்வோரின் விருப்புக்கள் வெறுப்புக்கள், உற்பத்திக்கெதிரான கருத்தமைவுகள் என்பனவற்றினூடே தொல்லியலாளன் பயிற்சியளிக்கப்பட்டிருக்கிறான் என்ற Notion ஐ நாம் கைவிட்டு விடவேண்டும். நாம் புலமை ரீதியான ஒரு சவாலில் – நெருக்கடியில் தொழிற்பட்டுக் கொண்டுள்ளோம். அத்தொழிற்பாடானது, எமது தத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்த நிலைகளுக்கெதிரான வகையில் மேற்கொள்ளப்படும் கோரிக்கை களுக்கு ஆதரவளிக்கின்ற நிகழ்வுகளுக்கு எதிரான வகையில் அமைகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

பழமையை ஒரு சான்றாக முன்வைத்து நவீன காலத்துச் சமூக இருப்பொன்றை குறிப்பிட்ட பிராந்தியத்தில் உறுதிப்படுத்துவதற்கும், அடையாளக் கட்டுமானப் பணிக்குச் சான்றாகக் கொள்வதற்கும் உரிய ஒரு சந்தர்ப்பத்தில் தொல்லியலாளர்களும், தொல்லியலும் எவ்வாறு பங்காற்ற வேண்டும் என்பதற்கு விடை காண அயோத்தி – பாபர் மசூதிப் பிரச்சினை எம்மைத் தூண்டுகிறது. ஒரு வகையில் யதார்த்தமான வகையில் இருப்பினும், பாபரால் இந்துக் கோயில் அழிக்கப்பட்டது என்பதும், பாபர் மசூதிக்குக் கீழ் இந்துக் கோயில் இருந்தது என்பதும் கருத்தளவில் கொண்டாலும், 1992இல் பாபர் மசூதி இடித்தழிக்கப்பட்ட செயல் விஞ்ஞான பூர்வமாக அதனை நியாயப் படுத்துமா என்ற கேள்வி எழுகின்றது? அல்லது முஸ்லீம்களது எதிர் முரணான வரலாற்றுப் பங்களிப்பினை விலக்கி இந்திய வரலாற்றைத் திருப்பி எழுத முற்படும் ஓர் ஏற்றுக் கொள்ள முடியாத முயற்சியென பாபர் மசூதி இடித்தமையைக் கொள்ளலாமோ? இதற்குரிய சரியான விடையானது ஒருவருடைய கருத்து நிலை, வரலாறு, சமகாலச் சூழல் என்பவற்றிலேயே தங்கியுள்ளது.

ஆய்விற்குப் பயன்படுத்தப்பட்ட நூல்கள்


1) South Asia Journal South Asia Studies issue, Vol.Xx, 1997, South Asian Studies Association, Australia. (1998)
2) Ian, Holder, Reading the past, Cambridge Uni Press, London, 1986.
3) Michael Sanks and Christopher Tilley; Social Theory and Archaeplogy, Polity Press, U.K. 1996.
4) Current Anthropology, (Special issue) Vol.37, Supplement, Feb. 1996.
5) Current Anthropology, Vol.37. Num. I, Feb.1996.
6) James T. Rutnam, Dr., The Tomb of Elara at Anuradhapura, Jaffna Archaeological Society, 1981.
7) சித்திரலேகா, மௌ. (Ed.) இலங்கையல் இனத்துவமும் சமூக மாற்றமும் SSA வெளியீடு, கொழும்பு, 1985.
8) நித்தியானந்தன், வி. இலங்கை அரசியற் பொருளாதார அபிவிருத்தி (1948 – 1956), கலைப்பீட வெளியீடு, யாழ். பல். 1989.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரலாற்றுக்கு முற்பட்ட கால தொல்லியல் ஆய்வுகள்

**திரு. சி. சூரியதாஸன்**
B.A.Hons

015773

மனிதப் பண்பாட்டு நடத்தைகளுக்குள் மனிதனையும் மனித விழுமியங்களையும், பரிணாம நிலைமையையும் கட்டமைப்பதற்கு கடந்த காலத்தினுடைய தடயங்களின் மீளளிப்புக்கள் இன்றியமையாதவை. அந்த வகையில் இலங்கைப் பண்பாட்டுப் பரிமாணங்கள் இற்றைக்கு கி.மு. 128000 வருடங்களுக்கு முற்பாடு இருந்து படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்ததாக தொல்பொருளியல், வரலாற்று வரைவியல், மானிடவியல், புவிச்சரிதவியல், சமூகவியல் அறிஞர்கள் தொல்பொருள் மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்ட வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் தோன்றியதாக குறிப்பிட்டுள்ளமை சிறப்பாகும்.

அந்தவகையில் பண்டைய மக்கள் விட்டுச் சென்ற சான்றுகளின் அடிப்படையில் அக்கால மக்களது வாழ்க்கை முறை பற்றியும் அம் மக்களது நாகரிகத்தைப் பற்றியும் எடுத்தியம்பும் இயல் தொல்லியலாகும். இச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டே அம்மக்களது நாகரிக காலத்தை வரலாற்றுக்கு முற்பட்ட காலம், உதய காலம், வரலாற்றுக் காலம் என மூன்றாக தொல்லியலாளர் பிரித்துள்ளனர். இவற்றுள் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்பது எழுத்தாதரங்கள் பயன்படுத்தப்படாத கால கட்டத்தைக் குறிப்பதாகும். இதனால் இக்காலகட்ட வரலாறு பெருமளவுக்குத் தொல்லியற் சான்றுகளின் அடிப்படையில் ஆராயப்பட வேண்டியுள்ளது. இதற்கு அக்கால மக்கள் பயன்படுத்திய கல்லாயுதங்கள், மட்பாண்டங்கள், மண்படைகள், சிற்பங்கள், ஓவியங்கள், நாளாந்தம் பயன்படுத்திய பாவணைப் பொருட்கள் போன்றன பெரிதும் உதவுகின்றன. உலக நாடுகள் பலவற்றினதும் வரலாற்றுக்கு முற்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால நாகரிக வரலாறு இவற்றின் துணை கொண்டே கட்டியெழுப்பப் பட்டுள்ளது. இத்தகைய வரலாற்றுக்கு முற்பட்ட கால பகுப்பானது கட்டமைக் கப்பட்டபோதும் இலங்கையில் அது சார்ந்த வரன்முறையான தொல்லியல் ஆய்வுகளை மேற்கொண்டு அகழ்வாய்வுகளை மேற்கொண்டவர்களுள் பீ. ஈ. பி. தரணியகல நடத்திய ஆய்வுகளின்போது இரு கற்காலப் பண்பாடுகளை அடையாளங் கண்டு அவற்றுக்கு "பலங்கொண்ட பண்பாடு, இரத்னபுரப் பண்பாடு" என்ற பெயர்களை அவர் இட்டார். அவர் அரிச்சுவட்டில் சென்ற ஸிரான் தரணியகல ஏறக்குறைய 30 ஆண்டுகளாக அகழ்வாய்வுகள் நடத்தி மேலும் புதிய தடயங்களைப் பெற்று "The prehistory of Srilanka" என்ற நூலை வெளியிட்டார். இது இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை ஆய்வு செய்வதற்கு உறுதியான அடித்தளமாக அமைகின்றது.

இதுவரை காலமும் இலங்கையில் தமிழ், சிங்கள வரலாற்று ஆய்வாளர்களால் வரலாற்றுக்கு முற்பட்ட காலம், வரலாற்று உதய காலம் என்கின்ற அடிப்படையில் பொதுப்படையான ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டன. அத்தகைய இலக்கிய மீளாய்வுகளில் இருந்து வரலாற்றுக்கு முற்பட்ட காலக் குடியேற்றங்கள், மனிதனது வாழ்விடங்கள் (குகைகள்), கல்லாயுதத் தால் ஆன ஆயுத தொழினுட்பம், மட்பாண்ட உற்பத்தி, இறந்தவர்களை அடக்கம் செய்யும் மரபு, கட்டிடக்கலை முறைமை, குகை ஓவியங்கள், குறியீட்டு மரபுகள், சமயப் பழக்கவழக்கங்கள், உணவுப் பயன்பாட்டு முறைமைகள், கல்மயமான முறைமைகள், கலாசார குறியீடுகள், சமூக வழக்காறுகள், பண்பாட்டுப் பரிமாற்றங்கள் ஆகிய அம்சங்களை புராதன அறிஞர்களது பொதுப்படையான வரலாற்றுக்கு முற்பட்ட கால ஆய்வுகளில் இருந்து அறிய முடிந்துள்ளது. அதாவது இலங்கையில் தமிழ், சிங்கள, வரலாற்றுக்கு முற்பட்ட ஆய்வியலாளர்களாகிய பேராசிரியர் இந்திரபாலா, பேராசிரியர் புஷ்பரட்ணம், பேராசிரியர் பரணவிதான, பேராசிரியர் கொடகம்பர, பேராசிரியர் செனவிரட்ன, பேராசிரியர் தெரணியகல, பேராசரியர் சிரான் தெரணியகல, ஐரோப்பிய அறிஞர் H.C.V. பெல், ஆய்வாளர் குணவர்த்தன போன்றோரது ஆய்வுகள் சிறந்த கருத்தியல்களை பெறுவதற்கு பேருதவியாக உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில் இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட கால ஆய்வின் உன்னதமான ஆய்வுகள் ஐரோப்பிய காலத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் சிறப்பு பெறுபவை "இந்நிலையில் 1970களின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் இலங்கை யின் பூர்வீக மக்கள் பற்றிப் பாளி இலக்கியங்கள் கூறிய கருத்துக்களுக்கு முற்றிலும் மாறுபட்ட முடிவுகளையே தந்துள்ளன. பாளி இலக்கியங்கள் இலங்கையில் கி.மு. 6ம் நூற்றாண்டளவில் வட இந்தியாவில் இருந்து விஜயன் தலைமையில் ஏற்பட்ட மக்கள் புலப்பெயர்வுடன் மனித வரலாறு தொடங்கு வதாகக் கூறுகிறது. ஆனால் தொல்லியல் ஆதாரங்கள் இவ் விஜயன் யுகத்திற்குப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மனித நாகரிக வரலாறு தொடங்கிவிட்டதைக் கோடிட்டு காட்டுகின்றன. இலங்கையில் இதுவரை 75 இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வில் இற்றைக்கு 37000 ஆண்டி லிருந்து நுண்கற் காலப் பண்பாட்டுக்குரிய மக்கள் மலைநாடு தொட்டு தாழ்நிலம் வரை வாழ்ந்துள்ளனர் என்பதை உறுதி செய்துள்ளன. (Deroniyogala S.V. 1998, The Prehistory of Srilanka : An Ecologygical Perspective, Department of Archaeological Survey, Colombo) இவரது இவ் இலக்கியச் செய்தியானது வரலாற்றுக்கு முற்பட்ட கால ஆய்வினை தொடக்கி வைத்தாலும் அதன் முற்றுமுழுதான ஆய்வியல் நிகழ்வுகள் மறைமுகமாகவே உள்ளது.

வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்கள் சம காலத்தில் வடக்கிலும் தெற்கிலும் பரவி இருந்தார்கள் என்ற கருத்தை பூந்தலவில் கிடைக்கப்பெற்ற தொல்லியல் ஆய்வுகளும் இரணைமடுவில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளும் உறுதிப்படுத்தி உள்ளன. "இற்றைக்கு ஏறத்தாழ 125,000 ஆண்டுகளுக்கு முன் இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலக் குடியிருப்புக்கள் காணப்பட்டிருந்தன. புந்தலவிற்கு அண்மையில் கடற்கரை படிவுகளில் நடத்தப்பட்ட அகழ்வுகளிலிருந்து இதற்கான சான்று கிடைத்தது. இம்மக்கள் தமது கருவிகளை வடிக்க கற்களிலிருந்தும் ஒரு சிலவற்றை சேட் கற்களிலிருந்தும் ஆக்கினார். இவை பழைய கற்கால நடுப்புகதிக்குரியவை யாகக் கொள்ளப்படலாம். (இலங்கைப் பண்பாட்டு பரிணாமத்தின் அடிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைகள் – கி.பி. 1500 ஆண்டுகள் வரை செ. கிருஷ்ணராசா – வெளியீடு AB Creator and Publishers)

"ஈழத்தில் மேலைப் பழங்கற் காலத்திற்குரிய தடயங்கள் இன்று வரை வெளிக் கொணரப் படவில்லை. கிடைத்த தடயங்களும் பெரும் பாலும் கீழை, மத்திய, பழங்காலத்திற் குரியன எனக் கொள்ளப்படுகின்றன. இத்தகைய தடயங்கள் ஈழத்தின் தென்பகுதியில் மட்டுமன்றி வட மேற்குப் பகுதியிலுள்ள புவிச்சரிதவியற் படைகளிலும் காணப்படுகின்றன. இப்புவிச்சரிதவியற் படையை இரணை படுப் புவிச்சரிதப் படையென ஆராய்ச்சியாளர் அழைத்துள்ளனர். பரற்கற்களாலான இப்படையில் இக்காலத்திற்குரிய கருவிகள் கிடைத்துள்ளன. இவற்றின் காலம் கி.மு. 125,000 எனக் கொள்ளப்படுகின்றது. (Deraniyagala, S. The Pre - Historic Chronology of Srilanka, Ancient Ceylon, Vol.6, No.12, 1990, பக்கம் 211 – 250)




இரணைமடு, பூநகரி, மாந்தை, மாங்குளம் ஆகிய இடங்கள் உட்பட வேறுபல இடங்களிலும் கிடைக்கின்ற வரலாற்றுக்கு முற்பட்டகாலக் கற்கருவிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இககருத்தியலானது வரலாற்று அறிஞர்களிடையே கிடைக்கப் பெறுகின்ற கல்லாயுத தொழினுட்பத்தின் ஊடாக வேறுபட்ட அறிஞர்களின் கருதின் அடிப்படையில் கால அடிப்படையில் கிடைக்கும் தொல்பொருட்களின் கலைநுட்பத்தையும், கலை வடிவத்தையும், கலைப் பாகுபடுத்தல்களையும் அடிப்படையாக வைத்து ஒழுங்குபடுத்தப்பட்ட வரலாற்றுக்கு முற்பட்ட கால பண்பாட்டை வைத்து ஒழுங்குபடுத்தப்பட்ட வரலாற்றுக்கு முற்பட்ட கால பண்பாட்டை உருவாக்கும் நோக்கமாகும். இலங்கையின் புவிச்சரிதவியல் அமைவு இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் பண்பாட்டுப் பரிமாற்றத் தொடர்பு பின்பற்றப்பட்டதாக போராசிரியர் க. இந்திரபாலா அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

"இப்பண்பாட்டு மக்கள் தொல்லியல், மானிடவியல், வரலாற்று மொழியியல் அடிப்படையில் தென்னிந்தியப் பண்பாட்டு வட்டாரத்துக்கு உட்பட்டவர்கள் என்பது அறிஞர்களின் பொதுவான கருத் தாகும். அதிலும் இலங்கை நுண்கற்காலம் பண்பாடு தென் தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தேரிக் கலாசாரத்துடன் நெருங்கிய ஒற்றுமை கொண்டிருப்பதால் தமிழகத்திலிருந்தே இப்பண்பாட்டு மக்கள் இலங்கைக்கு புலம்பெயர்ந்திருக்க வேண்டும் என்பது பேராசிரியர் இந்திரபாலாவின் கருத்தாகும். நுண்கற்காலப் பண்பாட்டைத் தொடர்ந்து கி.மு. 1200 அளவில் தென்னிந்தியாவில் தோன்றிய பெருங்கற்காலப் பண்பாடு கி.மு. 1000, 1200 அளவில் தென்னிந்தியாவில் தோன்றிய பெருங்கற்காலப் பண்பாடு கி.மு. 1000 ஆண்டின் பின்னர் இலங்கைக்குப் பரவியதை இதுவரை கண்டு பிடிக்கப்பட்ட 50 இற்கு மேற்பட்ட பெருங்கற்கால குடியிருப்பு மற்றும் ஈமச்சின்ன மையங்கள் உறுதி செய்கின்றன. இப்பண்பாட்டுச் சின்னங்கள் பொதுப்பட தென்னிந்தியப் பெருங்கற்காலம் பண்பாட்டு வட்டத்துடன் பொதுத்தன்மை கொண்டிருந்தாலும் இலங்கைப் பழங்கற்கால ஈமத்தாழி, கல்வட்டம், கல்லறை முதலான ஈமச்சின்னங்களும் குடியிருப்பு பகுதிகளில் கிடைத்த பல தரப்பட்ட சின்னங்களும் தென்தமிழகப் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் நெருங்கிய ஒற்றுமை கொண்டு காணப்படுவதால் நுண்கற்காலப் பண்பாட்டைப் போலவே பெருங்கற்காலப் பண்பாகும். அப்பண்பாட்டு மக்களும் தென்தமிழகத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்து இலங்கைக்கு புலம்பெயர்ந் திருக்க வேண்டும் என நம்பபப்படுகிறது. (Indrapala, K. 2005, The Evolution of An Ethnic Identity, The South Asian Studies Centre, Sydney).

இக்கருத்தியலானது இலங்கை, இந்தியா போன்ற பிரதேசங்களில் கிடைத்த கல்லாயுதங்கள், வசிப்பிடங்கள், குகைகள், மயானங்கள், இறந் தோரை அடக்கம் செய்யும் மரபு, குறியீடுகள், வழிபாட்டு மரபுகள், மட்பாண்ட உற்பத்தி ஆகியவற்றின் ஊடாக ஒப்பீட்டு ரீதியில் வரலாற்றுக்கு முற்பட்ட இலங்கை, இந்திய கலைப் பாரம்பரியங்களை ஆய்வு செய்யத் தூண்டி உள்ளதோடு பண்பாட்டு இயக்க நிலையை உறுதிப்படுத்தமுடியும்.

மேலும் சுதர்சன் செனவிரட்ணவின் கருத்தின் அடிப்படையில் வரலாற்றுக்கு முற்பட்ட கால பண்பாட்டுப் பரிமாற்றங்கள் ஒழுங்கு படுத்தப்பட்ட கலைப் பாரம்பரியங்களின் அடிப்படையில் நிகழ்ந்தவை என்பது சிறப்பாகும். இலங்கையில் தொல்லியல் ஆய்வுகளை மேற்கொண்ட இவர் தனது ஆய்வியல் இலக்கியத்தின் ஊடாக பின்வரும் கருத்தை முன்வைத் துள்ளார். "தென்னிந்தியாவைப் போல் இலங்கையிலும் இப்பண்பாட்டுடன் தான் கிராமக் குடியிருப்பு, நிலையான பொருளாதாரக் கட்டமைப்பு, இரும்பின் பயன்பாடு, சிறு தொழினுட்ப வளர்ச்சி, பண்டமாற்று, சமூக உருவாக்கம், நகர மயமாக்கம், அரச உருவாக்கம் என்பன தோன்றின. (Seneviratne, S. 1984, The Archaeology of the Megalithic - Black and Red ware Complec in Srilanka in Ancient Ceylon. Journal of the Archaeologival Survey of Srilanka 5 : 237 - 307) இவரது இக்கருத்தியலின் அடிப்படையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலப் பண்பாடு ஒழுங்கு படுத்தப்பட்ட அமைப்பியலை கொண்டுள்ளமை அவதானிக்கத்தக்கது.

மேலும் பேராசிரியர் செ. கிருஷ்ணராசா அவர்கள் தமது "இலங்கைப் பண்பாட்டுப் பரிமாணத்தின் அடிப்படைகள்" என்கின்ற இலக் கியத்தில் கற்கால கல்லாயுத அமைப்பியலின் வரலாற்றுக்கு முற்பட்ட கால கற்கருவிகளும், மனித எலும்புக் கூடுகளும், மனித மண்டையோடுகளும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு கிடைத்துள்ளன. அவற்றுள்ளே சில பழைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்காலத்தைச் சேர்ந்த இனக் குழுமங்கள் பயன்படுத்தியிருந்ததாகக் குறிப் பிடப்படும் கற்கருவிகளும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அவற்றுள் மேலும் சில கற்கருவிகள் புதிய கற்காலத்தினைச் சேர்ந்தவையாகவும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இருப்பினும் இரத்தினபுரியிலும், பலாங்கொடையிலும் அகழ்ந்து வெளிப்படுத்திய மனித எலும்புக் கூடுகளும் மனித செய்பொருட் களும் அப்பண்பாட்டுக்குரிய மக்களை இடைக்கற்காலப் பண்பாட்டுக்குரிய தாக அடையாளம் காண வைத்துள்ளன.

சிரான் தெரணியகலவின் விரிவான வரலாற்றுக்கு முற்பட்ட கால இலங்கை பாகம் 1, பாகம் 2 என வகுக்கப்பட்ட நூல்கள் இத்தன்மையை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. இரத்தினபுரிப் பண்பாடு, பலாங்கொடைப் பண் பாட்டிலும் பார்க்க காலத்தால் முற்பட்டிருந்தாலும் இவற்றின் கால வரையறையை கி.மு. 29000 ஆண்டுகள் என நிர்ணயம் செய்யப்பட்டிருப்பது இலங்கையின் கற்காலப் பண்பாடு குறுணிக் கற்காலத்துடன் ஆரம்பிக்கின்றது என்பதலை கோடிட்டு காட்டுகின்றது. இக்குறுணிக் கற்காலப் பண்பாட்டினை முடித்து வைத்து இரும்புக்கால யுகத்தினை இலங்கையில் ஆரம்பித்து வைத்தவர்களாக நாகர்களைக் கொள்கின்ற போக்கு சிராண் தெரணியகலவின் ஆய்வின் மூலம் இன்று உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது.

பண்டாரவளை, பலாங்கொடை, இரத்தினபுரி ஆகிய மையங்களில் கிடைத்த தொல்லியல் எச்சங்களிடையே காணப்பட்ட மண்டையோடுகள், எலும்புக் கூடுகள் ஆகியனவற்றை ஆராய்ந்தபோது அவற்றின் தோற்ற இயல்புகள் இரண்டு பிரதான மனித இனங்களை அல்லது வர்க்கங்களைச் சேர்ந்ததாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

இங்கு குறிப்பிட்ட கற்காலப் பகுப்பீடானது கல்லாயுத வகைப் பாட்டின் அடிப்படையிலும் அவற்றின் தொழினுட்பம், கலைச்சிறப்பு ஆகிய வற்றின் அடிப்படையிலும் கற்காலப் பண்பாட்டை திறம்பட கட்டமைக்க முடியும்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தின் பின்னர் முன் வரலாற்றுக் காலம் அல்லது வரலாற்று உதய காலத்தில் உயர்வான கலையம்சங்கள் நிரம்பிய தொல்பொருளியல் தடையங்கள் தொல்லியல் ஆய்வுகளின் வாயிலாக கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிக்கப்பட்டுள்ளன. ஈமத்தாழிகள், தனி கறுப்பு, சிவப்பு, நரைநிற மட்பாண்டங்கள், பானைகள், மண்விளக்குகள், சுடுமண் பானைகள், கத்திகள், மீன்பிடி ஊசிகள், கைவளையல்கள், எலும்பினால் செய்யப்பட்ட காற்சலங்கைகள் என தொல்பொருள் மேலாய்வுகள் மூலம் கண்டுபிடித்ததாக பேராசிரியர் ப. புஷ்பரட்ணம் அவர்கள் "பூநகரி தொல்பொருளியல் ஆய்வு" என்கின்ற தனது இலக்கியத்திலே குறிப்பிட்டுள்ளார். இவரது இத்தகைய கருத்து வரலாற்றுக்கு முற்பட்ட கால கலைக் கோட்பாடுகளை ஆராய உதவும் என நம்புகின்றேன்.

இற்றைவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஆய்வுகளின் பிரகாரம் இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தின் தகவல்கள் பல கருப் பொருட்களில் கிடைக்கின்றன.

1. இரணைமடு மண்ணை ஒழுங்கு செய்தல் – இவை வடக்கு, தெற்கு, வடமேல் கரையோரத்தில் விரிவடைந்திருக்கின்றது.
2. கற்குகைகள் – நாடு முழுவதிலும் பரவலாக இருக்கின்ற அதே நேரத்தில் கரையோர ஈரவலயத்தின் தென்மேற்கு கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை போன்ற மாவட்டங் களில் மேலதிகமாகப் பரவிச் செல்வதைக் காணமுடிகிறது.
3. வரலாற்றுக்கு முற்பட்ட திறந்த வெளி இடங்கள் – பெல்லன்பெந்தி பெலஸ்ஸ இவ்விடம் 2005ஆம் ஆண்டில் முதன் முறையாக மேற் கொள்ளப்பட்ட அகழ்வின் மூலம் இற்றைக்கு சுமார் 13,000 ஆண்டுகள் பழைமையானது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
4. செந்நிற, கபிலநிற மண்வயம் – உலர் வலயத்தின் இயல்பாக இருக்கின்ற மண் வலயம் வரலாற்றுக்கு முற்பட்ட இடங்கள் இலட்சக் கணக்கில் விரிவடைந்துள்ளன.
   அநுராதபுர எத்துல் நுவர இற்றைக்கு சுமார் 5,000 ஆண்டுகள் பழைமை வாய்ந்தது என இதன்போது விஞ்ஞான ரீதியாக காலம் நிர்ணயிக்கப்பட்டது.
5. வரலாற்றுக்கு முற்பட்ட சிப்பி படிமம் – ஹங்கம மினி எத்திலிய பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின்போது வரலாற்று காலத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்பட்ட இவ்விடம் இற்றைக்கு சுமார் 2,800ஆண்டுகள் பழைமை வாய்ந்தது என்பது விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

6. மாதொட்ட – இலங்கையின் கற்காலத்தின் இறுதிக் காலப் பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இவ்விடம் இற்றைக்கு சுமார் 1,800 வருடங்கள் பழைமை வாய்ந்தது என விஞ்ஞான ரீதியாக காலம் நிர்ண யிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் கற்குகைகளின் தகவல்களைக் காலத்திருத்தம் செய்வதற்கு 2007ஆம் ஆண்டில் ஹொரண பாஹியன்கல அகழ்வு கருத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் அடிப்படை நோக்கம், 1986ஆம் ஆண்டில் கலாநிதி விஜயபால அவர்கள் மேற்கொண்ட அகழ்வு வேலையை நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி காலத்திருத்தம் செய்வதாகும். இதன்போது முதன் முறையாகக் கண்டுபிடிக்கப்பட்ட 4 மண் படிநிலைகளை மிக நுணுக்கமாகப் பகுப்பாய்வு செய்ததை அடுத்து நூறு படி நிலைகளுக்கு மேல் அவை பரவிச் செல்கின்றன என்பது அடையாளம் காணப்பட்டுள்ளது. இக்கருத்திட்டம் ஸ்கொட்லாந்தின் ஸ்டாலின் பல்கலைக்கழகத்தின் தொல்புவிச்சரித பௌதிக பிரிவின் பேராசிரியர் இயன் சிம்சன் அவர்களின் ஆய்வு பங்களிப்புடன் மேற்கொள்ளப்படுகின்றது. இதில் பின்வருவன அடங்குகின்றன.

நுணுக்கமான மண் பற்றிய ஆய்வு

மெல்லிய மண் படிமங்களைப் பற்றிய பகுப்பாய்வு

மகரந்தப் பகுப்பாய்வு

மிகச் சிறிய கற்கருவிகளின் பற்றிய ஆய்வு

கற்கருவிகளின் உற்பத்தி தொழில்நுட்பம்

விலங்கு எச்சங்களின் பகுப்பாய்வு

எனவே இலங்கைத் தீவினது வரலாற்றினை ஆராய்ந்தோர் பாளி இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்ட ஆரியப் பண்பாட்டினை முன்னோக்கி நகர்த்திச் சென்றிருந்தாலும் தற்காலத் தொல்லியல் ஆய்வுகள் ஆரியர்கள் இலங்கையில் பண்பாட்டை அறிமுகப்படுத்தினர் என்ற கருத்து ஓரளவுக்கு மறுதலிக்கப்பட்டு தனித்துவமாகவும் இலங்கைக்கே உரித்தான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவான போக்கிலும் புராதன குடிபரம்பல் ஒன்று நாடு முழுவதும் ஆங்காங்கே பௌதிகத் தோற்றப்பாட்டிற்கும் காலநிலை அமைப்பியலுக்கும் ஏற்ற வகையில் பரவியிருந்தது என்ற கருத்தை வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடர்பான தொல்லியல் ஆய்வுகள் காலநிர்ணய அடிப்படையில் விஞ்ஞான பூர்வமான கருத்தியலின் ஊடாக அவதானிக்க முடிந்துள்ளது.

**உசாத்துணை நூல்கள்**


01. Nicholas, C.W., 'Historical Topography of Ancient and Medieval Ceylon, J. R. A. S. C.B.N. S. vol. VI, 1963. ப. 9.
02. Deraniyagala, s., The Pre - Historic Chronology of Sri Lanka, Ancient Ceylon, Vol. 6,
03. சிற்றம்பலம், சி. க, பண்டைய தமிழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி, 1991. பக். 78 - 114.
04. Deraniyagala, S., The Proto - and Early Historic Radio Carbon Chronology of Sri Lanka, Ancient Ceylon, Vol.6, No. 12, 1990, (ஆ). பக். 251 - 292.
05. Begley.V., 'Proto - historical material from Sri Lanka (ceylon) and India contacts', Ecological Background of South Aaian Pre - history, (ed) Kennedy K.A.R. and Posschl, G. L. (New Orleans) 1973.
06. Kennedy, K.A.R., Human skeletal material from ceylon with an analysis of the Island's Pre - historic and contemporary population, British, Museum Geological (Palaeontological) Series,' Vol. 2., No. 4, 1965.
07. Sitrampalam, S. K., The Megalicbic Culture of Sri Lanka (Uopublished Ph. D, Thesis), University of Poona, 1980.
08. Pieris, Pau; E., Nagadipa and Buddhist remains in Jaffna, Part I, J. R. A. S. C. B., Vol XXVI, No. 70, 1917 பக். 11 - 67.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபாலக்கிளை உத்தியோகத்தர்கள்

**நிற்பவர்கள், இடமிருந்து வலம் :-** ம.இரமேஸ்(சாரதி), பிரதீஸ்(சாரதி) ப.கிருபாகரன் (அலுவலகப்பணியாளர்), செ.கனகராசா (அலுவலகப்பணியாளர்), இ.விமலராஜ் (முகாமைத்துவ உதவியாளர்), வி.சரண்யன் (முகாமைத்துவ உதவியாளர்), ப.ஆதிரை (முகாமைத்துவ உதவியாளர்), தி.மிதுலா (முகாமைத்துவ உதவியாளர்).ஆ.விஜிதா(பிரதம முகாமைத்துவ உதவியாளர்)

**இருப்பவர்கள், இடமிருந்து வலம் :-** அ.பிரமிளன்(முகாமைத்துவ உதவியாளர்), த.பிருந்தாபன்(அபிவிருத்தி உத்தியோகத்தர்), R.C.அமல்ராஜ் (உதவிப்பிரதேச செயலாளர்), சி.ச.கிருஸ்ணேந்திரன்( பிரதேச செயலாளர்), சி.ஜெயஸ்ரீ(நிர்வாக உத்தியோகத்தர்), , தி.சிவசக்தி(அபிவிருத்தி உத்தியோகத்தர்), வி.ஜெயபாரதி(அபிவிருத்தி உத்தியோகத்தர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வட இலங்கை பற்றிய வரலாற்றாய்வில் நாணயங்களின் முக்கியத்துவம்

**திருமதி பி. சங்கவை**
உதவி மாவட்டப் பதிவாளர்,
பிரதேச செயலகம், பூநகரி.

ஒரு நாட்டினுடைய வரலாற்றினை அறிந்து கொள்வதற்கான நம்பத்தகுந்த ஆதாரங்களாக தொல்லியல் சான்றுகள் காணப்படுகின்றன. பண்டைய கால வரலாற்றினை அறிய உதவும் நம்பகரமான வரலாற்று ஆதாரங்கள் என்ற வகையில் கல்வெட்டுகளைப் போன்றே நாணயங்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. இலங்கையின் வரலாற்றாய்வில் நாணயங் களைப் பயன்படுத்தும் மரபு குறுகியகால மரபினையே கொண்டுள்ளது. பிரித்தானியர் வருகையை தொடர்ந்தே இம் மரபு ஏற்பட்டுக் கொண்டது. நாணயங்கள் கல்வெட்டுக்களைப் போல தொடர்ச்சியான நீண்டகால வரலாற் றினைக் கூறாவிட்டாலும் அந் நாணயங்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை வெளியிட்ட மன்னர்களின் பெயர்கள், வம்சம், காலப்பகுதி, அவர்கள் பின்பற்றிய மதம், வணங்கிய தெய்வம், தெய்வ வடிவங்கள், கலை, ஆட்சி மொழி, மொழி வளர்ச்சி, எழுத்து, எழுத்து வடிவம், பொருளாதாரம், ஆட்சிப் பரப்பு, உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம் முதலான பல அம்சங் களினை அறிந்து கொள்ள முடிகின்றது.

இலங்கை வரலாறு கூறும் பாளி நூல்களில் நாகதீபம் எனக் குறிப்பிடப்படும் வட இலங்கையின் வரலாறு நீண்டகாலமாக புறக்கணிக்கப் பட்டு வந்த நிலையில் இங்கு கண்டுபிடிக்கப்பட்ட முத்திரை நாணயங்கள் முதல் ஐரோப்பியர் ஆட்சிக்காலம் வரையான நாணயங்கள் வட இலங்கையில் வரலாற்றினை அறிந்து கொள்வதற்கு பேருதவி புரிகின்றன. நாணயங்கள் மூலம் காலம், வம்சம், நாடு முதலான பல நாவல்களைப் பெற்றுக்கொள்ள முடிவதனால் இவற்றின் மூலம் வட இலங்கையின் தொடர்ச்சியான வரலாற் றினை அறிந்து கொள்ள முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின்போது வல்லிபுரம், கந்தரோடை, நாகர்கோவில், மட்டுவில், பூநகரி, பண்டத்தரிப்பு, தெல்லிப்பளை, தொல்புரம், மாதோட்டம், முல்லைத்தீவு முதலான பல இடங்களில் நாணயங்கள் பெறப்பட்டுள்ளன. இவற்றுள் கந்தரோடை, வல்லிபுரம், பூநகரி, மாதோட்டம் ஆகிய இடங்களில் ஆதிகால, இடைக்கால நாணயங்கள் அதிகளவில் பெறப்பட்டன.



இலங்கையில் கிடைத்த நாணயங்களை உள் நாட்டு நாணயங்கள், வெளி நாட்டு நாணயங்கள் என இரு வகைப் படுத்தலாம். அவற்றுள் இந்திய, கிரேக்க, உரோம, அரேபிய, சீன, போர்த்துக்கேய, ஒல்லாந்து, ஆங்கிலேய நாணயங்கள் வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்டவை. இவற்றுள் தமிழ்நாட்டு நாணயங்கள் அதிகளவில் வட இலங்கையில் கிடைத்துள்ளன. உள்நாட்டில் வெளியிடப்பட்ட நாணயங்களில் கி.பி 13ம் நூற்றாண்டிற்கும் கி.பி 1619 இற்கும் இடையில் வட இலங்கையில் ஆட்சிபுரிந்த தமிழ் மன்னர்களால் "சேது" என்ற பெயர் பொறித்த நாணயங்கள் பெறப்பட்டுள்ளன. இதனைவிட மேலும் பல உள்நாட்டு நாணயங்கள் கிடைத்துள்ளன.

இவ்வாறாக வட இலங்கையில் பெறப்பட்ட பலவகை நாணயங்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறுபட்ட வரலாற்றுத் தகவல்களை பெற முடிகின்றது. ஓரிடத்தில் இருந்து பெறப்படும் நாணயங்களை அடிப்படையாகக் கொண்டு அப்பிரதேசத்தில் இருந்த மக்கள் குடியிருப்பு பற்றிய தகவல்களை ஓரளவிற்குப் பெற்றுக்கொள்ளமுடியும். வட இலங்கையில் தமிழ் நாணயங்கள் காணப்படும் இடங்களாக மாதோட்டம், முல்லைத்தீவு, பூநகரி, கந்தரோடை, வல்லிபுரம் போன்ற இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இங்கு உள்நாட்டு, வெளிநாட்டு நாணயங்கள் அதிகளவில் கிடைத்துள்ளன. இவற்றினை அடிப்படையாகக் கொண்டு இப்பகுதிகள் வர்த்தக விருத்தி யடைந்த மக்கள் செறிவுடைய பிரதேசங்களாக இருந்திருக்க வேண்டும் எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதலாம்'. அத்துடன் இலங்கையில் கிடைத்துள்ள தமிழ் நாணயங்கள் அதிகளவானவை வட இலங்கையிலேயே கிடைத்துள்ளமையினால் தமிழ் குடியிருப்புக்கள் இங்கு செறிவாக இருந்துள்ளன எனக் கருதலாம்.

வட இலங்கை கொண்டிருந்த வர்த்தகத் தொடர்புகள் பற்றிய தகவல்களையும் இந்நாணயங்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றன. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட அயல்நாட்டு நாணயங்களினை அடிப்படையாகக் கொண்டு வெளிநாட்டு வர்த்தகம் சிறப்பான நிலையில் காணப்பட்டமையினை அறியலாம். அத்துடன் லக்சுமி உருவம் பொறித்த நாணயங்கள் தமிழகத்தில் கிடைத்துள்ளமையானது இலங்கை தமிழர்களுக்கும் தமிழகத்திற்கும் இடையிலான வர்த்தகத் தொடர்புகளுக்கு சிறந்த சான்றாகும். இவற்றை விட சேது மொழி பொறித்த நாணயங்கள், காளையுருவம், மீன் சின்னம் பொறித்த நாணயங்கள் என்பன தமிழகத்தில் ஒரு சில இடங்களில் கிடைத்துள்ளமை யானது வட இலங்கை, தமிழக வர்த்தக உறவு தொடர்பான அம்சங்களை மேலும் வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது.

வட இலங்கையில் வெளியிடப்பட்ட எழுத்துப் பொறித்த நாண யங்களை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் மொழி, எழுத்துப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. யாழ்ப்பாணத்தில் கந்தரோடை, உடுத்துறை முதலான இடங்களில் எழுத்துப்பொறித்த தமிழ் நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. முதன் முதலில் எழுத்துப் பொறித்த தமிழ் நாணயங்கள் கந்தரோடையிலேயே கண்டுபிடிக்கப்பட்டன. உடுத்துறையில் கண்டுபிடிக்கப்பட்ட கி.பி முதலாம் நூற்றாண்டிற்குரிய நாணயம் தமிழ் பிராமி எழுத்தில் தமிழ் மொழியில் "பொலம்", "நாகபூமி" என்ற பெயர்களைக் கொண்டுள்ளது. பிற்கால யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்ட நாண யங்கள் தமிழ் மொழியில் அமைந்துள்ளன. இதற்கு யாழ்ப்பாண மன்னர்களால் வெளியிடப்பட்ட "சேது" என்ற சொல் பொறித்த நாணயங்களை சிறப்பாகக் குறிப்பிடலாம்.

நாணயங்களினை அடிப்படையாகக் கொண்டு வட இலங்கையின் பொருளாதாரம் பற்றிய செய்திகளையும் அறிந்து கொள்ள முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக ஒரு மன்னனுடைய ஆட்சிக் காலத்தில் அவர்களால் வெளியிடப்பட்ட நாணயத்தின் தன்மையினை அடிப்படையாகக் கொண்டு அக்காலப் பொருளாதார நிலையை விளங்கிக் கொள்ள முடிகின்றது. வட இலங்கையைப் பொறுத்தவரை இங்கு வெளியிடப்பட்ட நாணயங்கள் பெரும்பாலும் செப்பு நாணயங்களாக இருப்பினும் கி.பி 13ஆம் நூற்றாண்டில் "சிங்கையாழி" என வெளியிடப்பட்ட நாணயங்கள் பொன், வெள்ளி முதலான உலோகங்களை கொண்டுள்ளன. யாழ்ப்பாண அரசர் காலத்தில் இவரது ஆட்சிக் காலத்தை உன்னத காலமாக வரலாற்று இலக்கியங்கள் கூறும்போது அது உண்மை என்பதனை அக்காலத்தில் வெளியிடப் பட்ட நாணயங்கள் உறுதி செய்கின்றன. அத்துடன் இங்கு கிடைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு நாணயங்கள் அந்நாடு களுடன் பொருளாதார ரீதியான தொடர்புகள் பேணப்பட்டமையினை உறுதி செய்கின்றன.



பொதுவாக நாணயங்கள் வெளியிடப்படுகின்றபோது அக்கால ஆட்சியாளர்களினதும் மக்களினதும் சமய நம்பிக்கைகளை பிரதிபலிப்பதாகவே சின்னங்கள், குறியீடுகள் என்பன பயன்படுத்தப்பட்டன. இத்தன்மையினை இலங்கையில் வெளியிடப்பட்ட நாணயங் களிலும் அவதானிக்க முடிகின்றது. அந்த அடிப்படையில் இலங்கை தமிழர்களின் நாணயங்களினை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் சமய நம்பிக்கை களினை அறிய முடிகின்றது. அவர்களின் நாணயங்களில் இந்துக்களின் சமய சின்னங்களான சூரியன், நந்தி, காளை, திரிசூலம், வேல், மயில், சேவல், லக்சுமி, தாமரை, யானை, மீன், சங்கு, சக்கரம், சுவஸ்திகா, சூரியன், சந்திரன் முதலான குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. யாழ்ப்பாண மன்னர்கள் தீவிர சைவர்களாக காணப்பட்டமையினால் அவர்களில் வெளியிடப்பட்ட நாணயங் களில் நந்திக்கு முதன்மையளிக்கப்பட்டதுடன் "சிவ" என்ற சொல்லும் பயன் படுத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லட்சுமி உருவம் பொறித்த நாணயங்கள் இலங்கையின் பல பாகங்களிலும் பரவலாகக் கிடைத்துள்ளபோதிலும் வட இலங்கை மற்றும் தென்னிலங்கையில் அதிகளவில் கிடைத்துள்ளன. 1917 இல் கந்தரோடையில் பெண் உருவம் பொறித்த நீள் சதுரமான நூற்றுக் கணக்கான நாணயங்களை கண்டறிந்த "போல்பீரிஸ்" அவற்றை "லக்சுமி நாணயங்கள்" எனப் பெயரிட்டார். ஏனெனில் அந்நாணயங்களில் பெண் ஒருவர் தாமரை மலரில் இருப்பது போன்றும் பெண்ணின் இரு பக்கத்திலும் யானை தும்பிக்கையால் நீர் சொரிவது போன்றும் சித்தரிக்கப்பட்டுள்ளது. நாணயத்தின் பின்பக்கத்தில் ஸ்வஸ்திகா, பலிபீடம், நந்திபீடம், வேல் போன்ற சின்னங்கள் பொறிக்கப் பட்டுள்ளது. இந் நாணயங்களை ஆராய்ந்த அறிஞர்களில் ஒரு சாரார் இதனை பௌத்த மதம் சார்ந்தது என்றும் இன்னொரு சாரார் இந்து மதம் சார்ந்தது எனவும் குறிப்பிடுகின்றனர். எனினும் இதில் உள்ள அம்சங்களின் அடிப படையில் இந்துமத செல்வாக்கே அதிகளவில் காணப்படுகின்றது என்றே கருத முடிகின்றது.



வடஇலங்கையில் ஆட்சியில் இருந் தவர்கள் முத்திரை நாணயங்கள் வெளி யிடப்பட்டமையினை யும் இந்நாணயங் களின் வாயிலாக உறுதிப்படுத்த முடிகின்றது. இதற்கு வரலாற்றாசிரியர் குறிப்பிடும் முக்கிய காரணங்களில் ஒன்று அந்நாணயங்களில் இடம் பெற்றுள்ள சின்னங்கள் வட இந்திய, தென்னிந்திய, மற்றும் தமிழக முத்திரை நாணயங்களில் இருந்து அவற்றின் அமைப்பு, உலோகத்தின் தன்மை முத லான விடயங்களில் வேறுபடுவதாகும். இவ்வகையான நாணயங்கள் யாழ்ப் பாணத்தில் மட்டுமன்றி இலங்கையின் ஏனைய பகுதிகளிலும், இந்தியாவின் பல பாகங்களிலும் கிடைத்துள்ளன. இவற்றின் மூலம் யாழ்ப்பாண அரசில் நாகதீபம் என்ற ஒரு அரசு இருந்தமையையும் அது பொருளாதார ரீதியாக நன்னிலையில் இருந்தமையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட இலங்கையில் கிடைத்த நாணயங்களினை அடிப்படையாகக் கொண்டு தமிழகத்திற்கும் வட இலங்கைக்கும் இடையிலான தொடர்புகளை அறிய முடிகின்றது. பழந்தமிழ் இலக்கிய கால மரபினைப் பின்பற்றி சமகால இலங்கை தமிழ், சிங்கள மன்னர்கள் நாணயங்களை வெளியிட்டுள்ளனர். முன் புறம் யானையும் பின்புறம் சுவஸ்திகா அல்லது கோட்டுருவில் அமைந்த மீன் சின்னமும் கொண்ட நாணயங்கள் இவற்றுக்கு சிறந்த உதாரணங் களாகும். இவ் வகையான நாணயங்கள் கந்தரோடை, பூநகரி, வல்லிபுரம், இரணைமடு, அநுராதபுரம் முதலான இடங்களில் கிடைத்துள்ளன. மீன் பொறித்த நாணயங்களை பாண்டியர்களே வெளியிட்டபோதும் இலங்கையில் கிடைத்துள்ள மீன் பொறித்த நாணயங்கள் அவர்களின் நாணய அமைப்புக் களில் இருந்து வேறுபடுகின்றன. அத்துடன் இந்நாணயங்களில் வரும் சுவஸ்திகா குறியீடு இலங்கைக்கு மட்டும் தனித்துவமான அம்சமாகக் காணப்படுகின்றது. எனவே பழந்தமிழ் இலக்கிய கால மற்றும் இலங்கை நாணய மரபுகளை இணைத்த வகையில் தமிழ் மன்னர்கள் நாணயங்களை வெளியிட்டுள்ளனர். இச்செயற்பாடானது அவர்களுக்கு இடையே காணப்பட்ட நெருக்கமான உறவுகளையும் தொடர்புகளையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

பண்பாட்டு அம்சங்கள் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளவும் நாணயங்கள் பேருதவி புரிகின்றன. தமிழர்களுடைய பண்பாட்டில் காளை முக்கியமான இடத்தினைப் பெறுகின்றது. காளை தமிழர்களின் வழிபாட்டு சின்னமாகவும் மங்கள சின்னமாகவும் இருந்ததுடன் அரச கொடிகளிலும் அரச முத்திரைகளிலும் காளையைப் பயன்படுத்தும் மரபு காணப்பட்டது. இத் தன்மையினை இலங்கை தமிழ் மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களிலும் அவதானிக்க முடிகின்றது. காளை உருவம் பொறித்த தமிழ் நாணயங்கள் கந்தரோடை, யாழ்ப்பாணம், மாதோட்டம், வல்லிபுரம், அநுராதபுரம், பூநகரி முதலான இடங்களில் கிடைத்துள்ளன. இவ்வகை நாணயங்கள் வட இலங்கையில் குறிப்பாக பூநகரி வட்டாரத்தில் உள்ள பள்ளிக்குடா, வீரபாண்டியன் முனை, ஈழஊர் ஆகிய இடங்களில் அதிகளவில் பெறப் பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாட்டினுடைய கலை மரபினை அறிய உதவும் வரலாற்று மூலாதாரங்களில் நாணயங்களுக்கும் முக்கிய இடமுண்டு. அவற்றில் உள்ள சின்னங்கள், அவற்றின் அமைப்பு என்பன அவர்களின் கலை மரபுகளை வெளிப்படுத்துகின்றன. வட இலங்கையில் கிடைத்த காளை உருவங்கள் பொறித்த நாணயங்களை அவதானிக்கின்றபோது இவற்றை ஒத்த நாணயங்கள் தமிழ்நாட்டில் வெளியிடப்பட்டுள்ளபோதும் ஈழத்து நாணயங்களில் காணப் படும் காளை உருவம் இந்நாட்டு தமிழர்களுக்குரிய தனித்துவமான கலை மரபினைக் கொண்டுள்ளது. அதேவேளை பெண் உருவம் பொதிந்த நாணயங்களை அவதானிக்கும்போது அவற்றில் உள்ள பெண் உருவங்களில் வேறுபட்ட தோற்றங்கள் காணப்படுகின்றன. அவை லக்சுமி, துர்க்கை, காளி, கண்ணகி உருவங்கள் என அடையாளப்படுத்தப்படுவதுடன் மறுபுறம் அத் தெய்வங்களுடன் தொடர்புடைய சூலம், மயில், வேல், காளை, சுவஸ்திகா, யானை போன்ற உருவங்களும் காணப்படுகின்றன. இவ் அம்சங்கள் யாவும் அவற்றின் கலைநயத்தினையும் இந்துக் கலை மரபையும் வட இலங்கை தமிழரின் பண்பாட்டு அம்சங்களையும் வெளிப்படுத்துகின்றன.

மேற்கூறப்பட்ட விடயங்கள் அடிப்படையில் தொகுத்து நோக்குகின்ற போது வட இலங்கை தமிழரின் வரலாற்றினை அறிந்து கொள்ள பயன்படும் அவர்களின் குடியிருப்பு மையங்கள், பொருளாதார நடவடிக்கை, மதம், பண்பாடு, கலாசாரம், வர்த்தக உறவுகள் முதலான பல அம்சங்களினை அங்கு கண்டெடுக்கப்பட்ட நாணயங்கள் வெளிப்படுத்தி நிற்பதனை தெளிவாக அறிய முடிகின்றது. எனவே வட இலங்கை பற்றிய வரலாற்றாய்வில் நாணயங்களின் முக்கியத்துவம் தவிர்க்கமுடியாத ஒன்றாகவே காணப்படுகின்றது.

**உசாத்துணை:**


01. புஷ்பரட்ணம் ப, 2001, இலங்கைத் தமிழரின் பண்டைக்கால நாணயங்கள், பவானி பதிப்பகம்.

02. சிற்றம்பலம் கி.க, 1992 யாழ்ப்பாண இராச்சியம், தாசன் அச்சகம்.

03. புஷ்பரட்ணம் ப, 2003 தொல்லியல் நோக்கில் ஈழத்தமிழரின் பண்டைக்கால மதமும், கலையும் , குமரன் புத்தக இல்லம்.

04. புஷ்பரட்ணம் ப. 2003 தொல்லியல் நோக்கில் இலங்கை, தமிழர் பண்பாடு, பவானி பதிப்பகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விவசாய நிலம் கைவிடப்படுவதில் பௌதீக மானிடவியல் காரணிகளின் பங்கு

– பூநகரி பிரதேச செயலக பிரிவை மையமாகக் கொண்ட ஆய்வு


**செல்வி கேதாஜினி நவரத்தினசிங்கம்** (முழங்காவில்)
புவியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


மனித வாழ்விற்கும் நிலைத்திருப்பிற்கும் அடிப்படையானதும் ஆதாரமானதும் ஆக விளங்குவது விவசாயமாகும். ஒரு நாட்டின் அல்லது பிரதேசத்தின் அபிவிருத்தியானது அங்குள்ள பொருளாதார நடவடிக்கைகளைத் திட்டமிட்ட ரீதியில் சிறந்த வினைத்திறனுடன் மேற்கொள்வதன் மூலம் அடையப்படுகிறது. மூன்றாம் உலக நாடுகளைப் பொறுத்தவரை விவசாயமே முதன்நிலைப் பொருளாதாரமாகக் காணப்படுகின்றது. விஞ்ஞான தொழில் நுட்ப முறைகள் காரணமாக கைத்தொழில் பொருளாதாரம் நோக்கிய நடவடிக்கைகள் மனிதனிடத்தே அதிகரித்து செல்கின்றது. எனினும் உயிர் வாழ்வதற்கு விவசாயமே அவசியமானதாக காணப்படுகின்றது.

இலங்கை வரலாற்றுக்காலம் முதல் இன்றுவரை விவசாயமே பிரதான பொருளாதார நடவடிக்கையாகக் கொண்டுள்ளது. ஆரம்ப காலங்களில் நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் இதன் பங்களிப்பு முதல் நிலையில் காணப்பட்டது. ஆனால் இன்று பல பௌதீக, சமூக,பொருளாதார மற்றும் அரசியல் காரணிகளின் விளைவால் விவசாயமானது நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் சேவைத் தொழில் 56% பங்களிப்பையும் கைத்தொழில் 32.7% பங்களிப்பையும் விவசாயம் 10.09% பங்களிப்பையும் கொண்டு காணப்படுகின்றது. (இலங்கை புள்ளி விபரவியல் திணைக்களம் – 2015) அந்த வகையில் இவ் ஆய்வானது "விவசாய நிலம் கைவிடப்படுவதில் பௌதீக மானிடவியல் காரணிகளின் பங்கு – பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவினை மையமாகக் கொண்ட ஆய்வு" என்னும் தலைப்பில் ஆய்வு செய்யப் படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படும் கரைச்சி கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி என்னும் நான்கு பிரதேச சபைகளில் பூநகரி பிரதேச சபை ஆய்வுப் பிரதேசமாகக் காணப்படுகின்றது. இது கிளிநொச்சி மாவட்டத்தில் 37 வீதத்தினை உள்ளடக்கி மேற்குப் பக்கமாக அமைந்துள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச சபையில் இருந்து 26km தூரத்தில் அமைந்துள்ளது. பூநகரி பிரதேசமானது வட அகலாங்கு 9'28'–9'44' கிழக்கு நெட்டாங்கு $79.96^0 - 80.27^0$ இடையிலான அமைவிடத்தைக் கொண்டுள்ளது. மற்றும் வடக்கே யாழ்ப்பாண கடனீரேரியையும், கிழக்கே கரைச்சிப் பிரதேச சபையினையும், தெற்கே மன்னார் மாவட்ட மாந்தைப் பிரதேச சபையினையும், மேற்கே இந்து சமுத்திர பகுதிகளையும் சார்ப்பு அமைவிடமாகக் கொண்டுள்ளது. 448.7km பரப்பளவினைக் கொண்டதாக பூநகரி பிரதேசம் காணப்படுகின்றது.

பூநகரிப் பிரதேசத்தின் முக்கிய பொருளாதார நடவடிக்கைகளாக பயிர்ச்செய்கை, சிறுகைத்தொழில், மீன்பிடித்துறை என்பன காணப்பட்ட போதிலும் விவசாயமே பிரதான வாழ்வாதாரமாக காணப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தின் மொத்த பரப்பில் 534.7 SqKm பகுதியினை உள்ளடக்கிய பூநகரி 448.7 SqKm நிலப்பரப்பாகவும் 85.69 Sq Km நீர்ப்பரப்பாகவும் காணப்படுவதுடன் பூநகரிப் பிரதேசமானது பத்தொன்பது கிராமசேவகர் பிரிவினை உள்ளடக்கியுள்ளது. (மாவட்ட புள்ளி விபர கையேடு 2014) கிளிநொச்சி மாவட்டத்தின் முக்கிய விவசாய உற்பத்தி பிரதேசமாகக் காணப்படுவதுடன் தாழ்நிலப்பகுதிகளில் பரவலாக நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. தென்னை, பனை செய்கையும் அதிகளவு காணப்படுகின்றது. இவ்வாறு விவசாயத்திற்கான வளவாய்ப்புக்கள் காணப்பட்ட போதிலும் விவசாய நிலமானது பயிர்ச்செய்கைக்கு உட்படாது கைவிடப்பட்டுச் செல்லும் நிலையினை அவதானிக்க முடிகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேசத்தில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாது கைவிடப்பட்ட வயற்காணிகளின் அளவு (AC) 1692 ஆகவும் கண்வாளை – 1047 AC ஆகவும் பூநகரி 3513 AC ஆகவும் பச்சிலைப்பள்ளி 344 AC ஆகவும் காணப்படுகின்றது. (கமநல அபிவிருத்தி திணைக்களம் – 2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் பூநகரிப்பகுதியிலேயே கைவிடப்பட்ட விவசாய நிலக்காணிகள் அதிகம் காணப்படுகின்றது.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கான நிலங்கள் உலர் வலயத்திலேயேயுள்ளன. இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் மூன்றில் இரண்டு பங்கு உலர் பிரதேசத் தாழ் நிலங்களாக உள்ளன. உலர்வலயத் தாழ் நிலங்களைப் பயன்படுத்தி அதிக நிலப்பரப்பை பயிர்ச்செய்கையின் கீழ் கொண்டு வரவும் உணவு உற்பத்தியை அதிகரிக்கவும், தென்மேல் பிரதேசம், மலைநாடு, யாழ்ப்பாணக் குடாநாடு ஆகிய பிரதேசங்களில் காணப்படும் அதிக மக்கள் அடர்த்தியைக் குறைக்கவும் குடியேற்றத்திட்டங்கள் அமைக் கப்பட்டது. இதன் பிரகாரம் பூநகரிப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராமங்கள் சிலவும் நிறுவப்பட்டது. குறிப்பாக குடியானவர் குடியேற்றத் திட்டத்திற்கமைவாகவும், படித்த வாலிபர் குடியேற்றத்திட்த்திற்கமைவாகவும் சில கிராமங்கள் நிறுவப்பட்டது. எடுத்துக்காட்டாக முழங்காவில் கிராம சேவகர் பிரிவு படித்த வாலிபர் திட்டத்தின் கீழும், கிராஞ்சி மேட்டு நில குடியேற்றத் திட்டத்தின் மூலமும், ஜெயபுரம் உலர் வேளாண்மை குடியேற்ற திட்டங்கள் மூலமும் உருவாக்கப்பட்டது.

இதன் பிரதான பொருளாதார நடவடிக்கையாக விவசாயமே காணப் படுகின்றது. மேலும் கரையோர வலயத்தினைக் கொண்டுள்ளமையால் மீன்பிடித்தொழிலுக்கு வாய்ப்பாகக் காணப்படுகின்றது. அத்துடன் பனை, தென்னை, பெருந்தோட்ட செய்கை காணப்படுவதால் சிறுகைத் தொழிலுக்கும் வாய்ப்பாக காணப்படுகின்றது. விவசாயம் என்னும்போது பயிர்ச்செய்கை மீன்பிடி, கால்நடை வளர்ப்பு என்பவற்றை உள்ளடக்கியதாக காணப்படு கின்றது. எனினும் இவ் ஆய்வில் பயிர்ச்செய்கை நிலம் செய்கைக்கு உட்படாது கைவிடப்பட்டு செல்கின்ற பிரச்சினையினை மையப்படுத்தி ஆராயப்பட் டுள்ளது. இவ் ஆய்வுப் பிரதேசத்தில் இலங்கையில் பிரசித்தி பெற்ற "மொட்டக்கறுப்பன்" நெல் இனம் பெருமளவு செய்கை பண்ணப்படுகின்றது. அத்துடன் ஆட்டக்காரி, பச்சைப் பெருமாள், கீரிச்சம்பா, போலச்சம்பா, வைத்தியலிங்கம், 400-6, C – 362 போன்ற நெல்லினங்களும் செய்கைக்கு உட்படுகின்றது. அத்துடன் சோளம், உழுந்து, கௌப்பி, பயறு, இஞ்சி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருளைக்கிழங்கு, வெங்காயம், மிளகாய், முருங்கை, பாகற்காய், கத்தரி, தக்காளி, முட்டைக்கோஸ், கரட்,பீற்றூட், பூசணி போன்ற மரக்கறி வகைகளும், மா, பப்பாசி, மாதுளை, எலுமிச்சை, தோடை போன்ற பழ வகைகளும், பனை, தென்னை முதலான பெருந்தோட்ட செய்கையும் பிரதானமாக மேற்கொள்ளப் படுகின்றது. குறிப்பாக பூநகரிப் பிரதேசத்தில் இருந்து பெருமளவு தேங்காய், பப்பாசி, அரிசி என்பன. வெளியூர் சந்தைகளுக்கு ஏற்றமதி செய்யப்படு கின்றது. இவ்வாறு விவசாய பயிர்ச்செய்கைக்கு ஏற்ற வளவாய்ப்பினை கொண்டிருந்தபோதும் அண்மைக் காலமாக விவசாய நிலம் கைவிடப்பட்டு செல்கின்ற தன்மையினை அவதானிக்க முடிகின்றது.

2009ம் ஆண்டு யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து விவசாய நிலங்கள் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படாது கைவிடப்பட்டுக் காணப்படும் நிலங்கள் அதிகரித்துச் செல்கின்றது. வடமாகாணத்தில் 180934 ஏக்கர் நெல் வயல் நிலங்கள் கைவிடப்பட்டுக் காணப்படுகின்றது. இதில் கிளிநொச்சி மாவட்டத்தில் 41340 ஏக்கர் கைவிடப்பட்ட வயல் நிலங்களில் பூநகரி பிரதேச செயலகத்திற் குட்பட்ட இடங்களில் 2248.37 ஹெக்ரெயர் வயல் நிலங்கள் கைவிடப்பட்டுக் காணப்படுகின்றது. (Annual Performance Report and accedunts Report Nothern Province 2015) இதே போன்று மேட்டு நிலப்பயிர்ச்செய்கை நிலங்கள் வடமாகாணத்தில் 168637 ஏக்கர் கைவிடப்பட்டுக் காணப்படு கின்றது. இதில் 30800 ஏக்கர் நிலம் கிளிநொச்சி மாவட்டத்தில் பயிர்ச் செய்கைக்கு உட்படாது கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

இவ் ஆய்வானது பின்வரும் நோக்கங்களை மையமாகக் கொண்டு மேற் கொள்ளப்பட்டுள்ளது.

1. கைவிடப்பட்ட விவசாய நிலங்களை அடையாளம் கண்டு படமாக்கல்.
2. விவசாய நிலம் கைவிடப்படுவதற்கான பௌதீக மானிடவியல் காரணங் களை கண்டறிதல்.
3. கைவிடப்பட்ட நிலத்தை மீள்பாவனை செய்வதற்கான உபாயத்தை முன் வைத்தல்.

## 2.0 தரவுப் பகுப்பாய்வு

சேகரிக்கப்பட்ட முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகளை அடிப்படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகக் கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது. அந்த வகையில் பூநகரிப் பிரதேச விவசாய நிலம் கைவிடப்படுவதில் பௌதீக மானிடவியல் பங்கு என்னும் இவ் ஆய்விற்கு முதலில் இடவிளக்கப் படத்தில் அடையாளம் செய்யப்பட்ட பிரதேசம் பூகோள இடநிர்ணய முறை (GPS) மூலம் பெற்றபட்ட ஆள்கூறுகள், செய்மதிப்படங்கள் என்பவற்றினை ஆதாரமாகக் கொண்டு தகவல் தொழில் நுட்ப முறையைப்பயன்படுத்தி படமாக்கப்பட்டது. ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவினுள்ளும் காணப்பட்ட கைவிடப்பட்ட விவசாய நிலங்களை புவியியல் ஆள்கூற்றினை அடிப்படையாகக் கொண்டும் செய்மதிப் படத்தினை அடிப் படையாகக் கொண்டும் வீதி அமைப்பினை அடிப்படையாகக் கொண்டும் digitize செய்யப்பட்டு படமாக்கப்பட்டது. அத்துடன் கைவிடப்பட்ட விவசாய நிலங்களின் இடம்சார் பரம்பல் கைவிடப்படுவதற்கான காரணங்கள் என்ப வற்றினை கண்டறிவதற்கு நேரடி அவதானிப்பு, பிரதேச மக்கள் பிரதேச விவசாயிகள் உடன் கலந்துரையாடல் மூலமும் பூநகரி பிரதேச வருடாந்த விளைச்சல் தொடர்பான தரவுகள் கமநலசேவை நிலையத்தில் இருந்தும் மாவட்ட மட்டத்தில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத வயற்காணிகளின் விபரங்கள் கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் இருந்தும், விவசாய போதனாசிரியர் கையளித்தல் அறிக்கையில் இருந்தும் முதலாம் நிலைத்தரவுகள் பெறப்பட்டன.

## 3.0 கைவிடப்பட்ட விவசாயநிலத் துண்டுகளின் பரம்பல்

உரு – 01 பூநகரி பிரதேச விவசாய நிலங்கள் செய்கைகக்கு உட்படாது கைவிடப்பட்டுக் காணப்படும் துண்டுகளின் பரம்பலானது காட்டுகின்றது. இவ் விவசாய நிலங்களானது பௌதீக மற்றும் மானிடக் காரணிகளால் செய்கைக்கு உட்படுத்தாது காணப்படுவதால் வருடாந்த உற்பத்தியின் அளவு குறைவடைந்து செல்வதுடன் பொருளாதார ரீதியிலும் பாதிப்பினை எதிர்கொள்கின்றனர்.




உரு - 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரு – 02 ஆனது யுத்தத்தால் கைவிடப்பட்ட விவசாய நிலத்துண்டுகளின் பரம்பலையும் உரு – 03 ஆனது ஏனைய காரணிகளால் கைவிடப்பட்ட விவசாய நில துண்டுகளின் பரம்பலைக் காட்டுகின்றது. ஏனைய காரணிகள் எனும்போது மூலாதாரமின்மை, உரிமையாளர் பிரச்சினை, உட்கட்டமைப்பு விருத்தியின்மை, நீர்பற்றாக்குறை போன்ற காரணங்களினால் விவசாய நிலமானது கைவிடப் பட்டு சென்றதை காட்டுகின்றது. உரு – 04 ஆனது உவராதலால் கைவிடப்பட்ட நெல்வயல் துண்டுகளைக் காட்டுகின்றது. அதிகமான கைவிடப்பட்ட விவசாய நிலங்கள் செட்டிய குறிச்சி, பல்லவராயன்கட்டு, பொன்னாவெளி, கரியாலை, நாகபடுவான் ஆலயங்களின் பகுதிகளில் அதிகளவு காணப்படுகின்றது. இங்கு உவர்த் தாக்கத்தினாலேயே பெருமளவு விவசாய நிலங்கள் கைவிடப்பட்டுக் காணப்படுகின்றது. செட்டிய குறிச்சி பகுதியில் 274.45 ஹெக்டேயர் அளவும், பல்லவராயன்கட்டுப் பகுதியில் 289.98ஹெக்ரெயர் அளவும், பொன்னாவெளிப் பகுதியில் 120.53 ஹெக்ரேயர் அளவும் 100.65 ஹெக்ரேயர் அளவும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனைவிட நாச்சிக்குடா, கிராஞ்சி. ஞானிமடம் பரமன்கிராய், நாகபடுவான் பகுதியில் 100.65 ஹெக்ரேயர் அளவும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனைவிட நாச்சிக்குடா, கிராஞ்சி, ஞானிமடம், பரமன்கிராாய், கௌதாரிமுனை, மட்டுவில் நாடு போன்ற பகுதியிலும் உவர்த்தாக்கத்தினால் விவசாய நிலமானது கைவிடப்பட்டச் செல்கின்றது. அத்துடன் வீட்டுத் தோட்டச்செய்கை முழங்காவில், நல்லூர், பல்லவராயன்கட்டு, கிராஞ்சிப் பகுதியில் கைவிடப் பட்டுக் காணப்படுகின்றது.



உரு- 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் விவசாய நிலங்கள் செய்கைக்கு உட்படுத்தாது காணப்படும் கிராமங்களினை தெளிவாக நோக்கும்போது நல்லூர் பகுதிகளில் முல்லிமோட்டை, வன்னன் குளக்கரைப்பகுதி, ஆவரஞ்சாட்டடிப்பகுதி மேலாய்ப்பகுதி என்பவற்றில் அதிகளவு கைவிடப்பட்ட நிலங்கள் காணப்படுகின்றது. செட்டிய குறிச்சிப்பகுதியில் கறுக்காய்த்தீவு, தம்பிராய், விரடி பகுதிகளும் ஞானிமட வட்டக்கிராஞ்சிப் பகுதியும் கொல்லக்குறிச்சியில் செல்லையாதீவு சூரமுணங்கு, கோரவயல், குடமுறுட்டி காவாக்குளப்பகுதியும், பள்ளிக்குடாவில் நன்னீர் குளப்பகுதியும் பள்ளிக்குடாவில் நன்னீர் களப்பகுதி, வண்ணக்கம் வெளிப்பகுதியும் ஜெயபுரத்தில் தும்புருவில், எத்தாவில், பண்ணையடி பகுதியும் பல்லவராயன்கட்டு கிராமசேவகர் பிரிவில் கோணவளக்குளம், கூட்டுப்பண்ணை மாதிரி கிராமப்பகுதி கிராஞ்சி கிராம சேவகர் பிரிவில் சம்புவெளி, கல்லாவில் பகுதியும் மட்டுவில் நாடு, மற்றும் பரமன்கிராய் கௌதாரிமுனை பகுதியும் பெருமளவு கைவிடப்பட்டுக் காணப்படும் இடங்களாகும். இவ்வாறு விவசாயம் கைவிடப்பட்ட நிலமானது பூநகரிப்பகுதியில் பரம்பிக் காணப்படுவதால் செய்கைக்கு உட்படுத்தாத பெருமளவு நிலங்களினை அவதானிக்க முடிகின்றது.

## 4.0 கைவிடப்பட்டமைக்கான காரணங்கள்

ஆய்வு பிரதேசத்தில் காணப்படும் விவசாய நிலங்கள் கைவிடப்பட்டு செல்வதில் செல்வாக்கு செலுத்தும் பௌதீகக் காரணி மற்றும் மானிடக் காரணிகள் என்பவற்றினை கள ஆய்வின்போது மக்களுடனான கலந்துரையால், அவதானிப்பு, கிராமசேவகர், கமநல அபிவிருத்தி திணைக்களம் உத்தியோகத்தர்கள், நிலப்பயன்பாட்டு திட்டமிடலாளர்கள், கமக்கார அமைப்பு உள்ளிட்ட சிலருடன் நேர்காணல் மேற்கொண்டதன் ஊடாக அறிய முடிகின்றது.

## 4.1 விவசாய நிலம் கைவிடப்படுவதற்கான பௌதீகக் காரணிகள்

### 4.1.1 கடல் நீர் ஊடுருவல் காரணமாக நிலமானது தரமிழத்தல்

ஆய்வுப் பிரதேச விவசாய நிலமானது கைவிடப்பட்டுச் செல்வது முக்கிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. பூநகரிப் பிரதேசம் கரையோர வலயம் ஆக காணப்படுவதால் கடல் நீர் நன்னீருடன் கலப்பதால் நன்னீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவராதலால் பாதிப்படைகின்றது. பூநகரிப் பிரதேசத்தில் உவராதல் தன்மையின் தாக்கம் 1970களிலே உணரப்பட்டது. இதனை கருத்தில் கொண்டு நிறுவனங்களின் உதவியுடன் உவர் நீர் அணைக்கட்டுகள் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டு நன்னீரை பாதுகாக்கும் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது. குறிப்பாக பொன்னாவெளிப் பகுதியின் பெருமளவு நிலப்பரப்பு உவராதலுக்கு உற்பட்டு மக்கள் வாழ்வியலுக்கு உவப்பற்ற தன்மையில் காணப்படுகின்றது.




உரு- 03

1990 களில் ஏற்பட்ட இந்திய இராணுவ கலவரங்களைத் தொடர்ந்து இடப்பெயர்வினை மேற்கொண்ட மக்கள் மீண்டும் இப்பகுதியில் மீள்குடியேறாது வேறு பிரதேசங்களில் வாழ்கின்றனர். இங்கு வசித்த பலர் முழங்காவில் ஜெயபுரம், செட்டியகுறிச்சி, வேரவில் போன்ற பகுதிகளில் வசிப்பதை கலந்துரையாடல் மூலம் அறிந்து கொள்ள முடிந்தது. விவசாயத்தையே நம்பி வாழ்ந்தவர்கள் தொடர்ந்து இப்பிரச்சினையின் தாக்கம் அதிகரிக்க வாழ்வாதாரம் பாதிப்படைந்து சென்றமை காரணமாக மீளவும் இப்பகுதிகளில் குடியமரவில்லை.

மற்றும் பூநகரி, நல்லூர் கிராமசேவகர் பிரிவிற்கு உட்பட்ட முல்லிமோட்டை, வன்னன் குளப்பகுதி, ஆவரஞ்சாட்டிப் பகுதி என்பனவும், ஞானிமடப்பகுதி, கொல்லக்குறிச்சிப்பகுதி என்பனவும் பாதிப்படைந்துள்ளது. யுத்தத்திற்கு பின்னர் உவர் அணைகள் சேதமாக்கப்பட்டதைத் தொடர்ந்தும் உவராதல் அதிகரித்துச் செல்கின்றது. சாமிபுலம் – நல்லூர் – ஆலங்கேணி –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லக்குறிச்சி பகுதிகளை இணைத்து உவர் அணைக்கட்டு அமைக்கப் பட்டிருந்தது. இதே போன்று செல்லையா தீவு, கறுக்காய் தீவு உப்பு நீர் அணைக் கட்டும் ஒயாமாரி – கிராஞ் சிக்குடா – நொச்சிமுனை உவர் அணைக்கட்டும் அமைக்கப்பட்டிருந்தது. 6000 ஏக்கர் நிலம் ஒயா மாரி பகுதியிலும் 1200 ஏக்கர் கிராஞ்சி பகுதியிலும் 1800 ஏக்கர் நொச்சிமுனைப் பகுதியிலும் உவர்நீர்த் தாக்கத்தால் கைவிப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. என கள ஆய்வின் போதான கலந்துரையாடல் மூலம் அறிய முடிந்தது. இதே போன்று வண்ணக்கம் வெளிப்பகுதியில் 1000 ஏக்கர் நிலம் கைவிடப்பட்டுள்ளது. பரமன்கிராய், கௌதாரிமுனை, கரியாலை நாகபடுவான், செட்டியகுறிச்சி, ஞானிமடம், பல்லவராயன் கட்டு, பொன்னாவெளி போன்றன கடல்நீர் ஊடுருவவி நன்னீர் பகுதிக்குள் கலக்கின்ற பிரதான இடங்களாகக் காணப்படுகின்றது.




உரு- 04

**அட்டவணை - 01 உவராதலால் கைவிடப்பட்டுக் காணப்படும் வயற்காணிகளின் அளவு**

| கிராம சேவகர் பிரிவு | நில அளவு(ha) |
|---|---|
| நாச்சிக்குடா | 10 |
| கிராஞ்சி | 24.17 |
| ஞானிமடம் | 40.29 |
| பரமன்கிராய் | 45.1 |
| கௌதாரிமுனை | 50.4 |
| ஆலங்கேணி | 72.22 |
| நல்லூர் | 79.47 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| காரியாலை நாகபடுவான் | **100.65** |
| செட்டியகுறிச்சி | **274.45** |
| பல்லவராயன்கட்டு | **289.98** |
| **மொத்தம்** | **986.73** |

இவ்வாறு பூநகரிப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பல கிராமங்களில் உவராதல் பிரச்சனையால் வயல் நிலங்கள், மரக்கறி செய்கைகள் என்பன பாதிக்கப்பட்டு வருடாந்த உற்பத்தியின் அளவு குறைவடைந்து செல்கின்றமை யால் இப்பகுதி மக்களினுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுச் செல்கின்றது.

### 4.1.2 இயற்கை அனர்த்த்ததினால் விவசாய நிலம் கைவிடப்படல்

வெள்ளம் மற்றும் வரட்சி காரணமாக விவசாய நிலமானது கைவிடப்பட்டுச் செல்கின்றது. குறிப்பாக ஐப்பசி – தை வரையான மாதங் களில் சூறாவளி மழைவீழ்ச்சியையும் மார்கழி – மாசி வடகீழ் பருவக்காற்று மூலம் அதிக மழைவீழ்ச்சியையும் ஆய்வுப்பிரதேசம் பெறுகிறது. ஆவணி – புரட்டாதி காலப்பகுதியில் அதிகவரட்சி நிலவுகிறது. இங்கு கிடைக்கப்பெறும் மழைநீர் ஆனது குளங்களில் சேமிக்கப்படுவதைவிட பெருமளவு நீர் கடலுடன் கலக்கிறது. அத்துடன் குளங்களின் அணைக்கட்டு உடைத்தும் நீரானது பாய்ந்து பயிர் அழிவினை ஏற்படுத்தி வருவதுடன் மேலதிக நீர் பாய்ந்து கடலுடனும் கலக்கிறது இதனால் மழை காலங்களின் பின்னர் நீர் பிரச்சனைகளையும் எதிர்கொள்ளுகின்றது.

வெள்ள அனர்த்தத்தின்போது பெருவாரியான பயிர்ச் செய்கைகள் பாதிப்படைவதுடன் பொருளாதார ரீதியான பாதிப்புக்களும் ஏற்படுகின்றது. இதனால் விவசாயிகள் அனர்த்தம் நிகழும் பகுதிகளில் பயிர்செய்கையை மேற்கொள்ள ஆர்வமற்றவர்களாகக் காணப்படுகின்றனர் காலநிலை மாற்றம், காலம் தப்பிய மழைவீழ்ச்சி என்பனவும் தாக்கம் செலுத்தும்.

அனர்த்தத்தால் பாதிக்கப்படும் பகுதி, விவசாயிகள் மத்தியில் பயிர்ச்செய்கை மேற்கொள்ள ஆர்வமற்றதற்கு காரணங்களாக அமைகின்றது. இப்பகுதி விவசாயிகள் தம்மால் செலுத்தப்படும் முதலீட்டிற்கு அமைய உற்பத்திப் பொருளின் இலாபம் குறைவாகவே பெறப்படுவதால் அனர்த்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியில் செய்கை செய்வதற்கு நாட்டமில்லை என கலந்துரையாடலின் போது கூறினார்கள்.

2013 ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் 100:75 என்ற அளவில் பயிர்கள் அழிவடைந்து விவசாயிகளுக்கு பெருமளவு பாதக தன்மையினை ஏற்படுத்தி இருந்தது. 2016 ம் ஆண்டு தை மாதப்பகுதியில் செட்டிய குறிச்சி கிராம சேவகர் பிரிவிற்கு உட்பட்ட கோயில் குளம், கிரிப்படிக்குளம் என்பன வெள்ள அனர்த்தத்தை ஏற்படுத்தி பெருமளவு பயிர்ச்சேதத்தை ஏற்படுத்தியது. கொல்லக்குறிச்சி பகுதியில் காணப்படும் கொக்குடையான், குடமுறுட்டி ஆறுகள் வெள்ள அனர்த்தத்தை ஏற்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. இங்கு செல்லையா தீவு, சூரமுனங்கு, கோரவயல் பகுதியில் 200 ஏக்கர் வயல் நிலங்கள் அனர்த்தத்தினால் கைவிடப்பட்டுக் காணப்படுகின்றது. இதே போன்று பல்லவராயன்கட்டு, கரியாலை நாகபடுவான் குளம் என்பன அனர்த்தத்திற்கு உட்படுவதால் இதனை அண்டிய பகுதிகளில் விவசாய செய்கையானது கைவிடப்பட்டுக் காணப்படுகின்றது. இவ்வாறு மழைவீழ்ச்சி காலங்களில் வெள்ள அனர்த்தம் மூலம் பெருமளவு விவசாய செய்கை பாதிப்படையும் தன்மை காணப்படு கின்றபோதும் வரட்சி நிலவும் காலங்களில் பயிர்ச்செய்கை பாதிப்படை கின்றது. மழைகாலங்களில் கிடைக்கப்பெறும் நீரினை சேமிக்கக்கூடிய வினைதிறனான குளஅமைப்பு, பாதுகாப்பான அணைகள் என்பன காணப் படாது மழைநீர் ஆனது கடலுடன் கலக்கிறது. அத்துடன் உயர்வான ஆவியாக்க ஆவியுயிர்ப்பு காணப்படுவதால் ஆய்வுப் பிரதேசத்தில் வரட்சியின் பாதிப் பினையும் விவசாயிகள் எதிர்கொள்கின்றனர்.

மட்டுவில் நாடு கிழக்கு, மட்டுவில் நாடு மேற்கு, பரமன்கிராய், செம்மன்குன்று, ஜெயபுரம், எத்தாவில், வட்டக்கிராஞ்சி, கறுக்காய்த்தீவு போன்ற பகுதிகள் பெருமளவு நீர் பிரச்சனையை எதிர்கொள்கின்றன. வரட்சி காலங்களில் தமது தேவைகளுக்கு கூட நீரினைப் பெறமுடியாத தன்மையில் தூரதேசங்களுக்கு சென்று நீரினை பெறுகின்றனர். இதனால் விவசாயத்திற்கு தேவையான நீர்ப்பாசன நவடிக்கைகளுக்கு நீரின்மையால் பாரிய பிரச்சனை யினை எதிர்கொள்கின்றனர். குறிப்பாக வரட்சி காலங்களில் முற்றுமுழுதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றிய நிலையில் காணப்படுகின்றது. வெள்ளம் மற்றும் வரட்சி அனர்த்தங் களால் பாதிக்கப்படுவதுடன் சூறாவளி தாக்கத்திற்கு உட்பட்டு பனை, தென்னை, வாழை போன்ற பயன்தரு மரங்கள் அழிவிற்கு உள்ளாகின்றது. இவ்வாறு ஆய்வுப்பிரதேசத்தில் வெள்ளம், வரட்சி, சூறாவளி தாக்கங்களால் விவசாயிகள் முதலீட்டினை இழந்துள்ளதுடன் எதிர்பார்த்த விளைச்சலினை பெறமுடியாது போக அவ் நிலங்களினை கைவிட்டுச் செலவதினை அவதானிக்க முடிகின்றது.

### 4.2 மானிடக் காரணிகள்

#### 4.2.1 உள்நாட்டு யுத்தமும் இடப்பெயர்வும்

நடைபெற்று முடிந்த உள்நாட்டு யுத்தத்தை தொடர்ந்து ஆய்வுப் பிரதேசத்தை விட்டு முற்றுமுழுதாக வெளியேறிய மக்கள் முகாம்களில் தக்கவைக்கப்பட்டு பின்னர் மீள்குடியமர்த்தப்பட்டனர். எனினும் மீள்குடிய மர்த்தப்படுகின்றபோது மக்கள் சிலர் தமது சொந்த இடங்களுக்கு மீண்டும் வந்து குடியமராது வேறு பிரதேசங்களுக்கும் மற்றும் வேறு நாடுகளுக்கும் என இடம்பெயர்ந்து சென்றுள்ளமையால் காணி உரிமையாளர்கள் அற்று விவசாய காணிகள் பல கைவிடப்பட்டு செல்கின்றமையால் பெருமளவு நிலங்கள் பயன்பாடற்றுக் காணப்படுகின்றது. மேலும் யுத்தத்தினைத் தொடர்ந்து சில பகுதிகளில் இன்னமும் மிதிவெடி அகற்றப்படாது காணப்படும் விவசாய நிலங்களை கைவிடப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது. உள்நாட்டு யுத்தத்தின்போது குளங்களின் அணைக்கட்டு சேதமாக்கப்பட்டமை ஏற்கனவே காணப்பட்ட உவர் அணைக்கட்டுகள் அழிக்கப்பட்டமை போன்ற பல காரணங்களால் விவசாய நிலமானது கைவிடப்பட்டு செல்கின்றது.

இவ்வாறு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வயல் நிலங்கள் காரியாலை நாகபடுவான், நல்லூர், பல்லவராயன்கட்டு, கிராஞ்சி போன்ற பகுதிகளில் பெருமளவு காணப்படுகின்றது. ஜெயபுரம் வடக்கு KN/69 கிராம சேவகர் பிரிவிற்கு உட்பட்ட 548 ஏக்கர் நிலம் இன்னமும் மிதிவெடி அகற்றப்படாது காணப்படுகின்றது. அதே போன்று இங்கு 320 ஏக்கர் உறுதிக் காணி உரிமையாளர்கள் இந்தியாவிற்கு இடம்பெயர்ந்து சென்றமையால் இப்பகுதியில் விவசாய நிலமானது செய்கைக்கு உட்படாது காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் பல்லவராயன்கட்டுப் பகுதியில் காணப்படும் சில நிலத்துண்டுகளுக்கு உரிமையாளர்கள் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணப்பகுதியில் இருப்பதால் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள இவர்கள் ஆர்வம் காட்டாமையால் விவசாய நிலமானது பயன்பாடற்று கைவிடப்பட்டுள்ளது. மற்றும் பள்ளிக்குடா பள்ளாய் பகுதியில் இருந்து தெளிகரை பகுதிக்கு மக்கள் இடம்பெயர்ந்து சென்றனர். உள்நாட்டு யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து ஆய்வுப் பிரதேசத்தில் பெருமளவு விவசாய நிலங்கள் இராணுவத்தேவைக்கு பயன்படுத்தி வருகின்றதை காணக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறு இராணுவத்தினர் தமது தேவைக்கு விவசாய நிலங்களை பயன்படுத்துவதால் அந்நிலங்கள் விவசாயத்திற்கு உட்படாது செல்கின்றது.

4.2.2 மூலதனம் இன்மை

4.2.3 நீர் பற்றாக்குறையும் வினைத்திறனற்ற நீர்ப்பாசனமும்

4.2.4 மண் தரமிழத்தல்

4.2.5 காலம் தப்பியவிதைப்பும் விளைச்சல் குறைவடைவதும்

4.2.6 போக்குவரத்துப் பிரச்சினை

4.2.7 மிருகங்கள் சேதமடைதல்

4.2.8 புதிய தலைமுறையினர் விவசாயத்தினை விரும்பாமை

5.0 மீட்சி செய்வதற்கான வழிமுறைகள்

5.1 உவர் நீர் அணைக்கட்டுக்களை புனரமைத்தல்

ஆய்வுப் பிரதேசமானது கடல் நீர் நன்னீருடன் ஊடுருவுவதால் உவராதல் தாக்கத்திற்கு உட்பட்டமையினால் பெருமளவு விவசாய நிலங்கள் பாதிக்கப் பட்டு கைவிடப்பட்டு செல்கின்ற நிலமையினை அவதானிக்க முடிகின்றது. உவராதல் பிரச்சனையின் தாக்கத்தினை உணர்ந்து கடல் நீர் உள்வருவதைத் தடுத்து உவர் அணைகட்டுக்கள் அமைக்கப்பட்டிருந்தது. எனினும் யுத்த காலங்களின்போது அவை சேதமாக்கப்பட்டு அழிவடைந்த தைத் தொடர்ந்து உவராதலின் தாக்கம் தற்பொழுது அதிகரித்தச் செல்கின்றது. எனவே இப் பிரச்சனையில் இருந்து விவசாய நிலங்களை மீட்சி செய்வதற்கு உவர் நீர் அணைகட்டுக்களை புனரமைக்க வேண்டும். இவ்வாறு உவர்நீர் அணைக்கட்டிணை அமைப்பதற்கு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனரமைக்கப்பட வேண்டிய உவர்நீர் அணைகட்டுக்கள் பரமன் கிராய் , கௌதாரி முனை, கரியாலை, நாகபடுவான், கிராஞ்சி, செட்டிய கிராஞ்சி, ஞானிமடம், பல்லவராயன்கட்டு, பொன்னாவெளி, ஆலங்கேணி கிராம சேவகர் பிரிவுகளில் காணப்படுகின்றது. குறிப்பாக கொல்லக்குறிச்சி, ஆலங்கேணி, நல்லூர், சாமிபுலம், உவர் அணைகட்டு செல்லையா தீவு – கறுக்காய் தீவு உவர் அணைகட்டு, ஓயாமாரி கிராஞ்சிக்குடா நொச்சிமுனை அணைகட்டு, பொன்னாவெளி வேரவில உவர்நீர் அணைகட்டு, பல்லவராயன் அணைகட்டு என்பவற்றைக் குறிப்பிடலாம். இவை யுத்தத்தின்போதும் இயற்கை அனர்த்தங்களுக்கு உட்பட்டும் அழிவடைந்த நிலையில் காணப்படு கின்றது. எனவே இவற்றினை மீளப் புனரமைக்கும்போது உவர்நீர் பிரச்சனையில் இருந்து விடுபடுவதற்கு சாத்தியத்தன்மை காணப்படுகின்றது. குறிப்பாக ஆய்வுப் பிரதேசத்தில் நாச்சிக்குடா பகுதியில் காணப்படும் உவர்நீர் பகுதியாக காணப்பட்ட குளத்திற்கு அருகாமையினால் 2009 ஆண்டிற்குப் பின்னர் உவர்நீர் அணைக்கட்டு அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து 03 வருடத்திற்கு பின்னர் உவர்நீர் நன்னீராக மாற்றமடைந்தது. எனவே உவர்நீர் அணைக் கட்டினை அமைக்கும்போது உவராதல் பிரச்சினை குறைத்துக் கொள்ள முடியும்.

இது போன்றே நல்லூர் பிரதேசத்தில் சாமிபுலம், பெரும்படை அம்மன், ஆணையிறவு பகுதி வரையில் கிட்டத்தட்ட 40km அளவு உவர் நீர் அணைக்கட்டினை புதிதாக அமைக்கும்போது அப்பகுதியில் உவர்நீர் பிரச்சனையினை குறைத்துக் கொள்ளமுடிவதுடன் கைவிடப்பட்ட விவசாய நிலங்களை மீளவும் பயன்டுத்தமுடியும்.

### 5.2 பொருத்தப்பாட்டு மதிப்பீடுமேற்கொள்ளல்

ஆய்வுப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட உவர்த்தன்மை அளவீட்டின்படி உவரினைத் தாங்கி வளரக்கூடிய பயிர் வகைகளினை மேற்கொள்ளும்போது கைவிடப்பட்ட விவசாய நிலங்களை மீட்சி செய்ய முடியும். அண்மைக் காலமாக நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும் வயல் நிலங்களை உவர்த்தன்மையால் அதிகளவு பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து உவரினைத் தாங்கி வளரக்கூடிய பதிய நெல் இனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாய கமநல சேவைத் திணைக்களத்தினூடாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக AT 308, GG 300, BG 358, BG 360, கிரிசம்பா போன்ற நெல் இனங்கள் பயரிடப்பட்டுள்ளது.

நிலத்தினை மதிப்பீடு செய்து பொருத்தமான பயிர்வகைகளினை செய்கை பண்ணும்போது குறித்த விவசாய நிலமானது பயன்படுத்தக்கூடிய தாக காணப்படும்.

## 5.3 நீர்ப்பாசனத்தை விருத்தி செய்தல்

பூநகரி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நீர் பற்றாக்குறை காரணமாக விவசாய நிலங்களானது கைவிப்பட்டுச் செல்கின்ற நிலையினை அவதானிக்க முடிகின்றது . வாய்க்கால் கால்வாய்களின் சீரின்மை, மதகுகளின் கட்டுப்பாடற்ற நீர் வெளியேற்றம், வான்கதவுகள் சீரின்மை, குளங்கள் புனரமைக்கப்படாமைஆகவே நீர்ப்பாசனத்தினை விருத்தி செய்கின்றபோது விவசாயத்திற்கு தேவையான நீரினை பெறமுடிவதுடன் வரட்சிக் காலங்களிலும் நீர் பற்றாக்குறையினை விருத்தி செய்ய முடிகின்றது. ஆகவே நீர்ப்பாசனத்தினை விருத்தி செய்வதற்கு கைவிடப்பட்ட குளங்களை புனரமைத்தல் சிறுகுளங்களை ஆழமாக்கி அகலமாக்கி நீரிணை சேமித்தல் மற்றும் ஒருங்கிணைந்த நீர்ப்பாசனத்தை மேற்கொள்ளுதல் போன்ற செயற்பாடுகளால் நீர்ப்பாசனத்தை விருத்தி செய்யமுடியும்.

குறிப்பாக ஆய்வுப் பிரதேசத்தில் கிராஞ்சிக்குடா குளம், ஆணைவாய்ப்பான் குளம், சொறிக்குளம், தழங்குளம், மூலையடம்பன் குளம், தாராவில் குளம், மாலாப்பு குளம் போன்றன முற்று முழுதாக கைவிடப்பட்ட குளங்களாக காணப்படுகின்றன. ஆகவே இவற்றினை புனரமைத்து மழை நீரினை தேக்கி விவசாயத்திற்கு பயன்படுத்தும்போது நீர்ப் பிரச்சனையைத் தீர்க்க முடிகின்றது. இது மட்டுமல்லாது பூநகரிப் பிரதேசமானது மழை காலங்களில் பெருவெள்ளம் ஏற்பட்டு அதிகளவு நீர் கடலுடன் கலக்கின்றது. எனவே இப்பகுதியில் காணப்படும் நீர்ப்பாசன குளங்களை ஆழமாக்குவதுடன் அகலமாக்கி நீரிணை சேமித்து விவசாயத்திற்கு பயன்படுத்தும் போது நீர்ப்பிரச்சனையினைத் தீர்க்க முடிகின்றது. ஒரு குளத்தினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழமாக்கி, அகலமாக்கி அணைக்கட்டுக்களை உயர்த்தும்போது தரையமைப்பு புவிச்சரிதவியல் நிலைமை, இதனால் ஏனைய பகுதிக்கு வர இருக்கும் பாதிப்புக்கள் என்பவற்றினை மதிப்பிட்டு மேற்கொள்ளவேண்டும். முக்கொம்பன் குளம், முழங்காவில் குளம், சின்னப்பல்லவராயன் கட்டுக் குளம், குடமுறுட்டிக்குளம், என்பவற்றினை அண்டிய குளங்களை ஆழமாக்கும்போது கடல்நீர் உட்புகுவதற்கான சாத்தியத்தன்மை இருப்பதால் அவற்றினை மேற்கொள்ள முடியாது. எனினும் மேற்கூறப்பட்ட குளங்கள் அகலமாக்கும்போது அருகில் காடுகள் காணப்படுவதாலும். மக்கள் குடியிருப்பு அண்மையில் அற்ற பகுதியாக காணப்படுவதால் இக் குளங்களை அகலமாக்கமுடியும். இதன்மூலம் நீரினை சேமிக்கவும் முடிகின்றது.

அத்துடன் அருகருகே காணப்படும் குளங்களை ஒன்றிணைத்து ஒருங்கிணைத்த நீர்ப்பாசன நடவடிக்கையினை மேற்கொள்ளும்போது நீரினை தேக்கி வைக்க முடிகின்றது. ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படும் கொக்குடையான்குளம், எல்லக்கால்குளம் என்பவற்றிலை ஒன்றிலணைத்து நடுத்தர நீர்பாசனக் களமாக இணைத்து நீரினை தேக்கி எத்தாவில்குளம், சின்ன எத்தாவில்குளம், மாதாமோட்டைக்குளம், தும்புருவில் குளம், வீரமோட்டை குளம் என்பவற்றினை ஒன்றிணைத்து ஒருங்கிணைந்த நீர்ப்பாசன நடவடிக்கையினை மேற்கொள்ளும்போது விவசாயத்திற்குத் தேவையான நீர்பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடிகின்றது. அத்துடன் மண்டக்கல்லாறு ஆனது மழைக்காலங்களில் வருடா வருடம் பெருமளவு நீரினை வெள்ள அனர்த்தத்திற்கு உட்படுத்தி கடலுடன் கலக்கின்றது.

அக்கராயன், ஆனைவிழுந்தான், குஞ்சுக்குளம், வன்னரிக்குளம் ஆகிய பகுதிகளில் இருந்து வரும் காட்டுவெள்ளம் அருவியாகி மண்டக் கல்லாறு பாய்கின்றது. இதனுடன் முடக்கன் ஆறும் இணைந்து பெருமளவு நீரினைக் காவிச் செல்கின்றது. எனவே இதனுடன் இணையும் முடக்கன் ஆற்றினை கரியாலை, நாகபடுவான் குளத்தில் மேலதிக நீர் காணப்படும் போது அதனை வீதிக்கு அப்பால் காணப்படும் வண்ணான் குளத்திற்கு பாலத்தினூடாக நீரினைக் கொண்டு சென்று சேமிக்கும்போது விவசாயத்திற்கு தேவையான நீரினை இக்குளங்களில் இருந்து பெற்றுக்கொள்ள முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு கைவிடப்பட்ட குளங்களை புனரமைத்தல், குளங்களை ஆழமாக்கி அகலமாக்குதல் மற்றும் ஒருங்கிணைப்பு திட்டத்தினூடாக மழை நீரினை சேமித்து வினைத்திறனான கால்வாய்கள் ஊடாக விவசாயத்திற்கு பயன் படுத்தும்போது நீர்ப்பற்றாக்குறை குறைப்பதுடன் இதனால் கைவிடப்படும் விவசாய நிலங்களை மீட்சி செய்யமுடியும்.

5.4 உற்பத்தி நிலத்தின் அளவை அதிகரித்தல்

ஆய்வுப் பிரதேசத்தில் கைவிடப்பட்ட விவசாயம் மேற்கொள்ளக் கூடிய இடங்களை மீண்டும் விவசாய செய்கைக்கு உற்படுத்துவதனூடாக உற்பத்தி நிலத்தின் அளவை அதிகரிப்பதாகமுடியும். உரிமையாளர்கள் பிரதேசத்தில் இல்லாத காணிகளை அங்கு விவசாயம் செய்வதற்கு ஆர்வமாக உள்ள விவசாயிகளுக்கு வழங்குவதனூடாகவும் மிதிவெடிகள் அகற்றப்படாத விவசாய நிலங்களில் மிதிவெடிகளை அகற்றி அவற்றினை விவசாய செய்கைக்கு வழங்குவதனூடாகவும் யுத்தத்தால் கைவிடப்பட்ட விவசாய நிலங்களை மீள பயன்படுத்துவதனூடாகவும் உற்பத்தி நிலத்தின் அளவை அதிகரிக்கமுடியும். குறிப்பாக ஞானிமடம், பள்ளிக்குடா, மட்டுவில்நாடு, கௌதாரிமுனை, ஜெயபுரம் , கரியாலை நாகபடுவான், நாச்சிக்குடா, முழங்காவில், பொன்னாவெளி , கிராஞ்சி போன்ற பகுதிகளில் உற்பத்தி நிலத்தின் அளவை அதிகரித்து செய்கையினை மேற்கொள்ள வாய்ப்பாக காணப்படுகின்றது. இங்கு 1117.80 ஹெக்ரேயர் அளவு நிலத்தினை மீண்டும் வீட்டுத்தோட்டத்திற்க் மேம்படுத்தக்கூடியதாகக் காணப்படுகின்றது.

அட்டவணை உற்பத்தி நிலத்தின் அளவினை அதிகரித்து வீட்டுத் தோட்டத்தினை மேற்கொள்ளக் கூடிய பிரதேசங்களின் ஹெக்ரேயர் அளவினையும் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை 02 வீட்டுத்தோட்டத்தை மேம்படுத்தக்கூடிய நிலப்பரப்பின் அளவு**

| கிராம சேவகர் பிரிவு | நிலப்பரப்பு (ha) |
|---|---|
| ஞானிமடம் **KN/63** | **2.17** |
| பள்ளிக்குடா **KN/65** | **17.75** |
| மட்டுவில்நாடு கிழக்கு **KN/66** | **120.2** |
| கௌதாரிமுனை **KN/68** | **32.46** |
| ஜெயபுரம் வடக்கு **KN/69** | **66.55** |
| ஜெயபுரம் தெற்கு **KN/70** | **66.26** |
| காரியாலை நாகபடுவான் **KN/71** | **149.63** |
| பல்லவராயன்கட்டு **KN/72** | **175.4** |
| முழங்காவில் **KN/73** | **207.96** |
| நாச்சிக்குடா **KN/74** | **40.91** |
| கிராஞ்சி **KN/75** | **77.64** |
| பொன்னாவெளி **KN/76** | **160.87** |
| **மொத்தம்** | **1117.80** |

5.5 போக்குவரத்து விருத்தி

5.6 சந்தை வாய்ப்பினை ஏற்படுத்துதல்

5.7 அரசமற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் சேவையினை அதிகரித்தல்

5.8 வினைத்திறனான பயிர்ச்செய்கை முறைமை

5.9 பயிற்சி வழங்குதல்

**முடிவுரை**

பூநகரிப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பத்தொன்பது கிராம சேவகர் பிரிவில் காணப்படும் பெரும்பாலான மக்கள் விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். உற்பத்தித் தரமும் குறைவடைந்து செல்கின்ற தன்மையினை அவதானிக்க முடிகின்றது. இதனால் விவசாயத் தையே வாழ்வாதாரமாகக் கொண்ட மக்கள் வருமான ரீதியில் பெரிதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிப்பினைப் பெறுகின்றனர். எனவே கைவிடப்பட்டு காணப்படுகின்ற விவசாய நிலங்களை அடையாளம் கண்டு அவற்றினை மீளப் பயன்படுத்தும் போது விவசாய உற்பத்தியினை மேம்படுத்த முடிகின்றது. எனவே பூநகரிப் பிரதேசத்தில் உவர்த்தாக்கங்களிலும் யுத்தத்தின்போது கைவிடப்பட்ட நிலங்கள், நீர்பற்றாக்குறையால் கைவிடப்பட்ட நிலங்கள் மற்றும் ஏனைய காரணிகளால் கைவிடப்பட்ட நிலங்கள் என்பவற்றினை மீள பயன்படுத்து வதற்கு விவசாயிகள் முன்வருவதுடன் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் கைவிடப்பட்ட விவசாய நிலங்களினை மீட்சி செய்து பயன்படுத்தலாம். இதனூடாக இப் பிரதேச விவசாயச் செய்கையினை ஊக்குவிப்பதுடன் பொருளாதார நன்மை அடைவதுடன் அதிகரித்த உற்பத்திகளினால் தன்னிறைவினை அடைய முடிகின்றது. மேலும் வறுமை, வருமானமின்மை, வேலையின்மை என்பன நீக்கப்பட்டு ஆய்வுப் பிரதேச மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Global warming, climate change and lessons

**Mr. R. Tharmagulasingam**
Retired Director.
Ministry of Foreigin affiars

Global warming, climate change, greenhouse gases and impact of global warming and mitigation are generally discussed in many forums from national governments to United Nations. It is understood by the word 'Global warming' Global warming is a global problem and a challenge. It is also conceivable that a global problem has to be addressed by the world organization United Nations. While the discussion is directed towards Gw there are questions being asked on other challengers the UN need to address.Economic growth and sustainable development, International peace and security, development of Africa, humanrights, humanitarian assistance, justice and international law, nuclear chemical and conventional weapons disarmament, drug control, crime prevention and counter terrorism can be comfortably classified as current issues facing the United Nations.

Firstly the discussion on global warming needs an easy understanding what is global warming. Climate change is any substantial change in Earth's climate that lasts for an extended period of time. Global warming refers to climate



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

different causes, but it is most commonly associated with human interference, specifically the release of excessive amounts of greenhouse gases. Greenhouse gases, such as carbon dioxide ($CO_2$), methane ($CH_4$), water vapor, and fluorinated gases, act like a greenhouse around the earth.



This means that they let the heat from the Sun into the atmosphere, but do not allow the heat to escape back into space. The more greenhouse gases there are, the larger the percentage of heat that is trapped inside the earth's atmosphere. The earth could not exist in its present state with life without the presence of some naturally occurring greenhouse gases, such as $CO_2$, $CH_4$, and water vapor. Without any greenhouse gases no heat would be trappedNaturally occurring greenhouse gases (not fluorinated gases) are good in naturally occurring amounts; it's when people start contributing excessive amounts of them that greenhouse gases become a problem. With excessive greenhouse gas



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

buildup, the earth's atmosphere warms to unnatural temperatures which causes, among other things, sea level to rise. Global warming also causes sea surface temperatures to rise, precipitation patterns to change,

Our life style and daily consumption patterns emit large quantities of greenhouse gases (GHG). The worsening of this greenhouse effect plays an important role in climate change. Each one of us has to be aware that today we have to reduce our greenhouse gas emissions. The current climate change is linked mostly to greenhouse gas emissions resulting from human activities. These emissions of anthropogenic(human) origin are by themselves responsible for more than 3/4 of the carbon dioxide ($CO_2$). The consumption of fossil fuels (energy production, fuel for vehicles, home heating, industry) is by far the most incriminating factor. But we should not forget that changes in land use, including deforestation, occupy second place in term of responsibility for the worldwide increase in greenhouse gas emissions (17% of global emissions). Global warming introduces an additional factor of inequality and disparity between the different geographical regions of the planet. The populations of the world's poorest countries are more vulnerable when faced with the effects of climate change even though they are less responsible for it. The developing countries are not able to protect themselves against the impact of this phenomenon nor adjust to it. Climate change



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

increases the precarious situation of the poorest populations (food security, access to health care, water and energy, housing...), widening even further the socio-economic divide between the North and the South.



Because of their location, their low incomes, the insufficiency of their resources and institutional capacities, and because they mostly count on climate dependent sectors like agriculture, populations of the poorest countries are the first victims of current and future climatic changes.

Science suggests that to mitigate the human contribution to global warming, we should reduce carbon dioxide and other greenhouse gas emissions. Because some additional warming is inevitable—even if we achieve significant greenhouse gas reductions quickly—we should make plans to adapt to coming climate change. If we are



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

unable to control emissions and/or adapt to unavoidable changes quickly enough, a carefully selected geoengineering strategy could conceivably provide an emergency stopgap to slow global warming. As yet, however, several of the strategies being discussed are very risky and unproven. Controlling emissions is a large, complex, and potentially expensive problem that no single strategy will solve. On the other hand, the costs of uncontrolled global warming will probably also be significant. Many economists have concluded that putting existing scientific and technological strategies into place and developing new ones may stimulate the economy, and would also generate significant near-term benefits in public health through air pollution reduction.



Since global warming is a critical global challenge the role of UN has to be understood.UN sponsored series of confernces and meetings.The first of this kind was inaugurated inBerlin,Germany in 1995.The meeting is known



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

as United Nations Framework Convention on Climate Change(UNFCCC) conference of the Parties(COP).UNFCCC has been an annual event and the 21st conference was held in Paris.It is called the COP 21.COP 3 is regarded as one of the turning points of the conferences.COP 3 took place in December 1997 in Kyoto, Japan. After intensive negotiations, it adopted the Kyoto Protocol, which outlined the greenhouse gas emissions reduction obligation for Annex I countries, along with what came to be known as Kyoto mechanisms such as emissions trading, clean development mechanism and joint implementation. Most industrialized countries and some central European economies in transition (all defined as Annex B countries) agreed to legally binding reductions in greenhouse gas emissions of an average of 6 to 8% below 1990 levels between the years 2008–2012, defined as the first emissions budget period. The United States would be required to reduce its total emissions an average of 7% below 1990 levels; however Congress did not ratify the treaty after Clinton signed it. The Bush administration explicitly rejected the protocol in 2001.The Kyoto Protocol was adopted in Kyoto, Japan, on 11 December 1997 and entered into force on 16 February 2005. There are currently 192 parties (Canada withdrew effective December 2012) to the Protocol. The Protocol fixed more responsiblities on the developed industrialized countries on the basis the that they are historically responsible for the current levels of greenhouse gases in the atmosphere..The unique feature of generation



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the Kyoto protocol is the treaty legally bind the member countries to adopt and ratify the agreement in their respective parliaments. In this regard the COP 21 in Paris occupies an important place. According to the organizing committee at the outset of the talks, the expected key result COP 21 to set a goal of limiting global warming to less than 2 degrees Celsius (°C) compared to pre-industrial levels. The agreement calls for zero net anthropogenic greenhouse gas emissions to be reached during the second half of the 21st century. In the adopted version of the Paris Agreement, the parties will also "pursue efforts to" limit the temperature increase to 1.5 °C.



...nd understand how Government of Srilanka propose to implement the provisions of the Paris confersnce. Hon. Susil PremJayantha signed the agreement on behalf of Srilanka on 22nd April 2016 in United States. Inseptember 2016 Srilankan parliament unanimously ratified the Paris agreement. Improper land planning depreciation of forest cover land degrdation loss of biodiversity ozone layer depletion green houses gases emis-sions and global warming unsustaina ble



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

development stragiesare some of the environ-mental issues in Srilanka. Sri lanka as a first and foremost step towards addressing the global warming challenge through an amendment to the supreme law of the country, Constitution, made it mandatory for the president of the country to be the minister of environment.Government will launch a program to set up 10,000 environment friendly villages throughout the country by 2020.Srilanka initiated a projects to popularise a new community-based power generation project, SooryaBalaSangramaya (Battle for Solar Energy) that will promote the setting up of small solar power plants on the rooftops of households.



Global warming has been identified as a challenge that was mainly caused by the rich countries on the and the solution to the problem lies in the sincere efforts of the rich countries.Paris conference in other words accepted the truth the responsibility is the industrialized rich countries.One could be positive but it is naïve to forecast a sustainable solution to the massive challenge.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இருப்பவர்கள், இடமிருந்து வலமாக : திருமதி ச.கஸ்தூரி (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திருமதிப.சுதர்சனா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு.க.பரமேஸ்வரன் ( நீதி உதவியாளர்) திரு சி.ச.கிருஷ்ணேந்திரன் ( பிரதேச செயலாளர்) திரு பெ.பிறேமச்சந்திரன் (கணக்காளர்) இதிரு.க.ஸ்ரீதரன் (முகாமைத்துவ உதவியாளர்) திருமதி வி.மாலினி (அபிவிருத்தி உத்தியோகத்தர்)

நிற்பவர்கள் இடமிருந்து வலமாக : திரு ப.ஸ்ரீவனஜன் (முகாமைத்துவ உதவியாளர்) திரு ச.சதீஸ்கரன் ( அலுவலக பணியாளர் ) செல்வி க.பிரசாலினி (முகாமைத்துவ உதவியாளர்) செல்வி கி.கீர்த்தனா (முகாமைத்துவ உதவியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரண்டாம் குடியரசு அரசியல்யாப்பின் 19வது சீர்திருத்தச் சட்டம்

**திருமதி அ. அபர்ணா**
ஆசிரியர்,
கிளி / பூநகரி மத்திய கல்லூரி

இலங்கை அரசியல் வரலாற்றில் இரண்டாம் குடியரசு யாப்பு ஓர் திருப்பு முனையாகும். இலங்கையின் நவீனகால வரலாறு பிரித்தானியர் ஆட்சிக் காலத்துடன் ஆரம்பமாகியதிலிருந்து இலங்கை சுதந்திரமடைந்த பின்னரும் பிரித்தானிய பாராளுமன்ற ஜனநாயகத்தைப் பின்பற்றி வந்துள்ளது. குடியரசாக மாறிய பின்னரும் இந்நிலையே நீடித்தது. இரண்டாம் குடியரசு யாப்பு 1978ம் ஆண்டு உருவாக்கப்பட்ட பின்பு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை தோற்றம் பெற்றுக் கொண்டமையானது இலங்கையில் அரசியல் செயன்முறையில் ஜனாதிபதியை தலைவராக கொண்ட அமைச்சரவை நியமிக்கப்பட்டதுடன் ஜனாதிபதியை சுற்றி அதிகாரங்கள் செறிவாக்கப்பட்டன. இந்நிலைமையானது "யாப்பு சார் சர்வாதிகாரத்திற்கு" இட்டுச் சென்றது என அரசியல் ஆய்வாளர்கள் கருத்துக்களை முன்வைத் துள்ளனர். 1990 களில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் அரசியல் அரங்கினுள் பேசப்படும் முதன்மையான கருத்தியலாக காணப்பட்டது.

2001ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அரசியல் யாப்பின் 17ம் திருத்த சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டபோது ஜனாதிபதியின் அதிகாரங்களும் பணிகளும் தடைகளுக்குட்பட்டன. ஆனால் 17ம் யாப்பு சீர்திருத்தத்தை யுத்தம் முழ்கடித்த நிலையில் பதவியிலிருந்து அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 18வது யாப்பு திருத்த சட்டத்தினை கொண்டு வந்தார். இதனால் 2001ம் ஆண்டு உருவாக்கப்பட்ட 17வது திருத்த சட்டம் இல்லாதொழிக்கப் பட்டதுடன் ஜனாதிபதி பதவியானது "யாப்பு சார் சர்வாதிகாரத்தினை உருவாக்கி விட்டது" என அரசியல் விமர்சகர்களினால் கடுமையாக விமர்சிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2015ம் ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ரணில், மைத்திரி, சந்திரிக்கா தலைமையிலான நல்லாட்சி நோக்கிய கூட்டணியில் முக்கியமாக பேசப்படும் பொருளாக ஜனாதிபதியின் அதிகாரங்களை வரையறுக்கப்பட வேண்டும் என்பதே காணப்பட்டது. மைத்திரிபால சிறிசேனா ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு தேசிய அரசாங்கம் எனக் கூறப்படுகின்ற அரசாங்கம் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து 19ம் யாப்பு திருத்த சட்டம் உருவாக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டது.



19ம் யாப்பு சீர்திருத்தம் 2015 மே 15ம் திகதி நடைமுறைக்கு வந்தது. இவ்யாப்பு சீர்திருத்தத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு.

* ஜனாதிபதியின் தெரிவு முறை, பதவிக்காலம், அதிகாரங்கள்
* அமைச்சரவை
* அரசியலமைப்பு பேரவை

ஜனாதிபதியாகப் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் வயதெல்லை முப்பதிலிருந்து முப்பத்தி ஐந்தாக அதிகரிக்கப்பட்டது. ஜனாதிபதியின் பதவிக்காலம் 6 ஆண்டுகளிலிருந்து குறைக்கப்பட்டு 5 ஆண்டுகளாக குறைக்கப்பட்டது. மேலும் ஒருவர் எத்தனை தடவையும் ஜனாதிபதியாக பதவி வகிக்கலாம் என்ற நிலை மாற்றப்பட்டு இரண்டு தடவை மாத்திரமே ஒருவர் ஜனாதிபதியாக பதவி வகிக்கலாம் எனக் கூறப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதியின் அதிகாரங்கள் சில வரையறுக்கப்பட்டுள்ளன. பின்வரும் உயர் நியமனங்களை ஜனாதிபதி அரசியலமைப்பு பேரவையின் அங்கீகாரத்துடனேயே மேற்கொள்ள வேண்டும்.

1. பிரதம நீதியரசரும் உயர் நீதிமன்றம் ஏனைய நீதியரசர்களும்
2. மேன் முறையீட்டு நீதிமன்றின் தலைவரும் ஏனைய நீதியரசர்களும்
3. தவிசாளர் தவிர்ந்த நீதித்துறை சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் நீதியரசர் தவிர்ந்த ஏனைய நியமனங்கள் தொடர்பாக அரசியலமைப்பு பேரவையானது பிரதம நீதியரசரின் கருத்துக்களை கேட்டறிய வேண்டும்.
4. சட்டமா அதிபர்
5. கணக்காய்வாளர் நாயகம்
6. பொலிஸ் மா அதிபர்
7. நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்சுமன்)
8. பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

19ம் திருத்தம் சட்டத்தின்படி சுயாதீனமான பின்வரும் ஆணைக் குழுக்களின் தலைவர்களையும் ஏனைய உறுப்பினர்களையும் அரசிய லமைப்புப் பேரவை முன்வைக்கும் சிபார்சுகளுக்கமைய ஜனாதிபதி நியமித்தல் வேண்டும்.

01. தேர்தல் ஆணைக்குழு
02. பகிரங்க சேவை ஆணைக்குழு
03. தேசிய பொலிஸ் சேவை ஆணைக்குழு
04. கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு
05. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
06. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு
07. நிதி ஆணைக்குழு
08. எல்லை நிர்ணய ஆணைக்குழு
09. தேசிய பெறுகை ஆணைக்குழு

மேலும் 19ம் திருத்தச் சட்டத்தின் படி அமைச்சர்களையும் பிரதி அமைச்சர்களையும் பதவி நீக்கம் செய்யும் ஜனாதிபதியின் தற்துணிவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரம் இல்லாதொழிக்கப்பட்டது. பிரதமரின் ஆலோசனைக்கமையவே ஜனாதிபதி அமைச்சர்களை பதவி நீக்கம் செய்யமுடியும். பிரதம மந்திரியை தற்துணிவு அதிகாரத்தின்படி பதவி நீக்கம் செய்யும் முறையும் இல்லா தொழிக்கப்பட்டுள்ளது.



ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு 3 மாதத்திற்கு ஒரு தடவை சமூக மளித்தல் வேண்டும் என்பதுடன் பாராளுமன்றத்தின் பதவிக் காலம் 5 வருடங்களாக மாற்றப்பட்டது. ஜனாதிபதி பாராளுமன்றத்தினை ஒருவருடன் காலம் பூர்த்தியானதன் பின்பு கலைக்கும் அதிகாரம் நீக்கப்பட்டு 4 வருடம் 6 மாதம் பாராளுமன்றத்தின் பதவிக்காலம் பூர்த்தியானதன் பின்பே ஜனாதிபதி பாராளுமன்றத்தினை கலைக்கமுடியும். மேலும் பாராளு மன்றத்தினால் நிராகரிக்கப்படும் ஓர் மசோதாவை ஜனாதிபதி மக்கள் தீர்ப்பு தேர்தலின் மூலம் சட்டமாக்க முடியும் என்ற அதிகாரமும் நீக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் ஜனாதிபதிக்கெதிராக வழக்கு தொடரமுடியாது என்ற நிலை மாற்றப்பட்டு ஜனாதிபதிமீது அடிப்படையுரிமை மீறல் வழக்கினை தாக்கல் செய்யமுடியும்.

19ம் திருத்த சட்டத்தின் படி அமைச்சரவை தொடர்பாக பின்வரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

- அமைச்சர்களின் எண்ணிக்கை 30 தாண்டுதல் கூடாது.
- அமைச்சரவை உறுப்பினரல்லாத அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை 40 ஐ விட அதிகரிக்க கூடாது.
- தேசிய அரசாங்கம் அமைக்கப்படுமாயின் அமைச்சர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிக்கையை பாராளுமன்றமே தீர்மானிக்கும்.

* பிரதம மந்திரி மற்றும் அமைச்சர்களை ஜனாதிபதி தமது தற்துணிவு அதிகாரத்தின்படி பதவிநீக்கம் செய்ய முடியாது.

19ம் திருத்தச் சட்டத்தின் முக்கிய அம்சமாக காணப்படுவது அரசியல் அமைப்பு பேரவை ஆகும். அரசியல் அமைப்பு பேரவை பின்வரும் 10 உறுப்பினர்களை கொண்டுள்ளது.

* பிரதம மந்திரி
* சபாநாயகர்
* எதிர்கட்சித்தலைவர்
* ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஒரு பாராளுமன்ற உறுப்பினர்
* பிரதம மற்றும் எதிர்கட்சி தலைவர் இணைந்து குறிப்பிடப்படும் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் மூன்று சிவில் சமூகத்தின் உறுப்பினர்களும் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவர்.
* பிரதமரையும் எதிர்க்கட்சி தலைவரையும் சாராத பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை ஏனைய பாராளுமன்ற அரசியல் கட்சிகளும் சுயாதீன குழுக்களும் கூட்டாக இணைந்து பெயர் குறிப்பிட்டு ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார்.

சபாநாயகமே அரசியலமைப்பு பேரவையின் தலைவர் ஆவார். சபாநாயகர் இல்லாவிட்டால் பிரதமரும் பிரதமர் இல்லாவிட்டால் எதிர்கட்சி தலைவரும் தலைமை தாங்குவார். குறைந்த பட்சம் 5 உறுப்பினர்களின் அனுமதியுடனேயே தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அரசியலமைப்பு பேரவை பின்வரும் இரண்டு பணிகளை மேற்கொள்கின்றது.

எனவே சுதந்திர இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் யாப்பு வளர்ச்சியில் இரண்டாம் குடியரவு யாப்பானது 1978ம் ஆண்டிலிருந்து 2016ம் ஆண்டு வரை அவ்வப்போது ஆட்சிக்கு வந்த அரசுகளினால் ஆட்சி இசைவாக்கத்திற்கு ஏற்ப தன்னல நோக்கிலும், பொதுநிலை நோக்கிலும் காலத்துக்குக் காலம் 19 தடவைகள் மறுசீராமைக்கப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜெயபுரப் பிரதேச மக்களின் வாழ்வாதாரப் பிரச்சனைகளும் தீர்வுக்கான ஆலோசனைகளும்

**மகேந்திரன் தர்சிகா** (ஜெயபுரம்)
B.sc in MIT (Management and Information Technology)
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

எந்தவொரு பிரதேசத்திலும் அங்கு வாழும் மக்களுக்கு வாழ்வாதாரப் பிரச்சனைகள் இருந்துகொண்டுதான் இருக்கின்றன. புதிய புதிய நவீன முறைகளைக் கையாண்டு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி அவர்களுக்கான பிரச்சனையைத் தீர்க்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றபோதிலும் அவர்களுக்கு வழங்கப்படும் உதவிகளினால் உரிய பயன்கள் கிடைக்காமலிருப்பதும் உண்மையே.

அந்தவகையில் ஜெயபுரக் கிராமம் உருவாக்கப்பட்டது முதல் இன்று வரை மக்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் இன்றும் அவர்களுக்கு வாழ்வாதாரப் பிரச்சனைகள் இருந்துகொண்டுதான் இருக்கின்றனவெனில் அதற்கான காரணங்களை ஆராய்ந்து நோக்குவோமானால் பொதுவான சில விடயங்களை நாம் விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

வாழ்வாதாரப் பிரச்சனைகளை நோக்குமிடத்து அவர்களிற்கு வழங்கப்படுகின்ற வாழ்வாதாரம் போதாமை உதவியாக வழங்கப்படும் பொருட்களின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பயன் கிடைக்காமை , தொழில் வாய்ப்புக்கள் இல்லாமை, பயன்தரக்கூடிய நிலப்பிரதேசங்கள் இன்னும் பாவனைக்குப் பயன்படுத்தப்படாமை போன்ற பல விடயங்களை கருத்தில் கொள்ள முடியும். ஒவ்வொரு விடயங்களையும் தனித்தனியே ஆராய்ந்தோமானால் ......

முதலாவதாக வாழ்வாதார உதவி வாழ்வாதார உதவி என அனைவராலும் கூறப்பட்டு உதவி வழங்கப்படும் முறையை நோக்குவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானால் உதாரணமாக ஒரு நிறுவனமானது குறித்த சில பயனாளிகளுக்கு உதவி வழங்க முன்வந்துள்ளதெனின் அவர்களின் அத்திட்டத்திற்கான காலம் குறைந்ததாக இருக்கும். அதாவது குறிப்பிட்ட நாட்களுக்குள் குறிப்பிட்ட பயனாளிகளுக்கு அவ்வுதவியினைச் செய்ய வேண்டியிருக்கும். அதன் போதாவது குறித்த கிராமத்திற்குச் சென்று பயனாளிகளை அழைத்து தங்களிற்கு வாழ்வாதார உதவி வழங்கவுள்ளோம். உங்களுக்கு வேண்டிய வற்றை உடனே கூறுங்கள் எனக் கூறப்படுமிடத்து அம்மக்கள் பதிவினை உடனடியாக மேற்கொள்ள வேண்டியிருக்கும்.



அவர்கள் தாங்கள் பெற்றுக் கொள்ள வேண்டிய பொருட்களினால் தங்களிற்குப் பயன் கிடைக்குமா இல் லையா எனச்சிந்தித்து பொருத்தமான பொருட்களைத் தெரிவு செய்வதற் குரிய போதியளவு நேரம் அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. அதனால் அவர்களின் தெரிவு பெரிதும் பயனற்றதாகவே அமைகின்றது. குறித்த திட்ட காலப் பகுதிக்குள் அவ்வுதவிகளை வழங்கி முடிப்பதற்காக அந்நிறுவனம் அவ்வுதவிகளைப் பயனாளிகளுக்கு வழங்கி முடித்தாலும் அதனால் முழுமையான பயன் பெறமுடியுமா என்பது கேள்விக்குறியே.

இதேபோன்று நாம் அடுத்த விடயத்தினை நோக்குமிடத்து வழங்கப் படும் வாழ்வாதாரங்கள் அவர்களின் முன்னேற்றத்திற்குப் போதாமையாக இருப்பதனைக் காண முடிகின்றது. உதாரணமாக எமது கிராமத்திலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேகமான பயனாளிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரம் (வாட்டர்பம்) கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் எமது கிராமத்தின் நீர் வளத்தினைப் பொறுத்தளவில் போதியளவு நிலத்தடி நீர் காணப்பட்டபோதிலும் விவசாயம் செய்வதற்காக அந்நீரினைப் பெறுவதற்காகவே இந்நீர் இறைக்கும் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் நிலக்கீழ் நீரானது மிகவும் ஆழத்திலே காணப்படுவதனால் இயந்திரத்தினைப் பயன்படுத்தி அந்நீரினை மேல் நோக்கி இழுத்துக் கொடுப்பதற்கான வலு தற்போது வழங்கப்பட்டுள்ள இயந்திரத்தில் போதாமையாக உள்ளது. நிலக்கீழ் நீரினை மேல்நோக்கி இழுத்துக் கொடுப்பதற்குரிய கூடிய வலுவுடைய நீர் இறைக்கும் இயந்திரங்களை (டீசல் எஞ்சின்) வழங்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.

அத்துடன் ஒரு குடும்பத்திற்கு விவசாயத்தினை மேற்கொள் வதற்கான நீர் இறைக்கும் இயந்திரத்தினைத் தனியே வழங்கப்படுமிடத்து அவ்வியந்திரத்தினைத் தனியே வைத்து விவசாயத்தை மேற்கொள்ளமுடியாத சூழல் காணப்படுகின்றது. ஆனால் விவசாயத்தை மேற்கொள்வதற்காக வழங்கப்படும் இயந்திரத்துடன் விதை தானியங்கள், பசளைகள், நீர்க் குழாய்கள் ஏனைய உபகரணங்கள் போன்ற ஒரு விவசாயத்தினை ஆரம்பித்து அதன் மூலம் முழுமையான பயனைப் பெறக்கூடியவாறு பயனாளி களுக்கு ஒரே தடவையில் வழங்கினால் அதன்மூலம் எதிர்பார்த்த பயனைப் பெறமுடியும்.

இதேபோன்று மாடு வளர்ப்பிற்கான உதவிகள் வழங்கப்படுமிடத்து அதற்குரிய உணவு வழங்கும் நவீன முறைகளும் கோழி வளர்ப்பிற்காக குறிப்பிட்டளவு கோழிகளும் அவற்றிற்கான குறைந்தளவு தீனியும் வழங்கப் படுமிடத்து அக்கோழிகளுக்குத் தொடர்ச்சியாக வழங்குவதற்கு உணவுகள் பிரச்சனை மற்றும் அக்கோழிகளினைப் பராமரிப்பதற்கான உரிய நவீன வைத்திய முறைகள் போன்ற விழிப்புணர்வுகள் போதிய அறிவுகள் மக்க ளிற்கு இல்லாத காரணத்தினால் கால்நடைகள் கோழிகளைத் தொடர்ந்தும் பராமரித்து பயன்பெற முடியாமல் குறுகிய காலத்தினுள் கோழிகள் இறப்ப தோடு அவற்றிற்கான உணவு வழங்கப் போதிய வருமானம் இல்லாத காரணத்தினால் வறுமையின் நிமிர்த்தம் கோழிகள், கால்நடைகள் நீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைக்கும் இயந்திரங்கள் போன்றவற்றை விற்பனை செய்து தமது தேவை யினைப்பூர்த்தி செய்ய வேண்டிய நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இதனால் வழங்கப்படுகின்ற வாழ்வாதாரமானது மக்களின் எதிர்பார்ப்பினைப் பூர்த்தி செய்யாமல் இருப்பதோடு வாழ்வாதாரத்தினுடைய பெறுமதியைக் கூட்டிப் பயனுள்ளவாறு கொடுக்க வேண்டிய தேவையும் காணப்படுகின்றது.



முற்றும் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய உணவு உற்பத்தி யினைக் கூட்ட வேண்டிய கட்டாயத்தேவை காணப்படுகின்றது. ஆரம்ப காலத்தில் மக்களுக்கு நெற்செய்கைக்கென ஒதுக்கப்பட்ட வயல் காணிகள் மக்களுக்கு இன்னும் வழங்கப்படாது காணப்படுகின்றது. யுத்த காலத்திற்குப் பின்னர் அப்பிரதேசத்திலே அங்கு புதைக்கப்பட்டிருக்கும் மிதி வெடிகளினை அகற்றிய பின்னரே வழங்க வேண்டிய சூழல் காணப்பட்டது. ஜெயபுரம் தெற்கில் தேவன் குளத்தினை அண்டிய பிரதேசமே வயற்காணிகள் வழங்கப்பட வேண்டிய பிரதேசமாகும். ஆரம்பத்தில் DDG என்ற அமைப்பும் தற்போது The Hallo Trust என்ற அமைப்பும் மிதிவெடி அகற்றும் பணியினை மேற்கொண்டு இருந்தது. இன்னும் அப்பிரதேசத்திலே மிதிவெடியினை முற்றாக நீக்கி அதற்குரிய சான்றிதழ் கொடுக்கப்படாத காரணத்தினால் வயற்காணிகளை மக்களுக்கு வழங்கப்பட முடியாமல் உள்ளது. உரிய பொறுப்பதிகாரிகள் மக்களுக்கு மிகுந்த கவனம் செலுத்தி உடனடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகளை மேற்கொண்டு தேவன் குளத்தினை அபிவிருத்தி செய்வதோடு வயற்காணிகளையும் பிரித்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் எமது பிரதேச மக்களுடைய உணவுத் தேவையினை பூர்த்தி செய்ய முடியும். இதுவரை மிதிவெடி அகற்றும் பணிகள் நிறைவு செய்து அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளாதிருப்பதனால் தேவன்குளப் புனரமைப்புக்கென ஒதுக்கப்பட்ட நிதியும் திரும்பிச் சென்றுள்ளதென்பதனை யும் பெரியவர்கள் மூலமாக அறியக்கூடியதாக உள்ளது.

அடுத்து ஜெயபுரப் பிரதேசமானது அனைத்து வகையான பயிர்ச்செய்கையும் மேற்கொள்வதற்குரிய பொன்னான பூமியாகக் காணப்படு கின்றது. இருப்பினும் தென்னை, முருங்கை, பப்பாசி போன்றவற்றைப் பயிர் செய்வதன் மூலம் உயர்ந்த வருமானத்தைப் பெற்றுக் கொள்ளமுடியும். இதுவரை காலமும் எமது பிரதேச வாழ் மக்களுக்கு ஏறத்தாழ 4000 தென்னங் கன்றுகளும், 1500 மரமுந்திரிகைக் கன்றுகளும் கிட்டத்தட்ட 60 வீதமான குடும்பங்களுக்கு வழங்கப்பட்டபோதிலும் 10 வீதமான குடும்பங் களுக்கு வழங்கப்பட்ட கன்றுகள் அழிவடைந்தாலும் 50 வீதமான குடும்பங்கள் வழங்கப்பட்ட கன்றுகள் மூலம் பயன்பெறுவதனைக் காணக் கூடியதாக உள்ளது.

கடந்த காலங்களில் வேறு இடத்து வியாபாரிகள் ஜெயபுரப் பிரதேசத்திற்கு வருகை தந்து முருங்கைக்காயினை கொள்வனவு செய்து வந்தார்கள். வீட்டுக்கு வீடு முருங்கை மரம் காய்த்துக் குலுங்கியது. ஆனால் தற்போது முருங்கை மரத்தினை அங்கொன்றும் இங்கொன்றுமாகவே காணக்கூடியதாக உள்ளது. முருங்கையினைப் பயிர் செய்து வளர்ந்து வரும் காலத்தில் குரங்குகள் அம்மரத்தினை முறித்து வருவது பெரும் சிரமமாகக் காணப்படுகின்றது. .இதனைத் தடுப்பதன் மூலமே முருங்கையினைப் பயிர் செய்து உயர் வருமானத்தைப் பெறமுடியும் . ஆனால் இதனைத் தடுப்ப தெனில் குரங்குகள் வராமல் தடுக்க வேண்டும். வனஜீவராசிகள் திணைக்களத்தின் சட்டத்தின்படி மிருகங்களைக் கொல்லக்கூடாது என்பதற் காக அதனைத் துரத்துங்கள் எனக் கூறினாலும் அது சாத்தியப்படாத விடயமாகும். எனவே முருங்கை, பப்பாசி போன்றவற்றின் மூலம் கிடைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமானம் கிடைக்காமலேயே இருக்கின்றது. இவ்விடயங்களைப் பொறுத்தளவில் குரங்குகளை வரவிடாமல் துரத்தி முருங்கை, பப்பாசி போன்றவற்றைப் பயிர் செய்து முழுமையான வருமானம் பெறுவதென்பது சாத்தியமற்ற விடயமே. இதற்கான சரியான தீர்வென்பது இல்லையென்றே கூறமுடியும்.

மற்றும் இத்தாவில் குளம், பன்றிவெட்டிக்குளங்களினை அண்டிய பகுதியில் தோட்டக்காணிகள் வழங்கப்பட்டுள்ளது. அங்கே குழாய்க் கிணறு களும் அடிக்கப்பட்டுள்ளது. ஆனால் அப்பண்ணைகளைத் தொடர்ந்தும் இயக்கி வந்தால் ஏறத்தாழ 80 வரையான குடும்பங்கள் பயன்பெற முடியும்.

அடுத்து வேலை வாய்ப்பினைப் பொறுத்தளவில் எமது பிரதேசத்தில் ஆரம்பத்தில் அநேகமானவர்கள் வேலையற்று இருந்தாலும் தற்போது CSD விவசாயப்பண்ணை இயங்குவதனால் பெரும்பாலான மக்கள் அப்பண்ணை யின் மூலம் வேலல வாய்ப்பிலனப் பெற்றுள்ளார்கள். மற்றும் மிதிவெடி அகற்றும் அமைப்பான The Hallo Trust மூலமும் எமது பிரதேச மக்கள் வேலை வாய்ப்பினைப் பெற்றுள்ளார்கள். மிகவும் பெருமைக்குரிய விடயமே. மேலும் வேலையற்று இருக்கும் சிலர் வேலை வாய்ப்பிற்காக புத்தளம், கிளிநொச்சி, கொழும்பு போன்ற தூரப் பிரதேசத்திற்குச் சென்று குறைந்த ஊதியத்திற்கு வேலை செய்கின்றனர். குறைந்த ஊதியத்தைப் பெற்று அவர்களின் அத்தியாவசியச் செலவுகளின் பின்னர் எஞ்சுவது சிறுதொகையே. அது அவர்களின் வாழ்விற்குப் போதாமையாக இருப்பதும் உண்மையே. ஆனால் எமது பிரதேசத்தில் போதியளவு இடவசதிகள் காணப்படுவதனால் தொழிற்சாலைகளை அமைப்பதன் மூலம் எமது பிரதேச மக்கள் தூர இடங் களிற்குச் செல்லாமல் இங்கேயே தொழில்களை மேற்கொள்ள முடியும்.

மற்றும் ஜெயபுரம் வடக்குப் பிரதேசத்திலே பாரிய மரமுந்திரிகைத் தோட்டமும் காணப்படுகின்றது. அத்தோட்டமானது பாவனையற்ற நிலை யிலேயே காணப்படுகின்றது. அத்தோட்டத்தினை மக்களுக்குப் பிரித்து வழங்குவதன் மூலமோ அல்லது தொழிற்சாலை ஒன்றிற்குப் பொறுப்பளிப் பதன் மூலமோ அப்பழங்கள் விதைகளை விற்பனை செய்து வருமானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுவதோடு எமது பிரதேச மக்களுக்கும் அத்தொழிற்சாலையிலேயே வேலை வாய்ப்பினையும் வழங்க முடியும். அத்துடன் அபிவிருத்தி செய்யவும் முடியும்.

அடுத்து எமது பிரதேசத்தை அண்டிய ஏனைய பகுதிகளில் நிலக்கீழ் நீரானது உவர்நீராக மாறிவருவது குறிப்பிடத்தக்கது. அவ்வாறான பிரச் சனைகள் எமது பிரதேசத்திற்கு ஏற்படாத வண்ணம் எமது பிரதேச நிலக்கீழ் நீரைப் பாதுகாக்க வேண்டுமெனில் எமது பிரதேசத்தில் காணப்படும் முக்கிய குளங்களினைப் புனரமைக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. திக்குவில், மாதாமோட்டை, எத்தாவில், சின்னஎத்தாவில், தும்புருவில் போன்ற இதுவரை புனரமைக்கப்படாத குளங்களினைப் புனரமைத்து நீரினைச் சிறந்த முறையில் தேக்கி வைப்பதன் மூலம் நிலத்தடி நீரினைப் பாதுகாக்கமுடியும்.

எனவே எமது பிரதேசத்தினைப் பொறுத்தளவில் பயன்படுத்தப்பட்ட நிலவளங்கள் போதியளவு காணப்பட்டபோதிலும் அவை பயன்படுத்தப் படாமல் இருக்கின்றன. மற்றும் வழங்கப்படும் வாழ்வாதாரத்தின் பெறுமதி களினை அதிகரிப்பதன் மூலமும் உரிய எதிர்பார்த்த பயனைப்பெறுவதற்காக உரிய வழிகாட்டல்கள் மூலம் தொடர்ந்தும் காணப்படுகின்ற வாழ்வாதாரப் பிரச்சனைகளை உச்ச மட்டத்திலிருந்து குறைந்த மட்டத்திற்கு கொண்டு வர முடியும் என எதிர்பார்க்கப்படுவதோடு மக்களின் வறுமையை ஒழித்து அவர்களின் வாழ்வாதாரத்தினையும் உயர்த்தமுடியும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டமிடல் கிளை உத்தியோகத்தர்கள்

இருப்பவர்கள் இடமிருந்து வலம் :- ச.றேணுகா (முகாமைத்துவ உதவியாளர்), மு.சதீஸ்குமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), கு.குகேந்திரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) ம.மாலதி (உதவித்திட்டமிடல் பணிப்பாளர்) சி.ச.கிருஸ்ணேந்திரன் (பிரதேச செயலர்) பா.முகுந்தன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) ச.சுகந்தினி (அபிவிருத்தி உத்தியோகத்தர்) ச.ரூபகலா (அபிவிருத்தி உத்தியோகத்தர்) சி.அமுதா (அபிவிருத்தி உத்தியோகத்தர்) சி.அர்ச்சனா (அபிவிருத்தி உத்தியோகத்தர்)

நிற்பவர்கள் இடமிருந்து வலம் :- ம.கஜந்தினி (அபிவிருத்தி உத்தியோகத்தர்) ந.சந்தானலட்சுமி (அபிவிருத்தி உத்தியோகத்தர்) இ.ஜெயபிரியா (அபிவிருத்தி உத்தியோகத்தர்). கனகேஸ்வரி (அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஜெ.சதீஸ்குமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) T.N.றொபின்சன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) கு.விஜயகுமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) சி.சிவரூபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) யோ. வேணுகோபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) இ.ஜயூரன் (தொழிநுட்ப உத்தியோகத்தர்)M.றோஸ்வேர்ஜினி (அபிவிருத்தி உத்தியோகத்தர்) க.ஜெயராஜினி (அபிவிருத்தி உத்தியோகத்தர்) த.மிதிலா (அபிவிருத்தி உத்தியோகத்தர்) எப்சிபா (பயிலுனர்) அ.அன்ரனி பகீரதன் (தொழிநுட்ப உத்தியோகத்தர்) கி.சுதாகரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) அ.பளீல் (அலுவலக உதவியாளர்) தெ.எழில்ரஞ்சன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) வே.தர்சன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) ச.கேசவன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) பகீரதன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) ரவீச்சந்திரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) க.சதீஸ்வரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) கி.கேதீஸ்வரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) சுதர்சன் இமிலஸ் (தொழிநுட்ப உத்தியோகத்தர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அலுவலகம் ஒன்றைத் திட்டமிடுவதற்கான மூலோபாயங்கள்

R.C. அமல்ராஜ்

உதவித் தேர்தல் ஆணையாளர் கிளிநொச்சி,
உதவி பிரதேச செயலாளர் பூநகரி.

நிறுவனமானது தனது நோக்கத்தினை அடையச் சிக்கனமாகவும், அதிக திறமையுடனும் அலுவலகப் பணிகளைச் செய்து முடிக்க வேண்டியுள்ளது. திறமையான அலுவலர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குச் சிறப்பான பயிற்சியை வழங்கிவிடலாம். பயனுறுதி வாய்ந்த இயந்திரங்கள், உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதும் சுலபமாகலாம். ஆனால் இவற்றின் மூலம் மட்டும் நிறுவனம் தனது நோக்கினை அடைந்துவிடமுடியாது. நிறுவனமானது எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைந்து வெற்றிபெற பணியாளர்கள் தமது கவனம் முழுவதையும் குவித்து உழைக்க வேண்டியுள்ளது. இதற்கு பணியாற்றும் இடத்தின் சூழ்நிலை சிறப்பானதாக அமைதல் அத்தியாவசியமானது.

சூழ்நிலை சாதகமானதாக இல்லாவிடில் பணியாளர்கள் அதிகம் சோர்வடையவும், அவர்களது பணித்திறன் குறைந்து போகவும் வாய்ப்புள்ளது. எனவே சிறந்த பணிச்சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அலுவலக முகாமையாளரது முக்கியமான பொறுப்பாகும். இவற்றினைக் கருத்தில் கொண்டு அலுவலகம் ஒன்றினை அமைப்பதற்கு திட்டமிடுகையில் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

I. அலுவலக அமைவிடம் - Location of an Office

II. அலுவலகச் சூழல் - Office Environment

III. அலுவலக தளக்கோலம் - Office Layout

1.1 அலுவலகஅமைவிடம்

பொருத்தமில்லாத இடத்தில் ஒரு அலுவலகம் அமைக்கப்பட்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு திறமையாக நிர்வகிக்கப்பட்டாலும் நோக்கினை அடைந்து கொள்வது சவாலானதாகும். அலுவலக அமைவிடத்தினைத் தெரிவு செய்வதில் தவறு நேர்ந்துவிட்டால் அதனைத் திருத்திக் கொள்வது இயலாததாகிவிடும். அல்லது பெரும் நிதிச் செலவினை ஏற்படுத்திச் சிக்கனமற்றதாகிவிடும். அதனால் ஏற்படும் குறைபாடுகள் நிரந்தரமானதாக மாறிவிடலாம். பொருத்தமான இடத்தில் அமைக்கப்பட்ட அலுவலகத்தினைக் கொண்ட நிறுவனமே தனது பணியாளர்களது முழுத்திறனையும் பயன்படுத்தி வெற்றியடைவதோடு வாடிக்கையாளர்களது நல்லெண்ணத்தையும் பெற்றுக்கொள்ள இயலும். எனவேதான் முகாமைத்துவ அறிஞர்கள்



அலுவலகத்தின் இடஅமைவு தொடர்பாகப் பல்வேறு விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட்டு தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடுகின்றனர். எல்லாச் சந்தர்ப்பங்களுக்கும், எல்லா அலுவலகங்களுக்கும் அனைத்து விடயங்களும் பொருத்தப்பாடானதாக அமையும் எனக் கொள்ளமுடியாது. நிறுவனத்தின் நோக்கம் கருத்தில் கொள்ளப்பட்டுத் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும்.

அலுவலக இட அமைவைத் தீர்மானிப்பதற்கு முக்கியமாகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் வருமாறு :-

## I. பயனாளிகள் அணுகக்கூடிய வசதிகள்

பயனாளிகளது தேவைக்காகவே அலுவலகம் அமைக்கப்படுகின்றது என்பது மிக முக்கியமாகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயமாகும். நிறுவனம் தனது நோக்கத்தினை அடைய பயனாளிகளது திருப்தி முக்கியமானது. எனவே அவர்கள் இலகுவாக அணுகக்கூடிய வகையில் தேவையான போக்குவரத்து வசதிகளைக் கொண்டதாக அலுவலக இட அமைவு தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும்.

## II. பணியாளர்களைத் தேடிக் கொள்ளக்கூடிய வசதிகள்

அலுவலகத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு பணியாளர்கள் முக்கியமானவர்கள். எனவே அலுவலக இட அமைவினைத் தீர்மானிக்கும் போது பணியாளர்களை இலகுவாகத் தேடிக் கொள்ளக்கூடிய வசதி அல்லது அவர்கள் இலகுவாக விருப்போடு அலுவலகத்திற்கு வந்து செல்லக்கூடிய வசதி என்பன கருத்தில் கொள்ளப்பட வேண்டும். புதிதாக அலுவலகத்தினை அமைக்கும்போது மட்டுமல்ல, அலுவலகத்தினை இடமாற்றும் போதும் இவ்விடயம் கவனிக்கப்பட வேண்டும். ஏனெனில் அதே பணியாளர்களே புதிய இடத்தில் கடமையாற்ற வேண்டியிருக்கும். அவர்களுக்கு மேலதிக இடர்பாடுகளோ, நிதிச்செலவுகளோ ஏற்படாத வகையில் தீர்மானமெடுக்கப்பட வேண்டும்.

## III. போக்குவரத்து வசதி

தேவையான சேவைகளையும் பௌதீக வளங்களையும் இலகுவாகக் கொண்டுவரக்கூடிய வகையிலும், பணியாளர்களும் பயனாளிகளும் மற்றும் அலுவலகத்துடன் தொடர்புடைய சகலரும் இலகுவாக அணுகக் கூடிய வகையிலும் தேவையான போக்குவரத்து வசதிகள் உள்ளமை தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

## IV. தொடர்புடைய ஏனைய அலுவலகங்கள் அருகாமையில் இருத்தல்.

எந்த ஒரு அலுவலகத்தின் செயற்பாட்டிற்கும் ஏனைய பல்வேறுபட்ட நிறுவனங்களது சேவை அத்தியாவசியமானது. நிறுவனத்தின் நோக்கத்தை அடைவதற்கு மேற்கொள்ளப்படும் பல்வேறு நடவடிக்கைகளுக்கும் தேவையான சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு இன்றியமையாத நிறுவனங்கள் அலுவலகத்திற்கு அருகாமையில் உள்ளமை தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

உதாரணமாக வங்கி, அஞ்சல் அலுவலகம் என்பவற்றினைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## V. பிராந்திய வசதிகள்

அலுவலகப் பணியாளர்களுக்குத் தேவைப்படும் ஏனைய பல்வேறு வசதிகளும் கிடைக்கக்கூடிய தன்மை பற்றிக் கவனம் செலுத்தப்பட வேண்டும். தங்குமிட வசதி, உணவக வசதி, பாடசாலை வசதி, பிள்ளைகள் பராமரிப்பு வசதி, பொழுது போக்கு வசதிகள், அங்காடி வசதிகள் போன்ற வசதிகள் பணியாளர்களது தேவைகளை நிறைவு செய்வதற்கு அவசிய மானது என்பதைக் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

## VI. சூழல்

அலுவலகத்தின் செயற்பாடுகளை இடையூறின்றி மேற்கொள்வதற்கு உகந்த சூழல் தெரிவு செய்யப்பட வேண்டும். நெருக்கமுள்ள இடத்தில் அலுவலகம் அமைக்கப்படும் போது அதன் செயற்பாடுகளில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியேற்படும். தொழிற்சாலைகள், பட்டறைகளுக்கு அண்மையில் அலுவலகம் இருந்தால் அமைதியான, தூய்மையான சூழல் காணப்படாததோடு சுகாதார ரீதியான பிரச்சினை களும் அலுவலர்களுக்கு ஏற்படும்.

## VII. கட்டிடத்தின் தன்மை

அலுவலகத்திற்காக பயன்படுத்தப்படவுள்ள கட்டிடத்தின் தன்மை குறித் தும் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும். சாதாரண கட்டடமா? அல்லது மாடிகளைக் கொண்ட கட்டடமா? என்பதனை தீர்மானித்து, மாடிகளைக் கொண்ட கட்டடமாயின் எத்தனையாவது மாடியில் அலு வலகம் அமைக்கப்படவுள்ளது என்ற விடயங்கள் ஆராயப்பட வேண்டும். இவ்விடயத்தில் அலுவலகத்தின் நோக்கம், அதன் செயற்பாடுகள், பய னாளிகள் தொடர்பாகக் கவனம் செலுத்துவது அவசியமானது. உதா ரணமாக சமூக சேவைகள் தொடர்பான கடமைகளை மேற்கொள்ளும் அலுவலகத்திற்கு மாற்றுவலுவுடையோரும் முதியவர்களும் வருகை தருவதால் மேல்மாடியில் அலுவலகம் அமைக்கப்படுவது சிரமங்களை ஏற்படுத்தும் அல்லது அவர்கள் இலகுவாக அணுகக்கூடிய வசதிகளை ஏற்படுத்த அதிக செலவு செய்ய வேண்டியேற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VIII. பிரதான அலுவலகத்தையும் அதன் கிளைகளையும் ஒரே இடத்தில் அமைத்தல்

ஒரே இடத்தில் அமைக்கப்பட்டால் வாடிக்கையாளர்கள் அல்லது பயனாளிகள் தமது தேவைகளை ஒரே இடத்தில் பெற்றுக் கொள் ளக்கூடியதாக இருக்கும். எனவே பணிகளின் தன்மையையும் செயற் பாடுகளையும் கருத்தில் கொண்டு ஒரே இடத்தில் அமைகக முடி யுமா என்பது தொடர்பாக ஆராயப்பட வேண்டும். அதற்கேற்ப இட அமைவு தீர்மானிக்கப்பட வேண்டும்.

## IX. வாகனத் தரிப்பிட வசதி

அலுவலகத்திற்கு வருவதற்கான போக்குவரத்து வசதிகள் காணப் பட்டாலும் பணியாளர்களும் பயனாளிகளும் தமது சொந்த வாகனத் தில் வரக்கூடும். அத்தகைய வாகனங்களை நிறுத்துவதற்கான வசதிகள் உள்ள அமைவிடம் தெரிவு செய்யப்பட வேண்டும். வாகனங்கள் பிரவேசிப்பதற்குத் தேவையான பாதை வசதிகள் செய்யப்பட வேண் டும். மாற்றுவலு உடையவர்களுக்கான தனியான தரிப்பிட வசதி, பிரதேச வசதிகளை ஏற்பாடு செய்வதில் கவனம் எடுப்பதோடு, எதிர் காலத் தேவையையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

## X. அலுவலக இடவசதி

பணியாளர்களுக்கும், உபகரணங்களுக்கும் போதுமான இடவசதி இருப்பதோடு உபகரணங்களை இயக்கக் கூடியதாகவும், நகர்த்தக்கூடிய தாகவும் தேவையான இடவசதி ஒதுக்கப்பட வேண்டும். பயனாளிகள் தமது தேவைகளை நிறைவேற்றும் வரை அவர்கள் தரித்திருப்பதற்கான வசதியும் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

## XI. பாதுகாப்பு

அலுவலகத்தின் வெளிப்பாதுகாப்புத் தொடர்பாக அவதானம் எடுத்து விபத்துக்கள் ஏற்படக்கூடிய சூழலைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு இட அமைவு தீர்மானிக்கப்பட்டால் எதிர்காலத்தில் பாதுகாப்புக்கு என அதிக செலவுகளை மேற்கொள்ள வேண்டியேற்படாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1.2 அலுவலகத்தின் உள்ளகச் சூழல்

அலுவலகத்தினை அமைப்பதற்குத் திட்டமிடும்போது அதன் உள்ளகச் சூழல் தொடர்பாகவும் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும். இல்லாவிடின் பொருத்தமற்ற உள்ளக சூழலால் பணியாளர்கள் உடல், உள ரீதியான சிரமங் களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படுவதால் அவர்களது திறன் குறைவடை யும். எனவே சில நாடுகளில் இவ் விடயங்கள் சட்ட ரீதியாக ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளன. உள்ளகச் சூழல் தொடர்பாகக் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயங்கள் பின்வருமாறு.

### I. வெளிச்சம்

அலுவலகமொன்றில் பணியாளர்கள் கூடுதலாக எழுத்து வேலை சார்ந்த கடமைகளிலேயே ஈடுபடுகின்றனர். எனவே அவர்களது கண்கள் கூசாத, களைப்படையாத வகையில் போதுமான வெளிச்சம் வழங்கப்படுவது முக்கிய மானது. சர்வதேச ரீதியாக வெளிச்சத்தின் அளவு பற்றிச் சட்டரீதியான ஏற்பாடுகள் இல்லாதபோதும் சாதாரணமாக 30 இலிருந்து 50 வரையான மெழுகுதிரி வெளிச்சத்தின் அளவு தேவையென ஆய்வுகள் வெளிப்படுத்தி யுள்ளன. இயலுமான வரை இயற்கை வெளிச்சத்தைப் பெற்றுக் கொடுப்பதே உகந்ததாகும். செலவும் சிக்கனமாக அமையும். இயலாவிடின் அதற்கு சமனான வெளிச்சம் மின்குமிழ் மூலம் வழங்கப்பட வேண்டும். மங்கலான வெளிச்சம், விட்டுவிட்டு அல்லது கூடிக் குறைந்து வெளிச்சம் வழங்கும் மின்குமிழ்கள் பொருத்த மற்றதாகும். மின்குமிழ்கள் அசைந்து கொண்டிருப்பது கண்களுக்கு உகந்ததல்ல. நேரடியான சூரியவெளிச்சமும் கண்களைப் பாதிக்கும். இயற்கை யான வெளிச்சத்திற்கு ஏறத்தாழச் சமனாக புளோரசன்ற் (Floresent) மின்குமிழ் மூலம் வெளிச்சம் வழங்கப்படலாம். எவ்வாறெனினும் போதி யளவு வெளிச்சம் வழங்கப்படுவது அவசியமானதாகும்.

### II. வெப்பம்

இதுவும் உள்ளகச் சூழலில் முக்கியத்துவம் பெறும் ஒரு விடயமாகும். வெப்பத்தின் அளவு கூடுதலாகவோ குறைவாகவோ இருப்பது பணியாளர் களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துவதோடு உபகரணங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். சூழல் வெப்பமானது இடத்திற்கு இடம் மாறுபடுவதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளக வெப்பத்தினைத் தேவையான அளவுக்குப் பேணுதல் அவசியமாகிறது. பல நாடுகள் பேணப்பட வேண்டிய உள்ளக வெப்பத்தின் அளவினை வெவ்வேறு விதமாகத் தீர்மானித்துள்ளனர். இதனைத் தீர்மானிக்கும்போது பணியாளர்களது நலனையும் செலவுகளையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

## III. சுத்தமும், அழகும்

ஒரு அலுவலகத்தின் சுத்தமும், அழகும் செயற்திறனுடன் நெருங் கிய தொடர்புடையனவாகும். சுத்தமான சூழல் பணியாளர்களது மனதினைக் கவர்ந்து அவர்களை ஊக்குவிக்கும். பொருட்கள் ஒழுங்காக வைக்கப்படு வதோடு உபகரணங்களில் உள்ள தூசிகள் அகற்றப்பட வேண்டும். தூசிப்படி வானது அலுவலக அழகைப் பாதிப்பதோடு உபகரணங்களையும் பழுதடை யச் செய்யும். அதேவேளை பணியாளர்களது உடல் நலத்திலும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

## IV. வர்ணப் பூச்சுக்கள்

அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் வர்ணப் பூச்சுக்களின் நிறம் அலுவலகச் செயற்பாடுகளில் பல்வேறு வகையான தாக்கங்களை ஏற்படுத்தும். எனவே அவற்றினைத் தெரிவு செய்யும்போது மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். நிறங்களால் அலுவலகத்தில் ஏற்படக்கூடிய தாக்கங்கள் தொடர் பாகப் பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### a. பணியாளர்களின் வினைத்திறன்

சுவர்களுக்குப் பூசப்படும் நிறங்கள் பணியாளரது வினைத்திறனில் நேரடியாகத் தாக்கம் செலுத்துமென ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இதன்படி வினைத்திறனில் நிறங்களது பிரதிபலிப்பு பின்வருமாறு கண்டறியப் பட்டுள்ளது. வெள்ளை 88%, மெல்லிய பச்சை 70%, நீலம் 37%, கடும் மண்ணிறம் 4%, மண்ணிறம் 2% எனவே பணியாளர்களது வினைத்திறனை அதிகரிக்கக்கூடிய நிறத்தினைப் பயன்படுத்துவது சிறப்பானதாகும்.

### b. உணர்வு

நிறங்கள் பணியாளர்களினதும், பயனாளிகளினதும் உணர்வுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவையாகும். எனவே அவற்றின் இயல்புகளைக் கவனத்தில் கொண்டு நிறங்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். உதாரணமாக சிவப்பு நிறம் மன எழுச்சியைத் தூண்டக்கூடியதாகவும், நாவல் நிறம் கௌரவமான உணர்வை ஏற்படுத்துவதாகவும் காணப்படுகிறது. நீலம், பச்சை போன்ற நிறங்கள் சாந்தமான உணர்வைத் தருகின்றன.

### c. வெப்பம்

அலுவலகச் சூழலின் வெப்பநிலையைக் கருத்தில் கொண்டு நிறங்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். உதாரணமாக சிவப்பு நிறம் வெப்பமான நிறமாக உள்ளமையால் குளிரான காலநிலையுள்ள இடங்களுக்குப் பயன் படுத்தப்படலாம். மஞ்சள், மண்ணிறம், செம்மஞ்சள் போன்றவை வெது வெதுப்பான நிறங்களாகவும், நீலம், பச்சை போன்றவை குளிர்மையான நிறங் களாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

### d. வெளிச்சம்

கிடைக்கின்ற வெளிச்சத்தின் அளவு, தேவையான வெளிச்சம் போன்ற விடயங்களைக் கருத்தில் கொண்டு நிறம் தீர்மானிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு நிறத்திற்கும் வெளிச்சத்தைப் பிரதிபலிப்பதற்கான ஆற்றல் வேறு படும். வெள்ளை நிறம் பயன்படுத்தப்படும்போது கூடிய வெளிச்சத்தினை தெறிப்படையச் செய்வதன் மூலம் வெளிச்சம் மிகுதியான இடமாகத் தோற்ற மளிக்கும். எனவே பயன்பாட்டினைக் கருத்தில் கொண்டு வெளிச்சத்தின் தேவைக்கேற்ப நிறம் தெரிவுசெய்யப்பட வேண்டும். கடுமையான நிறங்கள் வெளிச்சத்தை உறிஞ்சக் கூடியவையாகக் காணப்படும்.

### e. பயன்பாடு

பயன்பாட்டின் தன்மைக்கேற்ப நிறம் தெரிவு செய்யப்பட வேண்டும். கூட்ட மண்டபங்களுக்கு குறைந்தளவு வெளிச்சத்தைப் பிரதிபலிக்கக் கூடிய நிறங்கள் பயன்படுத்தப்படலாம். நுழைவு மண்டபம், வரவேற்பாளர் பகுதி, நடைபாதைகள் போன்றவற்றுக்கு வெளிப்பான, வெளிச்சத்தைப் பெருமளவு பிரதிபலிக்கக்கூடிய நிறங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். ஏனைய அறை களைப் பொறுத்தவரை நிறங்களைத் தெரிவு செய்யும்போது வேலையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மை, வெளிச்சத்திற்கான ஏற்பாடுகள் என்பவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். வெவ்வேறு அறைகளுக்கு வெவ்வேறு நிறங்களைப் பயன்படுத்துவது அவற்றின் தனித்தன்மைகளை வெளிக்காட்டுவதாக அமையும். அதே வேளை ஓரே நிறத்தினைப் பயன்படுத்தும்போது நிறுவனம் முழுவதும் ஓரே சீரான தோற்றத்தினைப் பெற்றுக் காட்சியளிக்கும்.

**f. பரிமாணம்**

அறைகளினதும் மண்டபங்களினதும் பரிமாணங்களில் மாறுபாடான தோற்றப்பாட்டினை ஏற்படுத்தக்கூடிய ஆற்றல் நிறங்களுக்கு உள்ளது. இவற்றினைச் சரியான முறையில் இணைத்துப் பயன்படுத்தும்போது அழகிய பரிமாணம் (Dimensions) கொண்டதாகக் காட்சியளிக்கும். தோற்றப்பாட்டில் காணப்படக்கூடிய பொருத்தமற்ற தன்மையை இதன் மூலம் நீக்கலாம். உதாரணமாக உயரம் கூடியதாகக் காணப்படும் சீலிங்கிற்கு (Ceiling) சுவர்களது நிறங்களைவிடக் கடும் நிறங்கள் பயன்படுத்தும்போது உயரம் குறைந்ததான தோற்றத்தைக் காட்டும். நீளமான, ஒடுங்கிய தோற்றத்தைக் கொண்டுள்ள அறைகள், மண்டபங்கள் போன்றவை அதன் முடிவுச் சுவர்களுக்கு கடும் நிறங்களையும், பக்கச் சுவர்களுக்கு மென்மையான நிறங்களையும் பயன்படுத்தும்போது அகலமானதாகத் தோற்றமளிக்கும்.

**g. தனிப்பட்ட விருப்பம்**

தனிப்பட்ட அறைகளுக்கான நிறங்களைத் தெரிவு செய்யும்போது அந்த அறைகளைப் பயன்படுத்தும் பதவிநிலை அலுவலர்களது விருப்பத்தினையும் கருத்தில் கொள்வது பொருத்தமானதாகும். அவர்களது விருப்பத்திற்கு மாறான நிறங்களைப் பயன்படுத்தும்போது மன உணர்வுகளிலும், வினைத்திறனிலும் எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்தும்.

**V. காற்றோட்டம்**

பணியாளர்களது உடல் நலத்திற்கும், அவர்கள் செயற்திறனோடு கடமையாற்றவும் போதுமான காற்றோட்ட அளவு அவசியமாகும். காற்றோட்டம் குறைவாகக் காணப்பட்டால் சோர்வு ஏற்படும். நித்திரை வரக் கூடும், ஒருவருக்கு குறைந்தது 600 கன அடி காற்றோட்டம் தேவை என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இயற்கைக் காற்றோட்டமே சிறந்ததாகும். இயலாத சந்தர்ப்பத்தில் செயற்கையாக வழங்கப்பட வேண்டும். கதவுகளையும் ஜன்னல்களையும் தேவையான அளவில் அமைப்பதன் மூலம் இயற்கையான காற்றோட்டத்தினைப் பெற்றுக் கொடுக்கலாம். இயலாவிடின் குளிரூட்டி மூலம் செயற்கையான காற்றோட்டத்தினைத் தேவையான அளவுக்கு வழங்க வேண்டும்.

## VI. ஈரப்பதன்

காற்றிலுள்ள ஈரப்பதனின் அளவும் பணியாளரது செயற்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒன்றாகும். எனவே வளியிலுள்ள ஈரப்பதன் அளவு பற்றியும் கவனம் செலுத்தல் வேண்டும்.

## VII. சத்தம்

சத்தத்தினால் அலுவலகச் செயற்பாடுகளில் பல்வேறு தடைகள் ஏற்படும். இவ்வாறு தடையேற்படுத்தும் சத்தத்தினை இரண்டு வகையாக நோக்கலாம்.

1. உள்ளகச் சத்தம்
2. வெளிச்சத்தம்

தட்டச்சு இயந்திரம், தொலைபேசி, நிழற்பிரதி இயந்திரம் போன்ற உபகரணங்களாலும், தொடர்பாடலாலும், நடக்கும்போது ஏற்படும் காலடிச் சத்தங்களாலும், மின்விசிறி போன்றவை சரியாக பராமரிக்கப்படாமையாலும், இன்னும் இவை போன்ற பல்வேறு காரணங்களால் உள்ளகச் சத்தங்கள் ஏற்படலாம். இதனைக் கட்டுப்படுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். முகாமையாளரது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சத்தங்கள் வெளிச்சத்தங்களாகும். வீதியால் செல்லும் வாகனங்களது சத்தம், ஏனைய நிறுவனங்களது இயந்திரச் சத்தம், பட்டறைகள் போன்றவற்றின் சத்தம் போன்றவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம். முன்கூட்டியே இவ்விடயங்கள் அவதானிக்கப்பட்டு அலுவலக அமைவிடம் தீர்மானிக்கப்பட வேண்டும். அல்லது இவற்றினைத் தவிர்ப்பதற்கு நவீன உத்திகள் பயன்படுத்த நேரிடும்.

சத்தங்களைத் தவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் அலுவலகத்தில் அமைதியற்ற தன்மை ஏற்பட்டு பணியாளர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணி ஆர்வம் குறைந்து போகும். தேவையற்ற சத்தங்கள் கேட்டல் குறைபாடு ஏற்படுவதற்குக் காரணமாக அமையும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

## VIII. மலசலகூட மற்றும் நீர் வசதிகள்

பணியாளர்களுக்குத் தேவையான அளவில் அவர்களது எண்ணிக்கைக்கு ஏற்ப மலசலகூட வசதிகளும், கைகழுவும் பேசின் வசதிகளும் அமைக்கப்பட வேண்டும். பொதுவாகப் பின்வரும் அளவுகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

| பணியாளர்களின் எண்ணிக்கை | மலசலகூடங்களின் பேசின்களின்எண்ணிக்கை |
|---|---|
| 01 – 10 வரை | 01 |
| 11 – 20 வரை | 02 |
| 21 – 30 வரை | 03 |
| 01 – 05 வரை | 01 |
| 06 – 15 வரை | 02 |
| 16 – 30 வரை | 03 |

பணியாளர்களுக்குச் சுத்தமான குடிநீர் வழங்கப்பட வேண்டும்.

## IX. பாதுகாப்பு

அலுவலகத்தின் உள்ளகப் பாதுகாப்புத்தொடர்பாக இரண்டு முக்கிய விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

- திடீர் விபத்துக்கள்
- தீ

அலுவலகத்தில் திடீர்விபத்துக்கள் பணியாளர் கவனமின்மையால் ஏற்படல்

1. அலுமாரி போன்றவற்றை பாதுகாப்பற்ற முறையில் வைத்தல்
2. தேவையற்றவை அகற்றப்படாமை.
3. பிரவேச வசதிகள் தடையின்றி இல்லாமை.
4. அசையும் கதவுகள் பயன்படுத்துதல் போன்றவற்றை உள்ளக விபத்துகளுக்கான காரணங்களுக்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீர் விபத்துக்கள் ஏற்படாத வகையில் உபகரணங்களை உரிய இடங்களில் ஒழுங்காக வைத்தல் வேண்டும்.

தீ விபத்தானது எதிர்பாராத சூழ்நிலையில் ஏற்படக்கூடிய ஒன்றாகும். இதன் மூலம் பாரிய சேதம் ஏற்படக்கூடும் என்பதோடு மிகவும் பெறுமதி வாய்ந்தவையான அலுவலக ஆவணங்கள் அழிவடைந்தும் போகக்கூடும். எனவே தீவிபத்து ஏற்படாத வகையில் பாதுகாக்கப்படுவதோடு தீ ஏற்படு மாயின் அணைக்கக்கூடிய வகையில் தீயணைப்புக் கருவிகள் பொருத்தப்பட்டு அது தொடர்பாக பணியாளர்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும்.



## X. மென்மையான இசை ஒலிபரப்புதல்

நவீன அலுவலகங்களில் மெல்லிய பின்னணி இசையினை ஒலிபரப்புதல் மிகவும் பிரபலமாகி வருகிறது. சீரான இசையானது சலிப்புத்தன்மை, மன அழுத்தம் என்பவற்றிலிருந்து ஊழியர்களுக்கு விடுதலையளித்து சீரான வேலையோட்டத்தினை ஏற்படுத்துகின்றது. இசையானது மனதிற்கு உற்சாகத்தினை ஏற்படுத்துவதனால் ஊழியர்கள் ஊக்குவிப்பும், மனமகிழ்வும் அடைவர். ஊழியர்களது விருப்பத்திற்கேற்ப மேற்கத்தேய அல்லது பாரம் பரிய இசையை ஒலிபரப்பலாம். பிரபலமான சினிமா பாடல்களது இசையை யும் தேர்வு செய்யலாம். ஆனால் மென்மையான சீரான இசையைத் தெரிவு செய்தல் மிக முக்கியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அலுவலக உற்பத்தித்திறன் மேம்பாட்டுக்கான காரணிகள்

**திரு. அ. அ. வினிஸ்ரன்** B.A.(Hons)
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், பூநகரி.

**உ**ற்பத்தித்திறன் என்ற எண்ணக்கருவானது இன்றைய உலகில் அனைவருக்கும் பரீட்சயமானதும் அனைவரது கவனத்தையும் ஈர்த்த விடயமாகவும் காணப்படுகின்றது. காரணம் இவ்எண்ணக்கருவானது உற்பத்தித்துறை மட்டுமன்றி சேவைத்துறையிலும் காத்திரமான தாக்கத்தைச் செலுத்திவருவதனாலாகும். அதுமாத்திரமன்றி கல்வி, பொருளாதாரம், அரசியல், விஞ்ஞானம் போன்றவற்றிலும் இதன் தார்மீக பங்களிப்பை கண்டு கொள்ளமுடியும். நிறுவன ரீதியாக உற்பத்தித் திறனானது சமூக பொருளா தார வளர்ச்சி நிலையை ஏற்படுத்துவதற்கான முக்கிய விடயமாக காணப் படுகின்ற அதேவேளை தொழில் உருவாக்கம், வளப்பகிர்வு, வேலைப் பாதுகாப்பு, சமூகப் பொறுப்பு, சூழல் பாதுகாப்பு, வறுமைக் குறைப்பு,போன்ற விடயங்களில் சிறந்த முன்னேற்றத்திற்கான நிலையான சுட்டியாகவும் பார்க்கப்படுகின்றது.

உற்பத்தித்திறன் என்றால் என்ன என்பதை நாம் இங்கு அறிந்து கொள்வது முக்கியமான விடயமாகவுள்ளது. ஏனெனில் ஒவ்வொரு துறைகளிலும் உற்பத்தித்திறனானது அத்துறைசார் எண்ணக்கருக்களுடன் ஒப்பீட்டுப் பார்க்கப்படுகின்றது. அந்தவகையில் ஒருவர் தனது அர்ப்பணிப் பான பணியில் அல்லது கடமையில் கிடைக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி அடைந்து கொள்கின்ற முன்னேற்றம், இலாபம், திருப்தி என்பன உற்பத்தித் திறன் எனப் பொருள்படுகின்றன. பொதுவாக உற்பத்தி செயல்முறையின்போது பயன்படுத்துகின்ற உள்ளீடுகளின் எண்ணிக்கைக்கும் கிடைக்கின்ற வெளியீடு களின் எண்ணிக்கைக்கும் இடையிலான தொடர்பே உற்பத்தித்திறனாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு உள்ளீடுகளாக மூலப்பொருள், மனிதவளம், பணம், சக்தி, இயந்திரம், என்பனவும் வெளியீடுகளாக பொருட்கள், சேவைகள் என்பனவும் கொள்ளப் படுகின்றன.

ஒவ்வொருவரும் தமது சுய உற்பத்தித்திறனை வளர்த்துக் கொள்வது தான்சார்ந்த சூழலுக்கும், நாட்டிற்கும் முக்கியமானதாகும். அந்த வகையில் நமது நாட்டில் தேசிய உற்பத்தித்திறன் செயலகமானது இந்நாட்டின் உற்பத்தித்திறன்சார் விடயங்களை மேம்படுத்தும் பணியை மேற்கொள் வதுடன் ஆசிய உற்பத்தித்திறன் சபையின் ஓர் கிளை அமைப்பாகவும் தொழிற்பட்டு வருகின்றது. இவ்வமைப்பானது அரச, தனியார் நிறுவனங்களில் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் நோக்கில் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப் பட்ட உற்பத்தித்திறன் மேம்பாட்டு முறைமைகளையும், நுட்பங்களையும் கைக்கொள்ளவதற்கான வழிகாட்டல்களை மேற் கொண்டு வருகின்றது. அம் முறைமைகள் மனிதன்,பொருள், செயற் பாடு, சார்ந்தவையாக பாகுபடுத்தப்பட்டுள்ளன அவற்றுள் முக்கியமான முறைமைகளாக பணித் தள ஒழுங் கமைப்பு விதி



எனப்படுகின்ற 5S எண்ணக்கரு, தரவலையங்கள், அறிவு முகாமைத் துவம், கைசன் முறைமை, பசுமை உற்பத்தித்திறன், தரமுகாமைத்துவ முறைமை, வாடிக்கையாளர் திருப்தி சுட்டெண், வீண்விரய குறைப்பு, பணித்தள ஒத்துழைப்பு போன்ற பல எண்ணக்கருக்கள் காணப்படுகின்றன. இவை காலத்திற்குக் காலம் பல பரிமாணங்களைப் பெறுவதுடன் புதிய முறைமை களும் அறிமுகங்கண்டு வருகின்றமை எமது அன்றாட வாழ்விலும் அலுவலகக் கடமைகளிலும் வினைத்திறனை அதிகரிப்பதற்கான தேவைப் பாடுகளை வலுவடையச் செய்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில் பணித்தளங்களில் உற்பத்தித்திறன் மேம்பாட்டை தீர்மானிக்கும் காரணிகளில் முக்கியமானதாக தலைமைத்துவம் விளங்கு கின்றது. ஓர் நிறுவனத்தின் உற்பத்தித்திறன் என்பது கீழ்மட்டத்தில் மேற்கொள் ளப்படும் வேலைகளில் ஏற்படக்கூடிய பிரச்சனைகளைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்குவகிக்கின்றது. தலைமைத்துவமானது நிறுவனத்தின் தொலை நோக்கு, செயல்நோக்கு என்பவற்றுக்கு அமைவாகவும் பயிற்சிகள், ஊக்கப் படுத்தல்கள், தொடர்பாடல், தலைமைத்துவத்தைத் தூண்டல், வேலைப்பகிர்வு, வளங்களின் கிடைப்பனவை உறுதிப்படுத்தல், யதார்த்தமாக இலக்குகளை நிர்ணயித்தல், தொடர்கண்காணிப்புக்கள் போன்ற விடயங்களில் அக்கறை காட்ட வேண்டும். அந்தவகையில் வினைத்திறனான அலுவலக கலாசாரத்தை உருவாக்கும் பாரிய பணி தலைமைத்துவத்தைச் சார்ந்ததாகும். தலைவரால் பிரதிபலிக்கின்ற நேர்மறையான மன நிலையானது வெளிப்படுத்தப்படும் குழுவின் உற்பத்தித்திறனை மேம்படுத்துகின்றது.

"உற்பத்தித்திறனானது ஓர் தனிப்பட்ட ஊழியரின் பொறுப்பல்ல உதவியுடனான நிறுவன கலாசாரத்தை உருவாக்கும் கடமை" என்பதற்கமை வாக பொது நன்மையை நோக்கியதான குழு மனப்பாங்கானது பணித்தளங் களில் உற்பத்தித்திறன் விருத்திக்கு இன்றியமையாததாகும். தனி மனித மனப்பாங்கு என்பது ஓர் பாரம்பரிய இயல்பாகும். அதில் மாற்றம் என்பது தனது முயற்சியாலோ, மற்றவர்களின் தூண்டுதலினின் பேரிலோ அல்லது பயிற்சிகளினூடாகவோ ஏற்படுத்தப்படலாம்.

ஒவ்வொருவரும் மற்றவர்களுடன் இணைந்து செயற்படுகின்ற வேளை உற்பத்தித்திறன் எண்ணக்கருக்களுள் ஒன்றான தரவளையம் தோற்றம் பெறுகின்றது. இத் தரவளையங்கள் பிரச்சனைளை தாமே தீர்த்துக் கொள்ளும் வாய்ப்புக்கள், அனைவருக்கும் சம சந்தர்ப்பமளித்தல், உபாயங் களை தலைமைக்கு முன்வைக்கும் ஆற்றல், வெற்றிகளை பெருமையோடு பகிர்ந்து கொள்ளல் என்பவற்றை உருவாக்குகின்றன. இத்தகைய மாற்றங்கள் நிறுவனத்தின் உற்பத்தித்திறன் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களை பிரகாச மாக்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நிறுவன இலக்குகளை அடைவதற்காக உட்புறம்,வெளிப்புற சூழலுக்கு கிடைக்கக்கூடிய மூலாதாரங்களை வினைத்திறனாகப் பயன்படுத்தி வெளியீடுகளை பெற்றுக்கொள்ளல் உற்பத்தித் திறனாகும்." வினைத்திறனான அலுவலகங்களின் வெற்றிக்கு நிறுவனம்சார் சூழலும் அங்கு கிடைக்கின்ற ஒழுங்குபடுத்தப்பட்ட வளங்களும் முக்கியமானவையாகும். இவ்வளங்கள் அவ்வலுவலகத்தின் தளக்கோல அமைவிற்கு ஏற்ப ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும். இவை வீணான வளப்பாவனை, அசைவுகள் போன்ற வீண்விரய செயற்பாடுகளைக் குறைப்பதாகக் காணப்படும் அதேவேளை இத்தள ஒழுங்கமைப்பானது.



பஞ்ச விதிக்கொள்கைக்கு அமைவாக ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பதுடன் தொடர் செயற்பாடுகளும் நிலை பேறான வளர்ச்சி நோக்கியதாக இருக்கும். அதேவேளை இன்றைய காலகட்டத்தில் சூழல் தொடர்பான எண்ணக்கருக்கள் மேலோங்கியுள்ள நிலையில் ஒவ்வொரு நிறுவனங்களும் பசுமைசார் விடயங்களுக்கு முன்னுரிமையளிப்பதுடன் இயற்கைப் பாதுகாப்பு விடயத்தில் வகைகூறும் பங்கினையும் பெற்றுள்ளன.

பணித்தளங்களில் தொழிநுட்ப பயன்பாடானது உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான வழியாகக் காணப்படுகின்றது. தொழிநுட்ப பயன்பாட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய நோக்கம் புத்தாக்க செயற்பாடுகளை மேற் கொள்ளல், செயற்றிறனை முன்னேற்றுதல், அறிவை விருத்தி செய்தல், தீர் மானங்களை நிறைவேற்று தல். வாடிக்கையாளர் தேவை, திருப்தியை அள விடல், பணித் தளங்களில் இடைவெளி,நேரம் என்ப வற்றைக் குறைதல் என்பன வாகும். இன்று பணித்தளங் களில் பழைய ஆவணப்படுத்தல் முறைமைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதுடன் காகிதாதிகளின் பாவனை குறைக்கப்பட்டு மிடுக்கான அலுவலகங்களாகப் புதுப்பொலிவு கண்டு வருகின்றன. "சிறிய மாற்றம் தொடர் வளர்ச்சி" என்ற கைசன் கோட்பாட்டிற்கு அமைவாக தொழிநுட்ப பாவனையானது சேவை தரங்களிலும் முன்னேற்றத்தை நோக்கிய தாகக் காணப்படுகின்றது. மேலும் புதிய விடயங்களை சிந்திப்பதற்கான வாய்ப்புக்களை தூண்டுவதுடன் எதிர்காலப் போட்டி உலகில் எம்மை ஈடுகொடுக்கக் கூடியவர்களாகவும் மாற்றுகின்றது.



இந்த வகையில் பரந்து விரிகின்ற உற்பத்தித்திறன்சார் எண்ணக் கருக்களானது பணித்தளங்களில் ஒவ்வொரு பிரிவுகளிலும், ஒவ்வொரு தனிப்பட்ட நபரிலும், செயல்திறன், புத்தாக்கத்திறன் போன்றவற்றை மேம் படுத்துவதனை முதன்மையான நோக்காகக் கொண்டுள்ளது. அதேவேளை சமூகம் மற்றும் சுற்றுசூழல்சார் விடயங்களிலும் அக்கறை செலுத்துகின்றது. இதன்மூலமாக சூழல் நேயமிக்கதும் வினைத்திறனானதுமான பொதுமக்கள் சேவையை மக்களுக்கு வழங்குவதனூடாக நிறுவனத்தின் நற்பெயரையும் உயர்வடையச் செய்கின்றது. மேலும் துரித கதியில் மாறிவரும் உலக ஒழுங்கிற்கு ஏற்றவகையிலான தயார்ப்படுத்தல்களை மேற்கொள்வதுடன் தேசிய செல்வத்தைப் பெருக்குகின்ற வழியாகவும் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூநகரிப் பிரதேசத்தில் தற்கால கல்விநிலை


**கலாநிதி தேவராசா முகுந்தன்**
BSc(Hons), PGDE, PG Distance Education, MSc(Malaysia), PhD (University of Colombo)
சிரேஷ்ட விரிவுரையாளர், கல்விப் பீடம்,
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
நாவல, நுகேகோடை


இலங்கை நிர்வாக ரீதியாக ஒன்பது மாகாணங்களாக வகுக்கப் பட்டுள்ளது. இவற்றில் வட மாகாணமானது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா என ஐந்து மாவட்டங்களாக வகுக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பிரதேசங்களுள் ஒன்று பூநகரியாகும். இப்பிரதேசம் 3000 வருடங்களுக்கு முற்பட்ட பூர்வீகக் குடிகளைக் கொண்டதென பல ஆய்வுகள் குறிப்பிடுகின்றன (புஸ்பரட்ணம், 1993). பூநகரிப் பிரதேச மக்களின் பிரதான தொழிலாக விவசாயம் காணப்படு வதோடு சில பகுதிகளில் மீன்பிடித்தொழிலும் காணப்படுகின்றது.

வடமாகாணத்தின் கல்வி நிர்வாகமானது யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், கிளிநொச்சி, மன்னார், மடு, வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, முல்லைத்தீவு, துணுக்காய் என 12 கல்வி வலயங்களாக வகுக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி கல்வி வலயம் கரைச்சி, கண்டாவளை, பளை, பூநகரி என நான்கு கல்விக் கோட்டங்களாக வகுக்கப் பட்டுள்ளது.

நாட்டில் கடந்த மூன்று தசாப்தங்களாக நிலவிய யுத்தத்தின் தாக்கம் பூநகரியையும் விட்டு வைக்கவில்லை. பூநகரி பல்வேறு இடப்பெயர்வுகளை யும் பாரிய உயிர், பொருள் அழிவுகளையும் சந்தித்துள்ளது. இந்தப் பின்னணியில் பூநகரிப் பிரதேசத்தின் தற்போதைய கல்வி நிலைமையைப் பற்றி ஆராய இக்கட்டுரை முயல்கின்றது.

## 2. ஆய்வுப் பிரச்சினை

இலங்கையில் அண்மைக் காலத்தில் வெளியிடப்பட்டு வருகின்ற




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை, கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை ஆகியவற்றின் பெறுபேறுகள் தொடர்பான புள்ளிவிபரங்கள் பூநகரிப் பிரதேசம் இலங்கை யிலேயே கல்வியில் மிகவும் பின்னடைவான பிரதேசம் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன (இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், 2013). 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் பூநகரிப் பிரதேசப் பாடசாலைகளில் இருந்து தோற்றிய 468 மாணவர்களில் நால்வர் (0.85 %) மட்டுமே நிர்ணயிக்கப்பட்ட வெட்டுப்புள்ளியிலும் கூடுதலான புள்ளிகளைப் பெற்றிருந்தனர் (இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், 2014).

இதனைவிட 2015 ஆம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையின் பெறுபேறு தொடர்பான பகுப்பாய்வுகள், வட மாகாணத்தின் கல்விப் பெறுபேறானது மிகவும் தாழ்மட்டத்தில் இருப்பதை சுட்டிக் காட்டுகின்றன. அதாவது இலங்கையில் உள்ள ஒன்பது மாகாணங் களில் வடமாகாணமானது எட்டாவது இடத்தில் உள்ளது. மேலும் வட மாகாணத்தில் உள்ள பன்னிரண்டு கல்வி வலயங்களில் கிளிநொச்சி வலயத்தின் பெறுபேறானது கீழ் நிலையில் உள்ளது. வட மாகாணத்தில் உள்ள இப்பன்னிரண்டு வலயங்களும் 34 கல்விக் கோட்டங்களாக வகுக்கப்பட் டுள்ளன. இந்த 34 கல்விக் கோட்டங்களில் பூநகரிக் கல்விக் கோட்டமானது இறுதியிடத்தில் உள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது (வட மாகாணக் கல்வித் திணைக்களம், 2016).

மேலே குறிப்பிடப்பட்ட 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரம் (சா.த) பரீட்சையில் பூநகரிக் கல்விப் கோட்டப் பாடசாலை களில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய 378 மாணவர்களுள் 115 பேர் மட்டுமே கல்விப் பொதுத் தராதரம் (உயர்தரம்) பயில்வதற்கு தகுதி பெற்றுள்ளனர். இது மாணவரின் மொத்த தொகையில் 30.42% சதவீத மாகும். மேலும் இவர்களுள் 79 மட்டுமே உயர் தரத்தில் கணித விஞ்ஞான பாடங்களைப் பயில்வதற்குத் தகுதி பெற்றுளனர். இது பூநகரிக் கல்விக் கோட்டத்திலிருந்து இப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் தொகையில் 21 சதவீதத்திற்கு சற்றுக் குறைவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் கல்விக் கொள்கைக்கேற்ப மாணவரொருவர் கல்வி பொதுத் தராதரம் (உயர்தரம்) பயில வேண்டுமாயின் அவர் சாதாரண தரத்தில் தாய்மொழி, கணிதம் ஆகிய பாடங்களில் சித்தியடைதல் அவசியமானதாகும். ஆனால் பூநகரிக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் இப்பரீட்சைக்குத் தோற்றிய 378 மாணவர்களுள் 127 பேர் (33.60% ) கணிதத்திலும் 246 பேர் (65.08%) தாய்மொழியிலும் சித்தியடைந்துள்ளனர். இவை பூநகரிக் கோட்டப் பாடசாலைகளில் பெறுபேறுகள் மிகவும் குறைந்த நிலையில் இருப்பதை வெளிப்படுத்துகின்றன.

### 3. நோக்கம்

இந்தப் பின்புலத்தில் பூநகரிப் பிரதேசத்தில் தற்காலத்தில் காணப்படும் மிகவும் அடிமட்டத்தில் நிலவும் கல்வி நிலைமைக்கான காரணங்களைக் கண்டறிதலும் அவற்றை நிவர்த்தி செய்வதற்குரிய வழிமுறைகளை ஆராய்தலுமே இந்த ஆய்வின் பிரதான நோக்கமாகும்.

### 4. தரவு சேகரித்தல்

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், வட மாகாணக் கல்வித் திணைக்களம் ஆகியவற்றால் வெளியிடப்பட்ட புள்ளிவிபர அறிக்கைகளில் இருந்து இவ்வாய்வுக்குரிய தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன. ஆய்வாளரினால் நேரடியாக சேகரிக்கப்படாத இத்தரவுகள் இரண்டாம் நிலைத் தரவுகள் ஆகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. பூநகரிக் கல்விக் கோட்டத்தின் நிலை

### 5..1 பாடசாலைகள்

பூநகரி கல்விக் கோட்டத்தில் 30 பாடசாலைகள் உள்ள போதிலும் அவற்றில் ஆறு பாடசாலைகள் பல்வேறு காரணங்களால் தற்போது செயற்படுவதில்லை. தற்போது இயங்குகின்ற 24 பாடசாலைகளின் விபரம் அவற்றின் வகை அடிப்படையில் கீழே தரப்பட்டுள்ளது.

அட்டவணை 1

பூநகரி கல்விக் கோட்டத்தில் உள்ள பாடசாலைகள்

| வகை | பாடசாலைகளின் எண்ணிக்கை |
|---|---|
| தேசிய பாடசாலை | 01 |
| 1 AB | 01 |
| 1 C | 05 |
| II | 10 |
| III | 07 |

*(மூலம்: கல்வி தரவு முகாமைத்துவ தகவல் தளம், வட மாகாண கல்வித் திணைக்களம் 2016)*

இவற்றில் முழங்காவில் மத்திய மகாவித்தியாலயமானது அண்மையில் தேசிய பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டதாகும். பூநகரி மத்திய கல்லூரி 1AB வகைப் பாடசாலையாக விளங்குகின்றது. இப்பாடசாலை போக்குவரத்து வசதிமிக்க வாடியடியில் உள்ள இப்பாடசாலை 1935 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாகும்.

வேரவில் இந்து மகா வித்தியாலயம், கறுக்காய்த்தீவு மகா வித்தியாலயம், பூநகரி நல்லூர் மகாவித்தியாலயம், ஜெயபுரம் மகா வித்தியாலயம், முட்கொம்பன் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் 1 C வகைப் பாடசாலைகளாக விளங்குகின்றன. ஏனைய பாடசாலைகள் தரம் II , தரம் III பாடசாலைகளாக விளங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.2 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற தேசியப் பரீட்சைகளில் பாடசாலை ரீதியாக பரீட்சைப் பெறுபேறுகள்

கடந்த 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை, உயர்தரப் பரீட்சை என்பவற்றில் பூநகரிக் கோட்டப் பாடசாலைகளின் பெறுபேறுகள் இங்கு பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

### 5.2.1 தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை

இப்பரீட்சைக்கு 2015 ஆம் ஆண்டு பூநகரிக் கோட்டத்தைச் சேர்ந்த 23 பாடசாலைகளில் இருந்து 485 மாணவர் தோற்றியிருந்தனர். இவர்களுள் 8 மாணவர் மட்டுமே வெட்டுப்புள்ளியிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றிருந்தனர். அதாவது பூநகரிக் கோட்டப் பாடசாலைகளில் இருந்து இப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் 1.65 சதவீதமான மாணவர்கள் மட்டுமே புலமைப்பரிசில் பயன்களுக்குத் தகுதி பெற்றிருந்தனர்.

தகுதி பெற்ற மாணவர்கள் கல்வி கற்ற பாடசாலைகளின் விபரம் வருமாறு:

அட்டவணை 2

புலமைப்பரிசில் பரீட்சையில் தகுதி பெற்ற மாணவரும் பாடசாலைகளும்

| | பாடசாலை | தோற்றிய மாணவர் தொகை | சித்தியடைந்த சதவீதம் |
|---|---|---|---|
| 1. | செம்பன்குன்று அ.த.க. பாடசாலை | 91 | 11.11 |
| 2. | பரமன்கிராய் அ.த.க. பாடசாலை | 91 | 11.11 |
| 3. | ஜெயபுரம் மகா வித்தியாலயம் | 37 | 12.70 |
| 4. | முக்கொம்பன் அ.த.க. பாடசாலை | 331 | 3.03 |
| 5. | முழங்காவில் ஆரம்ப வித்தியாலயம் | 76 | 45.26 |
| | மொத்தம் | **164** | **85.97** |

*(மூலம்: கல்வி தரவு முகாமைத்துவ தகவல் தளம், வடமாகாண கல்வித் திணைக்களம் 2016)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூநகரிக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் இருந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் குறைவான பெறுபேறுகள் திருப்தி கரமானதாக அமையவில்லை. இங்கு சதவீத அடிப்படையில் செம்பன்குன்று அ.த.க. பாடசாலை, பரமன்கிராய் அ.த.க. பாடசாலை ஆகியவற்றில் தலா 11.11% வீதமானோர் சித்தியடைந்துள்ளனர். இக்கோட்டத்திலுள்ள மற்றைய பாடசாலைகளுடன் ஒப்பிடும்போது இப்பாடசாலைகளில் உயர்வான சதவீதம் காணப்படுகின்றபோதிலும் முழங்காவில் ஆரம்ப வித்தியாலயத்தி லிருந்தே கூடுதலான மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இப் பிரதேசத்திலுள்ள மற்றைய பாடசாலைகளுடன் ஒப்பிடும்போது பல்வேறு வளங்களைக் கொண்ட பூநகரி மத்திய கல்லூரியில் இருந்து இப்பரீட்சைக்குத் தோற்றிய 16 மாணவர்களும் இப்பரீட்சையில் சித்தியடையவில்லை. இதற்கான கார ணங்கள் விரிவாக ஆராயப்பட வேண்டியதொன்றாதாகும்.

பூநகரிக் கல்விக் கோட்டத்திலுள்ள 23 பாடசாலைகளிலிருந்தும் பரீட்சைக்குத் தோற்றிய 485 மாணவர்களில் மேலே அட்டவணை 2 இல் காட்டப்பட்ட ஐந்து பாடசாலைகளைச் சேர்ந்த 6 மாணவர்கள் மட்டுமே சித்தியடைந்திருந்தனர். ஏனைய 18 பாடசாலைகளில் இருந்து பரீட்சைக்குத் தோற்றியோரில் ஒருவரேனும் இப்பரீட்சையில் சித்தியடையவில்லை. இப் பாடசாலைகளினதும் இவற்றிலிருந்து இப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் களின் எண்ணிக்கைகளும் கீழே அட்டவணை 3 காட்டுகின்றது.

அட்டவணை 3

ஒரு மாணவரேனும் சித்தியடையாத பாடசாலைகளும் அவற்றிலிருந்து இப்பரீட்சைக்குத் தோற்றியோரும்

| | பாடசாலை | தோற்றிய மாணவர் தொகை |
|---|---|---|
| 1. | இரணைதீவு றோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலை | 49 |
| 2. | நாச்சிக்குடா முஸ்லீம் கலவன் பாடசாலை | 39 |
| 3. | வேரவில் இந்து மகா வித்தியாலயம் | 32 |
| 4. | கரியாலை நாகபடுவன் இல–2 தமிழ்க் கலவன் பாடசாலை | 13 |
| 5. | கரியாலை நாகபடுவன் இல–2 தமிழ்க் கலவன் பாடசாலை | 10 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 6. | கிராஞ்சி தமிழ்க் கலவன் பாடசாலை | 35 |
| 7. | குமிழமுனை தமிழ்க் கலவன் பாடசாலை | 24 |
| 8. | வலைப்பாடு றோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலை 1 | 8 |
| 9. | பூநகரி மத்திய கல்லூரி | 16 |
| 10. | செல்லியாதீவு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | 13 |
| 11. | ஞானிமடம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | 5 |
| 12. | கறுக்காய்த்தீவு மகா வித்தியாலயம் | 9 |
| 13. | மட்டுவில்நாடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | 3 |
| 14. | பூநகரி நல்லூர் மகா வித்தியாலயம் | 5 |
| 15. | சாமிப்புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | 2 |
| 16. | விநாசியோடை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | 8 |
| 17. | சுன்னாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை | 18 |
| 18. | பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் | 22 |

*(மூலம்: கல்வி தரவு முகாமைத்துவ தகவல் தளம், வட மாகாண கல்வித் திணைக்களம் 2016)*

மேலே காட்டப்பட்ட 18 பாடசாலைகளிலிருந்து ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய 321 மாணவரில் ஒருவர் கூட இப்பரீட்சையில் சித்தியடையவில்லை. அட்டவணை 3 இப்பாடசாலை களின் குறைந்த கல்வி நிலையை வெளிக்கொணர்கின்றது. இதற்கான காரணங்கள் கண்டறியப்பட வேண்டியது அவசியமானதாகும். ஆரம்பக் கல்வியே இடைநிலைக் கல்வி மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி ஆகியவற்றுக்கு அத்திவாரம் போன்றது. ஆரம்பப் பிரிவில் காணப்படும் இந்த கீழடைவு கல்விப் பெறுபேறுகள் இம்மாணவரின் எதிர்காலக் கல்வியைப் பாதிக்கும். 2021ஆம் ஆண்டு க.பொ.த.(சா.த) பரீட்சைக்கு இம்மாணவரே தோற்ற வுள்ளனர்.

### 5.2.1. கல்விப் பொதுத் தராதர (சா.த) பரீட்சை

2015ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர (சா.த) பரீட்சையில் பூநகரிக் கோட்டப் பாடசாலைகள் ஆகக் குறைந்த நிலையை வெளிக்காட்டியிருந்தனவென முன்பு பார்த்தோம். தற்போது இக்கோட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்கும் 24 பாடசாலைகளில் 14 பாடசாலைகளில் மட்டுமே க.பொ.த (சா.த) வகுப்புக்கள் உள்ளன. இந்த 14 பாடசாலைகளில் இருந்தே மாணவர் இப் பரீட்சைக்குத் தோற்றினர். இப்பாடசாலைகளின் பெறுபேறுகள் தனித்தனியாக கீழே அட்டவணை 4இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 4

க.பொ.த. (சா.த.) பரீட்சை 2015 இல் பூநகரிக் கோட்டப் பாடசாலைகளின் பெறுபேறுகள்

☆ பாடசாலை

◈ 6 பாடங்களுக்கு மேல் பரீட்சைக்கு தோற்றியோர்

★ உயர் தரம் கற்பதற்கு தகுதி பெற்றோர்

➢ உயர் தரம் கற்பதற்கு தகுதி பெற்றோர் %

Ø உயர்தரத்தில் கணித விஞ்ஞான பாடங்களை கற்க தகுதி பெற்றோர்%

| ☆ | ◈ | ★ | ➢ | Ø |
|---|---|---|---|---|
| இரணைதீவு றோமன் க.த.க.பா. | 7 | 0 | 0 | 0.00 |
| முழங்காவில் மகா வித்தியாலயம் | 114 | 34 | 29.82 | 22.81 |
| நாச்சிக்குடா அ.மு.க. பாடசாலை | 24 | 4 | 16.67 | 8.33 |
| வேரவில் இந்து ம. வி | 21 | 11 | 52.38 | 28.57 |
| கிராஞ்சி அ.த.க. பாடசாலை | 25 | 4 | 16.00 | 8.00 |
| வலைப்பாடு றோ.க.த.க. பாடசாலை | 16 | 1 | 6.25 | 0.00 |
| பூநகரி மத்திய கல்லூரி | 52 | 23 | 44.23 | 42.31 |
| செல்லியாதீவு அ.த.க. பாடசாலை | 10 | 2 | 20.00 | 0.00 |
| ஞானிமடம் அ.த.க. பாடசாலை | 5 | 4 | 80.00 | 40.00 |
| கறுக்காய்த்தீவு மகா வித்தியாலயம் | 12 | 6 | 50.00 | 16.67 |
| பூநகரி நல்லூர் மகா வித்தியாலயம் | 13 | 5 | 38.46 | 23.08 |
| ஜெயபுரம் மகா வித்தியாலயம் | 22 | 7 | 31.82 | 22.73 |
| முட்கொம்பன் அ.த.க. பாடசாலை | 25 | 5 | 20 | 16.00 |
| பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வி. | 32 | 9 | 28.13 | 15.63 |

*(மூலம்: கல்வி தரவு முகாமைத்துவ தகவல் தளம், வட மாகாண கல்வித் திணைக்களம் 2016)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலேயுள்ள அட்டவணை 4 இற்கேற்ப ஞானிமடம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவருள் 80% ஆனோர் உயர்தரம் கற்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர். ஆனால் இப் பாடசாலையில் இருந்து பரீட்சைக்குத் தோற்றியோர் தொகை வெறும் ஐந்து மட்டும் என்பது இங்கு கவனத்தில் எடுக்கத்தக்கது. வேரவில் இந்து மகா வித்தியாலயம் 52.38% பெறுபேற்றைக் காட்டுகின்றது. இவற்றினைத் தவிர்ந்து ஏனைய பாடசாலைகள் அனைத்திலிருந்தும் ஒப்பீட்டளவில் மிகக் குறைவான பெறுபேறுகளே கிடைத்துள்ளன. மேலும் இரணைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் இருந்து தோற்றிய சகல மாணவர்களும் உயர் தரம் கற்பதற்குத் தகுதி பெறவில்லையென்பது இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகும்.

இப்பாடசாலைகளில் இருந்து சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றியோரில் உயர் தரப் பிரிவில் விஞ்ஞான, கணித பாடங்களைக் கற்ப தற்கு தகுதிபெற்றோர் மிகச்சொற்ப எண்ணிக்கையானவர்கள் என்பதை மேலே யுள்ள அட்டவணை 4 காட்டுகின்றது. இப்பாடசாலைகளுள் பூநகரி மத்திய கல்லூரியில் இருந்து தோற்றிய மாணவருள் 42.31% ஆனோர் உயர் தரத்தில் கணித, விஞ்ஞான பாடங்களைக் கற்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர். இப்பாட சாலையைத் தவிர பூநகரிக் கல்விக் கோட்டதிலுள்ள அனைத்துப் பாடசாலை களிலும் இருந்து இப்பரீட்சைக்குத் தோற்றியோரில் 30% இற்கும் குறைவான மாணவரே உயர் தரத்தில் கணித, விஞ்ஞானப் பாடங்களைக் கற்பதற்கு தகுதி பெற்றுள்ளனர் என்பது இங்கு கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதொன்றா கும். மேலும் இரணைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, வலைப்பாடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, செல்லியாதீவு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளில் இருந்து மொத்தமாகத் தோற்றிய 33 மாணவரில் ஒருவருமே கணித விஞ்ஞான பாடங்களை உயர் தரத்தில் கற்பதற்குத் தகுதியைப் பெறவில்லை என்பது கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும்.

இலங்கையைப் பொருத்தவரையில் க.பொ.த. (உயர்தரம்) வகுப்புக்களில் கணித, விஞ்ஞான பாடங்களைக் கற்கும் மாணவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் வாய்ப்புக்கான சந்தர்ப்பமானது கலைத்துறையில் கல்வி பயில்வோருடன் ஒப்பிடும்போது திருப்திகரமானதாக உள்ளது என்பது இங்கு கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதொன்று. மேலும் போருக்குப் பின்னரான இக்காலப்பகுதியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல்வேறு தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படுகின்றன. இவற்றில் பணிபுரிவதற்கு விஞ்ஞானக் கல்வி அறிவு அவசியமானதென்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் பிரதான பாடங்களாகிய தாய்மொழி, கணிதம், விஞ்ஞானமும் தொழில் நுட்டபமும், வரலாறு, ஆங்கிலம் ஆகிய பிரதான பாடங்களில் பூநகரிக் கல்விக் கோட்டத்தில் சித்தியடைந்தோரின் சதவீதங்கள் கீழே அட்டவணை 5 இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 5

க.பொ.த. (சா.த.) பரீட்சை – 2015இல் பாடரீதியான சித்திச் சதவீதம்

| | பாடம் | பூநகரி கோட்டப் பாடசாலைகள் % | கிளிநொச்சி வலயப் பாடசாலைகள் % |
|---|---|---|---|
| 1 | தாய் மொழி | 65.08 | 71.4 |
| 2 | கணிதம் | 33.60 | 40.50 |
| 3 | விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் | 44.97 | 46.62 |
| 4 | வரலாறு, | 53.70 | 55.54 |
| 5 | ஆங்கிலம் | 7.94 | 16.40 |

*(மூலம்: வட மாகாண கல்வித் திணைக்கள தரவுகளைக் கொண்டு ஆய்வாளரினால் கணிக்கப்பட்டது)*

மேலுள்ள அட்டவணை 5 தாய்மொழி, வரலாறு ஆகிய பாடங்களைத் தவிர்ந்த ஏனைய பாடங்களில் மாணவரின் பெறுபேறுகள் மிகக் குறைவாக உள்ளதைச் சுட்டிக் காட்டுகின்றது. ஆங்கிலம் பாடத்தில் சித்தியடைந்தோர் தொகையானது .8% இலும் குறைவானதென்பதை இவ்வட்டவணை குறித்துக் காட்டுகின்றது.

பூநகரிக் கல்விக் கோட்டமானது கிளிநொச்சி கல்வி வலயத்தினுள் உள்ளடங்கியுள்ளது என முன்பு பார்த்தோம். இவ்வனைத்துப் பாடங்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூநகரிக் கோட்டத்தின் பெறுபேறானது கிளிநொச்சிக் வலயப் பெறுபேறுகளிலும் குறைவாக உள்ளது. ஆங்கிலத்தினைத் தவிர்ந்த ஏனைய பாடங்களின் பெறுபேறுகள் பூநகரி கோட்டத்தினதும் கிளிநொச்சி வலயத்தினதும் பெறுபேறுகள் ஓரளவு அண்மித்துள்ளன. ஆனால் கிளிநொச்சி வலயத்தில் ஆங்கிலத்தில் சித்தியடைந்தோரின் சதவீதமானது பூநகரிக் கோட்டத்தில் சித்தியடைந்தோரின் சதவீதத்திலும் இருமடங்கிற்கு அண்மித்துள்ளது. இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதொன்று. மேலே குறிப்பிடப்பட்ட சித்தியடைந்தோர் விபரம் பாடசாலைகள் ரீதியாக பரம்பியுள்ள விதம் கீழே அட்டவணை 6 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 6

பாடசாலை பாடங்களில் சித்தியடைந்தோரின் சதவீதம்

| பாடசாலை | தாய்மொழி | கணிதம் | விஞ்ஞானம் | ஆங்கிலம் | வரலாறு |
|---|---|---|---|---|---|
| இரணைதீவு றோ. க.த.க.பாடசாலை | 42.86 | 12.5 | 28.57 | 11.40 | 80.00 |
| முழங்காவில் மகா வித்தியாலயம் | 63.16 | 25.21 | 44.74 | 4.17 | 83.33 |
| நாச்சிக்குடா அ.மு.க. பாடசாலை | 37.50 | 23.07 | 20.83 | 0.00 | 46.15 |
| வேரவில் இந்து மகா வித்தியாலயம் | 95.24 | 52.38 | 71.43 | 0.00 | 45.45 |
| கிராஞ்சி அ.த.க. பாடசாலை | 68.00 | 16 | 24.00 | 0.00 | 72.00 |
| வலைப்பாடு றோ.க.த.க. பாடசாலை | 62.50 | 6.25 | 25.00 | 13.46 | 50.00 |
| பூநகரி மத்திய கல்லூரி | 75.00 | 44.23 | 63.46 | 0.00 | 80.00 |
| செல்லையாதீவு அ.த.க. பாடசாலை | 70.00 | 18.18 | 20.00 | 20.00 | 83.33 |
| ஞானிமடம் அரச த.க. பாடசாலை | 80.00 | 66.67 | 80.00 | 16.67 | 46.15 |
| கறுக்காய்த்தீவு மகா வித்தியாலயம் | 83.33 | 58.33 | 91.67 | 0.00 | 45.45 |
| பூநகரி நல்லூர் மகா வித்தியாலயம் | 92.31 | 35.71 | 46.15 | 18.18 | 72.00 |
| ஜெயபுரம் மகா வித்தியாலயம் | 59.09 | 34.78 | 50.00 | 0.00 | 50.00 |
| முட்கொம்பன் அ.த.க. பாடசாலை | 52.00 | 19.23 | 36.00 | 6.25 | 80.00 |
| பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தி. | 53.13 | 28.94 | 34.38 | 11.40 | 83.33 |

*(மூலம்: வடமாகாணக் கல்வித் திணைக்கள தகவல்களைக் கொண்டு ஆய்வாளரினால் கணிக்கப்பட்டது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பு குறிப்பிடப்பட்டதைப் போல இலங்கையில் க.பொ.த. (சா.த) பரீட்சையில் தாய்மொழி, கணிதம் ஆகிய பாடங்கள் கட்டாய பாடங்களாகும். க.பொ.த (உ.த) பிரிவில் ஒருவர் விஞ்ஞானப் பாடங்களைத் தெரிவு செய்ய விரும்பினால் அவர் விஞ்ஞான பாடத்தில் சித்தியடைதல் அவசியம். பூநகரிக் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளுள் ஞானிமடம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை (66.67%), கறுக்காய்த்தீவு மகா வித்தியாலயம் (58.33%), வேரவில் இந்து மகா வித்தியாலயம் (52.38%) ஆகிய பாடசாலைகளில் இருந்து பரீட்சைக்குத் தோற்றியோரில் அரைவாசிக்கு மேற்பட்டோர் கணித பாடத்தில் சித்தியடைந்துள்ளனர். ஏனைய பாடசாலைகளின் பெறுபேறுகள் மிகவும் கீழ்மட்டத்தில் உள்ளன. இவற்றிலும் வலைப்பாடு றோமன் கத்தோலிக்க .தமிழ்க் கலவன் பாடசாலை, இரணைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை என்பவற்றில் பெறுபேறுகள் ஆகக் குறைந்த நிலையில் இருப்பதை இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டியுள்ளது.

தாய்மொழிப் பெறுபேறானது ஒப்பீட்டளவில் உயர்வாகக் காணப்படு கின்றது. எனினும் நாச்சிக்குடா முஸ்லிம் கலவன் பாடசாலையின் பெறுபேறா னது திருப்திகரமானதாக அமையவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆங்கில மொழியில் அனைத்துப் பாடசாலைகளும் மிகக் குறைந்த பெறுபேறுகளை வெளிக்காட்டுகின்றன. பூநகரிக் கோட்டத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் இருந்து வெறும் 20% இற்குக் குறைந்தளவு மாணவரே ஆங்கில பாடத்தில் சித்தியடைந்துள்ளனர். பூநகரிக் கோட்டத்தில் உள்ள க.பொ.த (சா.த.) வகுப்புக்கள் உள்ள 14 பாடசாலைகளில் இருந்து பரீட்சைக்குத் தோற்றியோரில் ஆறு பாடசாலைகளைச் சேர்ந்த அனைவருமே ஆங்கில பாடத்தில் இப்பரீட்சையில் சித்தியடையத் தவறியமை இப்பகுதியில் ஆங்கில பாடத்தின் கவலைக்குரிய பெறுபேற்றை வெளிப்படுத்துகின்றது.

வரலாற்றுப் பாடத்தின் பெறுபேறானது ஒப்பீட்டளவில் இங்கு திருப்திகரமாக அமைந்துள்ளது. எனினும் ஐந்து பாசாலைகளில் இருந்து இப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் வெறும் 30% இற்கும் குறை வானவர்களே சித்தியடைந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞான பாடத்தைப் பொருத்தவரையில் ஒன்பது பாசாலைகளில் இருந்து தோற்றியோரில் 50% குறைவானவர்களே சித்தியடைந்துள்ளனர். உயர்தரத்தில் விஞ்ஞான பாடத்தினைப் பயில்வதற்கு சாதாரண தரத்தில் கணிதம், விஞ்ஞான ஆகிய இரு பாடங்களிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெறுதல் அவசியமானதாகும். பூநகரிப் பிரதேசத்தின் பாரம்பரியத் தொழிலான விவசாயத்தை மேம்படுத்துவதற்கு விஞ்ஞான அறிவு இன்றியமையாதது என்பதை கருத்திலெடுக்க வேண்டியுள்ளது.

### 5.2.2. கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சை

பூநகரிக் கல்விக் கோட்டத்தில் உள்ள ஆறு பாடசாலைகளில் மட்டுமே க.பொ.த. (உ.த.) வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. இவற்றிலும் பூநகரி மத்திய கல்லூரியிலும் முழங்காவில் மகா வித்தியாலயத்திலும் மட்டும் கணித, விஞ்ஞானப் பிரிவுகள் உள்ளன. வர்த்தகப் பிரிவானது முழங்காவில் மகா வித்தியாலயம், பூநகரி மத்திய கல்லூரி, கறுக்காய்த்தீவு மகா வித்தியாலயம், ஜெயபுரம் மகா வித்தியாலயம் ஆகிய நான்கு பாடசாலைகளில் மட்டுமே நடத்தப்படுகின்றது. கலைப் பிரிவானது ஆறு பாடசாலைகளில் நடத்தப்படு கின்றது. அண்மைக் காலத்தில் உயர் தரத்தில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்ப பிரிவுகள் இக்கல்விக் கோட்டத்தில் உள்ள ஒரு பாடசாலை யிலேனும் நடத்தப்படுவதில்லை.

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. (உ.த.) பரீட்சைக்கு உயிரியல் பிரிவில் பூநகரி மத்திய கல்லூரி, முழங்காவில் மகா வித்தியாலயம் என்பற்றில் இருந்து தலா இருவர் தோற்றியிருந்தனர். இந்த நான்கு மாணவர்களும் பல்கலைக்கழகம் செல்வதற்கான தகைமைகளைப் பெற்றுக் கொள்ளவில்லை. பௌதீக விஞ்ஞானத்துறையைப் பொறுத்தவரையில் பூநகரி மத்திய கல்லூரியில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய இருவரும் பல்கலைக்கழகம் செல்வதற்குரிய தகைமையைப் பெற்றிருப்ப தோடு, முழங்காவில் மகா வித்தியாலயத்தில் இருந்து தோற்றிய நான்கு மாணவரில் ஒருவர் மட்டுமே இத்தகைமையைப் பெற்றுள்ளார். பௌதீக விஞ்ஞானத் துறையைப் பொருத்தவரையில் பூநகரி மத்திய கல்லூரியின் பெறுபேறு 100% ஆகவுள்ளது இங்கு அவதானிக்கத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தகத் துறையைப் பொருத்தவரையில் பூநகரி மத்திய கல்லூரியில் இருந்து தோற்றிய 10 மாணவருள் மூவரும், ஜெயபுரம் மகா வித்தியாலயத்தில் இருந்து தோற்றிய ஐந்து மாணவருள் மூவரும், கறுக்காய்த்தீவு மகா வித்தியாலயத்தில் இருந்து தோற்றிய ஒருவரும் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிப்பதற்கான தகைமையைப் பெற்றுள்ளனர்.

பூநகரிக் கல்விக் கோட்டத்தில் ஆறு பாடசாலைகளில் க.பொ.த. (உ.த.) கலைப் பிரிவு நடத்தப்படுகின்றது. கடந்த வருடம் (2015) நடைபெற்ற இப்பரீட்சையில் இப்பாடசாலைகளில் இருந்து தோற்றிய மாணவரின் பெறுபேற்று விபரம் கீழே அட்டவணை 7 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 7

பூநகரிக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் கலைத்துறைப் பெறுபேறுகள் – 2015

| பாடசாலை | தோற்றியோர் | பல்கலைக்கழக தகைமை பெற்றோர் | % |
|---|---|---|---|
| 1. மு. ம. மகா வித்தி. | 27 | 23 | 85.12 |
| 2. வே. இந்து மகா வித்தி. | 7 | 7 | 100 |
| 3. பூநகரி மத்திய கல்லூரி | 25 | 16 | 64 |
| 4. க. மகா வித்தியாலயம் | 5 | 3 | 60 |
| 5. பூ. நல். மகா வித்தி. | 9 | 5 | 55.56 |
| 6. ஜெ. மகா வித்தி. | 22 | 17 | 77.27 |

*(மூலம்: வடக்கு மாகாண கல்வித் திணைக்கள இணையத்தலம் 2016)*

கலைத்துறையைப் பொருத்தவரையில் பூநகரிக் கோட்டப் பாடசாலைகள் 2015 க.பொ.த. (உ. த) பரீட்சையில் ஒப்பீட்டளவில் சிறந்த பெறுபேறுகளை வெளிக்காட்டியுள்ளன எனலாம்.

கடந்த 2015ஆம் அண்டு நடைபெற்ற க.பொ.த. (உ.த) பரீட்சையில் பூநகரிக் கோட்டப் பாடசாலைகள் உயிரியல் விஞ்ஞானத் துறையில் மிக குறைந்த பெறுபேற்றையும், பௌதீக விஞ்ஞானம், வர்த்தகம் ஆகிய துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் சுமாரான பெறுபேறுகளையும் கலைத் துறையில் ஒப்பீட்டளவில் சிறந்த பெறுபேற்றையும் வெளிக்காட்டியுள்ளன.

பூநகரிக் கோட்டப் பாடசாலைகளில் இருந்தும் கிளிநொச்சிக் கோட்டத்திலிருந்தும் இப்பரீட்சையில் தோற்றி பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றோரின் விபரம் கீழுள்ள துறைரீதியாக அட்டவணை 8 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 8

துறை ரீதியாக பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றோர் சதவீதம்

| இல | துறை | பூநகரிக் கோட்டம் | கிளிநொச்சி வலயம் |
|---|---|---|---|
| 1 | பௌதீக விஞ்ஞானம் | 50.00 | 40.91 |
| 2 | உயிரியல் விஞ்ஞானம் | 0.00 | 46.84 |
| 3 | வர்த்தகம் | 35.00 | 67.65 |
| 4 | கலை | 74.73 | 66.80 |

*(மூலம்: வட மாகாண கல்வித் திணைக்கள தரவுகளைக் கொண்டு ஆய்வாளரினால் கணிக்கப்பட்டது)*

கிளிநொச்சிக் கல்வி வலயத்தினுள் அமைந்துள்ள நான்கு கோட்டங்களுள் ஒன்றான பூநகரிக் கல்விக் கோட்த்தின் பெறுபேறுகளை வலயத்தின் பெறுபேறுகளுடன் ஒப்பிடுகையில் பல விடயங்கள் கவனத்துக்கு வருகின்றன. கலைத்துறையில் பூநகரிக் கல்விப் கோட்டத்தின் பெறுபேறானது கிளிநொச்சி வலயத்திலும் உயர்வாகக் காணப்படுகின்றது.

இவ்வாறே பௌதீக விஞ்ஞானத்துறையிலும் பூநகரிக் கல்விக் கோட்டத்தின் பெறுபேறானது கிளிநொச்சி வலயத்துடன் ஒப்பிடும்போது உயர்வாகக் காணப்பட்டாலும் பூநகரிக் கல்விக் கோட்டத்திலிருந்து பௌதீக விஞ்ஞானத்துறையில் தோற்றியோரின் எண்ணிக்கை வெறும் நான்கு என்பது இங்கு கருத்திற் கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தகத்துறையைப் பொறுத்த வரையில் பூநகரிக் கல்விக் கோட்டத்தின் பெறுபேறானது கிளிநொச்சி வலயத்தின் பெறுபேற்றுடன் ஒப்பிடுகையில் ஏறத்தாள அரைவாசியாக உள்ளமை இங்கு அவதானிக்கத் தக்கது. இது பூநகரிக் கோட்டத்திலிருந்து வர்த்தகத்துறையில் தோற்றியோரின் பெறுபேறுகள் திருப்திகரமாக அமையவில்லையென்பதை வெளிப்படுத்து கின்றது. நான்கு துறைகளுள் உயிரியல் விஞ்ஞானத்துறையானது மிக மோசமான பெறுபேற்றை வெளிக்காட்டியுள்ளமை இங்கு அவதானிக்கத் தக்கது. பூநகரிக் கல்விக் கோட்டத்திலிருந்து உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் இப்பரீட்சைக்குத் தோற்றிய ஒருவருமே சித்தியடையாமை இங்குள்ள உயிரியல் விஞ்ஞானக் கல்வி பற்றிய மிக மோசமான நிலையை வெளிக் கொண்டு வருகின்றது எ[illegible]ாம்.

5..3 ஆசிரியர் – மாணவர் விபரம்

கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களத் தரவுகளுக்கு (2016) ஏற்ப பூநகரிப் பிரிவுப் பாடசாலைகளில் தற்போது 343 ஆசிரியர்கள் பணியாற்று கின்றனர். மேலும் இப்பாடசாலைகளில் 2750 மாணவர்களும் 2643 மாணவிகளுமாக மொத்தமாக 5403 பிள்ளைகள் கல்வி பயில்கின்றனர். பாடசாலைகளில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையேயான விகிதம் 1:16 ஆகக் காணப்படுகின்றது. மொத்தமாகப் நோக்கும் போது ஆசிரியர்களின் எண்ணிக்கை திருப்திகரமாகக் காணப்பட்டபோதிலும் பாடரீதியாக ஆசிரியர் களின் எண்ணிக்கை போதுமானதெனக் கூறுவதற்கில்லை. பூநகரி கல்விக் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் பற்றாக்குறையாக உள்ள ஆசிரியர் எண் ணிக்கை விபரம் பாடரீதியாக கீழே அட்டவணை 9 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 9

பாடரீதியாக பற்றாக்குறையாகக் காணப்படும் ஆசிரியர் எண்ணிக்கை

| | பாடம் | ஆசிரியர்எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஆங்கிலம் | 25 |
| 2 | வரலாறு, புவியியல் | 5 |
| 3 | விஞ்ஞானம் | 3 |
| 4 | கணிதம் | 2 |
| 5 | தமிழ் | 3 |

*(மூலம்: கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகம், 2016)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில பாடங்களைக் கற்பிப்பதற்கு மேலதிகமான ஆசிரியர்கள் பூநகரிப் பிரதேசத்தில் உள்ளபோதிலும் சில பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர் களின் எண்ணிக்கை போதாமல் உள்ளது இங்கு குறிப்பிடக்கூடியதாகும். இங்கு இப்பிரதேசத்தைச் சேர்ந்த ஆசிரியர்களும், யாழ்ப்பாணம் போன்ற வெளியிட ஆசிரியர்களும் கடமையாற்றுகின்றனர்.

## 5.4 பௌதீக வளங்கள்

பூநகரிப் கல்விப் பிரிவுப் பாடசாலைகளில் காணப்படும் பௌதீக வளங்கள் பற்றிய விபரம் கீழே அட்டவணை 10 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 10

பூநகரிப் கல்விப் பிரிவுப் பாடசாலைகளில் காணப்படும் பௌதீக வளங்க்ள

| இல | பௌதீக வளம் | பாடசாலைகளின் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | மின்சாரம் | 14 | 58.33 |
| 2 | மின்பிறப்பாக்கி | 13 | 54.17 |
| 3 | கழுவுவதற்குரிய நீர் வசதி | 18 | 75.00 |
| 4 | குடிநீர் | 10 | 41.67 |
| 5 | கணினி ஆய்வுகூடம் | 8 | 33.33 |
| 6 | விஞ்ஞான ஆய்வுகூடம் | 7 | 29.17 |
| 7 | கணித ஆய்வுகூடம் | 1 | 4.17 |
| 8 | விவசாய ஆய்வுகூடம் அல்லது அறை | 0 | 0.00 |
| 9 | கட்புல – செவிப்புல சாதன அறை | 0 | 0.00 |
| 10 | ஆலோசனை வழங்கல் அறை | 1 | 4.17 |
| 11 | விசேடக் கல்வி அறை | 0 | 0.00 |
| 12 | விசேடக் கல்விப் பிரிவு | 1 | 4.17 |
| 13 | ஒன்றுகூடல் மண்டபம் | 4 | 16.67 |
| 14 | செயற்பாட்டறை | 3 | 12.50 |
| 15 | மனைப்பொருளியல் அறை | 1 | 4.17 |
| 16 | களஞ்சியம் | 4 | 16.67 |
| 17 | நூலகம் | 4 | 16.67 |
| 18 | ஆசிரியர் அறை | 2 | 8.33 |
| 19 | சமையல் அறை | 21 | 87.5 |
| 20 | சிற்றுண்டிச்சாலை | 3 | 12.5 |
| 21 | விளையாட்டு மைதானம் | 14 | 58.33 |
| 22 | எல்லை மதில் அல்லது வேலி | 11 | 45.83 |

(மூலம்: கல்வி தரவு முகாமைத்துவ தகவல் தளம், வட மாகாண கல்வித் திணைக்களம் 2016)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே உள்ள அட்டவணை இப்பாடசாலைகளில் பௌதீக வளங்கள் பற்றாக்குறையாகக் காணப்படுவதைக் காட்டுகின்றது. அடிப்படைத் தேவையான குடிநீர் வசதியானது 20 பாடசாலைகளில் (60%) காணப்படவில்லையென்பது இங்கு அவதானிக்கத்தக்கது.

போருக்குப் பின்னரான இக்காலப்பகுதியில் இப்பகுதிப் பிள்ளைகள் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டிருக்கலாம். இவர்களுக்கு உளவியல் ரீதியாக ஆலோசனை வழங்குதல் மற்றும் வழிகாட்டுதல் அவசியமாகும். எனினும் இப்பிரதேசத்தில் உள்ள முப்பது பாடசாலைகளில் ஒரு பாடசாலையில் மட்டுமே வழிகாட்டல் பிரிவு காணப்படுகின்றது. இவ்வாறே போரினால் உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்ட பல பிள்ளைகளுள் விஷேட கல்வித் தேவை காணப்படும். ஆனால் இப்பிதேசத்தில் உள்ள ஒரேயொரு பாடசாலையில் மட்டுமே விஷேட கல்விப் பிரிவு காணப்படுகின்றது. இப்பாட சாலையில் இதற்கான பிரத்தியேக அறை ஒன்று காணப்படவில்லை. மேலும் வட மாகாணத்தில் விவசாயத்திற்கு பெயர்பெற்ற பகுதியாகக் காணப்படும். 'நெல் விளையும் பூமி'யெனப் போற்றப்படும் பூநகரியில் உள்ள பாடசாலைகள் ஒன்றிலேனும் விவசாய ஆய்வுகூடமோ, விவசாய அறையோ காணப்படாதது இங்கு நோக்கத்தக்கது.

மேலே குறிப்பிட்டவாறே இலங்கையில் கல்விப் பொதுத் தராதர (சா.த.) வகுப்பில் தாய்மொழியும் கணிதமும் கட்டாய பாடங்களாகும். ஆனால் இங்குள்ள பாடசாலைகளில் ஒன்றில் மட்டுமே கணித கூடம் காணப்படுவது அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இங்கு ஏழு பாடசாலைகளில் மட்டும் விஞ்ஞான ஆய்வுகூடம் காணப்படுவதும் இங்கு குறிப்பிட வேண்டியதொன்றாகும்.

குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையான ஆசிரியர்கள் வெளியிடங்களைத் சேர்ந்தவர்களாவர். இவர்கள் தினமும் நீண்ட தூரம் பயணம் செய்தே இப்பகுதிப் பாடசாலைகளில் கற்பிப்பதற்காக வருகின்றனர். இந்த ஆசிரியர்களுக்கும் மற்றைய ஆசிரியர்களுக்கு சிற்றுண்டிச்சாலை மற்றும் ஆசிரியர் ஓய்வறையென்பன அவசியமாகும். ஆனால் இப்பிரதேசப் பாடசாலைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டில் மட்டுமே ஆசிரியர் அறை காணப்படுகின்றன. அதேவேளையில் மூன்றில் மட்டுமே சிற்றுண்டிச்சாலைகள் உள்ளன. வெளியிடத்து ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு தாமதமாக வருதல், பாடசாலைகளில் இருந்து உரிய நேரத்திற்கு முன்னதாக வெளியேறுதல், அடிக்கடி லீவெடுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக இவ்வாசியர்கள் பற்றி உள்ளூர் வாசிகளிடத்தேயும் பெற்றோரிடத்தேயும் தவறாக மனப்திவுகள் காணப்படும் அதுவேளையில் இவ் ஆசிரியர்களின் நியாயமான தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையும் இங்கு இருப்பது அவதானிக்கத்தக்கது.

இவ்வாறே ஏனைய பௌதிக வளங்களும் இப்பிரிவுப் பாடசாலை களில் முழுமையாகக் காணப்படவில்லையென்பது இங்கு குறிப்பாக அவதானிக்கக்கூடியதொன்றாகும்.

6. பெறுபேற்று வீழ்ச்சிக்கான காரணங்களாக அமையக் கூடியன

மாணவரின் பெறுபேற்று வீழ்ச்சிக்கு பல்வேறு காரணங்கள் இருப்பதாக ஆய்வுகளின் முடிவுகள் குறிப்பிடுகின்றன. Nupir (2010) என்பவரின் ஆய்வானது மாணவரின் கற்றல் அடைவுக்கும் அவர்களின் குடும்ப வருமானம், பெற்றோரின் கல்வியறிவு என்பவற்றிக்கும் இடையில் தொடர் பிருப்பதாக குறிப்பிடுகின்றது.

Hijazi and Naqvi (2006) ஆகியோர் மேற்கொண்ட ஆய்வானது மாணவரின் பெறுபேற்றுக்கும் அவர்களின் பாடசாலை வரவு, குடும்ப வருமானம், வீட்டில் படிக்கும் நேரம், அவர்களின் தாயின் வயது (தாயின் வயது குறைவாக இருப்பின் அவர்களால் பிள்ளைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும்) மற்றும் தாயின் கல்வியறிவு என்பவற்றுக்குமிடையே நெருங்கிய தொடர்பிருப்பதாக குறிப்பிடுகின்றது.

முகமட் டானியல் என்பவரும் மற்றும் சிலரும் (Mohamed Danial at el. [2011]) பாகிஸ்தானில் மேற்கொண்ட ஆய்வில் குடும்ப வருமானம், பெற்றோரின் கல்வி நிலை, குடும்ப உறுப்பினர் எண்ணிக்கை, ஆசிரியர் வரவு, மாணவர் ஆர்வம் ஆகியன மாணவரின் பெறுபேற்றில் தாக்கத்தினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்துவதாகக் குறிப்பிடுகின்றனர். இப்பிரதேச மாணவரின் பரீட்சைப் பெறுபேற்று வீழ்ச்சிக்கு இவையும் காரணமாக அமையலாம்.

மேலும் Gillan (2012) மேற்கொண்ட ஆய்வானது மாணவர் வரவு, அவர்களது சமூகப் பொருளாதார நிலை, பாடசாலையின் வளங்கள், பாடசாலை அமைவு போன்றன மாணவரின் பெறுபேறுகளில் தாக்கம் செலுத்துவதாகக் குறிப்பிடுகின்றது.

1991ஆம் ஆண்டு பூநகரி மக்கள் போரினால் இடம்பெயர நேர்ந்தது. பாடசாலைகளும் அவ்வேளையில் இடம்பெயர்ந்து வெவ்வேறு இடங்களில் இயங்கின. போருக்குப் பின்னரான இக்காலப்பகுதியில் பாடசாலைகள் மீண்டும் தங்கள் சொந்த இடங்களில் இயங்குகின்றன. போரினால் நேரடியாக பாதிப்படைந்த மாணவர்களும் போரினால் பாதிக்கப்பட்ட பெற்றோரின் போருக்குப் பின்னர் பிறந்த பிள்ளைகளுமே இப்போது இப்பாடசாலைகளில் கற்கின்றனர். பொருளாதார வசதி படைத்தவர்களின் பிள்ளைகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா போன்ற வேறு பகுதிகளுக்குச் சென்று கற்றலில் ஈடுபடுகின்றனர். இப்பகுதியைச் சொந்தவிடமாகக் கொண்ட ஆசிரியர்கள் பலர் இடப்பெயர்வின் பின்னர் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பணிபுரிகின்றனர்.

போரின் நேரடி மற்றும் மறைமுகத் தாக்கத்திற்கு உட்பட்ட மாணவரிடம் உடல், உள பாதிப்புக்கள் காணப்படுகின்றன. இவற்றின் பாதிப்புக்கள் கூட இப்பிரதேச மாணவரின் கற்றலில் செல்வாக்கினைச் செலுத்தலாம். ஆனால் இம்மாணவரின் உளவியல் பிரச்சினைகளுக்கு ஆலோசனை கூறும் வசதி இப்பிரதேசத்தில் ஒரு பாடசாலையில் மட்டுமே உள்ளது. இது மாணவரின் பெறுபேற்றில் தாக்கம் செலுத்தலாம்.

2015ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த.(சா.த.) பெறுபேற்றில் மாணவர்கள் மிக குறைந்த பெறுபேறுகளைப் பெற்றிருந்தனர் என்பதை அட்டவணை 6 இன் மூலம் அறியமுடியும். மேலும் பூநகரிக் கல்விக் கோட்டத்தில் ஆங்கில பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் 25 பேர் போதாமல் உள்ளனரென்பதை அட்டவணை 9 எடுத்துக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே ஆங்கில பாடத்தில் மாணவரின் பெறுபேறு தாழ்ந்த மட்டத்தில் இருப்பதற்கு இப்பாடத்திற்கான போதியளவு ஆசிரியர்கள் நியமிக்கப்படாமை முக்கிய காரணமெனலாம். இப்பிரதேசத்தில் ஆங்கிலம் கற்பதற்குரிய சூழல் இல்லையெனலாம். உதாரணமாக ஆங்கிலப் பத்திரிகைகள், நூல்கள் கிடைக்காமை, விஞ்ஞான ஆய்வு கூடம் பல பாடசாலைகளில் காணப் படாததை அட்டவணை 10 காட்டுகின்றது. எனவே இப்பிரதேச மாணவரின் விஞ்ஞானப் பாட அடைவு குறைவாகக் காணப்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாக அமையலாம்.

கணித பாடத்தில் மாணவரின் பெறுபேறு குறைவாகக் காணப் படுகின்றது. இதற்கு பல்வேறு காரணங்களைக் குறிப்பிடலாம். கணித பாடத்தில் உள்ள எண்ணக்கருக்கள் ஒன்றோடு ஒன்று தொடர்பானவை. மாணவர் இடைநடுவிலிருந்து பாடத்தைக் கற்க முடியாது. பூநகரிப் பிரதேசத்தில் போர்க் காலத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. இதனால் மாணவர்கள் கணித பாடப்பரப்பில் அடிப்படையாகக் கற்க வேண்டிய பலவற்றை இழந்தனர். இதுவும் கணித பாட அடைவு குறைவடைவதற்கான காரணமாகலாம். மேலும் ஆரம்ப வகுப்புக்களில் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களின் கணித அறிவானது ஆரம்ப வகுப்பு மாணவர் கணித எண்ணக் கருக்களை விளங்கிக் கொள்ள துணையாக அமையும். பூநகரிப் பிரதேசப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களின் கணித அடைவானது உயர் வானது எனச் சொல்வதற்கில்லை. இதுவும் மாணவரின் கணித பாடப் பெறு பேற்று வீழ்ச்சிக்கு காரணமாக அமையலாம். இதனைவிட கணித பாட மென்பது கடினமான பாடமென்ற தவறான எண்ணக்கரு இப்பிரதேசத்தில் பலரிடமும் காணப்படுகின்றது. இதுவும் பெரும்பாலான மாணவர் கணித பாடத்தில் சித்தியடையாமைக்கு காரணமாகலாம்.

இப்பிரதேசத்தில் வாழும் பலர் கல்வியின் முக்கியத்துவத்தினை உணராதவர்களாகவே உள்ளனர். மேலும் இப்பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களின் மனப்பாங்குகள் எவ்வாறு உள்ளதென்பதைக் குறிப்பிடமுடியா துள்ளது. பெற்றோரின் கல்வியறிவு, ஆசிரியர்களின் மனப்பாங்கு போன்றன மாணவரின் கற்றல் பெறுபேற்றில் இங்கு தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட மாகாணத்தில் ஆசிரியர் நியமனம் பெறும் அனைவரும் முதலில் குறிப்பிட்ட சில ஆண்டுகள் கிளிநொச்சி வலயத்திற்கே நியமிக்கப்படுகின்றனர். பூநகரியானது கிளிநொச்சிக் கல்வி வலயத்தின் ஒரு பிரிவு என்பது இங்கு கவனிக்கத்தக்கது. முதல் நியமனமாக நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்கு பாடரீதியான அறிவும் திறனும் காணப்படும் அதேவேளையில் அவர்களிடம் அனுபவம், கற்பித்தல் பயிற்சி, கற்பித்தல் தொடர்பான வாண்மை விருத்தி என்பன காணப்படாது எனக் கருதலாம். மாணவரைப் புரிந்து கொண்டு அவர்களது உளவியல் பின்னணியை அறியாத ஆசிரியர்களால் வினைத்திறன் மிக்கதாக கற்பிக்க முடியாது. இதுவும் இப்பிரதேச மாணவரின் பரீட்சைப் பெறுபேற்று வீழ்ச்சிக்கு காரணமாக அமையக்கூடுமெனக் குறிப்பிடலாம். மேலும் இப்பிரதேச மாணவருக்கு வீட்டில் படிப்பதற்கு போதிய வசதிகள் உள்ளனவா என்பதும் ஆராயப்பட வேண்டும். கற்பதற்குரிய வசதிகள் வீட்டுச் சூழலில் காணப்படாதவிடத்து மாணவரின் கற்றல் நாட்டம் குறைவடையலாம். மேலும் இப்பகுதி மக்கள் அனைவருக்கும் இன்னும் ஒழுங்கான வீடு, மின்சாரம் மற்றும் குடிநீர் வசதிகள் சீராகக் கிடைப்பதாகக் குறிப்பிட முடியாது. இவையும் இம்மாணவரின் கற்றலில் தாக்கத்தினை செலுத்தக்கூடும்.

பூநகரிப் கோட்டக் கல்விப் பிரிவிலுள்ள பாடசாலைகளுக்கு உரிய காலத்தில் பாடநூல்கள், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் போன்றன கிடைப்பதில்லையென பலராலும் குறிப்பிடப்படுகின்றது. உரிய நேரத்தில் கிடைக்காத பாடநூல்கள், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் போன்றனவும் மாணவரின் கற்றல் பெறுபேறுகளில் தாக்கத்தைச் செலுத்தியிருக்கலாம். இப்பாடசாலைகளில் கற்கும் பொருளாதார வசதி படைத்தவர்களின் பிள்ளைகள் பாடசாலைகளில் இருந்து இடைவிலகி யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா என வேறு பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள பாடசாலைகளில் கற்றலில் ஈடுபடுகின்றனர். இவர்களின் வெளியேற்றமும் இப்பகுதி கல்விப் பெறுபேற்று வீழ்ச்சிக்கு காரணமாக அமையலாம்.

## 7. பூநகரிப் பிரதேச பாடசாலைக் கல்வி மேம்பாட்டுக்கான சிபார்சுகள்

பூநகரிப் பிரதேசப் பாடசாலைகளின் கல்வி மேம்பாட்டிற்காக வட மாகாணக் கல்வித் திணைக்களம் மேற்கொள்ள வேண்டுமென இந்த ஆய்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வைக்கின்றது. கிளிநொச்சிக் கல்வி வலயமானது மிகப் பெரியளவு பிரதேசத்தினை உள்ளடக்கியது. இதனை இரண்டு வலயங்களைாகப் பிரிப்பதன் மூலம் ஆளனியினரைப் பெற முடியும். இவ்வாறே பூநகரிக் கோட்டத்தையும் இரண்டாக வகுப்பதன் மூலம் பல்வேறு வளங்களைப் பெறுதல் சாத்தியமாகும். பூநகரிக் கோட்டத்திலுள்ள ஆசிரிய ஆலோசகர்கள் தற்போது அனைத்துப் பாடசாலைகளுககும் செல்லுதல் அசாத்தியமாகவுள்ளது அவதானிக்கப்படுகின்றது. இக்கோட்டம் இரண்டாக வகுக்கப்பட்டால் இது சாத்தியமாகலாம். மேலும் பற்றாக்குறையாக உள்ள ஆங்கில பாட ஆசிரியர்களையும் ஏனைய பாட ஆசிரியர்களையும் உடனடியாக இக்கோட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு நியமிக்க நடவடிக்கை எடுத்தல் மிகவும் அவசியமாகும். மேலும் மாகாணக் கல்வித் திணைக்களமானது சீரான இடமாற்றக் கொள்கைகளைப் பயன்படுத்தி ஆசிரியர்களை இடம் மாற்றல், பூநகரிப் பிரதேசத்தின் உள்ளகப் பகுதிகளில் ஆசிரியர்களின் போக்குவரத்திற்கான வசதிகளை ஏற்படுத்துதல். உரிய காலத்தில் பாடநூல்கள், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி என்பவை பாடசாலைகளுக்கு வழங்கப்படுவதை உறுதிப்படுத்துதல், உரிய பாடங்களுக்குப் பொருத்தமான ஆசிரிய ஆலோசகர்களை நியமித்தல். ஆசிரிய ஆலோசகர்கள் மூலம் வழிகாட்டல், மேற்பார்வை, பின்னூட்டல் போன்றவற்றிற்கு முக்கியத்துவமளித்தல் போன்றவற்றுக்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அ. பாடசாலைச் சமூகம்

1. ஆசிரியர்கள் பரிகாரக் கற்பித்தல் முறையைக் கையாண்டு கற்பித்தல்.
2. அதிபர்கள் மற்றும் பிரிவுத் தலைவர்கள் உள்ளக மேற்பார்வையை கிரமமாக மேற்கொண்டு கற்றல்–கற்பித்தல் நிகழ்வை ஊக்குவித்தல்.

ஆ. பழைய மாணவர்கள்

பூநகரிக் கோட்டப் பாடசாலைகளுக்குத் தேவையான பௌதீக வளங்களை வழங்குவதற்கு அரசு முன்வருதல் வேண்டும். மேலும் பழைய மாணவர்கள், சமூக நலன் விரும்பிகள் போன்றோர் இதற்கு உதவ வேண்டும். ஆனால் அனைத்து வளங்களையும் உடனடியாக வழங்குதல் அரசுக்கு சாத்தியமல்ல. கனடா நாட்டில் வாழும் பூநகரிப் பிரதேச மக்களால் உருவாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்டு இயங்கும் பூநகரி – சமூக முன்னேற்ற ஒன்றியமானது பூநகரிக் கோட்டப் பாடசாலைகளின் பௌதீக வளங்களை விருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்து வருவதானது பாராட்டத்தக்கதாகும். இவ்வமைப்பு இவ்வாண்டு (2016) கறுக்காய்த்தீவு மகா வித்தியாலயத்தின் கணினி அறைத் திருத்தத்திற்கும் செம்பன்குன்று அரச தமிழ்க் கலவன் பாடசாலையின் மின் இணைப்பிற்கும் நிதிப்பங்களிப்பு வளங்கியமையும் கடந்த ஆண்டு செல்லையா தீவு அரச தமிழ்க கலவன் பாடசாலைக்கு குடிநீர் விநியோக நடவடிக்கை எடுத்தமையையும் இங்கு குறிப்பிடலாம் (பூநகரி– சமூக அபிவிருத்தி ஒன்றிய இணையம்–கனடா, 2016). இந்த கனடாவில் இயங்கும் இவ்வமைப்பினைப் போன்று ஏனைய நாடுகளில் இயங்கும் பூநகரி மக்கள் அமைப்புக்களும் இப்பகுதி பாடசாலைக ன் பௌதீக வளங்களை பெற்றுக் கொடுக்க முன்வருதல் காலத்தின் தேவையாகும்.

முடிவுரை

மேற்குறிப்பிடப்பட்டவற்றில் இருந்து வட மாகாணக் கல்வித் திணைக்களமானது பூநகரிப் பிரதேசத்தில் மாணவரின் பெறுபேறுகள் தொடர்ச்சியாக வீழச்சியடைந்து வருவதற்கான காரணங்களை அறிவதற்கு ஆய்வு முயற்சிகளில் ஈடுபடல் காலத்தின் தேவையாகும் என்பதனை வலியுறுத்த வேண்டியுள்ளது. அத்துடன் இப்பிரதேசத்தில் இருந்து எதிர் காலத்தில் கல்வித்துறையில் முதுமாணி, முதுகலைமாணி, கலாநிதிப் பட்டத்திற்கு ஆய்வு செய்யவுள்ள கல்விப் புலத்திலுள்ளோர் இப்பிரச்சினையை தமது ஆய்வுக்குட்படுத்துதல் அவசியம். இதன் மூலம் இப்பகுதி மாணவரின் கல்வி வீழ்ச்சிக்கான காரணம் கண்டறியப்படலாம். இது இப்பிரச்சினைக்குத் தீர்வு காண வழிவகுக்கும்.

ஆய்வுகளின் முடிவுகளில் இருந்து இப்பிரதேசக் கல்வி வீழ்ச்சிக்கான காரணங்களை அறிந்து அவற்றிக்கான தீர்வுகளை முன் வைக்க வேண்டியது வட மாகாண சபையின் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணைகள்

1. இலங்கை பரீட்சைகள் திணைக்களம் <http://www.doenets.lk/exam/index.jsf>
2. கல்வி முகாமைத்துவ தகவல் தளம், வட மாகாணக் கல்வித் திணைக்கள இணையம் <http://www.edudept.np.gov.lk/selectresults.php>
3. புஸ்பரட்ணம், ப. (1993). " பூநகரி தொல்பொருள் ஆய்வு" யாழ்ப்பாணப் ல்கலைக்கழகம்வெளியீடு, திருநெல்வேலி
4. பூநகரி– சமூக முன்னேற்ற ஒன்றியம் <http://www.poonakari.com/?p=241>
5. HijaziS.T., and Naqvi, S.M.M.R. (2006). Factors Affecting Students' Performance. Bangladesh e-Journal of Sociology. 3 (1). Nuipir,A.C. (2010) Factors affected the performance of pupils in primary schools in paidha Town Council, (Unpublished Master Thesis)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒளிமயமான தேசத்தை உருவாக்குவோம்

**செல்வி சுரேந்திரராசா துர்வினா**
கிளி/முழங்காவில் மகாவித்தியாலயம்

நிலை மாறும் உலகில் தளரா மனம் கொண்ட மனிதர்களை உருவாக்குவதையே இவ்வுலகம் முதற்பணியாகக் கொண்டுள்ளது. நாள் தோறும் மாறிவரும் பண்பாடு, பழக்கவழக்கங்களால் துஷ்பிரயோகம், போதைப்பொருள் பாவனை, சமூக சீர்கேடுகள் அதிகரித்த வண்ணம் காணப்படுகின்றது. மற்றும் சமூகம் மாற்றமடைகின்றது. சமூகம் மாற்றம் பெறுவதால், அதன் வளங்கள் குறைய ஏதுவாகிறது. இறையருளால் கிடைத்த இயற்கையை மாற்றாமல் மாறி வரும் மனித குணங்களை மாற்ற வேண்டும். அறிவியலும் நாகரீகமும் வளர்ந்தாலும், பண்பாடும் பழக்கவழக்கங்களும் என்றும் நிலைத்திருக்கப் பாடுபடுவதே, தேசத்தோடு இயைந்த வாழ்வாகும். சமூகச்சூழல் கெட்டால் வளமான வாழ்வு கேள்விக்குறியாகிவிடும். வளர்ந்து வரும் உலகில் மனிதன் விஞ்ஞானத்துடன் கூடிய வாழ்க்கையை மேற் கொண்டால், அவனது வளர்ச்சிக்கு விஞ்ஞான அறிவு உதவும். இயற்கைச் சூழல் மாசடைகிறது.

சமூக சீர்கேடுகளில் மதுபானம், புகைத்தல், போதைப்பொருள் ஆகிய காரணிகளால் மனிதர்கள் பல மாற்றங்களை எதிர்நோக்கியுள்ளனர். போதைப்பொருட் பாவனையால் இறப்புக்கள், நோய்கள் பல ஏற்படுகின்றன. இதனால் நாட்டின் வளம் குறைவடைகின்றது. நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைகின்றது. மேலும் சமூகப் பிரச்சனைகள் மேலோங்குகிறது. அன்றிருந்த கலை, கலாச்சாரம், இலக்கியப் பண்புகள் மந்நமடைந்துள்ளது. மதுபோதைப் பாவனையால் இன்றைய இளைஞர் சமூகம் பாதிப்படைந் துள்ளது. நாட்டின் வளர்ச்சிக்காகப் பாடுபடும் இளைஞர் சமுதாயத்தின் வாழ்க்கை கேள்விக்குறியாகி உள்ளது. மதுபானம், போதைப்பொருள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைத்தல் என்பவற்றின் பாவனை உடல், உள நலத்தில் பாதிப்பை ஏற்படுத்து வதுடன் பொருளாதார, சமூக சீர்கேடுகளுக்கும் காரணமாக அமைகின்றன. இந்நிலை மாறாது இப்படி செல்லுமாயின் இன்றைய இளைஞர் சமுதாயத் தின் நிலை என்ன? இவர்களது கல்வி இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் போதைப் பொருட் பாவனை. போதைப் பொருட் பாவனையில் விசேடமாக இளைஞர்கள் அதீத ஈடுபாடு காட்டுவதற்கு காரணம் கவர்ச்சி கரமான விளம்பரங்களாகும். விளம்பரங்களினால் எதையும் அறியாத பிஞ்சு உள்ளங்கள் தமது உடல் நலத்தையும், வாழ்க்கையும் பாழாக்குகிறார்கள். சோதனைகள் பல தாங்கி சாதனைகள் பல புரிந்துவரும் இளைஞர்களின் வெற்றிப் பயணம் பாதிக்கின்றது.



வாழ்க்கையே நனவென வாழும் பிஞ்சு உள்ளங்களின் எதிர் காலமே கனவாகி விடுகின்றது. "ஆழம் அறிந்து காலை விடு" எனும் கூற்றிக்கிணங்க எதையும் அறியாத பருவத்தில் ஆராய்ந்து செய்ய மனத் துணிவு இல்லை. ஆனால் தீயவழி யில் செல்ல மட்டும் எங்கிருந்து துணிவு வந்ததோ? இளைஞர்களை இந்நிலையில் இருந்து மீட்டெடுக்க போதைப் பொருட் பாவனையால் ஏற்படும் சமூக சீர்கேடுகள் பற்றி இளைஞர் களுக்கு ஆறிவூட்டல் மற்றும் போதைப் பொருட்களை இளைஞர் களுக்கு விற்பனை செய்வதைத் தடை செய்தல்.

ஒரு குடும்பத்தில் குடும்பத் தலைவன் இது போன்ற போதைப் பொருட் பாவனையில் ஈடுபடுவதன் மூலம் பிள்ளைகளின் கல்வி, எதிர்காலம் பாதிப்படைகின்றது. குடும்பச் சூழல் பாதிப்படைகின்றது. குடும்பத்தில் தங்கி வாழ்பவர்கள் நிலை பாதிப்படைகின்றது. தனது வருமானத்தில் 50% இதற்காகச் செலவு செய்தால் குடும்பம் வறுமை நிலையை அடைய நேரிடும். மேலும் இருதய நோய்கள், உயர்குருதி அமுக்கம் போன்ற நோய்களும் ஏற்படும். கலாசார பாதிப்புக்கள் ஏற்படுகின்றது. நாட்டின் கல்வி மட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கின்றது. வாகன விபத்துக்கள் ஏற்படுகின்றது. மதுபோதையில் வாகனம் செலுத்துவதனால் விபத்துக்களும் உயிர் சேதங்களும் ஏற்படுகின்றது. புகைத்தலால் அருகில் உள்ளவருக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது. 31ம் திகதி மே சர்வதேச புகைத்தல் போதை எதிர்ப்பு தினம் கொண்டாடப்படுகின்றது.



சட்ட விரோதமான பொருட்களுக்கு எதிரான சட்டங்களை உருவாக்கி அதனை வலுவாக நடைமுறைப்படுத்துவதன் ஊடாக போதைப் பொருட்பாவனையைக் கட்டுப்படுத்தமுடியும். மக்களிடையே விழிப்புணர்வுகளை ஏற்படுத்துதல், போதைப் பொருள், புகைத்தல் என்பவற்றின் கவர்ச்சிகரமான விளம்பரத்தைத் தடை செய்தல், சட்ட திட்டங்களை உருவாக்கல் போன்ற செயற்பாடுகளுக்காக மக்களின் கல்வி நிலையை உயர்த்துதல் வேண்டும்.

இன்றைய உலகில் பெண்களுக்கெதிரான வன்முறை நடவடிக்கைகள் இன்னும் அதிகரித்த வண்ணமே காணப்படுகின்றது. பெண்கள் அடிமை இல்லை, பெண்களுக்கெதிராக எந்த வன்முறைகளும் இடம்பெறாது, பெண்கள் சுதந்திரமாக நடமாடலாம். அவர்களுக்கெனவும் தனி உரிமைகள் இவ்வுலகில் காணப்படுகின்றது. பெண்களுக்கென மகளிர் தினம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது ஆகிய காரணிகளால் பெண்களுக்கு சுதந்திரம் கிடைக்கப் பட்டிருக்குமென நம்புகிறார்கள். ஆனால் இது எதுவுமே நடக்கவில்லை. பெண்களுக்கு சுதந்திரமும் கிடைக்கவில்லை.

கடந்த ஒரு வருடங்களுக்கு முன்பும் யாழ்ப்பாணத்தில் வித்தியா எனும் பாடசாலை மாணவி துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகி உள்ளார். இதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டாகும். பஞ்சு போன்ற பிஞ்சு மனதில் உள்ள கனவுகள், ஆசைகள், விருப்பங்கள் எல்லாம் மண்ணோடு மண்ணாகிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் மனிதர் என்ற உருவத்தில் மிருகங்கள் போன்ற உருவத்தில் மனிதர்கள் வாழ்கின்றார்கள். இந்த மனிதர்களுக்கு இந்த நிலை வரக்காரணம் போதைப் பொருள் பாவனை என்று ஆணித்தரமாகக் கூறமுடிகின்றது. தன் தாயைப்போல் எல்லாப் பெண்ணையும் மதிக்கும் மனிதர்கள் இவ்வுலகில் குறைவு. இந்நிலை முற்றுப்பெறும் வரைக்கும் பெண்கள் சுதந்திரமான வாழ்வு வாழமுடியாது. வித்தியாவின் படுகொலைக்கு தீர்வு வரும், வந்தால் இந்நிலை மாறும். அப்போதுதான் ஒழுக்கமான மனிதர்கள் இவ்வுலகில் வாழமுடியும். 8 மார்ச் மாதம் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகின்றது. முதன் முதலாக பெண் விடுதலை பற்றி கவிதை உரைத்த கவிஞர் "பாரதியார்" ஆவார். இவர் பெண்ணை சக்தி வடிவாக கொண்டே கவிதை உரைத்தார். இவர் தனது கவிதையில் பெண்களை வடிவத்தில் வண்ணம் எனவும் பூக்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார். பெண்களை கவிஞர்களே தெய்வம் எனக் குறிப்பிட் டுள்ளனர். எல்லோரும் பெண்களைத் தெய்வமாக வணங்க வேண்டும். சில மனிதர்களின் மனநிலையும் பெண்கள் மீதான துஸ்பிரயோகத்திற்கும் காரண மாகின்றது.

26 யூன் சர்வதேச போதைப் பொருள் எதிர்ப்புத் தினம், போதைப் பொருட் பாவனையைக் குறைப்பதன் மூலம் சமூகத்தில் பல பிரச்சினைகளை கட்டுப்படுத்தமுடியும். சிலருக்கே குடும்பப் பின்னனியாகவும் அமைகின்றது. சமுதாயத்தில் வாழும் பள்ளி மாணவர்கள் மேல் வயதுக் குழுவினருடன் இணைந்து பழகுவதன் மூலம் சிறு பிள்ளைகளின் மனநிலை பாதிப்படைந்து அவர்கள் வளர்ந்து சமுதாயத்தில் ஒழுக்கமற்ற இரக்கமற்ற மனிதர்களாக உருவாகிறார்கள். இது சமூக சீர்கேட்டையும், மரணங்களையும் உண்டு பண்ணுகின்றது. சிறு பிள்ளைகள் வேலைக்கு அமர்த்தப்படுதல். இது அவர்களின் கல்வியறிவைக் குறைக்கின்றது. தாய் தந்தையின் ஆதரவின்றி, பாதுகாப்பின்றி வாழும் பிஞ்சு உள்ளங்களே பின்பு ஈன இரக்கமில்லாத மிருகங் களாக மாறுகின்றனர். இதற்குக் காரணம், பிள்ளைகளுக்கு தாய் தந்தையின் அறிவூட்டல்கள் இல்லை.

ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு சமூகத்தால் அனுமதிக்கப்படா, சட்டத் துக்கு முரணான பாலியல் தொடர்புகள், பாதுகாப்பற்ற பாலியல் உறவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக பாலியல் நோய்கள் ஏற்படவும் தேவையற்ற கருத்தரிப்புக்கள் ஏற்படவும் வாய்ப்புக்கள் பெரும்பாலும் ஏற்பட நேரிடுகின்றன. தேவையற்ற பாலியல் ரீதியான நோய்களும் ஏற்படுகின்றது. அதேபோல் சட்டவிரோத மான கருக்கலைப்புக்கள் காரணமாக வருடந்தோறும் பெரும்பாலான பெண்கள் மரணத்தைத் தழுவுவதுடன் நோய்களுக்கும் உள்ளாகின்றனர்.



"சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப் பீர்" என்றார் பாரதி. அவனது குரல் அவன் வாழ்ந்த காலத்தில் அதிகம் மதிப்புப் பெறவில்லை. ஆனால் காலப்போக்கில் மேலை நாட்டு அறிவியற் கலைகளில் தமிழ் மக்கள் படிப்படியாக ஆர்வம் கொண்டனர். அவற்றில் தேர்ச்சி பெறவும் வழி பிறந்தது. தமிழில் இலக்கியத்தைக் கற்றிடமுடியாது என்று ஆங்கிலம் கற்றோர் கூறிய கருத்துக்கள் பொய்யாயின. அந்நிய ஆட்சியால் ஏற்பட்ட அடிமை மனப் பான்மையும் மாறியது. அறிவியற் கலைகளை நம் அன்னைத் தமிழில் கற்றிட முடியும் என்ற துணிவு பிறந்தது.

இன்று உலகில் அறிவியல் மிக வேகமாக வளர்ச்சி பெற்று வருகிறது. புதிய புதிய கண்டுபிடிப்புக்களுக்கேற்ப அவை தொடர்பான நூல்கள், கட்டுரைகள் பல வெளியாகி வருகின்றன. கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங் களிலும் அறிவியல் பாடங்கள் தமிழில் போதிக்கப்படுகின்றன. தமிழில் இலக்கியங்கள் வளர்ந்த அளவிற்கு அறிவியல் நூல்கள் போதியளவிற்கு உருவாகவில்லை என்று கூறலாம். அறிவியல் சார்ந்த படைப்புக்கள் மென்மேலும் தோன்ற வேண்டும். அறிவியல் சார்ந்த புனைகதைகள் உருவாக வேண்டும். தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் வகையில் தமிழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் சார்ந்த படைப்புக்கள் பெருக வேண்டும். இன்றைய நிலையில் இது மிகமிக அவசியமாகும்.

21ம் நூற்றாண்டில் அறிவியல் மேலும் வளர்ச்சி கண்டுள்ளது. நவீன தமிழிலக்கியப் படைப்புக்கள் போன்று நவீன அறிவியற் படைப்புக் களும் தோன்றி வருகின்றன. தமிழில் வெளிவரும் சஞ்சிகைகள் ஆனந்த விகடன், குமுதம், கல்கி போன்றவை இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். இலக்கியத் தோடு இணைந்து கலைப்படைப்புக்கள் செல்லுமாயின் கட்டாயம் கலைப் படைப்புக்களும் முன்வர வாய்ப்புண்டு.

மனித இனமும் மற்ற உயிரினங்களும் இனி உலகில் வாழவேண்டு மானால் நம் செய்முறைகளை மாற்றிக் கொள்ள வேண்டும். இயற்கை வாழ்வு நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். மனிதர் களாகிய நாமே இதனைச் செய்ய வேண்டும். அப்படியானால் நாம் பிரகாசமானதொரு புதிய உலகைக் காணும் பேற்றை அடைவோம். நாம் வாழும் உலகம் நம் முன் னோர்கள் நமக்காக விட்டுச்சென்ற இயற்கை அன்னையின் கொடையாகும். மனிதர்களாகிய நாம் இவ்வுலகை எமது இளைஞர் சந்ததியினருக்குரியது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். இயற்கை வளங்களை சுறண்டி நாசம் செய்யும் மனிதர்களுக்கு அதனால் ஏற்படும் விளைவுகள் பற்றி அறிவூட்ட வேண்டும். ஒளிமயமான மனிதர்களை உருவாக்க வேண்டும்.

"இயற்கை வளங்களைப் பாதுகாப்பது இலங்கையில் வாழும் மக்கள் அனைவரதும் தலையாய கடமையாகும்" என்றார் முன்னோர்கள். நீர்நிலை களைப் பாதுகாப்பதோடு பெருகி வரும் மக்கள் தொகைப்பிற்கேற்ப நீர் நிலைகளை உருவாக்க வேண்டும். ஆறறிவு படைத்த மனிதர்கள் சிந்தித்துச் செயற்பட்டு அனைத்து வளங்களை உடைய தேசத்தை உருவாக்குவதற்கு முன்னின்று செயற்பட வேண்டும். கடலினுள் மாசுகள் உட்செல்வதைத் தவிர்க்க வேண்டும். அசுத்தமற்ற தேசத்தை உருவாக்க வேண்டும்.

காற்று மாசடைவதை தடுப்பதோடு, மாசடைந்து வரும் மனிதர் களையும் நல்லவர்களாக மாற்ற வேண்டும். இந்த உலகில் பிறந்த முதல் இறக்கும்வரை எவரும் நல்லவர்களாக இருக்கமுடியாது. ஆனால் கெட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களை நல்லவர்களாக்கமுடியும். நல்லவர்களை மென்மேலும் நல்லவர் களாக்க முடியும். அவ்வாறு இருப்பின் அவர்களது வாழ்க்கை தீபமேற்றிய ஒளிமயமான வாழ்வாக அமையும். மனிதர்களும் ஒளிமயமான தேசத்தை நோக்கிப் பயணிக்க முடியும்.

அன்று தொடக்கம் இன்று வரை மொழி, இனம், சாதி, சமயம் ஆகிய வேறுபாடுகள் காணப்படுகின்றது. 20 நூற்றாண்டில் வடிவத்திலும், வண்ணத் திலும், வாசத்திலும் வகை வகையான புதிய கவிதைப்பூக்கள் தமிழில் மலர்ந்தன. இந்த வசந்தத்தைப் பாடும் குயிலாக பாரதியின் குரலே ஒலித்தது. அவனே இந்த வசந்தத்தின் பூவாகவும், அதைப்பாடிய முதல் குயிலாகவும் இருந்தான்.

நம் நாட்டிலே யுத்த நிலைமையால் அழிந்தும் அழியாமல் இருக் கின்ற எமது தமிழ்ச்சின்னங்களுள் செதுக்கற் கலைகள், ஓவியங்கள், சிற்பங்கள் உள்ளடங்கும். தமிழ் பாரம்பரியத்தையும், இலக்கியத்தையும் அழியவிடாது பாதுகாக்க வேண்டும். தமிழன் என்ற உள்ளுணர்வையும், நம் தேசம் என்ற புரிந்துணர்வும் உடையவர்களாக நாம் இருப்பின் அழிந்துவரும் நம் கலைகளைப் பாதுகாக்கமுடியும்.

இன்றைய யுகம் விஞ்ஞான யுகம் எனப்படுகிறது. மனித வாழ்க்கை யோடு விஞ்ஞானம் பிரிக்கபிரியாத வகையில் தொடர்பு கொண்டுள்ளது. சமூக முன்னேற்றத்திற்காக விஞ்ஞானம் இன்று அடித்தளமாக அமைந் துள்ளது. எனவே விஞ்ஞானத்திற்கும் சமூகத்திற்கும் இடையே உள்ள தொடர் பினை ஆற்றல் பயனுடையதாகும். சமூகம் என்பது பல்வேறு சேர்க்கைகளின் பிரதிபலிப்பாகும். பெரும்பாலான சமூக அமைப்புக்கள் இன, மத, மொழி, பண்பாடு, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டே காணப்படுகின்றன. சமூகம் இன்று முன்னேற்றப் பாதையில் விரைந்து செல்வதற்கு விஞ்ஞானம் துணை செய்கிறது.

இயற்கை அன்னை மனிதனை அறிவு வளத்துக்குரிய மூளை யோடும் உணர்ச்சியும் கற்பனையும் ஊற்றெடுக்கும் உள்ளத்தோடும் படைத்துள்ளான். மனிதனின் முழுமையான வாழ்வுக்கு அறிவு முக்கியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வும் வேண்டும். ஒன்றை மட்டும் போற்றி மற்றொன்றைப் புறக் கணிப்பது உகந்ததல்ல. அறிவை மாத்திரம் வளர்த்து உணர்ச்சியைப் புறக் கணிப்பதால் மனிதன் அழகியல் உணர்வற்றவனாக, இயந்திரம் போன்றவனா கின்றான். உணர்ச்சியை மாத்திரம் வளர்த்து அறிவியலை புறக்கணிக்கும் போது மனிதன் நன்மை தீமைகளைப் பகிர்ந்துணரும் பண்பினை இழக் கின்றான்.

அறிவியலை விஞ்ஞானம் என்றும் உணர்ச்சியும் கற்பனையும் கொண்ட படைப்புக்களைக் கலை என்றும் பாகுபாடு செய்வார். இலக்கியம் ஓர் இன்பக் கலையாகும். அது மொழியினைக் கருவியாகக் கொண்டு பிறப்பது. உணர்ச்சியும் கற்பனையும் கூடிய அனுபவ வெளிப்பாட்டின் பிரதிபலிப்பாக அமைவது. அது ஏனைய கலைகளிலும் சிறப்புடையது. இலக்கியத்தின் பயன்கள் மிகப்பல. அவற்றுள் தலையாயது உலக வரலாற்றை மாற்றி யமைக்கும் தன்மை. இன்று அறிவியல் வளர்ச்சியினால் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஆனால் அறிவியல் வளர்ச்சியினால் ஏற்படும் மாற்றங்களை விட மன வளர்ச்சியினால் ஏற்படும் மாற்றங்களே வரலாற்றை மாற்றும் ஆற்றலுடையன. இலக்கியம் படைக்கும் புலவர்கள் ஆற்றலும் செல்வாக்கும் உடையவர்களாக மனித உள்ளங்களை ஆள்கிறார்கள் என்றாவது மிகையல்ல.

உலக மக்களிடையே ஒற்றுமை உணர்வை வளர்ப்பதற்கு இலக் கியங்கள் பேருதவி புரிகின்றன. அறிவியலால் ஏற்பட்ட விழிப்புணர்வு உலக நாடுகளிடையே பூசல்களை உருவாக்கலாம். ஆனால் இலக்கியங்களையோ அவற்றினை ஆக்கித்தந்த பெரும் மக்களையோ எவரும் பகைப்பதில்லை. எனவே இலக்கியமும் அறிவியலும் இணைந்து உலக நாடுகளிடையே போட்டி, பூசல்கள் களையெடுக்க வழி பிறக்காது. இலக்கியங்களை நன்முறை யில் பரப்புவதன் மூலம் உலகப் பொது மனிதவுணர்வு வளரும். அறிவியலும் அதனோடு இணையுமாயின் ஒரே உலகம் என்ற சீரிய பொதுநோக்கு உதயமாகும்.

அறிவியல் நமது தமிழ்மொழியில் தற்போது முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. அறிவியல் துறையில் பட்டம் பெறும் ஆர்வம் பெருகி வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணினி, மருத்துவம், விஞ்ஞானம் சார்ந்த நூல்களைக் கற்போர் தொகை பெருகிக் காணப்படுகிறது. தமிழிலக்கியமும், அறிவியலும் கைகோர்த்து நடைபயில வருவதைக் காணமுடிகிறது. இலக்கியமும் கலையும் நமது இரு கண்கள்போல் காட்சி தருகின்றன. பாரதி கண்ட கனவை நனவாக்க வேண்டும். விந்தைமிகு வேலைக் கலைகள் யாவும் தமிழில் மொழி பெயர்ப்புக்களாகவும், சுய ஆக்கமாகவும் பெருகிட வேண்டும்.

விஞ்ஞானத்தின் வளர்ச்சி என்பது உலகம் வியக்கும் அளவிற்கு வளர்ச்சியடைந்து காணப்படுகின்றது. அறிவியலாளர்கள் சோதனைகள் பல தாங்கி சாதனைகள் பல புரிந்து பல விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களை கண்டுபிடித்துள்ளாரகள். பச்சை மாமிசத்தை இச்சையுடன் தின்றவன் சுட்டுத் தின்பதற்காக தீயைக் கண்டுபிடித்தான். அல்லவா? அன்று ஆரம்பித்தது அவ் விந்தைமிகு வளர்ச்சி இப்படிப் படிப்படியாக சென்றது. இன்று "உலகம் ஒரு கிரகம்" எனும் கூற்று இணைத்தின் செயற்பாட்டால் உண்மையாகிவிட்டது. 29ம் திகதி ஒக்டோபர் உலக இணைத்தள தினம் என்று பிரகடனப்படுத்தி யுள்ளார்கள்.

கல்வி வளர்ச்சி என்பது இன்று விண்தொடும் அளவிற்கு மேலோங்கி நிற்கின்றது. அமெரிக்கா, ரஷ்யா போன்ற பலம்மிக்க வல்லரசு நாடுகள் இன்று கணினியின் மூலமே மாணவர்களுக்கு பாடத்தைக் கற்பிக்கின்றன. அவர் களும் அதை விரும்பி நன்றாகக் கற்கின்றனர். அம் மாணவர்களே எதிர் காலத்தில் சமுதாயத்தில் ஒழுக்கமான, கீழ்ப்படிவான மாணவர்களாகத் திகழப் போகிறார்கள். இன்று இலங்கையிலும் நகர்ப் புறங்களில் கணினியின் மூலமான கல்வி நடைபெறுகின்றது. "சிகரம் ஏறி சரித்திரம் படை" எனும் கூற்று உண்மையாகிவிட்டது.

அன்று நிலாவைப் பார்த்து அதைக்காட்டி அம்மா சோறு ஊட்டியதால் அதனை அடைய வேண்டும் எனும் ஆவலுடன் "நீலாம்ஸ்ரோங்" சந்திரனில் கால் பதித்து விந்தைமிகு சாதனை ஒன்றை நிகழ்த்தினார். அன்று தொடங்கிய அரசு வளர்ச்சி இன்று செவ்வாய் கிரகத்திற்கும் மனிதன் சென்றுவர முடிந்தது. "அச்சம் தாண்டி உச்சம் தொடு" எனும் கூற்றை நிலைநிறுத்தியிருக்கின்றான். இன்றைய விந்தை மிகு உலகில் வாழும் மனிதன் வாழ்க! விஞ்ஞானத்தின் விந்தை வாழ்க! வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் வாழும் பூமியின் அமைப்பை "பஞ்ச பூதம்" என அழைக்கின்றோம். சுவாசம் இல்லாமல் உயிர்கள் உயிர் வாழமுடியாது. ஆனால் வளி இன்று அளவுக்கதிகமாக மாசு அடைந்து வருகின்றது. தொழிற்சாலை புகையாலும், வாகனப் புகையாலும் வளி மாசடைந்து வருகின்றன. இது போதாதென்று சிலர் வாயினாலும் புகை விடுகின்றனர். சில ஒழுக்கமற்ற மனிதர்கள் காட்டை அழிக்கக்கூடாது. ஏனெனில் காடுகள் காற்றை தூய்மைப் படுத்துகின்றன. தூய்மையான காற்றே உயிர்களின் நல்வாழ்வுக்கு சிறந்த துணையாகும்.

"நீர் இன்றி அமையாது உலகு" என்றார் வள்ளுவர். நீர் மனிதர்களுக்கு மட்டுமல்ல, அனைத்து உயிர்களுக்கும் மிகமிக முக்கியமாகும். இலங்கையை ஆண்ட பராக்கிரமபாகு "விண்ணிலிருந்து பொழியும் ஒரு துளி நீரையேனும் விவசாயத்திற்குப் பயன்படாது கடலைச் சென்றடைய விடமாட்டேன்" என்று கூறினார். அவர்கலைப் போல் இன்றைய சமூகத்தில் வாழும் மனிதர்களும் தேசத்திற்கு நன்மை பயக்கும் நல்ல காரியங்களைச் செய்ய முன்வர வேண்டும். இன்று தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மண்ணின் இயற்கைச் சமநிலை சிதைந்து ஒரு நாளில் நில நடுக்கம் கூட ஏற்படலாம். 22ம் திகதி மார்ச் மாதம் சர்வதேச குடிநீர் தினம் என்று பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள்.

நிலம் தான் நமக்குத் தேவையான உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்க உதவுகிறது. மனிதன் தன் பேராசையால் வேதி உரங்களைப் பயன்படுத்தி நிலம் இயல்பு கெட்டது. நுண்ணுயிர்கள், மண்புழுக்கள் அழிந்து போயின. மேலும் விளைநிலங்களில் பெரிய மாட மாளிகைகளை கட்டியதால் விளைநிலங்களை இழந்து நிற்கின்றோம். அத்துடன் பெருகும் குப்பைகளும், நீர்க்கழிவும் எஞ்சியுள்ள நிலத்தையும் ஆறுகளையும் மாசுபடுத்தி உயிர் வாழ்வைக் கேள்விக் குறியாக்கிவிட்டது. இதற்குக் காரணம் மனிதன் அறிவு இருந்தும் அந்தந்த சூழ்நிலைகளில் அறிவு இல்லாத மூடனாக இருக்கின்றான்.

சூரியக் கதிர் வீச்சிலிருந்து உலக உயிர்களைக் காத்து வரும் ஓசோன் படலம் சிதைவடைந்து வருகிறது. இதற்கு யார் காரணம்? நாம் தான் மனிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரிகத்தின் பெயரால் தன் வாழ்க்கைக்குப் பயன்படுத்தும் பல்வேறு சாதனங்கள் வெளியிடும் நச்சு, காற்று மண்டலத்தை மாசுபடுத்தி, மேலே சென்று ஓசோன் படலத்தைச் சிதைக்கின்றது. இவையெல்லாம் போதாதென்று நாம் பல்வேறு பொழுதுபோக்குச் சாதனங்களைப் பயன்படுத்துகிறோம். அவற்றால் ஒலி பெருக்கி மனிதனின் கேட்கும் ஆற்றல் குறைவடைகின்றது. மனிதன் செயற்பாடுகளால் ஓசோன் படை அழிவடைந்துள்ளது. போட்டி, பொறாமை, ஆசை போன்ற காரணிகளால் ஏற்பட்ட பிரதிபலனே இதுவாகும். "தன்வினை தன்னைச் சுடும்" என்பது இங்கு உண்மையாகிவிட்டது. இதற் காகவே 15ம் திகதி யூலை சர்வதேச ஓசோன் தினம் என்று பிரகடனப்படுத்தி யுள்ளார்கள்.

இரவைப் பகல் போல் மாற்றும் ஒளி வெள்ளம் பார்வையைப் பாதிக்கின்றது. இரவில் உணவு தேடும் உயிரினங்கள் ஒளி வெள்ளத்தால் அழிந்து போகின்றன. காடுகளை அழிப்பதனால் வன விலங்குகள் குறைந்து வருகின்றன. யானை முதலான விலங்குகள் மக்கள் வாழும் பகுதிக்குள் உணவு தேடிச் செல்கின்றன. அங்கு சென்று அவைகள் மக்களின் வாழி டங்களை அழித்து சேதம் விளைவிக்கின்றன. அது மட்டுமன்றி உயிர்ச்சேதங் களும் உண்டாகின்றது. இயற்கைச் சமநிலை கெடுவதால், அதை ஈடுசெய்ய மேற்கொள்ளும் அறிவியல் முயற்சிகள் மேலும் சிக்கலையே ஏற்படுத்து கின்றன. மனிதனால்தான் இன்று இந்நிலை தோன்றியுள்ளது. மீண்டும் அதே மனிதர்களால் இந்நிலையை மாற்றி அமைக்கமுடியும். "மனம் கொண்டது தான் மாளிகை" இதனால் வெப்பநிலை அதிகரித்துள்ளது. சீரற்ற காலநிலை தோன்றியுள்ளது. கடலின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. பனிப்பாறைகள் உருகும் நிலை ஏற்பட்டு உள்ளது.

**முடிவுரை**

வாழ்க்கை என்னும் நறுங்கனியின் தீஞ்சுவைச்சாறே இலக்கியக்கலை என்பது முற்றும் பொருத்தமுடையது. உலக மாந்தர் இயல்புகள் பெருங்கடல் போல ஆழமும் அகலமும் உடையன. அவைகளனைத்தையும் அளவிட்டுக் காணுதல் சில வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவுடைய மாந்தருக்கு இயலாததொன்று, ஆனால் பொய்யில் புலமைச் சான்றோர்கள் ஆக்கித் தந்த இலக்கியங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாந்தரியல்பின் ஆழ அகலத்தையும் நன்மை தீமைகளையும் விருப்பு, வெறுப்பின்றி ஆராய்ந்து கூறவல்லன. அன்றியும் பல பல கோணங்களிற் கிளைத்துச் செல்லும் உணர்வோட்டங்களையும் மன எண்ணங்களையும் வாழ்க்கை முறைகளையும், ஆசா பாசங்களையும் நம்பிக்கையையும் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டவல்லன இலக்கியங்கள் ஆகும். சங்க இலக்கிய அகத்துறைப் பாடல்களும் புறத்துறைப் பாடல்களும் இவ்வுண்மை யைத் தெளிவாகவும் ஆழமானதாகவும் நுட்பமாகவும் புலப்படுத்தவல்லன இலக்கியக் கலைகளாகும்.

காலத்தினூடு நிலைத்து நிற்கும் சாதனைகளாகத் திகழ வேண்டும் என்ற இலட்சிய தாகத்தோடு நடத்தப்படுகின்ற இலக்கியமும் கலைகளும் என்றும் தமிழுக்கு பெருமை சேர்க்கக்கூடியவை ஆகும். துஸ்பிரயோகம், போதைப்பொருட் பாவனை என்பவற்றிற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதன் மூலம் பாவனை குறைவடையும் என்பது மனிதரின் எதிர்பார்ப்புக் களாகும். நீர் வளத்தைப் பாதுகாக்க வேண்டும்.

மொழி மனிதன் படைத்த அற்புதங்களில் ஒன்று. அழகைப் போலவும் உணவைப் போலவும் மனிதனுக்கு மொழியும் முக்கியமானதொன்றாகும். உலக வாழ்வின் பன்முகப் பரிமாணங்களைப் புத்தகங்கள் வாயிலாகக் கற்றுணர்வதற்குப் பயன்படுவதன் மூலம் மொழி மனிதனுக்கு உலகச் சாளர மாகிறது. இலக்கியம், தத்துவம் இவற்றின் மூலம் மொழி மனிதனுக்கு கருத்துலக தொடர்பு சாதனமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# க.பொ.த. உயர்தரத்தில் தொழில் நுட்பவியல் பாடத்துறையின் அறிமுகம்

திரு. ஆ. நித்திலவர்ணன்
BSC with Education, BEd, MEd
விரிவுரையாளர், கல்வியற்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இலங்கையின் பொதுக்கல்வியில் தற்போது நடைமுறையிலுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தரக் கலைத் திட்டத்திலுள்ள கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் கலை ஆகிய நான்கு பாடத்துறைகளுக்கு மேலதிகமாக "தொழில்நுட்பவியல்"(Technology) என்னும் பாடத்துறை 2013 ஆம் ஆண்டு ஜூலை 15ஆந்திகதி தொடக்கம் புதிதாக பாடசாலைகளில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. உத்தேச கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர தொழினுட்பத்துறையினது அறிமுகமானது, இலங்கையின் பொதுக் கல்வி முறைமையில் ஏற்பட்ட ஒரு திருப்புமுனையாகுமென தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் டபிள்யு. எம். அபேரத்ன பண்டார அவர்கள் குறிப்பிடுகின்றார். இத்துறையைப் பயிலும் மாணவர்கள் 2015 ஆம் ஆண்டு முதன் முதலாக உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுவார்கள். பின்வருவன தொழில்நுட்ப பாடத்துறையின் நோக்கங்களாக பாடத்திட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

1. நாளாந்த வாழ்விற்குப் பயன்படத்தக்க வகையில் மாணவர்களை தொழினுட்பத் திறன்கள் கொண்டோராக ஆயத்தம் செய்தல்
2. பிரச்சினைகளுக்குத் தொழினுட்ப ரீதியான தீர்வுகளை விருத்தி செய்வதற்கான திறன்களை மேம்படுத்துதல்
3. மேலதிக தொழில் தகைமையை வழங்குதல்.
4. தேசிய தொழிற்துறைத் தகைமைத் தொகுதி (NVQ) சட்டகத்தின் அடிப்படையில் மாணவர்களை அவர்களின் தொழில்சார் கல்வியைத் தொடர இயலுமானவர்களாக்குதல் என்பனவையாகும்.

முதற்கட்டமாக நாடளாவிய ரீதியில் 250 பாடசாலைகளில் தொழில் நுட்ப பாடத்துறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையிலுள்ள அனைத்துத் தேர்தல் தொகுதிகளிலும் குறைந்த பட்சம் ஒரு பாடசாலையிலேனும் இப்பாடத்துறை கற்பிக்கப்படக்கூடியதாக பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. தற்போது இப்பாடத் துறையில் கல்விகற்க விரும்பும் ஏனைய பாடசாலை மாணவர்கள் தமக்கு அருகிலுள்ள பாடசாலையில் இணைந்து தொழில்நுட்ப பாடத்துறையில் பயிலலாமென கல்வியமைச்சு அறிவித்துள்ளது.



காலப்போக்கில் இப்பாடத்துறையைப் போதிக்கும் பாடசாலைகளின் எண்ணிக்கையை படிப்படியாக அதிகரித்து 2016 ஆம் ஆண்டளவில் ஆயிரம் பாடசாலைகளில் தொழில்நுட்ப பாடத்துறையைப் போதிக்க கல்வியமைச்சு திட்டமிட்டுள்ளது. அதாவது ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவு களிலும் குறைந்தபட்சம் மூன்று பாடசாலைகளில் இந்த பாடத்துறை கற்பிக்கப் படக்கூடியதாக பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. பாடசாலைகளின் வகைப்படுத்தலிலும் தொழில்நுட்ப பாடத்துறையைக் கொண்ட பாடசாலைகள் '1 AB super' என்ற விசேட வகைப்படுத்தலின் கீழ் உட்படுமென கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன அவர்கள் தெரிவித் துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உலகளாவிய விருத்தி

தொழினுட்பக் கல்வியை அறிமுகப்படுத்துவதன் முக்கியத்துவத்தை ஐக்கிய நாடுகளின் கல்வி, சமூக மற்றும் பண்பாட்டு அமையம் (UNESCO) மற்றும் சர்வதேச தொழிலாளர் அமையத்தின் (ILO) 2002ஆம் ஆண்டின் விதப்புரை ஆகியன இனங்கண்டுள்ளன.

தற்போது அபிவிருத்தி அடைந்துள்ள ஐரோப்பிய மற்றும் ஆசிய நாடுகளின் வெற்றிக்குக் காரணம் அந்நாடுகளில் தொழிநுட்பக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சித் துறைக்குரிய தொழிநுட்ப பாடத்துறையை பல்கலைக்கழகக் கல்விக்கு ஏற்றவகையில் சமாந்தரமான ஒரு கல்வித்துறையாக அபிவிருத்தி செய்தமையும் அந்நாடுகளிலுள்ள தொழிநுட்பப் பாடத்துறையை அப்பாட சாலைகளில் காணப்பட்ட பாடங்களுடன் மிக முறையான வகையில் கலந்தமையும் ஆகும்.

சிரேஷ்ட இடைநிலைக் கல்வியில் தொழிநுட்பத்துறையை அறிமுகப் படுத்துதல் பல நாடுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆசியப் பிராந்தியத்தில் அபிவிருத்தியடைந்துவரும் மலேசியாவின் அனுபவம் இதனைச் சிறப்பான முறையில் எடுத்துக் காட்டுகிறது.

### இலங்கையில் க.பொ.த உயர்தரத்தில் தொழில்நுட்ப பாடத்துறையின் தேவை

- வருடாந்தம் 23,000 மாணவர்கள் மாத்திரம் பல்கலைக்கழகங்களில் உயர்கல்வியைத் தொடர்வதற்காக தகைமை பெற ஏனைய 340,000 மாணவர்கள் பாடசாலைக் கல்வியை முடித்து தொடர்கல்வி வாய்ப்புக்கள் ஏதுமின்றி பாடசாலைக்கல்வி முறைமையில் இருந்து விலக்கப்படுகின்றார்கள். இவர்களில் ஒரு பகுதியினர்க்கேனும் தொடர்கல்வி மற்றும் தொழில்வாய்ப்புக்கள் வழங்க தொழில்நுட்ப பாடத்துறை அவசியமாகும்.

- இலங்கையில் க.பொ.த(சாதாரண தரத்தில்) எல்லா மாணவர் களுக்கும் அளிக்கப்படும் தொழில்சார் பாடங்களின் தொகுதியானது உலகளாவிய பணிக்கும், உலகளாவிய தொழில்நுட்பத்திற்கும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பப்படியாக இருப்பினும், மேலதிகமாக தொழிநுட்பரீதியாக முனைப்புற்ற கல்விக்கு அதாவது மூன்றாம்நிலைக் கல்வியைக் கற்பதற்கோ, பொருத்தமான தொழில்வாய்ப்பைப் பெற்றுக் கொள் வதற்கோ போதுமான வாய்ப்புக்களை அவர்களுக்கு வழங்க வில்லை.



- தற்போது க.பொ.த. உயர்தர வகுப்புக்களில் அதிக எண்ணிக்கையான மாணவர்கள் கலைத்துறையைத் தெரிவு செய்து கற்பதனால் நாட்டின் தேவைக்கும் உற்பத்திக்கும் இடையில் ஒரு பொருத்தமற்ற தன்மை ஏற்படுகிறது. வருடாந்த பல்கலைக்கழக உள்வாங்கலில் கலைத் துறையின் ஆதிக்கமே அதிகமாகக் காணப்படுகிறது. இத்தகைய நடவடிக்கையானது எமது நாடு எதிர்பார்க்கும் தொழினுட்பம் சார்ந்த தொழில் விருத்திக்குப் பாரிய தடையாக இருப்பது இனங் காணப்பட்டுள்ளதுடன் படிப்படியாக நாட்டின் அபிவிருத்திக்கும் தடையாக மாறுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

- "இலத்திரனியல், சிவில் மற்றும் பொறியியல் தொழில்நுட்பம், விவசாயம், உணவு விஞ்ஞானம், தகவல் தொழல்நுட்பம் போன்ற துறைகளில் பல்கலைக்கழகங்களுக்கான அனுமதி வரையறுக்கப் பட்டதாகும். இத்துறைகளை க.பொ.த உயர்தரத்தில் பயில்வதனூடாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் செயன் முறை அறிவைப் பெறுவதுடன் அவர்கள் சுலபமாக தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்" என மொறட்டுவப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வித்தியஜோதி பேராசிரியர் தயானந்த விஜயசேகர அவர்கள் குறிப்பிடுகின்றார்.

- இளைஞர்களின் வேலையின்மை விகிதத்தைக் குறைப்பதற்காக தொழினுட்பத்தையும் பொருத்தமான மென்திறன்களையும் கொண்ட, சவால்களை எதிர்நோக்கக்கூடிய இளைஞர்கள் உருவாக்கப்பட வேண்டியிருக்கின்றமை.

- எமது பட்டதாரிகளின் மத்தியில் காணப்படும் தேர்ச்சியின்மை அல்லது தேர்ச்சிக் குறைவு தமது தொழிலை சிறப்பாகச் செய்வதற்குத் தடையாக அமைந்துள்ளது.

- தொழிற் சந்தையில் அதிகரித்துவரும் கேள்விக்குப் பொருத்தமான தொழிற்றிறனுள்ள இளைஞர்களை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளமை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொழில்நுட்ப பாடத்துறையின் பாடச்சேர்மானங்கள்**

பிரேரிக்கப்பட்டுள்ள தொழிநுட்பத்துறையானது, உயர்தர வகுப்பில் ஒரு தனியான பிரிவாக, தெளிவான வகையில் அடையாளங் காணப்படும். அது தேவையான பாடநெறிகளுடன் கூடிய பரந்த தொழில்நுட்பக் கற்கைப் பரப்பினை உள்ளடக்கியுள்ளது. கல்வியமைச்சிலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலும், தேசிய கல்வி நிறுவகத்திலும் நடைபெற்ற கலந்துரையாடல்களின் பேறாக, "பொறியியல் தொழிநுட்பவியல்" (Engineering Technology) மற்றும் "உயிரியல் முறைமைகள் தொழிநுட்ப வியல்" (Bio systems Technology) எனும் இரண்டு பரந்த தொழிநுட்பப் பரப்புகள் இனங்காணப்பட்டது. இவை இரண்டிலும் ஏதாவதொரு பாடத்தை மாணவர்கள் தெரிவு செய்யலாம்.

இந்தச் சேர்மானத்தில் இரண்டாவது பாடமான "தொழினுட்பத் திற்கான விஞ்ஞானம்"(Science for Technology) என்பது விஞ்ஞானம். கணிதம் மற்றும் தகவற் தொழிநுட்பம் ஆகியன தொடர்பான அடிப்படை அறிவை வழங்கி, தெரிவுசெய்த தொழிநுட்பப் பாட நெறியைக் கற்க உதவியாக அமையும். இச்சேர்மானத்தின் மூன்றாவது பாடம், ஏற்கனவே க.பொ.த. உயர்தரத்திற்கான பாடங்களின் தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்படும். தொழிநுட்பக் கற்கைத் துறையில் அடங்கும் பாடங்கள் வருமாறு

1. பொறியியற் தொழிநுட்பவியல் / உயிரியல்முறைமைகள் தொழிநுட்பவியல் (ஏதாவதொன்று)
2. தொழிநுட்பவியலிற்கான விஞ்ஞானம்
3. பின்வரும் 10 பாடங்களில் ஒன்று
   - பொருளியல்
   - புவியியல்
   - மனைப் பொருளியல்
   - ஆங்கிலம்
   - தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கை
   - தகவல் மற்றும் தொடர்பாடற் தொழிநுட்பவியல்
   - சித்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வணிகக் கல்வி
- விவசாய விஞ்ஞானம்
- கணக்கியல்

**பிரதான தொழில்நுட்பபாடங்கள் உள்ளடக்கியுள்ள விடயதானங்கள், உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் பொறியியற் தொழிநுட்பவியல்**

தரம் – 12

01. உயிர்முறைமைகள் தொழிநுட்பத்தின் அறிமுகம்
02. நீரியிலும் காலநிலையியலும்
03. மண்ணும் நீரும்
04. அளவையும் மட்டப்படுத்தலும்
05. தாவர இனப்பெருக்கத் தொழிநுட்பம்
06. உணவுப் பாதுகாப்பும் சட்டவரையறைகளும்
07. அறுவடைக்குப் பிந்திய தொழிநுட்பம்
08. உணவுகளைப் பொதியிடலும் பெயர்ச்சுட்டியிடலும்
09. உணவுச் சேர்மானங்கள்
10. அடிப்டை இலத்திரனியல்
11. நீரின் தரம்
12. நீருயர்த்தல்
13. நீர்ப்பாசனத் தொழிநுட்பம்
14. பீடை முகாமைத்துவம்
15. செயற்றிட்டங்கள்

தரம் – 13

16. கால்நடை வளர்ப்பு
17. உணவு நற்காப்புத் தொழிநுட்பம்
18. பண்ணைக் கட்டமைப்புகள்
19. ஆளுகை நிபந்தனைகளின் கீழான பயிர்ச்செய்கை
20. மலர்ச்செய்கையும் தரையலங்கரிப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. பண்ணைப் பொறிமுறைப்படுத்துகை
22. மீன்பிடியும் நீருயிரின வளர்ப்பும்
23. காடுகளும் வன உற்பத்திகளும்
24. தொழில்சார் சுகாதாரமும் பாதுகாப்பும்
25. முயற்சியாண்மை

தரம் 12

1. பொறியியல் தொழிநுட்பத்திற்கான அறிமுகம்
2. அடிப்படை மோட்டார் வாகன தொழிநுட்பம்
3. அடிப்படை மின் தொழிநுட்பம் / வீட்டு மின்சுற்று
4. அடிப்படை கட்டுமான தொழிநுட்பம்
5. அடிப்படை உற்பத்தி தொழிநுட்பம் / பொருத்தும் தொழிநுட்பம்
6. பொறியியல் வரைபுகள்
7. அலகுகளும் அளவீடுகளும்
8. இயக்க மற்றும் வலு ஊடுகடத்தும் மூலங்கள்
9. தொழிநுட்பம் தொடர்பான பாதுகாப்பும் சுகாதாரமும்

தரம் 13

1. மின் இயந்திரங்களும் வலு முறைமைகளும்
2. அடிப்படை இலத்திரனியலும் அவற்றின் பிரயோகமும்
3. வீட்டு நீர் வினியோகமும் சுக நல வசதிகளும்
4. திரவ இயந்திரங்கள் (பம்பி, சுழலி)
5. பொறியியல் தரங்களும் தரக்கட்டுப்பாட்டு முறைமைகளும்
6. அளத்தல்
7. மதிப்பீடும் B.O.Q வை தயாரித்தலும்
8. முயற்சியாண்மையும் முகாமைத்துவமும்

**தொழிநுட்பத்துறையை கற்பதற்கான தகைமை**

இத்தொழினுட்பத்துறைக்கான ஆகக் குறைந்த தகைமைகளாக பின்வருவன அமைந்துள்ளன.

- க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் மற்றும் தாய்மொழி உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மேற்கூறப்பட்டவற்றுள் ஏதாவது மூன்று பாடங்களில் திறைமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

## கணிப்பீடும் மதிப்பீடும்

பொறியியற் தொழிநுட்பவியல் மற்றும் உயிரியல் முறைமைகள் தொழிநுட்பவியல் ஆகிய பாடங்களுக்கு அறிமுறைப் பரீட்சைக்காக 75% புள்ளிகளும், செய்முறைப் பரீட்சைக்காக 25% புள்ளிகளும் வழங்கப்படும். செய்முறைப் பரீட்சையானது தொழிற் பயிற்சி நிறுவனங்களில் அல்லது தொழல்நுட்ப கற்கை அலகுகளில் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

பாடசாலை மட்டக் கணிப்பீடானது பாடசாலைகளிலேயே நடாத்தப படும் எனவும் அதற்கான அறிவுறுத்தல்களும் வழிகாட்டல்களும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் வழங்கப்படும் எனவும் பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோன்று இறுதி மதிப்பீடானது பரீட்சைத் திணைக் களத்தினால் நடாத்தப்படும் எனவும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் மாதிரி வினாத்தாள்கள் பிரசுரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முன்னேற்பாட்டு நடவடிக்கைகள்

தேசிய கல்வி நிறுவகம், கல்வி அமைச்சு, இளைஞர் விவகாரம் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு என்பவற்றுடன் தேசிய கல்வி ஆணைக் குழுவும் இப்பாடத்துறை நடைமுறைப்படுத்தலில் தொடர்ந்து இணைந்து பணியாற்றி வருகின்றன. பாடநூல்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான வழிகாட் டல்கள், கல்வியலாளர்கள், புலமையாளர்கள் மற்றும் ஏனைய வளவாளர் களின் உதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்தொழில்நுட்பப் பாடங்களை பயிற்றுவிப்பதற்காக 300 ஆசிரி யர்கள் ஏற்கனவே பயிற்றுவிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் 700 ஆசிரியர் களுக்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகவும் கல்வியமைச்சு அறிவித் துள்ளது. இதற்கு மேலதிகமாக தொழில்நுட்பக்கல்லூரி விரிவுரையாளர்களை வளவாளர்களாக பயன்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக இவர்களுக்கு மேலதிக வேதனமாக பத்தாயிரம் ரூபா வழங்கவும் இணக்கம் காணடபட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்நுட்பவியல் பாடத்துறை தொடர்பான ஆரம்பக்கட்ட அறிவூட்டல்கள் பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதுடன் பாடநூல்கள், பாடத்திட்டங்கள் மற்றும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் என்பனவும் கல்வி அமைச்சினால் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**தொழில்நுட்பத்துறை மாணவர்களுக்கான உயர்கல்வி வாய்ப்புக்கள்**

இந்தப் பாடப்பிரிவைப் பயிலும் மாணவர்கள் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் உயர் அடைவுகளைப் பெறுவார்களாயின் நிச்சயமாக தேசிய பல்கலைக்கழகங்களில் அனுமதியைப் பெற்றுக் கொள்வார்கள். 2016 ஆம் ஆண்டு பல்கலைக்கழகங்களில் தொழில் நுட்பத்தில் இளமாணிப் பட்டங்களை (Bachelor of Technology – B.Tech) வழங்குவதற்காக இலங்கையிலுள்ள ஒவ்வொரு பல்கலைக்கழகங்களிலுமுள்ள விஞ்ஞானபீடங்கள், விஞ்ஞான தொழில்நுட்ப பீடங்களாக மாற்றியமைக்கப்படும். இவற்றினூடாக நாற்பது வரையிலான புதிய கற்கை நெறிகளை தொழில்நுட்பத்துறை மாணவர்கள் பயில்வதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும்.

இளைஞர் விவகாரம் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு ஒவ்வொரு மாவட்டத்திலும் "பல்கலைக்கழக கல்லூரிகளை (University Colleges) ஆரம்பிப்பதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. இவற்றின் மூலம் தொழிற்றுறைக்குப் பொருத்தமான டிப்ளோமா, உயர் டிப்ளோமா மற்றும் தொழில்நுட்பத்தில் இளமாணிப் பட்டங்களை வழங்கக்கூடியதாக இருக்கும்.

இத்துறை மாணவர்கள் "ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம்" போன்ற தொழில்கற்கை நிறுவனங்களில் இணைந்து டிப்ளோமா மற்றும் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் வாய்ப்புக்களும் வழங்கப்படும். பரீட்சையில் மாணவர்கள் சித்தியடையாவிடினும், அவர்கள் பெற்ற செய்முறை அறிவுக்காக, அவர்களுக்கு தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ் (National Vocational Qualification – NVQ-III) வழங்கப்படும். இது தொழில் பெறுவதற்கான அடிப்படைத் தகைமையாகும் என்பதுடன் தொழில்நுட்பக்கல்லூரிகளில் அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும் இது உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கையில் தொழில்நுட்பக்கல்வியை சிரேஸ்ட இடைநிலை வகுப்பில் வழங்குவதால் ஏற்படும் நன்மைகள்**

- தொழிநுட்பக் கல்வியின் அறிமுகமானது வேலையுலகிற்கும் தொழிநுட்ப உலகிற்கும் அறிமுகத்தைத் தருவதுடன் கல்விப்புலத்தையும் விரிவுபடுத்த உதவுவதாக அமையும்.
- இதன் விளைவானது கற்றல் சாதனங்கள், கருவிகள், உத்திகள் மற்றும் உற்பத்திப் படிமுறைகள், பகிர்வு, முழுமையான முகாமைத்துவம் என்பவற்றை தேடியாய்வதாக அமைவதோடு செயன்முறை அனுபவங்கள் மூலமாகக் கற்றல் செயன்முறைகளைப் பெறுமதிமிக்கதாக்குகிறது.
- இலங்கையின் பொதுக்கல்வியின் ஒரு மைல்கல்லான, தற்போது பிரேரிக்கப்பட்டுள்ள உயர்தர தொழிநுட்பத்துறையை அடையாளங் காணமுடியும். ஏனெனில், இது உயர்தரத்தில் கலைத்துறையைத் தெரிவுசெய்யும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும். அத்துடன் தொழிநுட்பம் மற்றும் விஞ்ஞானத்துறை மாணவர்களின் எண்ணிக்கையை 2016ஆம் ஆண்டளவில் சுமார் 40வீதத்தினால் அதிகரிக்கச் செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**க.பொ.த (உயர்தரம்) பாடத்துறை**

**தற்போது பயிலும் மாணவர் எண்ணிக்கை (சதவீதத்தில்)**

| | தற்போது பயிலும் மாணவர் எண்ணிக்கை (சதவீதத்தில்) | 2016ஆம் ஆண்டில் எதிர்பார்க்கும் மாணவர் எண்ணிக்கை(சதவீதத்தில்) |
|---|---|---|
| கணிதம் மற்றும் விஞ்ஞானத்துறை | 21% | 40% |
| வர்த்தகத்துறை | 27% | 35% |
| கலைத்துறை | 52% | 25% |

- தொழில்நுட்பத்திறன் கொண்ட மாணவர்கள் பட்டதாரிகளாகும் போது, நாட்டின் பொருளாதார மற்றும் சமூகம் சார்ந்த அபிவிருத்திக்கு அவர்களால் ஆக்கத்திறனுடன் வினைத்திறன் மிக்க பங்களிப்பை வழங்க கூடியதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ கோட்பாட்டு அறிவு ரீதியாக மட்டுமன்றி க.பொ.த உயர்தரத்தில் பயிலும் இலங்கை மாணவர்கள் செயன்முறை ரீதியான அறிவை பெற்றுக் கொள்வதில் இத்தொழிநுட்பப் பாடத்துறையின் அறிமுக மானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் காணப்படு கின்றது.



**நடைமுறைப்படுத்தலில் உள்ள சவால்கள்**

◈ தொழில்நுட்பவியல் பாடத்துறை ஆரம்பிக்கப்பட்டுள்ள பாடசாலை களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளமையால், இதனைப் பயில விரும்பும் ஏனைய பாடசாலை மாணவர்கள், அயல் பாட சாலைக்குச் செல்ல இலகுவில் விரும்பமாட்டார்கள். பாடசாலை அதிபர், ஆசிரியர்களும் ஊக்குவிக்கமாட்டார்கள்.

◈ இப்பாடத்துறைக்கான தயாரிப்புக்கள் அவசரமாக மேற்கொண் டமையால், பாட உள்ளடக்கம் மற்றும் வழிகாட்டல் தயாரிப்புக்களின் தரம் தொடர்பாக ஐயப்பாடு எழுகின்றது.

◈ இது தொடர்பான அறிவுறுத்தல்கள், பாடத்திட்டங்கள் மற்றும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் முறையாகப் பாடசாலை களைச் சென்றடையவில்லை.

◈ கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் தொழில்நுட்பவியல் பாடத்துறை தொடர்பான போதிய விழிப்புணர்வு காணப்படவில்லை.

◈ ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் ஆரம்பக்கட்டமாக தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளைவிட, அத்தொகுதியில் வேறு சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகள் பெ[illegible]ானதாக உள்ளன. தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளில் ஆண்பிள்ளைகள் மட்டும் அல்லது பெண்பிள்ளைகள் மட்டும் கல்வி கற்கும் பாடசாலை களாக உள்ளன.

- செய்முறைப்பயிற்சிக்குத் தேவையான தொழில்நுட்ப ஆய்வு கூடங்கள் இன்னும் பாடசாலைகளில் முழுமையாக உருவாக்கப்படவில்லை.
- இப்பாடத்துறையை தெரிவு செய்வது தொடர்பாக மாணவர்கள் மற்றும் பெற்றோரிடத்தில் போதியளவு நேர் மனப்பாங்கு காணப்படவில்லை.
- இது தொடர்பிலான மாகாண மட்டத்திலான, கல்வி வலயமட்டத்திலான மற்றும் பாடசாலை மட்டத்திலான கருத்தரங்குகள் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் போதியளவு நடாத்தப்படவில்லை.



**தொழில்நுட்பவியல் பாடத்துறை தொடர்பாக கட்டுரையாசிரியரின் அவதானிப்புக்கள்**

- க.பொ.த உயர்தரத்தில் கலைத்துறையைப் பயில எண்ணும் மாணவர்களும், கணித விஞ்ஞானத்துறைக்கு தோற்றி சித்தியடையத் தவறும் மாணவர்களும் தொழில்நுட்பவியல் பாடத்துறையைப் பயில்வதைப் பற்றி சிந்தித்து தீர்மானம் எடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இத்துறைப்பாடங்களை தனியொரு ஆசிரியர் மட்டும் கற்பிக்க முடியாது. பாடசாலையிலுள்ள கணிதம், உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல், தகவல் தொழிநுட்பம், விவசாயம் மற்றும் பொருத்த மான ஆளணியினர் இணைந்து ஓர் கூட்டு முயற்சியாகவே இதனை முன்னெடுக்கமுடியும். பாடசாலை அதிபர்கள் இதனைக் கருத்தில் கொண்டு நேரசூசிகளை தயாரிக்க வேண்டும்.
- இத்துறையைப் பயில்வதற்கான அடிப்படைத் தகைமையில், க.பொ.த. சாதாரண தரத்தில் கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களுக்கான திறமைச்சித்தி அவசியமில்லை. ஆனாலும் கட்டுரை ஆசிரியர் தொழில்நுட்பவியல் பாடத்துறை பாடங்களின் விடயதானங்களை பரீட்சித்துப் பார்த்ததில் மேற்படி பாடங்களில் திறமைச்சித்தி பெறாத வர்கள் க.பொ.த உயர்தரத்தில் தொழில்நுட்பவியல் துறையைப் பயில்வது சற்றுக் கடினமானதாக இருக்கும். எனவே இதன்மூலம் க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களுக் கான உயர் அடைவின் முக்கியத்துவம் அதிகரிக்கின்றது.
- க.பொ.த சாதாரண தரத்தில் மாணவர்கள் விவசாயம், தகவல் தொழில்நுட்பம், கடல்வளம் போன்ற பாடங்களைத் தெரிவுசெய்து கற்பது, க.பொ.த உயர்தரத்தில் தொழில்நுட்பத்துறை பாடங்களை கற்பது இலகுவாக அமையும். எனவே இதற்கான வழிகாட்டல்கள் கனிஸ்ட இடைநிலை வகுப்புக்களிலேயே வழங்கப்பட வேண்டும்.
- இப்பாடத்துறையை பயில்வது தொடர்பான மனப்பாங்குகள் மாணவர்கள் மற்றும் பெற்றோரிடமும் ஏற்பட வேண்டும்.
- தொழில்நுட்பவியல் பாடத்துறை தொடர்பான விழிப்பூட்டல்களை யும், ஏனைய வளங்களையும் பாடசாலைகளுக்கு பல்கலைக் கழகங் களும், தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள் என்பன வழங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிக்கிளை உத்தியோகத்தர்கள்



நிற்பவர்கள் , இடமிருந்து வலமாக : சே.ஜெயகாந் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), சி.முரளிநாத் (காணி வெளிக்கள போதனாசிரியர்) ச.அனுஜா (முகாமைத்துவ உதவியாளர்) க.சசிகுமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) , ச.சிவதிலகன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்)

இருப்பவர்கள் இடமிருந்து வலமாக : சி.சூரியதாசன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), க.குகநேசன் (காணி வெளிக்கள போதனாசிரியர்) R.C.அலெக்ராஜ் (உதவி பிரதேச செயலாளர்), சி.ச.கிருஸ்ணேந்திரன் (பிரதேச செயலாளர்) ஜி.லைஜீவ் (குடியேற்ற உத்தியோகத்தர்), ஞா.போல்அன்ரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), சி.சிவாஜினி (குடியேற்ற உத்தியோகத்தர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையின் முன்பள்ளிப் பருவக் கல்வியின் வளர்ச்சிப் போக்குகளும் சவால்களும்

**கலாநிதி ப.மு.நவாஸ்தீன்**
B.A.(Hons), PGDE, MSc in Curriculum & Instructions, PhD in Curriculum & Pedagogy
சிரேஷ்ட விரிவுரையாளர், கல்விப் பீடம்,
இலங்கைத் திறந்த பல்கலைக் கழகம்
நாவல, நுகேகோடை

அறிவில் இடப்படும் முதலீடு சிறந்த ஆதாயங்களை தருகின்றது என்ற பெஞ்ஜமின் பிராங்கிளினின் கூற்றுக்கு ஏற்ப இன்றைய நவீன கால பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு அறிவினைப் பெற்றுக் கொடுப்பதில் அதிக முனைப்புடன் செயற்பட்டு வருவதைக் காண முடிகின்றது. அத்துடன், பிள்ளைகளின் முதல் ஐந்து வருடப் பருவமானது அவர்களின் வளர்ச்சியிலும் விருத்தியிலும் மிக முக்கியமானதாகவும் உள்ளது. இதன் காரணமாக, முறைமையான பாடசாலைக் கல்வியை வழங்க முன்னரே பல்வேறு கற்றல் நடவடிக்கைகளில் தம் பிள்ளைகளை பெற்றோர்கள் ஈடுபடுத்துகின்றனர்.

கைத்தொழில் மயமாக்கல், விரைவான நகரமயமாக்கல், அறிவியல் தொழிநுட்ப வளர்ச்சிகளும் இவற்றின் பேறாக மனித குடும்ப வாழ்க்கையில் ஏற்பட்டு வரும் மாற்றங்களும் பிள்ளைகளை மிகக் குறைந்த வயதிலேயே கல்வி நடவடிக்கைகளுக்குள் ஈடுபடுத்த விரைவுபடுத்துகின்றன. முறையான பாடசாலைக் கல்விக்கு முன்னரான கல்வியூட்டல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை முன்பிள்ளை பராமரிப்பு மற்றும் முன் பிள்ளைப் பருவக் கல்வி என நாம் அழைக்கின்றோம். இலங்கையில் இந்த முன் பிள்ளைப் பருவக் கல்வியின் வளர்ச்சிப்போக்குகள் அவை தொடர்பான சவால்கள் தொடர்பாக இந்தக் கட்டுரையில் எடுத்து நோக்கப்படுகிறது.

## இலங்கைக் கல்வி முறைமை

இலங்கை கல்வி தொடர்பான குறிகாட்டிகளில் தெற்காசிய நாடுகளில் முதன்மை பெறும் நாடாக விளங்குகின்றது. பண்டைக் காலத்தில் இருந்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைச் சமூகங்களில் கல்விக்குக் கொடுக்கப்பட்டு வரும் முக்கியத்துவம், சுகந்திரத்தின் பின்னர் மாறி மாறி வந்த அரசுகள் கல்வி தொடர்பாக நடைமுறைப்படுத்திய கல்விக் கொள்கைகள், நாட்டு மக்களின் தன்னார்வம் போன்றன கல்வி தொடர்பாக உலகில் ஒரு கௌரவமான நிலையில் நாடு வகிக்கின்றது. இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் யாப்பின் 27ஆவது உறுப்புரையின்படி, "நாட்டில் எழுத்தறிவின்மையை இல்லாதாக்கு தல், முழுமையான, சமமான கல்வியை சகலரும் பெறுவதை உறுதிப் படுத்தல்" என்பதே நாட்டின் கல்வியின் இலட்சியமாக உள்ளது. இலங்கையின் கல்வி முறைமை மிகப் பழமையான சட்டமொன்றினால் நிருவகிக்கப்படு கின்றது. அதாவது. 1939ஆம் ஆண்டில் 31ஆம் இலக்க சட்டமே இதுவரை அமுலில் உள்ளது. 2010 இன் பின்னர் புதிய கல்விச் சட்டம் பற்றி பலரால் அதிகம் பிரஸ்தாபிக்கப்பட்டபோதும், அதற்கான ஆவணங்கள் தயாரிக்கப்பட்ட போதும், புதிய கல்விச் சட்டம் இன்னும் கைக்கூடவில்லை எனலாம்.



மேலும், 1997இன் 1வது இலக்க ஒழுங்கின்படி 15 – 14 வயதுப் பிள்ளைகளது கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. எனினும், இந்த வயது 16 வயது வரை அண்மையில் அதிகரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இலங்கையின் கல்வி முறைமையில், கல்வி மொழி மூலம் குறிப்பிடத்தக்க மற்றொரு அம்சமாக உள்ளது. இலங்கையில் உள்ள சகல இனக்குழுமங்களும் கல்வியைப் பெறும் வகையில், இலங்கையின் இரு பிரதான மொழிகளான சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் கல்வியை தொடரும் வாய்ப்பு காணப்படுகின்றது. இலங்கையில் சிங்களவர், தமிழர், சோனகர், பறங்கியர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலாயர் எனப் பல்வேறு இனங்கள் இருந்தபோதிலும் இவர்களின் அதிக மானோர் சிங்களம் அல்லது தமிழை தம் தாய்மொழியாகக் கொண்டவர்கள். இவற்றுக்கு மேலதிகமாக ஆங்கில மொழி மூலமும் கல்வியைப் பெறும் வாய்ப்புக்களும் இல்லாமலில்லை. நாட்டின் பொதுவான கல்விக் கட்டமைப்பு உரு 1 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 1 இன் படி, இலங்கையின் கல்வி முறைமை பின்வருமாறு அமைந்துள்ளது.

### 1. முன்பள்ளிக் கல்வி

இரண்டரை அல்லது மூன்று வயதில் இருந்து ஐந்து வயதுப் பிள்ளைகளுக்கான கல்வி. இது கட்டாயக் கல்விக்குள்ளடங்காது என்பதை மனதிற் கொள்க.

### 2. பொதுக்கல்வி

இது ஐந்து வயதில் இருந்து பதினெட்டு வயது வரையிலான பாடசாலைக் கல்வியைக் குறிக்கின்றது. இதில் தற்போதைய நிலவரங் களின்படி, ஐந்து தொடக்கம் பதினாறு வயது வரையிலான கல்வி கட்டாய மானது. இப்பொழுதுக் கல்வியில் மூன்று பகுதிகள் காணப்படுகின்றன. வயது ஐந்தில் இருந்து ஒன்பது வயது வரையிலான ஆரம்பக் கல்வி, பத்து வயது தொட்டு பதின்மூன்று வயது வரையிலான கனிஸ்ட இடைநிலைக் கல்வி. இதன் பின்னரான இருவருடக் கல்வி மேல் இடைநிலைக்கல்வி என வகுத்து நோக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி

கல்வியின் நகர்வினை உறுதி செய்யும் வகையில், உயர்தரக் கல்விக்குப் பின்னர் பல்கலைக்கழக கல்வியும் அதற்கு நிகரான வாண்மைக் கல்லூரிகளும், பாடசாலைக் கல்வியில் இருந்து இடை விலகுவோரை கருத்திற் கொண்டு தொழில்சார் கல்வி வாய்ப்புக்களும் இலங்கை கல்வி முறைமையில் உறுதி செய்யப்பட்டுள்ளன. இலங்கை கல்வி முறைமையினை சர்வதேச தரங்களுக்கு ஒப்பான வகையில் பேணவும், மாணவர்கள் கல்வி எனும் ஏணியில் பெயர்ச்சி அடை ந்து செல்லக்கூடிய வகையில் இலங்கை தர மாதிரி சட்டகம் (SLQF) ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

### இலங்கையில் முன் - பிள்ளைப்பருவக் கல்வி

இலங்கையில் முன்–பிள்ளைப்பருவமானது பிள்ளையின் முதல் ஐந்து வயது வரையுள்ள காலப்பகுதியை குறிப்பதாக வரைவிலக்கணம் செய்யப்படுகின்றது. இப்பருவ வயதுப் பிரிவினரை இலக்காகக் கொண்டு பல்வேறு பெயர்களில் முன் பிள்ளைப்பருவ பராமரிப்பும் விருத்தியும் தொடர்பான பல்வேறு நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன. முன்–பிள்ளைப் பருவ விருத்தி நிலையங்கள், முன்–பிள்ளைப் பாடசாலைகள், மொண்டிசூரிகள், தினசரிக்காப்பு நிலையங்கள், கிரேச்சார்ஸ் எனப்படும் பிள்ளைப் பராமரிப்பு நிலையங்கள் என்பன அவற்றுள் சிலவாகும்.

அரசாங்கத்தின் நேரடி முகவர்களான உள்ளூராட்சி சபைகள், தனியார் தொண்டு நிறுவனங்கள், சமயத்தாபனங்கள் மட்டுமன்றி, இலாபத்தை நோக்காகக் கொண்ட தனியார் குழுக்களும் இக்கல்வி மற்றும் பராமரிப்பில் கரிசனைக் காட்டி வருகின்றனர். இலங்கையில் 1990களுக்கு முன் இத்தகைய முன்பிள்ளைப் பருவ நிகழ்ச்சித் திட்டங்கள் பரவலாகக் காணப்பட்டபோதிலும், 1997இல் அறிமுகம் செய்யப்பட்ட கல்விச் சீர்திருத்தங் களின் பின்னர் இதில் ஒரு துரித விருத்தி ஏற்பட்டதைக் காணலாம். 1997 ஆம் ஆண்டின் கல்விச் சீர்திருத்தங்களின் பின்னர், அரசாங்கம் முன்பிள்ளைப் பருவ நிகழ்ச்சிகள் தொடர்பாக பின்வரும் முக்கிய செயற்பணிகளை முன்னெடுத்து:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சிறுவர் செயலகத்தையும், கல்வி அமைச்சின் முறைசார் கல்விப் பிரிவினையும், முன்பிள்ளைப் பருவ நிகழ்ச்சித் திட்டங்களை முறையாக திட்டமிட்டு அமுலாக்கும் வகையில் மேலும் வலுப்படுத்தல்.
2. தாய்மார்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகம் செய்தல். இதன் மூலம் பிள்ளைகள் தொடர்பாக களத்தில் பணியாற்றும் பல்வேறு நபர்கள் மற்றும் பொது மக்களிடம் பிள்ளைகளின் முன் பிள்ளைப் பருவம் தொடர்பான பரந்த விழிப்புணர்வினை ஏற்படுத்தல்.
3. பிள்ளை பராமரிப்பை வழங்குனர்கள் மற்றும் தாய்மார்களுக்கு முன் பிள்ளைப் பருவம் தொடர்பான பயிற்சிகளை வழங்குதல்.
4. பிள்ளைகள் கல்வியில் அதிகம் பங்குபற்றுவதை இலக்காகக் கொண்டு அதிகமா முன் பாடசாலைகளை அமைத்தல்.
5. முன் பள்ளிகளுக்கான பொதுவான சட்ட ஏற்பாடுகளை ஒழுங்கமைத்தல்.
6. முன்பள்ளிகளுக்கான பொதுவான கலைத்திட்ட வழிகாட்டல்களை தயாரித்தல்.
7. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் முன் பிள்ளைப் பருவ துறையொன்றை உருவாக்குதல். அத்துடன் சிறுவர் ஆய்வு நிலையத்தையும் நிறுவுதல். இதன் பயனாக இலங்கை திறந்த பல்கலைக்கழக கல்விப் பீடத்தில் முன் பிள்ளைப் பருவம் மற்றும் ஆரம்பக் கல்வித்துறையும் பிள்ளை ஆய்வு மையமும் நிறுவப்பட்டுள்ளன. அண்மையில் தேசிய கல்வி நிருவகத்திலும் முன் பிள்ளைப்பருவம் மற்றும் ஆரம்பக் கல்வித் துறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கண்ட செயற்பணிகளின் மூலம் ஐந்து வயதுகுட்பட்ட பிள்ளைகளின் போசணை மட்டம், அவர்களின் முன் பள்ளி களுக்கான பங்குபற்றல் என்பவற்றை அதிகரித்தல், முன் பிள்ளைப்பருவப் பராமரிப்பும் விருத்தியும் தொடர்பான வேலைத்திட்டங்களின் தரத்தை மேம்படுத்துவதன் ஊடாக முறைசார் கல்வியின் தரத்தைப் பேண வழிசெய்தல் போன்ற குறிக்கோள் களை அடைய எதிர்பார்க்கப்பட்டது. இவற்றுக்குப் புறம்பாக, விசேட தேவை உடைய பிள்ளைகளின் தேவைகளைக் கருத்திற்கொண்டு விசேட தேவைக் கல்விக்கான துறையொன்று 2005 இலிருந்து இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன், விசேட தேவைப் பிள்ளைகளுக்கான கற்றல் நிலையமொன்றை நிறுவவும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. மேலும், இளஞ் சிறார்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும் ஆரம்பிக்கப்பட்டு பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

**முன் பிள்ளைப்பருவ பராமரிப்பும் கல்வியும் தொடர்பான தேசியக் கொள்கை**

முன்பிருந்த பெண்கள் வலுவூட்டல் மற்றும் சமூக நலனோம்பல் அமைச்சு 2004 இல் முன் பிள்ளைப்பருவ பராமரிப்பும் கல்வியும் தொடர்பான தேசியக் கொள்கையினை உருவாக்கியிருந்தது. இதனை தற்போதுள்ள சிறுவர் விருத்தி மற்றும் மகளிர் வலுப்படுத்தல் அமைச்சு சிறுவர் செயலகத்தின் ஊடாக செயற்படுத்தி வருகின்றது. தேசிய கொள்கையின் நோக்கங்கள் வருமாறு:

* போதுமான சுகாதாரம் மற்றும் போசாக்கு சேவைகளை பெறுவதனை உறுதிப்படுத்துவதன் மூலம் ஒவ்வொரு பிள்ளையினதும் வாழ்வினை சிறப்பாக ஆரம்பிப்பதற்கு உதவியளித்தல்.
* சுகாதாரம், போசாக்கு, உள சமூக ஊக்கம், பாதுகாப்பான குடிநீர், சுத்தம், கழிவகற்றல் சேவைகளை ஒருங்கே கொண்டு வரும் ஒன்றிணைந்த அணுகுமுறையினை மேம்படுத்தல்.
* வீட்டை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்கள், பிள்ளை விருத்தி நிலையங்கள், முன் பிள்ளைப் பருவ பராமரிப்பு மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தி வேலைத்திட்டங்களின் விருத்தி மற்றும் அமுலாக்கம் என்பவற்றை ஒழுங்குபடுத்துவதற்கான வழிகாட்டல்களையும் நியமங்களையும் உருவாக்குதல்.

* முன் பிள்ளைப்பருவ பராமரிப்பு மற்றும் விருத்தி தொடர்பாக ஈடுபடும் அனைத்து தரப்பினரதும் பொறுப்புக்கள், வகிபங்குகளை தெளிவுபடுத்தல்.
* முன்பிள்ளைப் பருவ பராமரிப்பு மற்றும் விருத்தி தொடர்பாக ஈடுபடும் அரச, அரச சார்பற்ற, தனியார் என அனைத்து தரப்பினர்களுக்கு இடையில் பரஸ்பர தொடர்புகளை ஏற்படுத்தல்.
* முன்பிள்ளைப் பருவ பராமரிப்பு மற்றும் விருத்தியினை வழங்கும் தரப்பினர்களினால் வழங்கப்படும் சேவைகளை ஒழுங்குபடுத்தி ஒருங்கிணைத்தல். இதன் மூலம் சகலரும் பயனடையக்கூடிய வகையில் முன்பிள்ளைப்பருவ பராமரிப்பு மற்றும் விருத்தி சேவையினை ஆக்குதல்.
* முன்பிள்ளைப்பருவ பராமரிப்பு மற்றும் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களிற்காக அதிக நிதி வளங்களை ஒதுக்குதல்.
* முன்பிள்ளைப்பருவ விருத்தியில் பெற்றோர், பாதுகாவலர்கள், சமூக அங்கத்தவர்களின் வகிபங்குகளை மேம்படுத்தல்.
* தமது பிள்ளைகளின் விருத்திக்கு உதவக்கூடிய வகையில் பெற்றோர், பாதுகாவலர் மற்றும் சமுதாயத்தவர்களது இயலளவை அதிகரித்தல்.

இத்தேசிய கொள்கையினை தேசிய ரீதியில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதனை உறுதி செய்யும் வகையில், அரச அமைப்புகள், அரசசார்பற்ற அமைப்புகள், துறைசார் நிபுணர்கள், மாகாண இணைப்பாக்க சபைகள், மாவட்ட இணைப்பாக்க சபைகள், பிறதேசிய இணைப்பாக்கம் மற்றும் கிராமிய சபைகள் போன்றவற்றை உள்ளடக்கிய தேசிய இணைப்பாக்க குழுவும் உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் முன் பாடசாலைகளின் முகாமைத்துவத்தை மேற்பார்வை செய்யும் வகையில் மாகாணசபைகளுக்கு தேவையான அதிகாரத்தை அரசியல் யாப்பின் 13வது இணைப்பின் 154G(1) உறுப்புரை வழங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பேறாக, முன் பாடசாலைகளில் தரமான சேவைகளை வழங்குவதை உறுதிப்படுத்தும் வகையில் முன்பள்ளிக் கல்வி தொடர்பாக வடமத்திய, மேல், வட மேல் மாகாணங்கள் தமது சொந்த நிலைப்பாடுகளை வெளியிட்டு நடைமுறைப்படுத்துகின்றன. முன்பிள்ளைப்பருவ பராமரிப்பு மற்றும் கல்வி நிலையங்களுக்கான ஆகக் குறைந்த நியமங்கள், அவற்றை அளிக்கும் வழங்குனர்களது ஆகக்குறைந்த தகைமைகள் (முன் பாடசாலை ஆசிரியர்கள்), சேவை நிலையங்களை பதிவு செய்தல் என்பனவற்றில் மாகாண மட்டத்தில் ஒழுங்குவிதிகள் ஏற்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப் படுகின்றன. எனினும் மத்திய அரசின் கொள்கைகளின் அனேக விடயங் களிற்கும் மாகாண மட்ட கொள்கைகளுக்குமிடையில் அதிக வேறுபாடுகள் இல்லை எனலாம்.



**முன் பிள்ளைப் பராமரிப்பு மற்றும் கல்வி தொடர்பான பயிற்சிகளும் வாய்ப்புக்களும்**

தரமான முறைசார் கல்வியை கட்டியெழுப்ப வேண்டுமாயின் தரமான முன் பிள்ளைப் பராமரிப்பு மற்றும் கல்வியுடன் தொடர்பானவர் களுக்கு அளிக்கப்படல் வேண்டுமாகின்றது. இலங்கையில் முன்பள்ளி ஆசிரியர்கள், பிள்ளை விருத்தி உத்தியோகத்தர்கள், போதனாசிரியர்கள், சிரேஷ்டநிலைய ஊழியர்கள் என பல தரப்பட்ட ஆளணியினர் இத்துறை யுடன் தொடர்புறுகின்றனர். இவர்களுக்கான பயிற்சி, உயர்கல்வியைப் பெறு வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்துவதன் மூலம் தரமான முன் பிள்ளைப் பராமரிப்பு மற்றும் கல்வியை உருவாக்கமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்துடன், இச்சேவையில் ஈடுபடுவோர் கண்ணியமான ஊதியத்தைப் பெறவும் முடியுமாகின்றது. இந்நோக்கில், இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் 1980களில் இருந்து முன்பள்ளிக் கல்வியில் பட்டப்பின் சான்றிதழினையும், வழங்கி வந்ததுடன் 2006 இலிருந்து ஆரம்பக் கல்வி டிப்ளோமா கற்கை (நாட்டின் 15 பிராந்திய மற்றும் கற்கை நிலையங்கள் ஊடாக), ஆரம்பக் கல்வி தொடர்பான உயர் சான்றிதழ் கற்கை (நாட்டின் நான்கு நிலையங்களில்), முன் பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக் கல்வி தொடர்பான டிப்ளோமா சான்றிதழ் கற்கை (நாட்டின் நான்கு பிராந்திய நிலையங்களில்) ஆகியவற்றை வழங்கி வருகின்றது. தேசிய கல்வி நிறுவகமும் 2007 / 2008களில் இருந்து முன்பள்ளி கல்வி தொடர்பான சான்றிதழ் கற்கையினை வழங்கி வருகின்றது அண்மைக் காலங்களில் ஏனைய சில பல்லைக்கழகங்களிலும் இது தொடர்பான கற்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. இவை தவிர, தேசிய மற்றும் பிராந்திய மட்டங்களில், அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களும், வேறு பல தனியார் கல்வி நிலையங்களும் இது தொடர்பான குறுங் கால கற்கைகளை வழங்கி வருவதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்பிள்ளைப் பராமரிப்பு மற்றும் கல்வி தொடர்பாக எதிர்நோக்கும் சவால்கள்

பிள்ளைகளின் முதல் ஐந்து வயதுப் பருவம் முக்கியமானது என்ற வகையில், அரசு பல்வேறு நலப்பணிளை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி வருகின்றபோதிலும் இன்னமும் முன்பிள்ளைப் பராமரிப்பு மற்றும் கல்வி தொடர்பாக பல்வேறு சவால்கள் எதிர்நோக்கப்படுகின்றன. முன்பிள்ளைப் பருவ பராமரிப்பும் கல்வி தொடர்பாக ஈடுபடும் நிறுவனங்கள், முன்பள்ளிகள், ஆசிரியர்கள் தொடர்பான முழுமையான துல்லியமான புள்ளி விபரம் இன்மை, போதுமான (குறைந்து ஒரு வருட பயிற்சி நெறிகளை) பயிற்சிகளை பெறாத ஆசிரியர்கள் இலாப நோக்கில் தரத்தினை கருத்திற் கொள்ளாமல் வழங்கப்படல், முன்பள்ளிக் கல்வியில் இன்னமும் மலையக தோட்ட மக்களின் பிள்ளைகள் குறைவாகப் பங்குபற்றல், பொதுவான கலைத்திட்டமின்மை என்று சவால்களை பட்டியலிட்டுக் கூறலாம்.

## முடிவுரை

பிள்ளைகளின் முதல் 5 வருட பருவமானது அவர்களினதும் நாட்டினதும் சுவீட்சமான எதிர்காலத்திற்கு முக்கியமானதொன்றாக உள்ளது. இப்பிள்ளைகளின் பராமரிப்பு மற்றும் முன்பள்ளிக் கல்வி தொடர்பாக மத்திய மற்றும் மாகாண அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன. இவற்றுள் முன்பள்ளிக் கல்வி தொடர்பாக ஈடுபடும் ஆளணியினர் போதுமான தரமான பயிற்சிகளைப் பெற்று தேவையான தகைமைகளைக் கொண்டிருத்தல் அவசியமாகின்றது. இது தொடர்பான பயிற்சிகளைப் பெறும்போது அவற்றின் தரம் அறிந்து அவற்றைப் பெறுவது முக்கியமாக உள்ளது. தரமான பயிற்சி துறைசார் நிபுணத்துவத்தையும் அனுபவத்தையும் தருவதுடன் அதன் மூலம் பயன்பெறும் இளம்பிள்ளைகளும் தரமான முறைசார் கல்வி ஒன்றிற்குள் செல்ல வழி ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புற்றுநோய்ச் சிகிச்சைக்குரிய நனோ தொழில்நுட்பம்

(Cancer treatment using Nano Technology)

திரு. J.N. ரவிச்சந்திரன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், பூநகரி.

இன்று உலகில் சவாலாக விளங்கும் உயிர்கொல்லி நோய்களுள் புற்றுநோயும் ஒன்றாகும். புற்றுநோய் சிகிச்சைக்கான மருத்துவ ஆராய்ச்சியில் விஞ்ஞான உலகம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இதன் ஒரு பெறுபேறாக புற்று நோய்ச் சிகிச்சைக்கு நனோ தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவதில் விஞ்ஞானிகள் வெற்றி கண்டுள்ளனர். முதலில் நனோ தொழில்நுட்பம் (Nano Technology) குறித்து சிறிய விளக்கத்தை அறிந்து கொள்வது நல்லது.



நனோ என்பது மிகச்சிறிய ஒரு அளவு. அதாவது சாதாரணமாக கண்களால் பார்க்கமுடியாததாகவும், அதிசக்தி வாய்ந்த நுணுக்குக் காட்டி மூலமே இதனைப் பார்க்கமுடியும். ஒரு மில்லி மீற்றரின் ஆயிரத்தில் ஒரு பகுதியே நனோ மீற்றராகும். அதாவது ஒரு மில்லி மீற்றரை ஆயிரம் பகுதிகளாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தால் அதன் ஒரு பகுதிதான் நனோ மீற்றர் ($1 \times 10^{-6}$mm) இப்போது நனோ மீற்றர் எவ்வளவு சிறியது என்பது உங்களால் புரிந்து கொள்ளக்கூடிய தாக இருக்கும். இவ்வாறு மிகச்சிறிய அளவுகளில் காணப்படும் மருந்து அணுக்களை உடலில் செலுத்தி புற்றுநோய்க்கு காரணமான அணுக்களை அழிப்பது பற்றிய ஆராய்ச்சிகளில் உலக மருத்துவ நிபுணர்கள் ஈடுபட்டு வருகின்றார்கள்.



புற்று நோய்க்கு அளிக்கப்படும் முறைகளில் பிரதானமானது கீமோதிரபி (Chemotherapy) ஆகும். இந்த சிகிச்சை முறையின்போது புற்றுநோய்க்கு காரணமான அணுக்களை அழிக்கும். மருந்துகளை ஊசி மூலம் இரத்தத்தில் தொடர்ந்து செலுத்துவார்கள். இச்சிகிச்சை முறையில் அதிக அளவில் மருந்துகள் செலுத்தப்படுவது உண்டு. இதனால் சிலருக்கு மருந்தின் வீரியம் காரணமாக பக்க விளைவுகள் ஏற்படலாம். ஆனால் இவ்வாறான சிக்கல்கள் எதுவுமில்லாமல் புற்றுநோய்க்குரிய அணுக்களை மட்டும் தேடிக் கண்டறிந்து அழிக்கும் வகையில் நனோ தொழில்நுட்ப மருத்துவம் செயற்படுகின்றது.

இது தொடர்பான ஆய்வுகளில் அமெரிக்காவில் உள்ள பிண்ட் (PIND - Pittsburgh Institute for Neurodegenerative Diseases) என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் நனோ தொழில்நுட்ப விஞ்ஞானிகள் ஈடுபட்டனர். கீமோ திரபியின்போது செலுத்தப்படும் மருந்து குறைந்த அளவில் இருக்க வேண்டும். அந்த மருந்தும் சில மணி நேரங்களாவது இரத்தத்தில் சுற்றி வந்து புற்றுநோய்க்குரிய அணுக்களை மட்டுமே அழிக்க வேண்டும். உடலில் உள்ள மற்ற நல்ல செல்கள் (Cells) அணுக்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படக்கூடாது. இதுதான் அவர்களின் ஆய்வின் நோக்கம். இந்த ஆய்வில் எலிகளைப் பயன்படுத்தி சோதனைகளை மேற்கொண்டனர். இதன் அடிப்படையில் புற்று நோய் ஏற்பட்ட அணுக்களை மட்டும் தாக்கி அழிக்கும் திறன் கொண்ட புரதம் தாங்கிய நனோ துகள்களை புற்றுநோய் மருந்துடன் இரத்தத்தில் பல மணி நேரம் தங்கி இருந்து சுற்றி வந்து புற்றுநோய் ஏற்பட்ட அணுக்களை மட்டும் படிப்படியாக அழித்தது. அத்தோடு இதனால் எந்த பக்க விளைவுகளும் ஏற்படவில்லை என்று எலிகள்மீது நடத்திய முதல்கட்ட ஆய்வின் மூலம் நிருபித்து உள்ளனர்.

அதெல்லாம் சரி இந்த மருத்துவமுறை எப்படி சாத்தியமானது? முதலில் இந்த மருத்துவ முறையில் பயன்படும் நனோ துகள்கள் எப்படித் தயாரிக்கப்பட்டது என அறிந்து கொள்வோம். இயற்கை முறையில் உக்கக்கூடிய பிளாஸ்டிக்கின் இரசாயனப் பெயர் PLA & Poly actic acid மற்றும் PLAGA & Poly acticcogly colic acid என்பதாகும். இது உட்புற வலைப்பகுதியாகும். இதில்தான் புற்றுநோய் அணுவை அழிக்கும் மருந்து வைக்கப்பட்டு இருக்கும். இதையடுத்து வெளிப்புற வலையை பொலி எதலீன் கிளைகொல் (Polyethylene glycol) என்னும் இரசாயனப் பொருளால் தயாரித்தனர். இந்த பொலி எத்லீன் கிளைகொல் நீரின் இரசாயனப் பண்புகளைக் கொண்டது.

பொதுவாக நமது உடலுக்கு அந்நியமான நனோ துகள்கள் உள்ளிட்ட பொருட்கள் செலுத்தும்போது அவற்றைத் தாக்கி அமுக்க குருதி வெண் துணிக்கைகள் மற்றும் புரதங்களுடன் கூடிய ஒரு நோய் எதிர்ப்பு படை உடல் முழுவதும் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருக்கும். அதில் இருந்து தப்பிக்கும் வகையில் நனோ துகள்களை உருவாக்குவதுதான் விஞ்ஞானிகளுக்கு சவாலாக இருந்தது. இந்தச் சவால்களைத் தீர்க்கவே மேலே குறிப்பிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரசாயனவியல் கூட்டுப் பதார்த்தங்களைக் கொண்டு உட்புற மற்றும் வெளிப் புற வலைகளை அதாவது புற்று நோய் மருந்தை சுமந்து செல்லும் நனோ துகள்களைத் தயாரித்தனர். இரு வகையான (PLA, PLGA) பிளாஸ்டிக், வெளிப்புற படிமத்திலிருந்து பொலி எத்லீன் கிளைகோல் மற்றும் புரத இழைகள் ஆகிய மூன்று இரசாயனப் பொருட்களையும் நிர்ணயிக்கப்பட்ட அளவுகள் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட நிலைகளில் ஒன்றாகச் சேர்த்து பிரத்தியேக வடிவமுள்ள ஒரு நனோ துகள் தயார் செய்யப்பட்டது. இவ்வாறு தயாரிக்கப்பட்ட நனோ துகள்களைத்தான் இரத்தத்தில் செலுத்தி ஆய்வு நடத்தினார்கள். இந்த ஆய்வுக்காக முதலில் எலிகள் உடலில் புற்று நோய் அணுக்களைச் செலுத்தி அந்நோய் பாதிப்பை ஏற்படுத்தினார்கள். பின்னர் நனோ துகள்கள் மூலம் அந்த மருந்தை எலிகளுக்கு செலுத்தினார்கள்.



இந்த மருந்துகள் 12 மணி நேரம் இரத்தத்தில் தங்கி இருந்து புற்றுநோய் அணுக்களை அழித்து மேலும் அந்த நனோ துகளில் உள்ள மருந்து தீர்ந்ததும் அவை தானாகவே உடலில் இரத்தத்தை சுத்தப்படுத்தும் பணி நடக்கும்போது சிறுநீர் வழியாக உடலில் இருந்து வெளியேறி விடுகிறது. இந்த ஆய்வின் அடுத்த கட்டமாக இந்த நனோ துகள்களைப் பயன்படுத்தி மனிதர்களுக்கு சிகிச்சை அளிக்க முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிக்கள உத்தியோகத்தர்கள்

நிற்பவர்கள் இடமிருந்து வலம் :- திருமதி கிரிஜா பத்மராஜா, ச.கோகுலன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), செ.சுதர்சன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), சிவகிஸ்ணன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), அ.அ.வினிஸ்ரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), கோகுலரதன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), ச.கலைறஞ்சன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), கி.ரவிக்குமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), த.யசோதரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), கோ.நிமலதாசன் (தொழில்நுட்ப உதவியாளர்),இ.நிமல்ராஜ் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திமதி ச.சர்மிலா (அபிவிருத்தி உத்தியோகத்தர்)

இருப்பவர்கள் இடமிருந்து வலம் :- ம.கவிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), சு.அமுதசுரபி (அபிவிருத்தி உத்தியோகத்தர்), க.சிவகுமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), ஆர்.சி.அமல்ராஜ் (உதவிப் பிரதேச செயலர்), சி.ச.கிருஸ்ணேந்திரன் (பிரதேச செயலர்), க.மோகனராசா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), தி.சிவறஞ்சினி (அபிவிருத்தி உத்தியோகத்தர்), பா.ஜெகதா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), ம.ஜெயப்பிரதா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), ப.கிரியா (அபிவிருத்தி உத்தியோகத்தர்),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழிலக்கிய வரலாற்றில் "சங்கம்" பற்றிய செய்திகளும் அவற்றின் உண்மைத் தன்மையும்

**திருமதி தமிழ்ப்பிரியா பிறேமச்சந்திரன்**
B.A,Dip.in.Edu. M.A. (Tamil)

உலகில் செம்மொழிகளுள் ஒன்றாக விளங்கும் நம் தமிழ்மொழி பண்டைக் காலந்தொட்டு வளர்ச்சியுற்று வருகின்றது. முன்னொரு காலத்திலே தமிழ் வழங்கிய பல நாடுகள் குமரிமுனைக்குத் தெற்கே பல காததூரம் பரந்து கிடந்தன. காலத்திற்கு காலம் ஏற்பட்ட கடல்கோள்கள் காரணமாக அவை யாவும் அழிந்து போயின. வடக்கே வேற்கடத்தையும் தெற்கே குமரிமுனை யையும் எல்லையாகக் கொண்டு விளங்கிய நிலப்பரப்பே சங்க காலத்திலிருந்த தமிழ்நாடு.

தமிழிலக்கிய வரலாற்றிலே கி.பி. ஒன்று தொடக்கம் மூன்று வரையான நூற்றாண்டுகளைக் கொண்ட காலப்பகுதியை சங்ககாலம் என இலக்கிய ஆய்வாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். சங்கம் எனும் அமைப்புத் தோன்றி தமிழ் வளர்ச்சிக்கு காத்திரமான பங்களிப்பை நல்கியுள்ளதாலேயே இதனை சங்க காலம் எனப் பாகுபடுத்தியுள்ளனர் என்று கூறலாம்.

இருந்தபோதும் இக்கருத்தை சமகாலத்தில் ஏற்றுக் கொள்பவர்கள் இருக்கின்றபோதும் நிராகப்பவர்களும் உள்ளனர் எனலாம். எது எவ்வாறாக இருந்தபோதும் அகப் புறச் சான்றுகளினூடாக ஆராய்ந்து தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்கம் என்ற அமைப்பு இருந்துள்ளமையையும் அது எவ்வாறு தமிழை வளர்த்து வந்துள்ளது என்பதையும் நோக்குவதே ஆய்வு.

தமிழ் மக்கள் பன்னொடுங் காலங்கட்கு முன்பே "தமிழ்ச்சங்கம்" கண்டு சீரும் சிறப்பும் மலிய நடத்தி, அதன் பயனாக உலகத்துக்கே நனி நாகரிகம் நல்கி உயர்ந்தனர் எனவும் அச்சங்கங்களில் வேந்தரும், புலவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றுமையின்றி வீற்றிருந்து செந்தமிழ்த் தொண்டாற்றினர் எனவும் அறிய முடிகின்றன.

சங்க இலக்கியங்களையும் சங்க காலத்திற்குப் பிற்பட்ட இலக்கியங் களையும் படிக்கும்போது முச்சங்கங்களுக்கு முந்தியும், பிந்தியும் தமிழ் நாட்டில் தமிழ்ச்சங்கங்கள் நடைபெறுவதற்குச் சான்றுகள் பல காணப்படு கின்றன.




முதல் முதல் இறையனார் காவிய உரையில் மூன்று சங்கம் இருந்ததாகக் கூறப்படுகின்றது. முக்காலத்தில் முதற் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் என முச் சங்கங்கள் தமிழை வளர்த்து வந்தன எனவும் அவை வீற்றிருந்த இடங்கள் முறையே தென்மதுரை, கபாடபுரம், மதுரை எனவும் கூறப்படுகின்றன.

பாண்டியர் தென்மதுரையிலிருந்து ஆட்சிபுரிந்த காலத்திலே தமிழை வளர்ப்பதற்கு அந்நகரில் நிறுவிய சங்கம் முதற்சங்கம் என்றும் இதை சிவன், முருகன், முரஞ்சியூர், முடிநாகராஜன் போன்றோர் வளர்த்தனர் என்றும்,

பாண்டியர் கபாடபுரத்திலிருந்த காலத்தில் நிறுவிய சங்கம் இடைச்சங்கம் என்றும் இதை தொல்காப்பியர், வள்ளுர்க்காப்பியின் போன் றோர் வளர்த்தனர் என்றும் பாண்டியர் மதுரையில் இருந்த காலத்தில் நிறுவிய சங்கம் கடைச்சங்கம் அல்லது மதுரைச்சங்கம் என்றும் இதை கபிலர், பரணர், நக்கீரர் முதலியோர் வளர்த்தனர் என்றும் இறையனார் களவியலுரை கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே குறிப்பிட்ட இரண்டு சங்கங்களுடன் ஒப்பிடுகையில் மூன்றாவது சங்கமாகிய இந்த மதுரைச் சங்கம் பற்றிய இலக்கியச் சான்றுகளும், பட்டயம் மற்றும் கல்வெட்டுச் சான்றுகளும் பரவலாகக் கிடைக்கின்றது. இருப்பினும் முதல் இரண்டு சங்கங்கள் பற்றிய செய்திகளை இறையனார் களவியல் உரையே தருகின்றது. இக்கருத்து ஏற்புடையனவா, அல்லவா என்பது சர்ச்சைக்குரியது. இந்தச் சங்கம் குறித்த கருத்துக்களை முன்வைக்கின்ற ஆராய்ச்சியாளர்கள் பின்வரும் ஐயங்களைக் கிளப்பு கின்றனர்.

1. சங்கம் என்ற அமைப்பு இருந்ததா? இல்லையா?
2. மூன்று சங்கங்கள் இருந்தமைக்குச் சான்றுகள் இல்லை. இவை பற்றிய கதைகள் முழுவதும் கற்பனையானவை.
3. ஏதோ ஒரு சங்கம் இருந்தது, ஆனால் இது மூன்றல்ல.
4. கடைச்சங்கம் என்ற ஒன்று இருந்தது. ஏனையவை இருக்கவில்லை.

என்றவாறான கருத்துக்களை முன்வைக்கும் ஆராய்ச்சியாளர்கள் சங்கம் பற்றிய பல்வேறான ஐயங்களை கிளப்புகின்றனர்.

இருப்பினும சங்கம் ஒன்றேனும் இருந்திருக்கவில்லை என்பதற்கும் சங்கம் என்ற ஒன்று இருந்திருக்கிறது என்பதற்கும் ஒவ்வொரு சாராரும் தத்தம் கருத்துக்களைக் கூறி வாதிடுகின்றதை அவதானிக்க முடிகின்றது.

அந்த வகையில் சங்கம் ஒன்றேனும் இருந்திருக்கவில்லை என்பதற்கு ஆய்வாளர்கள் சில கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

1. தலைச்சங்கம், இடைச்சங்கம் முதலான காலங்களுக்குரிய இலக்கியம் எதுவும் கிடைக்காமை.
2. இறையனார் களவியல் உரையில் சங்கம் பற்றி தருகின்ற செய்திகளில் நிறைய முரண்பாடுகள் காணப்படுகின்றமை.
3. கி.மு. 3ம் நூற்றாண்டளவில் தமிழில் வரிவடிவங்கள் தோன்றவில்லை.

எனவே அந்தக் காலங்களுக்குரிய சங்கங்கள் பற்றிய கருத்துக்கள் பொய்யானவை என இவர்கள் கருதுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இவர்கள் தம் கருத்தை முன்வைக்க "சங்கம்" என்ற அமைப்பு சிறப்பாகக் காணப்பட்டமைக்கான கருத்துக்களை முன்வைக்கும் சாரார் பல ஆதாரங்கலை முன் வைக்கின்றனர்.

1. தென்புலமும், கபாடபுரமும் கடல்கோள்களால் அழிந்தமைக்கு மேலைத்தேய ஆராய்ச்சியாளர்கள் ஆதாரபூர்வமான கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

உ + மாக

தமிழ்நாட்டுத் தொடர்புடைய சீன தேசத்தார் தங்கள் இலக்கியங் களில் தமிழ்ச் சங்கங்களைப் பற்றிக் கூறியுள்ளார்கள். திருவாளர் ஆர். இராகவைங்கார் எழுதிய தமிழ் வரலாற்றில் "மூன்றாம் அரசனாகிய பாண்டி ஏற்பட்டு தேர் முதலியன செய்து அரண் வகுத்து உலக வரலாறு அறிந்த அறிஞர் பலரைக் கூட்டி நூலாய்ச்சி செய்தனர். இசை யாவும் கண்டான்" என்று கூறப்பட்டுள்ளது.

2. இடைச்சங்கம் கடல்கோள்களால் அழிந்தமை பற்றி கலித்தொகையும். சிலப்பதிகாரமும் பதிவு செய்துள்ளது.

சிலப்பதிகார – புறம் சேரியில்

"புலவர் செந்நாப் பொருந்திய நிவப்பில்
பொதியில் தென்றல் போலாது ஈங்கு
மதுரைத் தென்றல் வந்தது காணீர்"

என்று இளங்கோ அடிகள் பொதிய மலையினின்றும் வரும் தென்ற லிலும், மதுரையினின்றும் வருமத் தமிழ் தென்றலுக்குள்ள சிறப்பு புலவர் செந்நாப் பொருந்திய ஏற்றம் என்று கூறதல் ஊடாகவும் சங்கம் என்ற ஒன்று இருந்திருந்ததை அறிய முடிகின்றது.

3. கலித்தொகையில்

"நிலனாவிற் றிரிதரூஉம் நீண்மாடக் கூடலார்
புலனாவிற் பிறந்த சொற் புதி துண்ணும் பொழுதன்றோ"

என்பதனூடாக மதுரையிலுள்ள புலவர்களது நாவில் தோன்றுகின்ற சொற் புதுமை பற்றிக் குறிப்பிடப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சங்கம் என்ற அமைப்பின் தோற்றுவாய்க்கு அடிப்படையாக ஆரம்பத்தில் சிறந்த புலவர் கூட்டம் ஒன்று வாழ்ந்துள்ளமைக்கு மதுரைக் காஞ்சியில்

"தொல்லாணை நல்லாசிரியன்
புணர் கூட்டுண்ண புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவின் நெடியோன்" எனவும்

புறநானூற்றில்

"ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக
உலகமொடு நிலை இய பலர்புகழ் சிறப்பில்
புலவர் பாடாது வரைக என் நிலவளர" எனவும்

இப் புறநானூற்றுப் பாடல் கூறப்படுகின்றது. சங்கம் அரங்கேறிய அரசனே சங்கத்ததைப் பற்றிக் கூறியிருக்க, இது பற்றி ஐயம் கொள்ளக் காரணம் சிறிதும் இல்லை எனலாம்.

5. பிறிதொரு புறநானூற்றுப் பாடலில்

"இமிழ் குரல் முரசம் மூன்றுடனாளும்
தமிழ் கெழுகூடல் தண் கோல் வேந்தே"

என மதுரை சிறப்பிக்கப்பட்டுள்ளது. மதுரையிலே தமிழ்ச் சங்கம் இருந்தமை பற்றி இறையனார் களவியலும் அகச் சான்று பட்ர்ந்துள்ளமையால் தமிழ் கெழுகூடல் என இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது தமிழ்ச் சங்கத்தையே என ஊகிக்க முடிகின்றது.

பண்டைய காலத்திலே தமிழ் நாட்டிலிருந்து தமிழ்மொழியை வளர்த்து வந்த பேரறிஞர்களுள் அகத்தியர் தலைசிறந்தவரென்றும், அவர் சிவபெருமானிடத்திலே தமிழைக் கேட்டறிந்தவர் என்றும் அவருக்கு இருப்பிடம் பொதியமலை என்றும் கூறுவர். இவர் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்னும் முத்தமிழையும் கற்றுணர்ந்து அகத்தியம் என்னும் முத்தமிழிலக்கண நூலொன்றை இயற்றினர் என்பர்.

ஒவ்வொரு காலச் சங்கங்களிலும் பல புலவர்கள் தலைமை ஏற்று நடத்தி வந்தார்கள். இத்தமிழ் சங்கங்களில் புரவலர்களாகவும் புலவர்களாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினர்களாயிருந்து நூல்களை புதிதாக எழுதியும், பழைய நூல்களை ஆராய்ந்து வெளிப்படுத்தியும் உள்ளதை அவதானிக்க முடிகின்றது.

"ஐந்திணை அகநூல்" என்ற இறையனார் களவியல் நூலை ஆராயும்போது முதல், இடை, கடை என்னும் முச்சங்கங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளதைக் காண்கின்றோம். அகம், புறம் முதலிய தொகைநூல்களில் தமிழ்ச் சங்கங்களில் உறுப்பினர்களாயிருந்த புலவர்களுடைய பாட்டுக்களே உள்ளன. அகத்தியர் கூட

"மனித்தர் எல்லாம் இன்தமிழ் ஆய்ந்து
கேள்வி உடையவர் என்ப"

என்று பரமேஸ்வரனிடத்து வேண்டுவதால் இனிய தமிழை ஆராயப் பல சங்கங்கள் தமிழ் நாட்டில் இருந்தனவோ என எண்ணத் தோன்றுகின்றது.

7. இடைச்சங்கம் இருந்த கபாடபுரம் பற்றி வான்மீகி, வியாசர், சாணுக்கியர் போன்றோர் குறிப்பிட்டுள்ளமை கருதத்தக்கது.
கம்பராமாயணத் நாடவிட்ட படலம் 30 இல்
"தென் தமிழ் நாட்டகன் பொதியில்
திருமுனிவன் தமிழ்சங்கம் சோதிற்......" என்று கூறுகின்றார்.

இராமாயண காலத்திற்கு அதாவது கி.மு. 6000க்கு முன்பே பொதிகை மலை அகத்தியரால் நிலைநாட்டப்பட்ட தமிழ்ச்சங்கம் ஒன்று இராமாயண காலத்திலும் நனி சிறப்பாக நடந்து வந்ததைப் பற்றி சுக்கிரீவன், அனுமான் முதலான வானர வீரர்களுக்குக் கூறுவது நோக்கத்தக்கது.

இவ்வாறான சங்கம் இருந்தமைக்கு தொல்காப்பியமும் சான்று பகருகின்றது. தொல்காப்பியப் பாயிரத்தில் நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து இவ் கோட்டாசான் முன்னிலையிற் தொல்காப்பியம் அரங்கேற்றப் பட்டதாகப் பனம்பாரானார் என்னும் புலவர் கூறுகின்றார்.

இடைச்சங்கம் நடைபெற்ற "கபாடபுரம்" என்னும் இடத்தில் நிகழ்ந்த தமிழ்ச்சங்கம் பற்றி கம்பர் தம்நூலில்

"எத்திறத்தினும் ஏழுல கும்புகழ்
முத்தும் முத்தமிழும் தந்து முற்றலால்" என்று குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கபாடபுரச் சங்கத்தைப் பற்றி வான்மீகியும் வடமொழி இராமாயணத்தில் குறிப்பிடுகின்றார். இவை மட்டுமன்றி

"தமிழ் நிலை பெற்ற தாங்கரு மரபின்

மகிழ்நனை மறுகின் மதுரை" என சிறுபாணாற்றுப்படையில் தமிழ்ச் சங்கத்தை தன்கண் பெற்ற மறுகின் மதுரை என்று கொள்ளப்படுகின்றது.

போர்க்கல்வி கற்பதற்கும் சங்கங்கள் இருந்தமைக்கு பரிபாடல் சான்று பகருகின்றது.

"புலத்தினும், போரிலும் போர் தோலாக் கூடல்"

இது சோழன் பெருநற்கிள்ளி போர் அவை ஒன்று அமைத்துள்ளான் என்பதை புலப்படுத்துகின்றது.



"போர் அவைக்கோ பெருநற்கிள்ளி" சோழனைப் போலவே பாண்டியரும், சேரரும் போர் அவைகள் வைத்திருந்தார்கள் எனக் கூறப்படுகின்றது. ஔவையார் "சங்கத் தமிழ் மூன்றுந்தா" என தாம் பாடிய நல்வழியில் சங்கத்தாரால் வளர்க்கப்பட்ட முத்தமிழைப் பற்றியும் கூறியுள்ளார்.

இதுவரை சங்க நூல்களிலிருந்தும், சங்க காலத்துப் புலவர்களுடைய வாக்கிலிருந்தும், செப்பேட்டுச் சாசனங்களிலிருந்தும், கல்வெட்டுச் சாசனங்களிலிருந்தும் பிறநாட்டுச் சரிதப் பகுதிகளிலிருந்தும் சங்கம் இருந்தமைக்குப் பல ஆதாரங்கள் கூறமுடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சான்றோர் வாக்குகளை ஆதாரப்படுத்தும்போது, கடைச்சங்கம் அழிவெய்திய பதினைந்து ஆண்டுகளுக்குப் பின் வாழ்ந்த மாணிக்கவாசகர்

"உறைவான உயர்மதிற் கூடலில் ஆய்ந்த ஒண்தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ ஏழிசை......."

என கூடலில் நடந்து வந்த கடைச்சங்கத்தைப் பற்றிப் பாடியுள்ளார். இவர் பாண்டியனின் மந்திரியாக இருந்தவர். இவர் கூடலில் நடைபெற்ற சங்கத்தைப் பற்றி அவர் கேள்விப்பட்டிருந்ததோடு மந்திரியாய் இருந்த காலத்து அரசாங்க நூல்' நிலையத்திலிருந்து ஆதாரங்களையும் படித்துத் தெரிந்தவர். ஆதலின் அவருடைய கூற்றுக்களில் ஐயம் தோன்ற வாய்ப்பில்லை எனலாம்.

அப்பர் சுவாமிகள்

"நன்நாட்டுப் புலவனாய் சங்கமேறி
நற்கனகக் கிழி தருமிக்கு அருளினான் காண்"

என அவருடைய தேவாரத்தில் பாடியுள்ளார். அதாவது ஆலவாய்ப் பெருமான் புலவர் வேடம் தாங்கி தமிழ்ச் சங்கத்தில் வாதம் செய்து "தருமி" என்னும் ஓர் அன்பனுக்கு பொற்கிழி பெற்றுக் கொடுத்ததைப் பற்றிப் பாடியுள்ளார். எனவே இவரது பாடலிலும் சங்கம் இருந்ததை ஆதாரப்படுத்த முடிகின்றது.

"புகழி ஞானசம்பந்தன் உரைசெய் சங்கமலி செந்தமிழர்கள்" என சம்பந்தரும் தம்முடைய தெய்வப் பாக்களில் சங்கம் பற்றிப் பாடியுள்ளார்.

கி.பி. 8ம் நூற்றாண்டில் தோன்றிய ஆண்டாளது திருப்பாவையில் "சங்கத் தமிழ்" என்ற தொடர் இடம்பெறுகின்றது. ஆழ்வாரது பெரிய திருமொழியானது 8வது பாடலில் "சங்க முகத் தமிழ்" என்றும் திருக்கோவை யாரில்

"உயர்மதிற் கூடலில் ஆய்ந்த ஒண் தீந்தமிழ்" என்ற செய்தியுமுள்ளது.

புறத்திரட்டு – புகழ்மாலையில் "பாடுதமிழ் வளர்த்த கூடலின் வடா அது" என்ற தொடர்

தாழி என்னும் வள்ளலின் ஊராகிய கள்ளியம்பதி தமிழ்ச்சங்கம் இருந்த கூடலுக்கு வடக்கே உள்ளது என்பதைக் கூறி சங்கத்திற்கு சான்று பகர்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேக்கிழார் பாடல்களிலும் தமிழ் தாங்கிய அங்கண் மூதூர்" என்ற அடிகளினூடாகவும் தமிழ்ச்சங்கம் மதுரையின்கண் நடைபெற்றதைக் காட்டி நிற்கின்றது.

எனவே மேற்கூறப்பட்ட செய்திகள் அனைத்தையும் முறைப்படுத்திப் பார்க்கின்றபோது பின்வரும் 4 விடயங்களைப் பெற முடிகின்றது.

1. மதுரையில் பாண்டியன் ஆதரவில் தமிழ்ச்சங்கம் ஒன்று இருந்தது.
2. புலவர் பலர் கூடி முத்தமிழையும் ஆராய்ந்தனர்.
3. புதிதாக நூல்கள் பல செய்யப்பட்டன.
4. பிறர் பாடிய நூல்களை அவற்றின் திறன் அறிந்து ஏற்றுக் கொண்டார்கள்.

எனவே மேற்கூறப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் தமிழிலக்கிய வரலாற்றில் சங்கம் என்ற ஒன்றிருந்துள்ளமையையும் அது தமிழை வளர்த்து வந்துள்ளமையையும் எம்மால் அறிய முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோவலன் ஊழ்வினை தொடர்பான சில குறிப்புக்கள்

இலக்கியச் செம்மல்
தென்புலோலியூர் பரா. ரதீஸ்

சிலப்பதிகாரம் மூன்று அறக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டது. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும். உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உகுத்து வந்து ஊட்டும் எனும் மூன்றுமாகும். இம்மூன்று அறக்கருத்துக்களிலும் அடிப்படையானது "ஊழ்வினை உகுத்து வந்து ஊட்டும்" என்பதாகும். இவ் அறத்திற்தான் சிலப்பதிகாரம் கட்யெழுப்பபட்டிருக்கின்றது. கோவலனது வாழ்வினை, பாண்டியனது வளையாத செங்கோலை வளைத்து. அரசியலைப் பிழைக்கச் செய்கிறது. மன்னனை மடிய வைக்கிறது.

"வளையாத செங்கோல் வளைந்ததே பண்டை
விளைவாகி வந்த வினை"

என்பார். கொலைக்களக் காதையில் இளங்கோ. இதனால் மன்பதை காக்கு தென்புலம் காவல் என் முதற் பிழைத்தது என்று வீழ்ந்து மடிகின்றான் மன்னன். இன்னொரு புறம், தன் கணவன் குற்றமற்றவன் என்பதை நிரூபித்து , மதுரை மாநகரைத் தீக்கிரையாக்கித் தெய்வமாகிறாள் கண்ணகி. சுருங்கக்கூறின் கோவலனது ஊழ்வினை பாண்டியனது அரசியலைப் பிழைக்கச் செய்கிறது. கண்ணகியின் கற்புத்திறத்தை உலகிற்குச் சொல்கின்றது. இந்தவகையில் கோவலனது முற்பிறப்புப் பற்றிக் குறிப்பாக ஊழ்வினை பற்றிக் கூறவேண்டிய தேவை இளங்கோவிற்கு ஏற்படுகின்றது.

கோவலனது முற்பிறப்புத் தொடர்பாக "கட்டுரைக் காதையிலே", மதுராபதித் தெய்வத்தினூடாகக் கண்ணகிக்கு கூற வைக்கின்றார் இளங்கோ. சிங்குபுரம், கபிலபுரம் எனும் இரு நாடுகளும் தம்முள் பகைமை கொண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்தன. ஒருபோது கபிலபுரத்தைச் சேர்ந்த வணிகனான 'சங்கமன்' தனது மனைவியாகிய "நீலி" யோடு வணிக நோக்கத்திற்காகச் சிங்கபுரத்திற்கு வந்தான். சிங்கபுரத்தைச் சேர்ந்த பரதன் என்பவன் சங்கமனைப் பிடித்து. இவன் ஒற்றனெனக் கூறி மன்னனிடத்து மரண தண்டனையை வாங்கிக் கொடுத்தான். கணவனை இழந்த நீலி "எமக்கு இத்தகைய பெருந்துன்பம் செய்தவர் யாராக இருந்தாலும் அவரும் இத்துன்பத்தை அடைக" என்று சாபமிட்டாள். இதன் விளைவாக பரதன் மறுபிறப்பில் கோவலனாகப் பிறந்தான்".

கோவலனது முற்பிறப்புப் பெயர் பரதன், முற்பிறப்பிற் செய்த தொழில் வேந்தனுக்கு அரச காரியம் செய்தமை. முற்பிறப்பின் வினையை அனுபவிப்பதற்காக, சோழ நாட்டிலே, பூம்புகாரப் பட்டினத்திலே, மாசாத்துவானுக்கு மகனாக வணிக குலத்திலே வந்து பிறக்கின்றான் கோவலன்.

"நாக நின் நகரொடு நாகநாடு – அதனொடு
போகம், நீள்புகழ் மன்னனும் புகார் நகர்
..........................................................................................
ஆங்குப்
பெருநிலம் முழுது ஆளும் பெருமகன் தலை வைத்த
ஒரு தனிக் குடிகளோடு உயர்ந்து ஓங்கு செல்வத்தன்
வருநிதி பிறர்க்கு ஆர்த்தும் மாசாத்துவான் என்பான்
இருநிதிக் கிழவன் மகன்........."

என்ற "மங்கல வாழ்த்துப்பாடல் வரிகளினூடாகக் கோவலனது பிறப்புப் பற்றி அறிந்து கொள்கின்றோம்.

தமிழகத்தில் தோன்றிய "கோவலன் கதை" கோவலனது முற்பிறப்புப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றது.

"மதுராபுரிப் பட்டினத்திலே மணியரசன் என்ற வாணிபன் இருந்தான். இவன் இரண்டு திருமணங்கள் செய்தவன். முதற் தாரத்திற்கு மூன்று ஆண் பிள்ளைகள் இரண்டாம் தாரத்திற்கு ஓர் ஆண் பிள்ளை. மணியரசன் இறக்கும் தறுவாயில் தனது சொத்துக்களை இரண்டாகப் பிரித்து ஒரு பங்கினை முதற்தாரத்தின் பிள்ளைகளுக்கும் மற்றப் பங்கினை இரண்டாம் தாரத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைக்கும் கொடுத்தான். சொத்துப் பிரிவினையின் விளைவாக முதற் தாரத்தின் பிள்ளைகளுக்கும் இரண்டாம் தாரத்தின் பிள்ளைகளுக்கும் இடையே பகைமை இருந்தது.

இரண்டாம் தாரத்தின் மகன் எண்ணெய் வாணிபன். எண்ணெய் விற்க வந்தபோது யாருமே அவனிடத்து எண்ணெய் வாங்கவில்லை. இதனால் மதுரையிலுள்ள வட பத்திர காளி கோயிலுக்குச் சென்று அங்குள்ள காளியை வேண்டினான்.

"எண்ணெய் விற்று வந்தாலே ஏந்திழையே உந்தனுக்கு ஆயிரம் தேர்விளக்கு அன்பாக வைப்பேனென்று பிரார்த்தனை செய்துவிட்டு பிரிய முடன் போனானே".

காளியே! என்னுடைய எண்ணெய் எல்லாம் விற்று முடிந்தால் உனக்கு ஆயிரம் திருவிளக்கு ஏற்றுவேன் என்று கூறிச் சென்றான். காளி அருளால் எண்ணெய் விற்று முடிந்தது. வணிகனும் ஆயிரம் திருவிளக்கும் ஏற்றி முடித்தான்.

பாண்டியர்கள் தமக்குப் பிள்ளைப் பாக்கியம் இல்லாத காரணத்தினால் காளி மீது கோபம் கொண்டு காளி கோயிலைப் பூட்டி னார்கள். இக்கோயிலுக்கு விளக்கு வைக்கக்கூடாது என்று கட்டளை இட்டார்கள்.

"காளியம்மன் சந்நிதியைக் கதவடைத்தார் பாண்டியர்கள் சாத்திக் கதவடைத்துத் தான் பூட்டி மண்ணறைந்தார் தேடி ஒருவரிங்கு திருவிளக்கு ஏற்றினோரை காளியம்மன் கோயிலுக்கு கன விளக்கு வைத்தவரை ஆர் விளக்கேற்றினும் ஆக்கினைகள் செய்திடுவோம் எவர் விளக்கேற்றினாலும் இரண்டு துண்டாக்கிடுவோம்.

எண்ணெய் வாணிபன் விளக்கு வைத்ததைப் பாண்டியர்கள் அறிந்தார்கள். மணியரசனின் முதற்தாரப்பிள்ளைகளின் உதவியோடு அவனுக்கு மரணதண்டனை வழங்கினார்கள். மணியரசனின் இரண்டாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரத்தின் மகனாகிய எண்ணெய் வாணிபனோ, மறுபிறப்பில் கோவலனாகப் பிறக்கிறான். காளியே கண்ணகியாகப் பிறக்கின்றாள். எண்ணெய் வாணிபனின் மனைவி மாதவியாகப் பிறக்கின்றான்.

இக்கதையின்படி கோவலன் எந்தக் குற்றத்தையும் செய்தவனல்லன். குற்றம் செய்தவர்கள் பாண்டியர்கள். பாண்டியர்களைத் தண்டிப்பதற்காகவே காளி கண்ணகியாகத் தோன்றினாள் என்று இக்கதைப்பாடல் கூறுகின்றது. சிலப்பதிகாரத்தின் படி குற்றமற்ற கோவலன் தண்டிக்கப்பட்டமைக்கு அவனது ஊழ்வினையே காரணம் என்று எம்மை ஆறுதல் அடையவைக்கிறார் இளங்கோ. கோவலன் கதையின்படி, கோவலன் தண்டிக்கப்பட்டமைக்கு என்ன காரணம் என்ற கேள்வி எழுகின்றது. கோவலனது தந்தையாகிய முத்துச்செட்டி செய்த வினையின் பயனே குற்றமற்ற கோவலனைத் தண்டனை பெற வைத்தது என்று கூறப்படுகின்றது.

காவிரிப்பூம் பட்டணத்தில் "முத்துச்செட்டி" என்ற வாணிபன் வாழ்ந்து வந்தான். இவனது மனைவி வர்ணமாலை. இவர்களுக்கு பிள்ளைப் பாக்கியம் கிட்டவில்லை. இதனால் முத்துச்செட்டி தனக்குப் பிள்ளைப்பாக்கியம் கிடைக்க வேண்டுமென்று பல்வேறு அறக் காரியங்களையும் செய்து வந்தான். முத்துச்செட்டியால் ஏற்படுத்தப்பட்ட பூங்காவில், புல் மேய்ந்து பொய்கையிலே நீரருந்திச் செல்வதற்காக தேவலோகத்திலிருந்து காமதேனு வந்து போவது வழக்கம். ஒருநாள் காமதேனு தன்னுடைய கன்றுடன் பூங்காவனம் வந்து புல் மேய்ந்து. நீரருந்திச் செல்லும் தறுவாயில் காமதேனுவையும் கன்றையும் கண்டான் முத்துச்செட்டி. பட்டி மாடுகள் வந்து பயிர்களை மேய்ந்து விட்டுச் செல்கின்றனவே எனக் கோபம் கொண்டான். கல் கொண்டு அடித்த போது காமதேனு தப்பியது. கன்று இறந்துவிட்டது. அப்போது வேதனையும் கோபமும் கொண்ட காமதேனு முத்துச்செட்டிக்குச் சாபமிட்டது.

"பதினாறு வயதளவும் பால் கொடுத்து நான் வளர்ந்தேன் பெற்று வளர்த்ததொரு பெருமை அறியாமல் கவுண்டு கல்லால் எறிந்து கன்றதனைக் கொன்றாயே ஆனபடியால் யான் பெற்ற பாலகன் போல் உந்தன் வயிற்றிலே உதிக்கின்ற மைந்தனுக்கு பதினாறு வயதினிலே பாலன் இறப்பனென்று காமதேனு சாபமிட்டுக் கைலைக்குச் சேர்ந்தது காண்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று கோவலன் கதை தரும் செய்திகள். சுருங்கக்கூறின் சிலம்பிலே கோவலன் செய்த ஊழ்வினை உகுத்து வந்து ஊட்டுகின்றது. கோவலன் கதையிலே, கோவலனது தந்தையாகிய முத்துச்செட்டி செய்த வினை கோவலனை வந்து சேருகின்றது.

ஈழத்தில் தோன்றிய கோவலனார் கதை, கோவலனது முற்பிறப்புத் தொடர்பாக இரண்டு விதமான கருத்துக்களைக் கூறுகின்றது. பாண்டியர்கள் மதுரையில் உள்ள பத்திரகாளி கோவிலுக்கு பூசை முதலானவை மேற் கொள்ளக்கூடாதெனக் கட்டளையிடுகிறார்கள். "வந்துண்டு மாந்தர்கட்கு மானிலத்தோர் தங்களுக்கும் அந்தமுள்ள மாதருக்கு அனைவருக்கும் அறிக்கையிட்டு கொலந்தலருங் காளியம்மன் கோவிலுக்குப் பூசை பலி இந்த நாள் முதலாக யாவருஞ் செய்யாதீர்"என்றான்.

இந்நிலையிலே, ஆயர் குலத்தைச் சேரந்த கோவலன் என்பவன், தனது மந்தைகளுடன் காட்டிற்கு வருகின்றான். மந்தைகள் வேங்கைகளுக்கு இரையாகின்றன. இடையன் காளியை வேண்டுகிறான். காளியருளால் மந்தைகள் மீண்டும் உயிர்பெற்று எழுகின்றன. இதனால் காளி கோயிலுக்கு இடையன் ஆயிரம் விளக்கு ஏற்றி மகிழ்ந்து சென்றான்.

"காட்டருகே வந்தளவிற் கடாமாடு பசு மாடு கூட்டமெல்லாங் குலைவாகக் கொல்வேங்கைக் கிரையாக வாட்டமுற்று மலடாக மடிந்தது கண்டு இரக்கமுற்று ஓட்டத்தே ஓடி வந்து ஓங்கும் ஆலவாயில் சென்றான்".

"ஆலவாயில் தனிற்புகுந்த ஆதிபத்திரகாளி தன்னை
சீலமுடன் தெண்டனிட்டுத் தேவியே தெய்வீகமே
ஆலவாயில் அம்மையாரே ஆயிரமாம் திரிவிளக்கு
சால உனக்கு ஏற்றி வைப்பே தாயென்றே தொழுதான்"

"தொழுதளவில் காளியம்மன் தூய நல்ல அருள்புரிய
பழுதில்லாத அவடைய பசுநிரைகள் தழைத்ததற்பின்
வழுதியர் கோன் மன்னனுக்கு மாறாக் கோவலனும்
அழகுபெற நெய் விளக்கு ஆயிரமும் ஏற்றி வைத்தான்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது கட்டளையை மீறி, கோவலன் விளக்கேற்றியதைப் பாண்டியர்கள் அறிந்திருந்தார்கள். இதனால் கோபம் கொண்ட காளி, கோவலனைப் பூம்புகாரிலே வணிக குலத்திலே மாசாத்துவானுக்கு மகனாகப் பிறக்கும்படி செய்கின்றாள். தான் மதுரையிலே அவதரித்துப் பாண்டியர்களை பழிவாங்கப் போவதாகக் கூறுகின்றாள்.

"சினமாகி மதுரையெல்லாம் தீபரப்பி அவன்தலையும் இனமோடே அழித்திடுவேன் இப்பொழுது நீர் போகி கனமான புகழ்பெருகுங் காவிரிப்பூம் பட்டிணத்தில் தனவான் மாசாத்தர் மகனெனப்போய் பிறவுமென்றாள்".

கோவலனது முற்பிறப்புத் தொடர்பாக கோவலன் கதையும் கோவலனார் கதையும் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதைக் காணலாம். கோவலன் கதையின்படி கோவலன் முற்பிறப்பிலே வணிக குலத்தைச் சேர்ந்தவன். எண்ணெய் விற்கவேண்டுமென காளி கோயிலுக்கு விளக்கேற்றியவன். கோவலனார் கதையின்படி முற்பிறப்பிலே இடையர் குலத்தைச் சேர்ந்தவன். புலிகளுக்கு இரையாகிய மந்தைகள் மீண்டும் உயிர்பெற்றெழச் செய்ய வேண்டுமென்று வேண்டி காளிக்கு விளக்கேற்றியவன். கதை நகர்வு அடிப்படையில் ஒன்றாகத்தான் இருக்கின்றது. கோவலனார் கதையிலும் கோவலன் குற்றவாளி அல்லன். பாண்டியர்களே குற்றம் செய்தவர்கள்.

கோவலனார் கதையிலே, கோவலனது முற்பிறப்புப் பற்றிக்கூறும் போது "கோவலன்" என்ற பெயரே பயன்படுத்தப்பட்டுள்ளது. சில இடங்களில் "கோபாலன்" என்ற பெயரும் வந்துள்ளமையைக் காணலாம்.

"கொலை புரிந்த அளவு தன்னிற் கோபாலன் தனது சிரம் அலறி உருண்டே புரண்டு அம்மை திருவடியதனில் உலகேழும் பெற்றவளே உனக்கபயம் என்று விழ மலைமேல் முன் அவதரித்த மாது நல்லார் சினம் புரிந்தார்".

இப்பாடலில் "கோபாலன்" என்ற பெயர் இடம்பெறுவதைக் காண்கின்றோம். கோபாலன் என்ற பெயர் கோவலனது முற்பிறப்புப் பெயரோ என்று சிந்திக்கலாம். சிலப்பதிகாரத்தில் கோவலனுக்கு, கோபாலன் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரும் வழங்கப்பட்டிருப்பதைக் காணலாம். "அடைக்கலக்கதை"யில் மாடலன் என்ற பாத்திரத்தினூடாக வெளிப்படுத்தப்படுகின்றது.

"இம்மை செய்தன யான் அறி நல்வினை
உம்மைப் பயன்கொல், ஒரு தனி உழந்து, இத்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது
விருந்த கோபால! நீ என் வினவக்......"

இங்கிருந்துதான், கோவலனார் கதை ஆசிரியர் "கோபாலன்" என்ற பெயரினைப் பெற்றுக் கொண்டாரோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

குற்றமற்ற கோவலன், ஏன் மறுபிறப்பில் தண்டிக்கப்பட்டான் என்பதற்கு, கோவலனார் கதைகூறும் கோவலனது மேற்குறிப்பிட்ட முற் பிறப்புத் தொடர்பான செய்தியில் விடை காண முடியவில்லை. கோவலனது முற்பிறப்புத் தொடர்பான இன்னொரு செய்தியினை யும் தருகின்றது.

தேவலோகத்தில் இந்திரனுடைய சபையில் ஊர்வசி நடனம் ஆடுகிறாள். நாரதமுனிவர் வீணை வாசிக்கின்றார். இந்திரனுடைய மகனாகிய சயந்தன் ஊர்வசியைப் பார்க்கலானான். ஊர்வசியும் சயந்தன்மீது காதல் கொண்டாள். இதனால் நாரத முனிவரின் வாத்திய தாள இசையிலிருந்து ஊர்வசி விலகலானாள். கோபம் கொண்ட நாரதர் சாபமிடுகின்றார். நாரதர் சாபத்தின்படி இந்திரனுடைய மகன் சயந்தன், பூம்புகார்ப் பட்டினத்திலே வணிக குலத்திலே மாசாத்துவானுக்கு மகனாக கோவலன் என்ற பெயரிலே வந்து பிறக்கின்றான். ஊர்வசி திருக்கடையூரிலே கணிகை சித்திராபதிக்கு மகளாக மாதவி என்ற பெயரிலே வந்து பிறக்கின்றான்".

கோவலன் கதை கூறும், கோவலனது முற்பிறப்புத் தொடர்பான இக்கருத்தின்படி, ஊர்வசிமீது காதல் கொண்டதற்காக இப்படியொரு தண்டனையைக் கோவலன் அனுபவிக்க வேண்டுமா என்ற சிந்தனை யெழலாம். நாரதரது சாபம் அப்படித்தான் இருக்கிறது. "இவள் மீதே மோகமுற்று அங்கு இறந்திடு என்று" நாரதர் சாபமிடுகிறார். அதாவது மாதவி மீது மோகம் கொண்டு மடிவாயாக என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவலனார் கதை கோவலனது முற்பிறப்புத் தொடர்பாக இரண்டு கருத்துக்களைக் கூறி நிற்பதைக் காண்கிறோம். ஆயர் குலத்திலே பிறந்து, காளிக்கு விளக்குவைத்து பாண்டியர்களின் தண்டனைக்கு உள்ளாகி, மறுபிறப்பில் கோவலனாகப் பிறக்கிறான். இது ஒரு கருத்து. சயந்தன் நாரதரின் சாபத்திற்கு உள்ளாகி கோவலனாகப் பிறக்கின்றான். இது இரண்டாவது கருத்து.

முதற்கருத்தின்படி கோவலன் குற்றம் செய்தவனல்லன். இரண்டாவது கருத்தின்படி ஊர்வசியை நோக்கினான் என்ற குற்றச்சாட்டு கோவலன்மீது இருக்கின்றது. கோவலனது முற்பிறப்புத் தொடர்பாக இருநிலைப்பட்ட கருத்துக்களை கோவலனார் கதை தருவதை அவதானிக்கலாம்.

முதற் கருத்திலே கோவலனது ஊழ்வினையைத் தேடமுடியாது. பாண்டியர்கள்தான் வினை செய்தவர்கள் இரண்டாவது கருத்திலே கோவலனது ஊழ்வினையைக் காணலாம். ஆயினும் கோவலனார் கதையிலே கோவலனது ஊழ்வினை



யைத் தேடுவது எவ்வளவு பொருத்தப்பாடு உடையது என்பதும் சிந்தனைக்குரிய விடயமாகும். கோவலனார் கதையைப் பொறுத்தவரையில் கண்ணகி பாண்டியர்களை பழிவாங்குவதற்காகப் பிறந்தவள் அதற்கு துணைபோகின்ற பாத்திரமே கோவலன் என்பதை மனங்கொள்ள வேண்டும். சிலப்பதிகாரத்தில் ஊழ்வினை முக்கியம் பெறுவதைக் கொண்டு, கோவலனார் கதையிலும் கோவலனது ஊழ்வினையைத் தேடுவது அவ்வளவு பொருத்தப்பாடு உடையதன்று. பாண்டியர்கள் செய்த குற்றத்திற்கு தண்டனை வழங்க வேண்டிய தேவை காளிக்கு இருந்தது. அவள் தனது காரியத்தை முடிப்பதற்கு கோவலனைக் காரணனாகக் கொண்டாள் என்று கூறுவது பொருத்தப்பாடு உடையதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கண்ணகி வழக்குரை" கோவலனது முற்பிறப்புப் பற்றி எவ்வித கருத்தையும் கூறவில்லை. பிறப்புப்பற்றி மட்டுமே கூறுகின்றது. சோழ நாட்டிலே பூம்புகார்ப் பட்டிணத்திலே மாசாத்துவான் என்ற வணிகன் இருந்தான். இவனுக்குப் பிள்ளைப் பாக்கியம் இல்லை. இதனால் சிவனை நோக்கித் தவமிருந்தான். பல்வேறு அறக் காரியங்களையும் செய்தான். இதன் விளைவாக, சிவனருளாலே ஆண் குழந்தை ஒன்று கிடைத்தது. அவனே கோவலன். வேதியர்களை அழைத்து குழந்தை பிறந்த பலனைக் கேட்கின்றான் மாசாத்துவான்.



"தேறிய சொல்லாற் தெளிந்து சேயிழையும் அப்பொழுது கூறரிய பாலகனைக் குறிப்பாகப் பெற்றதன் பின் பேறு பெறச் செய்ததவம் பெற்றோம் நாம்' என்று சொல்லி ஓது மறை வேதியரை இங்கழைக்க ஆள் விடுத்தார்".

"விட்ட தூதர் விரைந்தோடி வேதியரை அழைத்து வந்தார்.
இட்டமுடன் நாள் ஆய்ந்து இயல் வணிகர்க்கு உற்றுரைப்பார்.
மட்ட விழுந்த தாரானே மகன் பிறந்த முகூர்த்தமிக
அட்டமுஞ் சென்மமுமாகும் அடர்ந்த வியாழன் சனியே".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடர்ந்த திசைக் கேதுபத்து அல்லாத குறைகளில்லை
மடந்தையர்க்குப் பொருள் தோற்று மறுதேசம் போகைதிண்ணம்
கடந்த கலை ஞானமெல்லாம் கற்பதுவுந் தப்பிலை காண்
திடம் பரவும் வணிகேசர் சிங்கசேகர் சிங்கராசி சென்மமென்றார்"

இங்கே கோவலன் பெற்ற தண்டனைக்கு அவன் பிறந்த பலனும் காரணமாயிற்று, கிராமிய மக்களின் நம்பிக்கை இங்கு வெளிப்படுகின்றது. கோவலனார் கதையிலே சயந்தன், கோவலனாகப் பிறக்கின்றான். இங்கே மூங்கிலாகத் தோன்றி, பாண்டியரது குடைக் காம்பிற்கு மூங்கில் வெட்டப்படு கின்றது.

சிலப்பதிகாரத்திலே, கோவலனது ஊழ்வினை மிக முக்கியம் பெறுகின்றது. ஊழ்வினையின் விளைவாலேயே குற்றமற்ற கோவலன் பாண்டியரால் தண்டிக்கப்படுகிறான். கோவலன் கதையிலே தந்தையாகிய முத்துச்செட்டி செய்த வினை தனையனாகிய கோவலனை வந்து சேரு கின்றது. பெற்றோர்கள் செய்யும் வினை பிள்ளைகளை வந்தடையும் என்பது இங்கே புலப்படுத்தப்படுகின்றது. கோவலனார் கதையிலே ஊர்வசியைப் பார்த்த சயந்தன், கோவலனாகப் பிறக்கின்றான். ஊர்வசியைப் பார்த்ததற்காகக் கோவலனுக்கு இவ்வளவு பெரிய தண்டனையா என்று எண்ணத் தோன்று கிறது. இங்கே ஊழ்வினை அவ்வளவு முக்கியம் பெறவில்லை. கண்ணகி வழக்குரையில் கோவலனது பிறந்த பலன் பற்றிக் கூறப்படுகின்றதே ஒழிய, கோவலனது முற்பிறப்புப் பற்றியோ, அவனது ஊழ்வினை பற்றியோ கூறப்பட வில்லை. இவ்வகையில் சிலப்பதிகாரம், கோவலன் கதை, கோவலனார் கதை, கண்ணகி வழக்குரை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கோவலனது முற்பிறப்பு அவனது ஊழ்வினை தொடர்பான கருத்துக்களைக் கண்டு கொள்ள முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாட்டார் இலக்கியங்கள்

**செல்வி தர்சினி ஜெகநாதன்**
கலைப்பிரிவு (2018)
கிளி/முக்கொம்பன் அ.த.க. பாடசாலை

**நா**ட்டுப்புற மக்கள் தேடித்தந்த செல்வங்களுள் நாட்டார் இலக்கியமும் ஒன்று. அது நாட்டுப்புற மக்களின் உள்ளத்து உணர்வுகளையும், ஆசாபாசங்களையும் அழகுற எடுத்துக்காட்டும் தன்மை வாய்ந்தது. மக்களின் பாரம்பரியம், பண்பாடு, கலைகள் ஆகியவற்றை நமக்கு புலப்படுத்துவது நாட்டார் இலக்கியமே. மக்களின் பழக்கவழக்கங்கள் அவர்கள் அனுபவித்த இன்பதுன்பங்கள் அனைத்தையும் எடுத்துக்கூறும் வகையில் அமைந்ததே நாட்டார் இலக்கியம். நாட்டார் இலக்கியமானது பாடல்கள், கதைகள், விடுகதைகள், கதைப்பாடல்கள் எனப் பல பிரிவுகளைக் கொண்டது. மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள நிகழ்வுகள் நாட்டார் இலக்கியத்தின் பொருளாக அமைந்திருப்பதைக் காணலாம்.

நாட்டார் இலக்கியம் தலைமுறை தலைமுறையாக வாய்மொழி மூலம் கையளிக்கப்பட்டு வந்துள்ளது. பழங்குடி மக்கள் இக்கால நாகரீகங்களில் நின்று ஒதுங்கி வாழ்வதால் பரம்பரை பரம்பரையாக வழங்கி வரும் தமது வாய்மொழி மூலம் வளர்த்தெடுக்கப்பட்ட நாட்டார் பாடல்கள் மக்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் பின்னிப் பிணைந்துள்ளன. பெசறியாக் கவிஞர்களால் பாடப்பட்ட இப் பாடல்கள் இசை கலந்து இதயத்தை இன்பத்தில் மூழ்கடிக்கக்கூடிய இனிய பாடல்களாக எதுகை, மோனை என்பவற்றோடு உவமை, சொற்சுவை, பொருட்சுவை பொருந்திய அழகிய பாடல்களாக அமைந்துள்ளன.

நாட்டார் இலக்கியம் என்பது ஒரு நிகழ்வின்மீது பொதுமக்கள் கொண்டிருக்கின்ற உணர்வைப் பிரதிபலிக்கின்றன. இயற்கை அறிவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையுணர்வும் மிக்க கிராமிய மக்களின் உள்ளத்திலே எழும் உணர்ச்சிப் பெருக்கினால் உருவானவையே நாட்டார் இலக்கியமாகும். இவை ஏடும் எழுத்தாணியும் கொண்டு எழுதப்படுவனவல்ல. இவை பாமர மக்களின் உள்ளத்தின் உணர்வுகளை உயிராகக் கொண்டு காணப்படுபவை ஆகும்.



நாட்டார் இலக்கியங்கள் சமுதாயத்தின் ஓர் அம்சமாகவும் கலை யாக்க மரபுகள், விழுமியங்கள் என்பவற்றின் களஞ்சியமாகவும் உள்ளன. மனிதன் படைக்கும் ஏனைய பொருட்களைப் போலவே நாட்டார் இலக்கிய மும் காலதேச வர்த்தமானத்திற்கு கட்டுப்பட்டது. சமுதாய மாறுதல்களுக்கு ஏற்ப நாட்டார் இலக்கியம் மாற்றமடைகிறது. இம்மாறுதலைப் பிரதிபலிக்கும் வகையில் புதிய சிந்தனைகளும் உணர்ச்சிப் போக்குகளும் தோன்றுகின்றன.

நாட்டார் பாடல்களில் தாலாட்டுக்கள், ஒப்பாரிகள், கும்மிப்பாடல்கள், ஊஞ்சற் பாடல்கள், விவசாயப் பாடல்கள், கப்பல் பாடல்கள் எனப் பல வகைப்பட்டவையுள்ளன. இவை ஒவ்வொன்றும் பாடுவோரின் உள்ளங் களையும் கேட்போர் தம் இதயங்களையும் ஈர்த்திடும் சிறப்புக்குரியன. நாட்டார் இலக்கியங்கள் பிரதேசத்துக்கு பிரதேசம் வேறுபட்டுக் காணப் படுகின்றன.

மனிதனின் பிறப்புடனேயே நாட்டார் பாடல் ஆரம்பமாகிறது. குழந்தை பிறக்கும்போது "பேத்தி வாழ பேரன் வாழ பூட்டி வாழ பூட்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ" என மருத்துவிச்சி பாராட்டு வார். பின்னர் "ஆராரோ ஆரிவரோ என் கண்ணே நீ உறங்கு....." என்று தாய் தாலாட்டுப் பாடுவார். தொழிற்பாடலில் "ஏலேலோ ஏலேலோ கட்டுமரம் ஏறி...." என்று மீனவர் பாடுவார். ஒப்பாரிப் பாடலில் "பொன்னான மேனியில் ஒரு பொல்லாத நோய் வந்ததென்ன..." எனப் பெண்கள் ஒப்பாரி வைத்து அழுவார். இவ்வாறு நாட்டார் பாடல்கள் மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை பின்னிப் பிணைந்துள்ளன.



பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தை பாலித்திட வந்த மகாகவி பாரதியாரும் நாட்டார் பாடல்களில் உள்ளத்தைப் பறிகொடுத்து நின்றதை அவர் தம் கவிதை மூலம் உணர்த்தியுள்ளார்.

"நாட்டினிலும் காட்டினிலும்
நாள் எல்லாம் நின்றொலிக்கும்
பாட்டினிலும் நெஞ்சை
பறி கொடுத்தேன் பாவியே" என்று நாட்டார் பாடல்களின்
பெருமையை நமக்கு நன்கு உணர்த்தியுள்ளார்.

திரைப்படங்களிலும் நவீன நாடகங்களிலும் பக்திப் பாடல் ஒலி நாடாக்களிலும் சின்னத்திரைகளிலும், வானொலிகளிலும் உழைக்கும் மக்களின் ஊடறியா இலக்கியங்கள் உள்வாங்கப்படுகின்றமை குறிப்பிடப்படுகின்றது. பேராசிரியர் க. கைலாசபதி அவர்களின் பெரும் முயற்சியால் வித்தியலங்காரப் பல்கலைக்கழகத்திலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் தமிழ்பாடவிதானச் செயற்பாட்டில் ஒரு பயிற்சி நெறியாக நாட்டார் இலக்கியம் இணைக்கப்பட்டமை பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும்.அழகிய பொருள் நிறைந்த நாட்டார் இலக்கியங்களை அடுத்த தலைமுறைக்கு சிதைவுறாது எடுத்துச் செல்ல வேண்டும். இவை காலத்தால் அழியாது பாதுகாக்க கற்றவர்களும் மற்றவர்களும் முன்வந்து அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முரண்பாடு – தீர்வு

**திரு. சு. கணபதிப்பிள்ளை**
ஓய்வுநிலை அதிபர்,
கறுக்காய்த்தீவு, பூநகரி.

முரண்பாடு என்பது இரு நபர்களுக்கிடையே அலலது இரண்டுக்கு மேற்பட்ட நபர்களுக்கிடையே அல்லது குழுக்களுக்கிடையே ஏற்படும் உண்மையான அல்லது உணரப்பட்ட நிலைப்பாடுகள், நலன்கள், வரையறுக் கப்பட்ட வளங்களுக்காக போட்டியை ஏற்படுத்தப்படுகின்ற அல்லது மோதலை ஏற்படுத்துகின்ற செயற்பாடாகும்.

முரண்பாடு மொழி, இனம், மதம், பால், அந்தஸ்து, தொழில், பணம் போன்றவற்றினூடாக தோன்றுகின்றது. முரண்பாடுகளில் இருந்து விடுபட்டுக் கொள்ள வேண்டும். அதற்கு அவர்களுக்கிடையே உள்ள எதிரான எண்ணம் அல்லது நம்பிக்கை ஒரு சிக்கலான நன்மை ஏற்படுத்திக் கொள்ளும். அவர்களுக்கிடையே உள்ள மனப்பாங்கு அல்லது மனோநிலை சரியான நிலைப்பாடு, பண்புகள் அத்துடன் சம்பந்தப்படும் ஏனையவர்களின் தகுதிகள் அவர்கள் சொந்தமெனக் கருதும் உரிமைகள், அவர்களுடைய உரிமை களுடன் சேர்ந்து இலக்குகள், நலன்கள், தூண்டுதல்கள், செயற்பாடுகள் அவை மிக சரியாக இல்லாதபோது அவை சரியென கருதுவது மனோநிலையாகும். இவர்களுக்கிடையே நிலைமை தொடர்பாக, அல்லது மக்கள் தொடர்பாக அல்லது பிரச்சனை தொடர்பாக அல்லது செயற்பாடு தொடர்பாக உணரப்படு கின்ற நன்மையான / எதிரடையான மனவெழுச்சியாகும். இவர்களுக் கிடையே உள்ள நிலைமையை முயற்சிசெய்து தூண்டி விடுவதும் இவர்களுக் கிடையே உள்ள நிலைமையை முயற்சி செய்து தூண்டிவிடுவதும் இவர்களுக் கிடையே உள்ள அக்கறைகளையும், தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு அவர்களின் நிலைப்பாட்டை மாற்றி அமைப்பதற்கு நேரடியாக அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைமுகமாக தொடக்கி வைக்கப்படுகின்ற அதீத போட்டியுடைய ஆக்கிர மிப்பு அல்லது உணராத நிலையில் விரும்புகின்ற இலக்குகள், விளைவுகள் அல்லது மாற்றங்களை ஏற்படுத்துவது ஆகும். முரண்பாட்டுக்குரிய காரணங் களாக மேற்குறிப்பிட்ட விளக்கம் / நம்பிக்கை இன்மை, மனோநிலை, தூண்டுதல், உணர்வுகள் அல்லது மனவெழுச்சி நடத்தை இலக்கு அல்லது மாற்றம் என்பவற்றில் தங்கியுள்ளது.

முரண்பாடுகள் உறவு சார்ந்ததாக, தரவு சார்ந்ததாக, விழுமியம் சார்ந்ததாக, அமைப்பு சார்ந்ததாக, அக்கறை சார்ந்ததாக இருக்கின்றது. இதில் பொய்யான அல்லது தவறான முரண்பாடு உண்மையான அல்லது பொய்யான முரண்பாடு என்பன காணப்படுகின்றன. தவறான முரண்பாடு உறவு சார்ந்ததும், தரவு சார்ந்ததும், விழுமிய சார்ந்ததும் உருவாகும். பலவீனமான தொடர் பாடல், தவறான புலப்பாடு கடந்த கால உறவுகள் திரும்ப திரும்ப நடக்கும் நடத்தை இவை உறவுகள் சார்ந்ததாக காணப்படும். தவறான தகவல், தகவலில் பல்வேறு கருத்துக்கள், பல்வேறு முறைகளின் மதிப்பீடு தரவுகள் சார்ந்த முரண்பாடுகளுக்கு ஏதுவாகும். அன்றாடம் நடக்கும் ஒழுக்க விதிகள் சுயமான விளக்கம் பற்றி ஒழுக்க விதிகள், விழுமியங்கள் அடங்கும்.

மெய்யான முரண்பாடு அக்கறை சார்ந்த முரண்பாடு, பொருள் ரீதியான, செயற்பாடு ரீதியான, உள ரீதியானதாக ஏற்படும் அமைப்பு சார்பாக சமனற்ற அதிகாரங்கள் வளங்கள் சார்பாக காலம் சார்பாக பூகோள ரீதியான அமைப்புக்களின் நிலைமையை அறிந்திராமை அல்லது விளக்கமின்மை முரண்பாட்டுக்குக் காரணமாகும்.

சமூக சேவையில் ஈடுபடுவர்களுக்குள் முரண்பாடு ஏற்படும். சமூக சேவை இரண்டு பிரிவாக நடைபெறும். சமூக சேவை, சமூக வேலை எனப்படும். சமூக சேவையானது தற்காலிகமானது நீண்ட காலம் தேவை இல்லை. கல்வி அறிவு தேவையில்லை இது பற்றி பயிற்சி தேவையில்லை நிர்வாக திறன் தேவை இல்லை விளம்பரத் தன்மையானது.

சமூக வேலை என்பது அமைப்பு சார்ந்தது, நிரந்தரமானது. தொழில் ரீதியானது நீண்ட காலம் உடையது திட்டமிட்டு செயற்படல் நிர்வாகத்திறன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். தகுந்த பயிற்சி வேண்டும் பரந்த கல்வி அறிவு தேவை நன்நடத்தை, நிரந்தர தீர்வு காணுதல் உதாரணமாக ஆசிரியர்கள், கிராம சேவையாளர்கள், வைத்தியர்கள் சமூக சேவையாளர்கள் எனக் கருதப்படும். சமூக சேவையில் ஈடுபடுபவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியவை.

1. தனி நபர் பெறுமதி – மதிப்பு அளித்தல்
2. ஒருங்கிணைந்த ஆளுமை
3. தனிநபர் முன்னேற்றத்துக்கு வழிவகைகள்
4. ஒருவரில் ஒருவர் தங்கி இருத்தல்
5. தனிநபர் பொறுப்புடமை
6. ஏற்றுக்கொள்ளல்
7. தீர்ப்பு கூறாத மனப்பாங்கு
8. நோக்கம் சார் உணர்வுகள் வெளிப்படுத்தல்
9. உணர்வுகளின் கட்டுப்பாடு
10. இரகசியம் பேணல்

எனவே சமூகத்தில் அல்லது அமைப்பில் ஏற்படும். முரண்பாடுகளை நல்ல தொடர்பாடலை ஏற்படுத்தல். சிறந்த குழுக்களுக்கிடையே கலந்தாலோசனை நடத்துவதன் வழியாக எண்ணங்களையும், கருத்துக் களையும் நிலைப்பாட்டில் இருந்து விலகி நல்லதொரு தீர்வினை பெற்றுக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரச்சினைகளைத் தீர்த்தல்

**திரு. ஜெ. சதீஸ்குமார்**
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், பூநகரி.

## 1) பிரச்சினைகளைத் தீர்த்தல்

**ந**ம் இயல்புநிலையினைப் பாதிக்கக்கூடிய நிகழ்ச்சிகள், சம்பவங்கள் எல்லாவற்றையும் பிரச்சினை எனலாம். பொதுவாக பிரச்சினைகளை அதனுடைய காரணத்தின் அடிப்படையில் அகம் சார், குடும்பம் சார் மற்றும் புறம் சார் காரணிகள் என வகைப்படுத்தலாம்.

பிரச்சினை எப்பொழுதும் எங்களுக்கு மனரீதியாக துன்பத்தைத் தருவதுடன் குடும்ப சமூக ரீதியாக உறவுச் சிக்கலையும் ஏற்படுத்தும் பிரச்சினைகள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இழப்புக்களை ஏற்படுத்தக் கூடியன அதேபோல் கவலை துன்பங்பளையும் ஏற்படுத்துவதுடன் நிம்மதி யற்ற வாழ்க்கையையும் ஏற்படுத்தும்.

பிரச்சினைகளுக்கான காரணங்கள் எனும்போது பெரும்பாலான காரணங்கள் எமக்குள்ளேயே இருக்கின்றது. ஒருவருக்கு ஏற்படக்கூடிய பிரச்சினையால் தாக்கங்கள் உருவாவதற்கு முக்கியமாக செல்வாக்குச் செலுத்தும் காரணிகளில் ஒருவருடைய ஆளுமை மிக முக்கியமானது. இதே போல் ஒருவருடைய முடிவெடுக்கும் ஆற்றலும் திறனும் கூட பல பிரச்சினை களுக்கு அடிப்படையாக அமையும் தொடர்பாடல் திறனும் மிக முக்கியமான தாக அமையும்.

பிரச்சினைகளை ஆரோக்கியமாகத் தீர்க்க கற்றுக்கொள்பவர்கள் அதில் தேர்ச்சியடைந்து மகிழ்ச்சியோடும் நின்மதியோடும் வாழக் கற்றுக் கொள்கின்றனர். அத்தோடு எமக்கும் பிறருக்கும் உள்ள உறவை வளர்ப்ப தோடு உறவில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை தடுக்கவும் முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2) பிரச்சினையின் போது நடந்து கொள்ளும் முறைகள்**

பொதுவாக பிரச்சினைகள் ஏற்படும்போது மனிதர்கள் 4 விதமாக நடந்து கொள்ளமுடியும்.

1) அடி, உதை, போராட்டம்
2) ஓடிப்போதல்
3) உறைந்து போதல்
4) விரக்தியடைதல்

**தனி நபர் அல்லது குழுக்களுக்கிடையே பிரச்சினைகள் உருவாவதற் கான காரணங்கள்**

- ☆ எதிர்பார்ப்புக்கள்
- ☆ வெளிப்படைத் தன்மை இன்மை
- ☆ பாகுபாடு
- ☆ விடயங்களில் போதிய தெளிவின்மை
- ☆ வார்த்தைப் பிரயோகம்
- ☆ புரிந்துணர்வின்மை
- ☆ ஒற்றுமைக் குறைவு
- ☆ கருத்து முரண்பாடுகள்
- ☆ சில சட்டங்கள்
- ☆ தன்னம்பிக்கை அற்ற தன்மை
- ☆ அதிகாரப் போட்டி

**3) பிரச்சினையை தீர்ப்பதற்கான வழிமுறைகள்**

முதலில் பிரச்சினை என்ன என்பதை தெளிவாக இனங்கண்டு கொள்ளல் அல்லது வரையறை செய்ய வேண்டும். இனங் காணப்பட்ட பிரச்சினைகளில் எது முதலில் தீர்க்கப்பட வேண்டும் என தீர்மானித்தல். இனங்காணப்பட்ட பிரச்சினை தொடர்பான தகவல்களைத் சேகரிக்க வேண்டும். இனங் காணப் பட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வழிகளை படிப்படியாக மேற்கொள்ள வேண்டும். பட்டியலிடப்பட்ட தரவுகளில் மிகவும் சாத்தியப்படக்கூடிய வழிகளை முன்னுரிமை அடிப்படையில் ஒழுங்குபடுத்த வேண்டும். ஒழுங்கு படுத்திய முறையில் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4) நடை முறைப்படுத்தியதை மதிப்பீடு செய்தல்

தெளிவாக திட்டமிடுவதற்கு யப்பானியர்களின் "ஏழு புத்திசாலிகளை கலந்து ஆலோசியுங்கள்" (Consalt 7 men of intelligence) என்ற முறையை கடைப்பிடிக்கலாம்.

1) What

முதலில் பிரச்சினையை தீர்க்க நாம் என்ன செய்ய வேண்டும்?

2) Why

ஒரு வேலையில் இறங்கினால் அதை ஏன் செய்ய வேண்டும்? அதனை செய்வதால் .ஏற்படும் பயன்கள் யாவை என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

3) Who

இந்த வேலையை யார் யார் நேரடியாக செய்ய வேண்டும்? யாரெல் லாம் இதில் மறைமுகமாக ஈடுபட வேண்டும்? யார் யாருடன் பேச வேண்டும் என்ற விபரங்களை அறிய வேண்டும்.

4) Which

ஒரு வேலையை எடுத்துக்கொண்டால் அதிலே பல வழிமுறைகள் தோன்றும். அதிலே எவற்றை செய்ய வேண்டும்? எனத் தீர்மானிக்க வேண்டும்.

5) How

எடுத்துக் கொண்ட வேலையை எந்தெந்த வழியில் செய்தால் நல்ல விளைவுகள் தோன்றும் என்பதனை தீர்மானிக்க வேண்டும்.

6) When

எடுத்துக்கொண்டு வேலையை எந்த நாளில், எந்த நேரத்தில் செய்து, முடிக்க வேண்டும் என்பதை குறித்துக் கொள்ள வேண்டும்.

7) Where

எந்த நாட்டில்? எந்த ஊரில்? எந்த இடத்தில்? இது நிகழ வேண்டும் என்பதையும் தெளிவாகத் தீர்மானிக்க வேண்டும்.

### பிரச்சினைகளை எப்படி அணுக வேண்டும்

பிரச்சினைகளை எப்படி அணுக வேண்டும் என்பதற்கு உளவியலாளர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4D எனும் சூத்திரத்தை அடிப்படையாககக் கொண்டு ஒரு விளக்கத்தை கூறியுள்ளனர்.

Do - செய்

Delesate - மற்றவர்களை செய்யவை

Delay - தாமதப்படுத்து

Dum - ஒன்றும் செய்யாமல் கிடப்பில் போடு

## Do

சில பிரச்சினைகளை நாமே தீர்க்க வேண்டும். இந்த பிரச்சினையை என்னால் மட்டும் தானா தீர்க்கமுடியும்? வேறு ஆட்களுடைய துணை தேவையா? இந்த வேலையை என்னால் மட்டும் செய்யமுடியுமா? வேறு ஆட்களுடைய உதவியையும் நாட வேண்டுமா? எது எவ்வாறு இருப்பினும் சில பிரச்சினைகளை எப்பாடுபட்டாவது நாம் தான் தீர்க்க வேண்டும்.

## Delesate

எல்லாப் பிரச்சினைகளையும் எமது தோளில் தூக்கிப்போட்டு குளம்பிக் கொள்ளாமல் வேண்டாத சுமைகளை கழற்றிவிட வேண்டும். பிரச்சினையை தீர்ப்பதற்கு செய்ய வேண்டிய வேலைகள் அனைத்தையும், செய்ய வேண்டும் பின்பு எந்தெந்த வேலையை யார் யார் செய்யலாம்? இதற்கு யார் யார் முன்வருவார்கள்? யார் யார் பொறுப்புள்ளவர்கள்? என்று தீர்மானித்து அவர்களிடம் ஒப்படைக்கும்போது பல பிரச்சினைகளை மறைத்த லாகும்.

## Delay

சில பிரச்சினைகள் உருவாகும்போது உண்மைகள் மறைந்து வருவதுமுண்டு. உதாரணமாக வீட்டில் சின்னப் பிள்ளைகள் சண்டை போட்டுக் கொண்டால் நாம் நீதிபதியாக மாற வேண்டிய அவசியத்தை உணராது பிரச்சினையை தாமதப்படுத்தினால் அடுத்த கணம் அவர்கள் ஒன்றாக சேர்ந்து கொள்வார்கள்.

## Dum

நீங்கள் எந்த தவறும் செய்யாமலிருக்கும் போது யாராவது ஒருவர் ஒன்றைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிக் குறை கூறி இருந்தால் அதைக் கருத்தில் எடுக்காமல் கிடப்பில் போடுவதே நன்று. உயிர் அச்சுறுத்தல் கடிதங்கள் அன்றி கையொப்பமின்றி வரும் கடிதங்களைக் குப்பையில் போட்டு விடுவதே நல்லது.

**பிரச்சினையைத் தீர்ப்பதற்கான மேலும் சில முறைகள்**

- ☆ அறிவெளி[illegible]
- ☆ பிரார்த்தனை செய்தல்.
- ☆ விஞ்ஞான ரீதியான தீர்த்தல் முறைகளைப் பயன்படுத்தல்.
- ☆ தெளிவாகத் திட்டமிடல்.
- ☆ பிறருடன் கலந்து பேசுதல்.
- ☆ வளங்களை அடையாளம் காணல்.
- ☆ வேலைகளைப் பகிர்ந்து கொள்ளுதல்.
- ☆ பிரச்சினைக்கு சுய பொறுப்பேற்றல்
- ☆ ஆசிரியர் வழிவாய் படிப்பிக்காததால் தான் நான் பரீட்சையின் தோல்வியடைந்தேன்
- ☆ நான் சிறுவனாக இருக்கும்போது என்னைக் கண்டித்திருந்தால் நான் இன்று சிறையில் வாட மாட்டேன்.
- ☆ நான் நல்லவனாக இருந்தும் என்னை தம்மோடு சோர்த்துக் கொள்கிறார்கள் இல்லையே.
- ☆ நான் இப்படி மாறியதற்கு காரணம் என் குடிகார அப்பா தான்
- ☆ என் மனைவி அவனோடு தொடர்பு கொண்ட பின்பு தானே நான் இப்படி குடிகாரனாக மாறினேன்.

என்று என்றைக்கு நீங்கள் குழம்புகிறீர்களோ இன்றைக்கு ஒரு நிலைக்கண்ணாடி முன்னால் நில்லுங்கள் உங்கள் சிக்கலும் பிரச்சினை களுக்கு காரணம் என்று யாருமல்ல நாமே தான்.

எனவே மேற்கூறப்பட்ட அடிப்படையில் ஏற்படுகின்ற பிரச்சினை களை தந்திரத்தின் மூலமும் விட்டுக்கொடுப்பின் மூலமும் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளும் மூலோபாயங்களின் மூலமும் தீர்ப்பதன் மூலம் அமைதியைப் பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் வாழ்வியல் நவீனத்துவ கலாசாரத்தின் தாக்கம்

**திரு. வேல்நந்தகுமார்**
M.A. in Tamil, MEd
ஆசிரியர், யா/ஹட்லிக் கல்லூரி

**உ**லகின் தொன்மை மிகு சமூகங்களில் ஒன்றாக விளங்குகின்ற தமிழ்ச் சமூகமானவை தனக்கெனத் தொன்மையானதொரு மொழி, பண்பாட்டு இன, வாழ்வியல் அடையாளங்களைக் கொண்ட இனமாக விளங்கியது. இதனால் தான்.

"தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அதற்கோர் குணமுண்டு"

என்று கூறினர். சிவனால் அகத்தியருக்கும் பின் அவரால் தொல்காப்பிய ருக்கும் அருளப்பட்ட தெய்வீக மொழியான, செம்மொழியான தமிழ் மொழியை தம் தாய்மொழியாக கொண்ட சிறப்பு.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று அன்றைக்கே உலக ஒற்றுமையை வெளிப்படுத்திய சங்கம் சான்றோரின் சிந்தனைச் சிறப்பு, சங்க இலக்கியம் வழி வெளிப்பட்ட தூய காதல், வீர வாழ்வின் தரிசனங்கள், திருக்குறள் என்ற ஒப்பரிய உலகப் பொதுமறையாம் நீதி நூலை உலகிற்கே தந்தி சிறப்பு, பல்லவர் காலத்து பக்தி இலக்கியங்கள் வழி பக்தியின் மொழியில் தமிழ் மாறிய பெருமை, காப்பிய மொழியாகி கம்பனின் கவியால் கம்ப ராமாயணமாகிய சிறப்பு, பின் பாரதி கவிதைகளால் பிராண்ட பெருமையென ஒரு புறம் இருக்க மறுபுறமாய் ஒருவனுக்கு ஒருத்தியாய், இல்லறம் பூண்டு வந்தாரை வரவேற்று,விருந்தோம்பல் பேணி உழைப்பை நம்பி வாழ்ந்து உறவுகளைப் பேணி உயிர்த்திருந்தது எமது தமிழ்ப் பண்பாட்டு வாழ்வியல். ஆனால் இன்று நவீனத்துவ மேலைத்தேச கலாச்சாரத்தின் தாக்கத்தினால் எமது இனத்தின் வாழ்வியலிலும் பண்பாட்டிலும் நலம் எண்ணிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கமுடியாத அளவிற்கு நாகரிக மாற்றங்களையும் அதிர்ச்சியான காட்சிகளையும் கண்டு வருவது மிகவும் வேதனைக்குரியதாகும்.



ஒரு புறம் தமிழர் வாழ்வுக்காய் தமிழுக்காய் என்றைக்கோ பணி பல செய்து மறைந்தாலும் இன்றும் எம் நெஞ்சங்களில் வாழும் அறிஞர்களைப் போற்றுகின்ற இவ்வேளைதனில் இன்றைய நவீனத்துவ கலாசாரத்தின் தாக்கம் எமது வாழ்வியல் ஏற்படுத்தியுள்ள மாற்றங்களைப் பற்றி எண்ணிப் பார்ப்பது மிகவும் அவசியமாகின்றது.

இன்று நாம் மிகவும் வேறுபட்ட ஒரு உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உலகமயமாக்கச் சூழல் கொண்ட தகவல் தொழிநுட்ப யுகமாக இன்றைய எமது வாழ்வியல் மாற்றமடைந்துள்ளது. ஒரு காலத்தில் தமிழர் வாழ்வியல் என்பதை சில நிலப்பரப்புக்களுக்குள், சில விடயப் பரப்புகளுக்குள் வகைப்படுத்திக் கொள்ள முடிந்தது. ஆனால் இன்றைய நிலை அவ்வாறானதல்ல. எல்லைகள் தாண்டிய ஒன்றாக தமிழர் வாழ்வியலும் பண்பாடும் மாறிவிட்டன. உலகம் முழுவதும் தமிழர்கள் பரந்து வாழும் இன்றைய சூழலில் உலகமெங்கும் தமிழோசை கேட்கிறது. மகிழ்ச்சியென்றாலும், காலங்கடந்தும் உலகம் முழுவதும் தமிழ்ப் பண்பாட்டு வாழ்வியல் அதன் தனித்துவத்தோடும் தூய்மையோடும் இனி வருங் காலங்களிலும் பின்பற்றப்படுமா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

நவீனத்துவ கலாசாரம் என்பது தமிழர் வாழ்வியலுக்குள் 18ம், 19ம் நூற்றாண்டில் இருந்தே மேலைத்தேசத்தவரின் வருகையூடாகவே கலந்தது. அதற்கு முன் எம்மிடம் ஒரு தனித்துவமான, கலப்படமற்ற வாழ்வியலும் பண்பாடும் இருந்தன. ஆனால் அவை மேலைத்தேய நவீனத்துவத்தின் தாக்கத்திற்கு உட்பட்டு கலப்புப் பண்பாடாக, கலப்படப் பண்பாடாக மாறின. எமது மொழி மாறியது, எமது நடை மாறியது, எமது உடை மாறியது, எமது மரபுகள், பழக்கவழக்கங்கள் என்பனவும் மாறின. ஆயினும் இதற்குள்ளும் மதம் பரப்ப வந்த மேலைத்தேச பாதிரிமார் எம்மொழியை, அதன் பண்பாட்டு தனித்துவங்களைக் கண்டு வியந்து தமது பெயர்களை தூய தமிழ்ப் பெயர் களாக்கி தமிழிற்கு பல வழிகளிலும் தொண்டாற்றியுள்ளமையும் வியப்புக் குரியதொரு உண்மையாகும். இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட தகவல் தொழில்நுட்ப புரட்சியின் விளைவுகளும், கணினி, இணையத்தள, சமூக வலைத்தளப் பாவனைகளும், பெண்கள் அணியும் மேலைத்தேச ஆடைகளும் உலகமயமாக்கற் செயற்பாட்டு வழி நாகரிகம் என்ற போர்வையில் எமது தனித்துவ அடையாளங்களை சிதைக்கும் விடயங்களும், எமது புலம் பெயர் வாழ்வியலும் இன்று என்றுமில்லாத அளவிற்கு எமது தமிழ்ப் பண்பாட்டு வாழ்வியல் தனித்துவ அடையாளங்களை சிதைப்பதில் தாக்கம் செலுத்தி வருவதைக் காணமுடிகின்றது. இவற்றின் விளைவாக முற்று முழுதாக தீமையான எதிர்த்தாக்கங்கள் மட்டுந்தான் ஏற்பட்டுள்ளன என்று கூறிவிடமுடி யாது. இவை சில நல்ல விடயங்களையும் எமது வாழ்வியலுக்கு கொண்டு வந்து சேர்ந்துள்ளதையும் நாம் மறுக்கமுடியாது. இந்த வகையில் பின்வரும் விடயங்களைக் குறிப்பிடலாம்.

* எமது தாய் மொழியாகிய தமிழ்மொழி கணினி, இணையமொழி யாகி இன்று உலகெங்கும் வாழும் மொழியாகியுள்ள சிறப்பு.
* புலம்பெயர் தேசங்களிலும் எமது பண்பாட்டு வாழ்வியல்கள் கடைப் பிடிக்கப்படுகின்றமையும் அதனை அன்னியர் கூட அறிந்து வியப் பதும்.
* அச்சியந்திர வருகை மூலம் பத்திரிகைகள், சஞ்சிகைகள் தோன்றி இலக்கியப் பரவலாக்கம் ஏற்பட்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



* அகராதிகளின் தோற்றத்தின் மூலம் எமது மொழியின் சொற்களஞ்சியம் பாதுகாக்கப்பட்டமை.
* பிறநாட்டறிஞர்கள் செய்த தமிழ்த் தொண்டுகளால் தமிழ் நவீனத்துவம் அடைந்தமை.
* கல்வி பரவலாக்கம் ஏற்பட்டமை.
* நவீன சவால்களும் முகங்கொடுக்கும் ஆற்றலைப் பெற்றுக் கொண்டமை.
* உரை நடைத்தமிழ் எழுச்சி பெற்றமை.
* நவீன இலக்கிய வடிவங்களான நாவல், சிறுகதை போன்ற படைப்புக்களால் தமிழ் செழுமையுற்றமை.
* ஆங்கிலேயரது அதே உத்திகளை தமிழ் எழுச்சிக்கு பாடுபட்டவர்களும் கையாண்டமை.

  உ–ம்:– நாவலர் – பாரதியார் – நவீன கவிதை
* பெண்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட்டு பெண் விடுதலைச் சிந்தனைகள் முனைப்புப் பெற்றமை.
* பன்மொழிப் புலமை மிக்கவர்களை உருவாக்கியமை.
* பண்பாடு தொடர்பான மூடத்தனமான பின்பற்றல்கள் களையப்பட்டமை.
* தமிழரின் கல்வியிலும் பொருளாதாரமும் நவீன மயப்பட்டமை.
* உறவுகளை நெருக்கமாக்கியுள்ள நிலை

போன்றவற்றைக் குறிப்பிடலாம். நவீனத்துவ கலாச்சாரம் தமிழர் வாழ்வியலில் இன்று பெரிதும் ஏற்படுத்திவரும் எதிர்த் தாக்கங்களே இவை குறித்து வெறுப்புணர்வு மனப்பாங்குக்கு காரணமாய் அமைந்து விடுகிறது. எமது பண்பாடு அழிகிறதே என்ற ஏக்க உணர்வும் எமது தனித்துவ அடையாளங்கள் சிதைக்கப்படுகின்றனவே என எண்ணும் இனவுணர்வும் இதற்கு பெரிதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக அமைகின்றன. ஒரு உணர்வு தளத்தில் நின்றே பெரும்பாலும் இவ்விடயங்களை அணுகும் தன்மையும் அதிகமாகவுள்ளது. அந்த வகையில் பின்வரும் விடயங்களை குறிப்பிடமுடியும்.

✳ கலப்பு மொழிப் பண்பாடும், ஆங்கில மோகம் என்பவற்றால் தமிழ் மொழியின் தூய்மை கெடுக்கப்படும் நிலை.

✳ தமிழர்கள் தமக்கான பெயர் வைக்கும் முறை, ஆடைத் தெரிவுகள், உணவுப் பழக்க வழக்கங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள் என்ப வற்றை மறந்து மேலைத்தேச நவீனத்துவ விடயங்களை கையாள் கின்றமை.

உ–ம்:– கேக் வெட்டல், பாட்டி வைத்தல், வீடியோ கலாசாரம், செத்த வீட்டில் சோடா, திருமண வீட்டில் செல்ப் சேவிஸ் போன்ற வற்றைக் குறிப்பிடலாம்.

✳ நவீன கருவிகளான கைத்தொலைபேசி, கணினி, இணையம், முக நூல் போன்ற சமூக வலைத்தளப் பாவனை போன்றவற்றின் தவறான பாவனைகளால் இளையோரும், ஏனையோரும் பல்வேறுபட்ட உளவியல், பாலியல்சார் நெருக்கடிகளை சந்திக்கின்றமை.

✳ ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பாடு சிதைந்து இன்று அதுவும் மேலைத்தேச வாழ்வு முறையைப் போன்றாகி வரும் நிலை.

✳ இளைஞர்களிடமும் அதிகரித்து வரும் புகைத்தல் மற்றும் மது பாவனை.

✳ கருவிகளுக்கு அடிமையாகிப் போகும் நிலை.

✳ இளம் வயதிலேயே நோய் வாய்ப்பட்டு இறக்கும் நிலை.

✳ பெற்றோரை முதியோர் இல்லத்தில் வைத்து பராமரிக்கும் நிலை.

✳ குப்பைத் தொட்டிக் குழந்தைகளை பெற்றெடுக்கும் சில தாய்மாரின் நெறிப்பிறழ்வுகள்.

✳ பணத்தினால் எதையும் சாதிக்கலாம் என்ற வெளிநாட்டு மோகம்.

✳ எமது சமூகத்திற்கு பயன்பட வேண்டிய மூளைசாலிகளது வெளி யேற்றம்.

✳ தாய்மொழி, சுய பண்பாட்டை மறந்த ஒரு தலைமுறையின் உருவாக்கம்.

✳ உறவுகளில் ஏற்பட்டு வரும் விரிசல்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* நகர நாகரிக வாழ்வு என்ற போர்வையில் கிராமிய வாழ்வுப் பண்பாட்டை வெறுக்கும் நிலை.
* சமூக விழுமியங்கள், பெரியோர்களை மதிக்காத நிலை.
* சினிமா, தொடர்நாடக வழியான கலாசார தாக்கங்கள்



போன்ற பலவற்றைக் குறிப்பிடலாம். தமிழ் நாட்டுத் தமிழர், இலங்கைத் தமிழர், சிங்கப்பூர் மலேசியத் தமிழர், புலம்பெயர் தமிழர்கள் என உலகமெங்கும் தமிழர் வாழ்வு நெறி பரந்துள்ளபோதும் தமிழர் தமது பண்பாட்டை வாழ்வியல் காப்பதில் இன்றுவரை ஒன்றுபட்டு உழைக்காத நிலையே தொடர்கிறது. எளிதில் பிற பண்பாட்டை தழுவும் நிலையும் அதற்காக வேதனைப்படா நிலையுமே உள்ளது. இந்நிலை மாறவேண்டும். உலகிற்கே பண்பாட்டு வாழ்வியல் வழிகாட்டிய நாம் இன்று அதனை விழ விடலாமா? அதற்காக வெறும் உணர்ச்சியூட்டல்களும் வீண் பெருமைகளை மட்டும் பேசிப் பயனில்லை மாறியுள்ள காலச் சூழலுக்கேற்ப எமது பண்பாட்டைக் காக்க முன்வரவேண்டும்.

இன்றைய மாற்றம் சூழலில் இத்தகைய நவீனத்துவ பண்பாட்டு விடயங்களை நாம் முற்றுமுழுதாக புறந்தள்ளிவிடவும் முடியாது. அதே வேளை அவற்றை கண்மூடித்தனமாக பின்பற்றவும் முடியாது. இந்த இரு தலைக்கொள்ளி நிலையினுள் எமது பண்பாட்டு வாழ்வியலின் மேம்பாடு கருதி இவ்விடயத்தை எவ்வாறு நாம் கையாளவேண்டும் என்பது மிக முக்கியத் துவம் பெறுகிறது. அடிப்படையிலேயே நாம் எமது உள்ளூர்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரிப்புக்கள் Local என புறம் ஒதுக்கும் மனப்பாங்குடனும், வெளிநாட்டு நவீனத்துவ விடயங்கள் யாவுமே சிறந்தவை என ஏற்கும் மனப்பாங்குடனேயே வளர்க்கப் படுகிறோம். முதலில் இந்நிலை மாறவேண்டும். எமது விடயங்கள் மீதான பற்றுறுதியை நம்பிக்கையை கட்டியமைக்க வேண்டியது அவசியமாகும். அத்துடன் இதைக் கட்டுப்படுத்தும் விசை எம்மிடம் இல்லை என்ற போதும் கூட சில எமது சுயபாதுகாப்பு கருதி இவ் விடயங்களில் சில கரிசனையான கண்காணிப் புக்களை, கட்டுப்பாடுகளை, முன் மாதிரியான நடத்தை களை வெளிப்படுத்த வேண் டியதும் அவசியமாகும்.




மொத்தத்தில் ஒரு பல் பண்ணாட்டுச் சூழலில், பன்மொழிச் சூழலில் தகவல் தொழிநுட்ப, உலகமயமாக்கல் ஆதிக்கச் சூழலில் எமது மொழியையும், பண்பாட்டையும், வாழ்வியலையும் பாதுகாத்துக் கொள்வதற் காக எவ்வாறு எத்தகைய அணுகுமுறைக் கூடாக நாம் செயற்படவேண்டும் என்பதே, எத்தகைய கூட்டுப் பொறுப்புணர்வுடன் செயலாற்றவேண்டும் என்பதே எம்முன் உள்ள சவாலாகும். இதனை வெற்றி கொண்டு எமது சமூகத்தை நவீனத்துவ அறிவியற் சமூகமாகவும் அதேவேளை பண்பாட்டுணர்வுமிக்க அறிவியற் சமூகமாகவும் மாற்ற வேண்டியதே இன்று எம்முன்னுள்ள கடமையாகும்.'

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
யாதும் ஊரே யாவரும் கேளீர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா....."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விடியலை நோக்கி...

- சிறுகதை

**திருமதி ரேணுகா சக்திதாஸ் B.A.** (முழங்காவில்)
பிரதேச செயலகம்,
பூநகரி.

கிளிநொச்சி மாநகர் போருக்குப் பின்னும் தனக்கென ஒரு மிடுக்குடன் கம்பீரமாய் காட்சியளித்தது. சாலைகள் எப்பொழுதுமே உரித்தான பரபரப்புடன் அந்த இரவு 8.00 மணியிலும் வாகன நெரிசலால் நிரம்பியிருந்தது. டிப்பர் வாகனங்களும் சுமைகளுடன் ஒன்றுக்கொன்று சளைக்காத வேகத்துடன் விரைந்து கொண்டிருந்தது. மணல் ஏற்றிக்கொண்டு சென்ற டிப்பர் றைவர் சிவாவும் ராஜாவும் டிப்பரை ஓரம் கட்டிவிட்டு தேநீர் அருந்திக் கொண்டிருந்தார்கள்.

பலரும் இருந்த இந்த தேனீர்சாலையில் நடுத்தர வயதினர் நான்கு பேர் கூடியிருந்து டிப்பரும் மோட்டார் சைக்கிளும் மோதி இருவர் இறந்த சம்பவம் பற்றி காரசாரமாக விவாதித்துக் கொண்டிருந்தார்கள். “காப்பெற் போட்டதுதான் போட்டாங்கள் இவங்கள் வாகனம் ஓடுமாப்போலயே ஓடுறாங்கள்? மோட்டச்சைக்கிள்ள உள்ள சின்னப்பெடியள் போற போக்கு. அவங்கள் மட்டுமே ஸ்கூட்டி என்று உந்தப் பொம்பிளப் பிள்ளையளெல்லாம் படுறபாடு பாக்கிறம்தானே.” ஒருவர் அங்கலாய்தார். “என்னண்ணை செய்யிறது. பிள்ளையள பள்ளிக்கூடம் ஏத்தியிறக்கிறது. வேலைக்கு போறது எல்லாத்துக்கும் பொம்பிளையள் தானே போகவேணும்” என்றார் இன்னொருவர். “சரியடாப்பா ஓடுறதும் ஓடுகினம் நல்லா பழகியே ஓடுகினம். ஏதோ எப்பிடியோ லைசென்ச எடுத்து போடுவினம். சிலதுகளுக்கு அதுகுமில்ல. மோட்டச்சைக்கிள் வாங்கி அடுத்தநாளே மெயின் றோட்டுல 60வதில போவினம். பாத்தியே” “ஓமண்ண அதுசரிதான்.” “ அதவிட தம்பி இந்த டிப்பர்காறங்கள் செய்யிற அநியாயம் கொஞ்சமே” போட்டிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடுறாங்கள். குடிச்சுப்போட்டு ஓடுறாங்கள். ஆன அவங்களுக்கு ஒண்டுமில்ல. றோட்டில போற அப்பாவியள் தானே பலியாகுதுகள்" உரையாடல் நீண்டது.

ஓரமாய் இருந்து தேனீர் அருந்திக்கொண்டிருந்த சிவா, ராஜா வின் காதுகளிலும் இந்த உரையாடல் நாராசமாய் பாய்ந்தது. ராஜா " டிப்பர் காறனெண்டா இவங்களுக்கு என்ன இளப்பமே. தாங்க ஒழுங்கா வண்டிய ஓட வேண்டியது தானே. சும்மாவிட்டா சரிவராது." என்று சொல்லியபடியே எழுந்தான். சிவா அவன் கையை எட்டிப்பிடித்தான். "முதல் வெளியில போவம் வாடா மச்சான். இதுல கதைக்கவேணாம். எங்களப்பற்றியே கதைக்கினம். பொதுவான விசயத்த கதைக்கினம். வா போவம்" என்று வெளியில் இழுத்துக் கொண்டு போனான்.



வாடா மச்சான் இந்த மரத் துக்கு கீழ கொஞ் சம் இருந்துவிட்டு போவம் என்று சிவா கூற இருவரும் "தன் கீழ் அமருபவர்கள் சில வேளை நாளை தன்னை அழிக்கலாம் என்று நினைக்காது வஞ்சமின்றி அனைவருக்கும் அடைக்கலம் கொடுத்த ஆலமரத்தின்" கீழ் அமர்ந்தார்கள்.

"ஏன்டா ராஜா உனக்கு இவ்வளவு கோபம் வருது. நடக்காததையே அவையள் கதைக்கினம். நிறைய டிப்பர் றைவர்மார் இப்பிடித்தானே நடக்கினம்" என்று சிவா கூறினான். "இப்ப நீ என்ன சொல்லவாறே? நீ குடிகாறன். தறுதலை. ஒன்றில்ல மூன்றுதரம் அக்சிடன்ற் பண்ணி பிணையில வெளியில வந்தவன்தானே. இவனுக்கென்ன கோபம் வரவேணும்." இப்பிடி நினைச்சு தானே சொல்லுறாய். கவலப்படாத. உன்ன பிணையெடுக்க கேட்கமாட்டன்" ராஜா கத்தினான். சத்தமாக இல்லை. ஆனால் ஆக்ரோசமாய் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன்டா மச்சான் இப்படி விசர்கதை கதைக்கிறாய். அப்பிடியே நான் உன்னோட பழகிறன்" சிவா சமாதானம் சொன்னான். " ஏன்டா இப்பிடி குடிச்சு குடிச்சு உன்ன அழிக்கிறாய். வீட்டுக்கு கொடுக்கிற காசு இப்பத்த நிலவரத்தில காணுமேடா. இல்லாட்டாலும் மிச்சம் பிடிச்சு சீட்டுகள் கட்டி பாங்கில போட்டு வேற தொழில் செய்யிறத்துக்கு பாக்கலாம் தானேயடா. உனக்கு நான் எத்தின தரம் சொல்றன் நீ கேக்கிறமாதிரி தெரியேல்ல. மோட்டு ஓட்டம் ஓடுறாய். அதில ஆக்கள் அடிபட்டு காயப்பட்டு, இறந்து போனா உனக்கும் தானேயடா பாவம். உன்னாலதானே இப்பிடி நடந்தது என்று உனக்கும் நிம்மதி இருக்காது." சிவா சொல்லிக்கொண்டிருந்தான். "காணும் நிப்பாட்டு. என்னபாவம்? முள்ளிவாய்க்கால்ல பிணங்கள மிதிச்சுக்கொண்டு போனத மறந்து போனியே? அதுக்கெல்லாம் பாவம் பாத்தவங்களே. சும்மா தத்துவம் பேசுறாய். பாவம் எண்டு சொல்லாத தலையெழுத்துப்படி நடக்குது. அதுக்காக ஆரேன் வந்து அடிபட்டா நான் ஏன் கவலைப் படவேணும். இஞ்ச எவன் குடிக்காம இருக்கிறான்." கத்தினான் ராஜா. இவனது மனநிலை சரியான விரக்தியில் இருக்குது. இவன் பாதிக்கப்பட்டு ஆழ்மனசில ஈரமில்லாதவனா வந்திட்டான். அதாலதான் தன்னைதானே அழிச்சுக் கொண்டிருக்கிறான். ராஜாவைப் பற்றி தெரிந்த சிவாவுக்கு சிந்தனை ஓடியது. அவனுக்குள் இருக்கும் நல்ல மனதை பழையபடி வெளியில கொண்டு வரவேணும். குடிய மறக்க பண்ணவேணும். இதுக்கு சரியான ஆள் சாந்தி யக்தில வேலைசெய்யிற நம்மட ஜோசேப் தான். இவனுக்கு தெரியாம அவரோட இவன கதைக்கப் பண்ண வேணும். என்று நினைத்துக் கொண்டான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனத்த கொண்( வி டுடிட்டு மோட்டார் சைக்கள் எடுத்துக் கொண்டு போன சிவா ராஜாவை வா என்று கேட்கவில்லை. அவனுக்கு தெரியும் அவன் நேர வீட்டுக்கு வரமாட்டான். காசு அரைவாசி செலவழிச்சு முடியத்தான் வீட்ட போவான். சிவா வீட்டை நோக்கி விரைந்தான். அவனது மனம் ராஜாவைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தது. வீட்ட போனா திரும்ப வெளிக்கிட அசதியா இருக்கும். இப்படியே போற வழிதானே. ஜோசேப்பையும் பார்த்திட்டு போவம் என நினைத்துக் கொண்டான். வரலேற்றாகும் என்டு போன்பண்ணி வீட்ட சொல்லிவிட்டு ஜோசேப் வீட்ட நோக்கி விரைந்தான் சிவா.

சிவாவைக் கண்ட ஜோசேப் "அட சிவா. என்னடா கனகாலத்துக்கு பிறகு." முகஸ்துதியாய் விசாரித்தான். " ஓமடா மச்சான் பறுவால்ல" என்று தான் வந்த விடயத்தை சொல்லி முடித்தான். "சரியடா மச்சான் நான் அவன சந்திக்கிறன். வழமையா நீங்கள் கடுதாசி விளையாடுற இடத்துல எதேச்சையா சந்திக்கிற மாதிரி பாப்பம்" என்றான். " நல்ல விசயமடா. முதலும் நீ சொன்ன பாலன் இப்ப குடியெல்லாம் விட்டு நல்லமாதிரி இருக்கிறான். நீ செய்யிற இந்த வேலை எத்தினையோ பேருக்கு நன்மை செய்யுது." என்று சொல்லியபடி முதுகில் தட்டினான் பாலன். "ஓமடா அவங்கள் தப்புச் செய்தோண்ண கோட்சுக்கு போறது, ஜெயில்ல போடுறது, பிறகு பிணையில வாறது. இதெல்லாம் திரும்ப திரும்ப நடக்குது. அவங்கள மாத்திற மாதிரி தெரியேல்ல. மாறா இன்னும் அவங்கள் பயம், வெட்கம் இல்லாம திரும்ப தப்பு செய்ய தயங்கிறதில்ல. நான் ராஜாவ போல எத்தின பேர பாக்கிறன். அவங்களுக் குள்ளயும் இருக்கிற மனுசத்தன்மைய வெளியில கொண்டு வரவேணும் ஜோசேப். சிவா ஆத்மார்த்தமாய் உணர்ந்து கூறினான். "இவன் கவுண்சிலிங் படிக்கேல்ல. சாதாரண டிப்பர் றைவர். ஆனா இவனுக்குள் இருக்கிற உணர்வு உன்னதமானது" என நினைத்து பெருமைப்பட்டான் ஜோசேப். "சரியடா மச்சான் . சாந்தி தேடுவாள். நான் போயிட்டு வாறன்" என விரைந்தான் சிவா. இனி ராஜா மாறுவான். இன்றல்ல நாளையல்ல. காலம் அவனை மாற்றும். அதை ஜோசேப் பார்த்து கொள்ளுவான். என மனதுக்குள் நிம்மதியுற்றவனாக வீடு நோக்கிச் சென்றான் சிவா.

# திருந்திய உள்ளம்

## - சிறுகதை

**திருமதி சரஸ்வதி சுந்தரமூர்த்தி**
ஓய்வுநிலை அதிபர்,
கறுக்காய்த்தீவு, பூநகரி.

அன்று சனிக்கிழமை காலை 8.30 மணி இருக்கும். வானம் கறுத்து இருண்டு இருந்தது. இன்னும் சொற்ப வேளையில் மழை மணிக் கணக்காகப் பெய்யும் என எதிர்பார்க்கலாம். அந்த அளவுக்கு வானிலையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. சுந்தரம் தன் ஆட்டோவைத் தினம் கொண்டு சென்று சந்தையில் வைத்திருப்பான். பஸ்சில் வரும் பயணிகளும் சந்தையில் சாமான்கள் வாங்க வருபவர்களும் அடுத்து வரும் பஸ்சுக்காகக் காத்திராமல் ஆட்டோவை வாடகைக்கு எடுப்பார்கள். அன்று சனிக்கிழமை யும் சுந்தரம் ஆட்டோவைச் சந்தைக்குக் கொண்டு சென்றான். கடும் குளிர் காற்றுச் சில்லென்று வீசியது. தெருவோரம் மரங்களிலிருந்து பூக்கள் இலைகள் பறந்தன. "சோ" என்ற பேரிரைச் சலுடன் பெருமழை கொட்டு கொட்டென்று கொட்டியது எங்கும் ஓரே வெள்ளம் வழிந்தோடியது.

சுந்தரம் சந்தையின் சாலை ஓரம் ஆட்டோவை நிறுத்தி வாசல் சீலையை அடைத்துவிட்டு முன் கண்ணாடியூடாகத் தன் பார்வைச் செலுத் தினான். ஒரு வியாபாரி தன் விற்பனைப் பொருட்கள் அனைத்தும் தண்ணீரில் மீது ஓடச் சிரமப்பட்டு அவற்றை ஒவ்வொன்றாக பொலித்தீன் பைகளில் போட்டு மூடிக் கட்டி வைப்பதை அவதானித்தான்.

அந்த நேரத்தில் சுந்தரத்துக்கு ஓர் எண்ணம் தோன்றியது. "இந்த நேரத்திலும் அந்த வியாபாரி நனைகின்றானே எனக் கென்னவோ ஒரு போத்தல் சாராயம் (குடிபானம்) வாயில் ஊற்றியதால் குளிர் பறந்து விடும். இதுதான் எனது எண்ணம்" என்று சிந்தித்தான் இருந்தாலும் அந்த வியாபாரி மேல் ஒருவித இரக்கம் ஏற்பட்டது. இதனால் தன் ஆட்டோவை மெதுவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வியாபாரியின் கிட்ட ஓட்டிச் சென்று வண்டியை நிறுத்தினான் சுந்தரம். "ஓய் வியாபாரியே உமது நனைந்த பொருட்களை எல்லாம் பத்திரமாக வண்டியில் ஏற்று" என்றான். சற்றும் எதிர்பாராத வியாபாரி திகைத்து "தம்பி நீங்க" என்று தடதடத்தார். சுந்தரம் இடைமறித்து "உங்க வீட்டுக்குக் கொண்டந்து தாரேன் பயம் வேண்டாம். பொருட்களை ஏற்றிய பின் நீங்களும் ஏறி உட்கார்ந்து கொள்ளுங்கள்" என்றார் சுந்தரம்.

வியாபாரியும் கடவுள் துணை என்று எண்ணியவாறு ஏற்றிய பொருட்களுடன் ஈரச்சறத்தோடு வண்டியில் ஏறி இருந்தான். ஆட்டோ புறப்பட்டது அப்போது றைவர் சுந்தரம் வியாபாரியுடன் சில கேள்விகள் கேட்கத் தொடங்கினார். "நீங்கள் சந்தைக்குப் போகும் முன் என்ன உணவு சாப்பிட்டு விட்டு வருவீர்கள்? வியாபாரியின் கண்களிலிருந்து கண்ணீர் மல்கியது. "ஐயா நானும் மனைவியும் இரண்டு வருடங்களாக காலை உணவு உண்ப தில்லை. எனக்கு இரண்டு ஆண்பிள்ளைகள் உண்டு. அவர்கள் படிக்கிறார்கள் என்றான் வியாபாரி. "சரி மழை வருவது தெரிந்தும் வீட்டுக்குப் போவதற்கு நீங்கள் ஏன் நினைக்கவில்லை? நன்றாக நனைந்து விட்டீர்களே" என்று சுந்தரம் கேட்டான். அதற்கு வியாபாரி "ஆம் தம்பி இன்று காலை எனது இளைய மகனின் கால் சப்பாத்து பிஞ்சு போனதால் வேறொன்று வாங்க நினைச்சேன் 5, 6 ரூபாய் இன்னும் தேவைப்பட்டது. ஆதலால் அதைத் தேடத்தான் இருந்தேன். மழை பெருத்துவிட்டது நீங்கள் இல்லை என்னா நான் என்ன செய்வேன் தம்பியைக் காட்டியது கடவுள் தான்" என்றான் வியாபாரி பொறுமையாக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குள் சுந்தரத்துக்குத் தொலைத்தொடர்பு வந்தது. தொடர்பு எடுத்த சுந்தரம் "ஹலோ சண்முகா! நான் அயர் ஏற்றிக் கொண்டு சாவகச்சேரி ஆஸ்பத்திரி றோட்டிலே போகின்றேன்" என்றார். "டேய் சுந்தரம் வெளி நாட்டிலிருந்து மாமா வந்து விட்டார். பலவிதமான குடி வகைகள் எல்லாம் கொண்டு வந்தார். தாமதியாமல் விரைவில் வந்துவிடு காத்திருப்பேன்" என்றான் சண்முகன்.

சுந்தரத்துக்குக் குழப்பமாக இருந்தது. வியாபாரியின் நினைவில் ஆட்டோவை ஓட்டுகின்றான். வியாபாரி தன் இருப்பிடம் சாவகச்சேரி ஆஸ்பத்திரி வீதி, சப்பச்சி மாவடி ஒழுங்கை என நாக்குத் தளதளக்கக் கூறினான். ஆட்டோ வியாபாரியின் இருப்பிடத்தில் போய் நின்றது.



வியாபாரியின் வரவை எதிர்பார்த்திருந்த வியாபாரியின் மனைவி ஓடோடி வந்தாள். தொடர்ந்து பிள்ளைகளும் வந்தார்கள். அப்பா நன்றாக நனைந்து உடைகளும் ஈரம் என்று கூறிக் கொண்டு ஆட்டோவில் உள்ள பொருட்களை இறக்கினார்கள். சுந்தரம் வியாபாரியின் பெயரைக் கேட்டதும் "வியாபாரி எனது பெயர் கணபதி என்று கூறிக் கொண்டு சரி சரி உள்ளே வாங்க தம்பி சூடாகக் காப்பி குடிச்சிட்டுப் போகலாம்" என்று பரிந்துரைத்தான் வியாபாரி கணபதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபாரியின் நடத்தைகளையும் மனைவி பிள்ளைகளின் அன்பையும் கண்ட சுந்தரம் ஏதோ மனமாற்றம் அடைந்தவனாக எனது மனைவி குமுதாவும் மகள் யமுனாவும் எனக்கு இப்படி அன்பு காட்டுவதில்லை. மாறாகக் குடியினாலேயே என்னைக் கெடுத்துக் கொண்டிருக்கின்றேன். இந்த வியாபாரி கணேசனோ தன்னை ஒறுத்து தன் மனைவி மக்களுக்காக வாழ்வதால் தான் மனைவி மக்கள் கணேசனிடம் அன்பு, பாசம் உள்ளவர்களாக இருக்கிறார்கள் என எண்ணினான். மீண்டும் தொலைபேசி மணி ஒலித்தது. "ஹலோ சுந்தரம் வாடா மச்சான் வாடா ஏன் தாமதம்? விரைவில் வந்துவிடு உனக்காக காத்திருக்கின்றேன்" இது சண்முகனின் குரல்.

இதைக்கேட்ட சுந்தரம் மிகவும் உறுதியாகவும் துணிவாகவும் "சண்முகம் இனி நான் திருந்திவிட்டேன் இனி மதுபோதையில் நான் வாழ மாட்டேன்" என்று கூறித் தொடர்பைத் துண்டித்தான். பின்பு வியாபாரி கணேசனிடம் தனது சட்டைப் பையில் இருந்த ரூபா 10000 ஐயும் கொடுத்தான். வியாபாரியோ தயங்கியவராய் விலகி நிற்க முயன்றபோது சுந்தரம் வியாபாரியைப் பார்த்து "பெரியவரே! இன்றுடன் நான் திருந்தி விட்டேன் இப்பணம் எனது மனைவி மக்களுக்குச் சேரவிடாது நானே குடித்து அழிக்கும் பணமாகும். உங்களுக்கு நல்ல நிலையில் இப்பணம் உதவட்டும். மீண்டும் இதுபோல் நான் உழைக்கும் பணம் யாவும் எனது குடும்ப நலனுக்காகச் சேர்ப்பேன். இது உறுதி உங்கள் குடும்ப நிலைமைகளை அறியும் வாய்ப்பினால் நான் திருந்திவிட்டேன்" என்று கூறி நீங்கள் அழைத்தபடி உங்களிடம் காப்பி அருந்திவிட்டு விடை பெறுகின்றேன் என்று கூறினான் . திருந்திய உள்ளம் கொண்ட சுந்தரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெள்ளை உடை அழகுகளே கேளுங்கள் – பாடல்

பூநகர் கவிப்பிரியா
நல்லூர்,
பூநகரி.



01. சின்னச் சின்ன மழலைகளே எழுதுங்கள் – உங்கள்
சின்ன விரல் தொட்டு நீங்கள் எழுதுங்கள்
வண்ண வண்ண எழுத்துக்களைப் பொறியுங்கள – அதன்
வடிவழகைப் பார்த்துப் பார்த்து ரசியுங்கள்.

02. பாட்டு விரல் தொட்டெழுதிப் பழகுங்கள்
பார்ப்பவர்கள் மெச்சும்படி எழுதுங்கள்
மொட்டலரும் மலரைப் போன்றோர் கேளுங்கள்
முன்னேற்றம் கண்டிடலாம் படியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. கல்வி கற்கும் காலமதை உணருங்கள்
கடமை என்று உணர்ந்து நிதம் படியுங்கள்
துல்லியமாய் அறிவு பல தேடுங்கள்
தூயவராம் மாணவரே கேளுங்கள்

04. அம்மா, அப்பா சொற்கேட்டு நடவுங்கள்
ஆசிரியர் வழிகாட்டல் நாடுங்கள்
தப்பேதும் செய்யாமல் வாழுங்கள்
தரணி எங்கும் ஒளியேற்றி மகிழுங்கள்.

05. பள்ளியிலே பாடம் பல படியுங்கள்
பண்பற்ற செயல்கள் எல்லாம் அகற்றுங்கள்
நண்பர்களை நல்லவராய் மாற்றுங்கள் – நீங்கள்
நாகரீகமானவராய் வாழுங்கள்.

06. ஓடி, யாடி, பாடி நீங்கள் படியுங்கள்
ஒழுக்கமுள்ள மாணவராய் திகழுங்கள்
தேடி நூல்கள் பல கற்று உயருங்கள்
செய்கை முறை கல்வியையும் விரும்புங்கள்.

07. கல்வி கற்கும் காலமது அருமைதான் – அதை
கண்டபடி தவறவிடல் கொடுமை தான்
வெல்லும் வழி காட்டுவது கல்வி தான் – அதை
உள்ளமதில் பதித்துக் கொள்பவர் நீங்கள் தான்.

08. அன்புடைய மாணவரே கேளுங்கள்
ஆசிரியர் சொல்லுகிறேன் கேளுங்கள்
வெள்ளை உடை அழகுகளே கேளுங்கள்
வெற்றி எல்லாம் உங்களிடம் உணருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. பொறுமையுள்ள மாணவர்கள் பொக்கிஷம்
புதியவற்றை தேடுபவர் அற்புதம்
கருணை மிகு மாணவர்கள் கண்ணியம்
கருத்தாடல் செய்பவர்கள் உன்னதம்.

10. சோம்பல் எல்லாம் துடைத்தெறிந்து பாருங்கள் – ஆசிரியர்
சொல்பவற்றை ஆய்ந்து நிதம் படியுங்கள்
வீம்பு செய்யும் குணங்கள் எல்லாம் அகற்றுங்கள்
வித்தகராய் நாட்டில் நீங்கள் நிமிருங்கள்.

11. அடி தடிகள் செய்ய வேண்டாம் மாணவரே – நீங்கள்
அழகான முத்தாரம் போன்றவரே
குடி வெறிகள் செய்ய வேண்டாம் மாணவரே – நீங்கள்
குத்து விளக்காகி ஒளி தருபவரே.

12. பாசமுள்ள மாணவரே கேளுங்கள் – உம்மில்
நேசமுள்ள ஆசிரியர் நாம் சொல்கின்றோம் நம்
தேசமெங்கும் உங்களாலே அழகுற – நீங்கள்
செய்ய எண்ணும் காரியங்கள் சொல்லுங்கள்.

13. இன்னும் என்ன சொல்ல வேண்டும் கேளுங்கள்
இனிய எங்கள் செல்வங்களே கேளுங்கள்
கண்ணியமாய் அணைத்தபடி சொல்லுவோம் – எங்கள்
கரங்களுக்குள் வந்து நீங்கள் சேருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏங்கித் தவிக்கின்றோம்...

புலோலியூர்
இளங்கோதாசன்

பண்பாட்டின் விளை நிலமே
பார் போற்ற வாழ்ந்த வாழ்வே
எங்கே நீ இன்று
ஏங்கித் தவிக்கின்றோம்

ஏணிகளைத்
தொலைத்து விட்டு
படிகளில்
நின்றழுகின்றோம்



பண்பாட்டு விழாக்கள்
நடந்துமென்ன – எம்
பண்பாட்டை
வீழாமல் காக்க



முடியவில்லையே
ஏக்கங்கள்
சுமந்தபடி மனங்கள்
கத்தியை தூக்கவே



கனதூரம் யோசித்த
மண்ணில்
இன்று கண்டதற்கெல்லாம்
வாள் வெட்டென்றால்

பெற்றோரை பிழை சொல்வதா
பிள்ளைகளில் பிழை காண்பதா
பற்றி எரிகிறது நெஞ்சு
கணினி காண்போன்

கருவிகளை நச்சு விதைகளாக்கி
நாசமாகிப் போகிறது
நம் வாழ்வு
தடியிழந்த ஆசிரியம்

வழிகாட்டல்கள்
தவறி வாய்க்கால்களை
இழந்துபோன வாழ்விங்கு
மடையிழந்த வெள்ளமாய்ப்

பாய்கையில்
கண்கெட்ட பிறகேன்
எமக்கு சூரிய வணக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியவர் இல்லத்திலிருந்து ஒரு முனகல்....

செல்வி குணநாதன் சசிகலா
கிராஞ்சி,
சிவபுரம்

தோளோடு தோள் சாய்ந்து
தோகை மயில் உனை சீராட்டி
பத்திரமாய் வளர்த்தெடுத்து
பாசத்தை ஊட்டி விட்டேன்



பரிதவிக்க வைத்து விட்டாய்
பள்ளி வரை அழைத்து வந்து
பாங்குடனே நான் அனுப்ப
பாதி வழி போகும் முன்னே

கண் கலங்கி நீ நிற்க
கதி கலங்கி நான் நின்றேன்
கண்மணி நீ மறந்தது ஏனோ!
கல்லூரிக்கு உனை அனுப்பி

கதவோரம் மறைந்து நிற்க
கதறி அழுத காட்சி எனை
குற்றுயிராய்க் கொன்றது அன்று
முட்கம்பி வேலிக்குள்ளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கிய சிட்டாய்
முள்ளந்தண்டு வலிக்க
வாசலோரம் காத்துக் கிடக்கிறேன் – இன்று
கட்டுடல் தளர்ந்து

கைகால் வளைந்து
கவலை நேர்ந்து
கண்கள் கலங்க
காத்துக் கிடக்கின்றேன்

பெற்ற மனம் பித்து – ஆனால்
பிள்ளை மனம் கல்லடா மகனே!
உன் மகவும் உனை
வயதானதும் வயோதிபர் இல்லம் – எனும்

சிறைதனிலே சிக்காது இருந்தாலே போதும்
அப்பொழுது புரிவாய் தந்தை மகன் உறவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூநகரியில் சிறுவர் அரங்கச் செயற்பாடுகளும் கற்றல் கற்பித்தலில் சிறுவர் அரங்கின் சிறப்பியல்புகளும்


**பொ. விஜயநாதன்**
கலைமுதுமாணி - தமிழ் கல்விமாணி
கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா
சேவைக்கால ஆசிரிய ஆலோசனை
வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி.


சிறுவர்களிடையே இறுக்கமான நிலையினைக் களைவதற்கும் இலகுவானது சுகந்திரமானதுமான மனநிலையைச் சிறுவர்களிடையே ஏற்படுத்துவதும் சிறுவர் அரங்கச் செயற்பாடுகள் மிகமிக சிறந்ததாக ஆய்வறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வகையில் இவ் அரங்கச் செயற்பாடுகள் மாணவரின் தேர்ச்சியினை அதிகரிக்கக்கூடிய தயார்நிலையினை மாணவர்க்கு ஏற்படுத்த உதவுகின்றது. அதுமட்டுமல்லாது உடனடியான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கக்கூடிய செயற்திறனையும் ஏற்படுத்துகின்றது. அத்துடன் மாணவர்களிடையே பிணைப்பையும் நற்பண்பு களையும் முதிர்ச்சியையும் ஏற்படுத்துகின்றது. ஒன்றிணைந்து செயற்படு வதற்கும் அழகியல் ஆற்றல்களை வளர்த்தெடுப்பதற்கு எல்லாவற்றுக்கும் மேலாக பிள்ளையை பிள்ளைபோல் செயற்பட வைப்பதற்கும் ஆசிரியர் களுக்கு சிறுவர் அரங்கச் செயற்பாடுகள் பெரும் உதவியாகின்றது.

அந்த வகையில் சிறுவர் அரங்கச் செயற்பாடுகள் 1990 மார்கழி மாதம் கிளி/பூநகரி மத்திய கல்லூரியில் அப்போதைய கல்விப்பணிப்பாளர் திரு.க.கந்தசாமி அவர்களால் கலாநிதி க.சிதம்பரநாதன் தலைமையிலான யாழ் பல்கலைக்கழக அரங்காற்றுகைக்குழு மையங்கொள்கின்றது. இவர்களுடன் கலாநிதி ஸ்ரீகணேசன், ரவி, வர்ணராமேஸ்வரன் ஆகியோருடன் மாதிரி மாணவர்களால் அ.ரவி, விந்தன், தர்மானந்த சிவம், விமலநாதன் ஏற்கனவே கிளிநொச்சி மத்திய கல்லூரியில் பயிற்சி பட்டறையில் துலங்கிய விஜயநாதன் என்போருடன் பூநகரிக்கோட்ட ஆசிரியர்களுக்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் அரங்கம், நவீன அரங்க பயிற்சிப்பட்டறை முதலியன 1 வாரம் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன.



இந்த செயற்பாட்டு பட்டறையின் விளைவாக பூநகரியில் பாடசாலைகளிலும் சிறுவர் அரங்கச் செயற்பாடுகள் முழுமூச்சாக முன்னெடுக்கப்பட்டன. பூநகரிக்கோட்டத்தின் 27 பாடசாலைகளிலும் சிறுவர் அரங்கச் செயற்பாடுகள் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டு சிறுவர் அரங்கு பெரும் போட்டியாக மேடையேற்றப்பட்டு வலய மட்டத்துக்கு முதலாம், இரண்டாம் இடங்கள் என அனுப்பி வைக்கப்பட்டன. இப்போட்டிக்கு அதிபர்கள், ஆசிரியர்கள் என வேறுபாடின்றி மிக ஆர்வமாக மாலை நேரங்களிலும் விடுமுறை நாட்களிலும் ஆடல், பாடல் அரங்க விளையாட்டுக்களுடன் சேர்த்து செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டன. இப்போட்டிக்கு முன்னர் ஒவ்வொரு பாடசாலையும் தங்கள் மாணவர்களுக்கு பாடசாலை மட்டத்தில் பயிற்சிப்பட்டறை மேற்கொள்ளப்பட்டே அரங்குக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

பூநகரியின் கல்வி முன்னேற்றத்தில் சிறுவர் அரங்கச் செயற்பாடுகள் எந்தளவுக்கு உறுதுணையாக இருந்தது என்பதும் இதில் அதிபர் ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் செயற்றிறன் எவ்வாறு இருந்தது என்பதையும் நோக்கத்தக்கது. மேலும் இவ் அரங்கச் செயற்பாட்டின் காலத்தை 3 கட்டங்களாக பிரித்து கூறுவது தெளிதலுக்கு இலகுவாக இருக்கும் என எண்ணுகின்றேன். அந்த வகையில் 1வது காலம் 1990 தொடக்கம் 2000 வரை 2வது காலகட்டம் 2010 - 2007 வரை 3வது காலகட்டம் 2010க்கு பிற்பட்ட காலம் என வகைப் படுத்தலாம். இவ்வாறு காலகட்டங்களில் சிறுவர் அரங்கச் செயற்பாடுகள் பூநகரியில் எந்தளவிற்கு மேலோங்கியும் வளர்ந்தும் நலிந்தும் சென்றதால் சிறுவர் அரங்கத்தின் செயற்பாடுகள் போன்ற ஆரம்பக் கல்வியின் பெறுபேறு நலிவடைந்து செல்வது காணக்கூடியதாக உள்ளது.



1990 இல் 2000 வரையான காலத்தில் சிறுவர் அரங்கம் செயற்பாடுகளில் அதிபர்களும் முக்கியமானவர்களாக இருந்தனர். நெறியாளர்களாக மற்றும் ஊக்குவிப்பாளராக பங்காற்றினார். அவர்களில் வடிவேலு, தில்லைநாதன், கனகலிங்கம், ஞானப்பிரகாசம், எமிலியாம் பிள்ளை, இராயேஸ்வரி, சிவசாமி, சிவராசா, பரஞ்சோதி, தனலட்சுமி, கணபதிப்பிள்ளை, பாஸ்கரன் முதலியோர் நல்ல ஊக்குவிப்பு அதிபர்களாக செயற்பட்டனர். அக்காலத்தில் சிறுவர் அரங்கச் செயற்பாட்டாளர்களாக விஜயநாதன், அன்ரனிசாந்தா, தவமலர், கவிப்பிரியா, விஜயராணி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவீந்திரன், ஜெயந்தி நடேசமூர்த்தி, றொபேட்கெனடி, ஸ்ரீராகினி, ஸ்ரீவிசுவாசம், உதயகுமாரன், ஸ்ரீரதி, இந்திராதேவி, ஜெயசீலன், அருமைநாயகம் யஸ்ரின் முதலியோர் விளங்கினார். அன்றைய காலத்தில் கிளிநொச்சி வலய மட்டத்தில் குறிப்பிட்ட ஆண்டுகளில் சிறுவர் அரங்கம் போட்டியில் பூநகரிக் கோட்டப் பாடசாலைகள் வெற்றிவாகை சூடின. 1991, 1993 கிளி செல்லையாதீவு அ.த.க.பாடசாலையும் 1993 கிளி/கிராஞ்சி அ.த.க.பாடசாலை சிறுவர் நாடகமும் 1994, 1995களில் கிளி/வேரவில் இந்து மகாவித்தியாலய சிறுவர் நாடகங்களும் வெற்றி பெற்றன. 1996ல் கிளி/ஜெயபுரம் ம.வி, 1997 கிளி/முழங்காவில் ம.வி ஆகிய பாடசாலைகள் மாவட்டத்தில் 1ம் இடம்பெற்று தமது சிறுவர் அரங்க செயற்பாட்டுத்திறனை சாதனைகளாக வெளிப்படுத்தின. இவற்றில் 1991, 1992, 1994, 1995 ஆகிய காலங்கள் கட்டுரையாளரின் நெறிப்படுத்தலிலும் 1996ல் சிறிரதி அவர்களும் 1997ல் அன்ரனிசாந்தா அவர்களும் பூநகரி கோட்ட சிறுவர் அரங்கு வெற்றிக்கு வழிவகுத்தனர். இருந்த போதும் யாவரும் ஒன்றிணைந்து செயற்படுத்தலில் முன் நின்றனர்.

அதுமட்டுமல்லாது 2000 ஆம் ஆண்டு காலகட்டத்தில் பூநகரி கொத்தணி அதிபர் திரு.பரஞ்சோதி அரங்காற்றுச் செயற்பாட்டில் முன்னின்றார். தொடர்ந்து 1996க்கு பின் திரு. கனகசபாரத்தினம் கோட்டக்கல்வி அதிகாரியாக இருந்து சிறுவர் அரங்க செயற்பாடுகளுக்காக பெரும்பங்காற்றினார். அத்துடன் விடுதலைப்போர் காலகட்டத்திலும் கட்டுரையாள் விஜயநாதன் மற்றும் அன்ரனி சாந்தா, சிறீரதி முதலியோரின் அரங்குகள் தேசிய நிலையில் முதல் இடங்களைப் பிடித்தன என்றால் மிகையாகாது. இக்காலகட்டத்தில் பாடசாலையில் கற்றல் கற்பித்தல் திறனும் மேம்பாடு பெற்றிருந்தன என்றே கூறலாம். புலமைப்பரிசில் பரீட்சையில் பூநகரி, நல்லூர், ஜெயபுரம், கிராஞ்சி, வேரவில், முழங்காவில், கறுக்காய் தீவு முதலிய பாடசாலைகள் முன்னிலை பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது காலகட்டமாகிய 2001 தொடக்கம் 2007 வரையான வளர்ச்சிக்கட்ட சிறுவர் அரங்கச் செயற்பாட்டாளருடன் கற்பித்தல் பெறுபேறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிசமான முன்னேற்றம் கண்டிருத்தலும் இங்கு சிறப்பு என்ன வெனில் 1வது காலகட்டத்தில் ஆசிரியர்களாக அரங்காற்றுப்பணியாற்றியவர்கள் பலர் அதிபர்களாக பொறுப்பேற்றிருந்தனர். இதனால் அரங்காற்றுகையுடன் கற்பித்தல் நடிபங்கும் முன்னேற்றம் கண்டிருந்த காலமாகும். அவர்களால் அன்ரனி சாந்தா, சிறிரதி, நடேசமூர்த்தி, ஜெயசீலன், இரவீந்திரன், றொபேட்கெனடி, ஏரம்பமூர்த்தி, தவமலர், ஜெயக்குமார், சிவபாத சுந்தரம், தி.கணபதிப்பிள்ளை முதலியோர் தங்களின் செயற்பாட்டில் சிறுவர் அரங்குகள் மேலோங்கின. இவர்கள் பாடசாலை மட்டத்தில் சிறுவர் அரங்க பட்டறைகள், அழகியல் அரங்குகள், பலதை மேற்கொண்டிருந்தனர். இதனால் மாணவரிடையே கற்றல்திறன் விருத்தியும் ஒழுக்கக்கோவையும் சிறப்பித் திருந்தன.



சிறுவர் நாடகங்கள் சிறுவர்களின் மனவளர்ச்சிக்குப் பாதிப்பு ஏற்படுத்தாது. அவர்களை அதில் மகிழ்ச்சியுடனும் ஆரவாரத்துடனும் ஈடுபடுத்தலை ஊக்குவிக்கும். சிறுவர் அரங்கச் செயற்பாடுகளால் மாணவர் களின் அழகியற் திறன்களையும், அவதானிப்பு, நிதானம், ஞாபகசக்தி சிந்தனையாற்றல், கற்பனையாற்றல், கிரகித்தற் திறன், எதையும் பகுத்துப் பார்க்கும் திறன், உற்றுகவனிக்கும் திறன் பேச்சாற்றல், உடல், உள விருத்தி கனம் பண்ணல், மதித்தல் முதலிய திறன் அதிகரிப்பதாக பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் அரங்கச் செயற்பாடுகளின் வெளிப்படுத்தல்களால் ஆசிரியர்களின் உடல் நலத்திறனும் அதிகரிக்கின்றது. சிறப்பான கற்பித்தல் உத்தி, சிறந்த ஆளுமைப்பண்பு, சிறப்பான வகுப்பறை முகாமைத்துவம், படைப்பாற்றல், பேச்சுத்திறன், பிள்ளைகளுடன் பிள்ளைகளை விளையாடும் பண்பு, எல்லாக் குழந்தைகளையும் சமமாக காணும் தன்மை, பிள்ளைகள் ஒவ்வொருவரதும் நன்மையைப் புரிந்து கற்கும் சிறப்பு தன்னிலையில் இருந்து இறங்கி சேர்ந்தியங்கும் தன்மை முதலியன பொய்படும்.



அறிவு வகையில் பூநகரிக் கோட்டத்தில் சிறுவர் அரங்கச் செயற்பாட்டாளர்களாக காணப்பட்ட ஆசிரியர்கள் ஞானசீலன், யஸ்ரின், நைனசிஶ்ரீநாகேஸ்வரி, அற்புதராணி, குமுதினி, ஆனந்த நடராசன், றொக்சி மேரிபாமிலா, ஜெயமதி, பாலகுமாரன், கலைச்செல்வன், சசிரதன், விஜயராணி, தேவறஞ்சனி, உதயபவான் முதலியோர் சிறப்பிடம் பெற்றிருந்தனர். இவர்களின் செயற்பாடு மாணவரின் கற்றல் திறனை மேம்படுத்தியது. சிறுவர்கள் செயற்பாடுகள் பயிற்சியளித்தல் பெற்றோர் பெரும்பாலானோர் வருகைதந்து இச்சிறுவர் அரங்கச் செயற்பாடுகளை பார்ப்பவர்கள் தம் பிள்ளைகளை ஊக்கப்படுத்துவதற்கு ஏதுவாக விளங்கியது. இதனால் பாடசாலையில் மாணவர் அடைவு மேம்பாடு இருந்ததற்கு சான்றுகள் கூறலாம். இக்காலத்தில் புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் கிளிநொச்சி வலயத்திலேயே முதல் இடம்பெற்ற கோட்டமாக 2003 விளங்கியது என்பது சிறப்பாகும். இதில் சிறப்பாக கிளி / முழங்காவில் ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46 மாணவர்களில் 18 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற சித்திபெற்று 25 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்று பெருமை சேர்த்திருந்தனர். இந்தக் காலத்தில் அந்த வகுப்பில் திருமதி.ஜெயமதி மகேஸ்வரன் கற்பித்து சிறப்பித்திருந்தார். அதே போல வேரவில் ஜெயபுரம் பூநகரி. நல்லூர் முக்கொம்பன் செல்லையாதீவு கிராஞ்சி குழுமுனை முதலிய பாடசாலைகளும் மாணவர்களின் பெறுபேற்றில் சிறப்பான பெறுபேறுகளை பெற்றுச் சாதனை படைத்தன. 3வது காலகட்டம் 2010 பின்னரான காலகட்டம் இடப்பெயர்வின் பின்னரான செயற்பாடுகள் பாடசாலையில் பௌதீக வளப்பற்றாக்குறை ஆளனிப் பற்றாக்குறை போக்குவரத்துப் பிரச்சினை மனப்பாங்குகளில் ஏற்பட்ட மனநிலை, வீடு சார் கல்வியின் குறைபாடுகள், கற்றல், கற்பித்தலில் உள்ள குறைபாடு, கற்பித்தல் பிரயோகங்களில் உள்ள குறைபாடு, உள்ளக மேற்பார்வைக் குறைபாடு, வெளியக மேற்பார்வைக் குறைபாடு முதலியன விடயங்களால் மாணவர் அடைவு குறைபாடு அடைவதற்கு காரணமாக கருதப்படுகிறது.

மேலும் இன்றைய கால கட்டத்தில் பெற்றோர் ஆசிரியர் உறவு குறைவாக உள்ளது. அத்துடன் வீட்டில் பெற்றோர் பிள்ளைகளுடன் நடந்து கொள்ளும் முறையில் குறைபாடு உள்ளது. பாடசாலையில் முறையான ஒழுக்கக் கோவை பின்பற்றப்படுவதில்லை. பெற்றோர் ஆசிரியர் உறவு மேம்படும் போது மாணவரின் ஒழுக்கம், கற்பித்தல் மேம்பாடு, மாணவர் அடைவு மாணவர் பெறுபேறு முதலியன முன்னேற்றமடையும். ஆசிரியர், பெற்றோர் உறவில் மேம்பாடு இருக்கவேண்டும். அதற்கேற்றவாறு பாடசாலை முகாமைத்துவம் திட்டமிட்டு மாணவரின் கற்றலுக்கு உத்தியாக அமைய வேண்டும். இவை அரங்கச் செயற்பாடுகளாகவே இருக்குமானால் மாணவர் மனங்களில் மகிழ்ச்சியும் உற்சாகம் சுறுசுறுப்பு ஏற்பட்டு கற்றலுக்கு ஏதுவாக அமையும்.

**வெற்றிகரமான கற்பித்தலுக்கான முன்மொழிவுகள்**

1) மகிழ்ச்சிகரமான கற்றல் – கற்பித்தல் செயற்பாடுகளைப் பிரயோகித்தல்.

2) சிறந்த கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தி கற்பித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) அரங்க விளையாட்டுக்கள், வினோத விளையாட்டுச் செயற்பாடுகள் மூலம் கற்பித்தல்.

4) மனக் கணித விளையாட்டுக்கள், ஆடல், பாடல் செயற்பாடுகள் மூலம் கற்பித்தல்.

5) கவிதை, கதைகூறல், சித்திரம் வரைதல் மூலம் கற்பித்தல்.

6) மாணவர் அடைவ சம்பந்தமாக பெற்றோருடன் தொடர்பை விருத்தி செய்தல்.

7) அரங்க விளையாட்டு முறை மூலம் ஆடல், பாடல் செயற்பாடுகள் மூலம் மாணவருக்கு நேரடியாக அனுபவங்களைக் கற்றுக் கொடுத்தல்.

8) பெற்றோர்களிடம் பிள்ளைகளின் அடைவு மட்டத்தினை முன்னேற்று வது தொடர்பான திறந்த கலந்துரையாடல் கிரமமாக ஈடுபடல்.

9) போதிய அளவு கணினி அடைவு மட்டத்தினை முன்னேற்றுவது தொடர் பான திறந்த கலந்துரையாடல் கிரமமாக ஈடுபடல்.

10. போதிய அளவு கணினி மூலமும் பொதுவாக இலத்திரனியல் உபகரண பயன்பாடு தேவைக்கதிகமாக பயன்படுத்தல் வேண்டும்.

11. வினைத்திறனான கற்றல்–கற்பித்தலை மேற்கொள்ளல்.

12. கற்போரின் சுயகற்றலை மேம்படுத்தக்கூடிய கற்பித்தலை மேம்படுத்தல்.

13. மாணவர் முயன்று தவறிக்கற்றலுக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தல்.

14. திருப்திகரமான வகுப்பறைக் கவின் நிலையை விருத்தி செய்தல்.

15. பாட வடிவமைப்பில் நேர்ப்பாங்கான கோட்பாடுகளைப் பயன்படுத்தல் வேண்டும்.

16. கற்பித்தல் நுட்பங்களைப் பொருத்தமாய் பயன்படுத்தல்.

17. தொடர்பாடல் நுட்பங்களை வினைத்திறனுடன் உபயோகித்தல் வேண்டும்.

18. கற்றலை தூண்டுவதற்கான வளங்களை சந்தர்ப்பங்களை உருவாக்கல் பயன்படுத்துதல் மதிப்பீடு செய்தல் வேண்டும்.

19. பாடப்புல அறிவு பாடத்திட்டமிடல், வகுப்பறை முறமைத்திறன், கற் போனுடைய வெளிப்பாடுகளை ஊக்குவிக்கும் திறன், கற்றலை அளவிட லும், மதிப்பிடலுமான திறன் ஆகிய கற்பித்தல் சார்ந்த தேர்ச்சி ஆசிரியர் பெற்றிருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. உடல் ரீதியான, உள ரீதியான, உளரீதியான பொருத்தப்பாடு உணர்வு முதிர்ச்சி, மனித இயல்புகளையும் விருத்திகளையும் புரிந்து கொள்ளும் கற்பிக்கும் தத்துவம் பற்றிய அறிவும் பயன்படுத்தும் ஆற்றலும், மத கலாசார இன வேறுபாடுகளைப் புரிதல் வாண்மை விருத்தியிலான அக்கறையும் ஆர்வமும் உள்ளதா ஆசிரியர் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

21. கற்றல் – கற்பித்தல் திட்டமிடல் ஆகியவற்றினை நெறிப்படுத்த சக ஆசிரியர்களின் உதவி பெறல்.

22. கற்றல் – கற்பித்தல் சாதனங்களைச் சிறப்பாகப் பயன்படுத்தல் மூலம் கற்பித்தல் இலகுவடைகிறது.

23. மகிழ்ச்சிகரமான அரங்க விளையாட்டு செயற்பாடுகள் மூலம் கற்றலில் ஆர்வத்தையும் மாணவர்கள் வரவையும் உயர்த்த முடியும்.

24. செயற்பாடுகள் சார்ந்த கற்றல் சிறந்த அனுபவங்களை வழங்குகிறது.

25. எல்லா ஆசிரியர்க்கும் எல்லா கற்பித்தல் துறைகளும் தெரியும் என்றில்லை. ஆசிரியர்களுடன் இணைந்து அணி முறைக்கற்பித்தல் நுட்பத்தின் வலிமையைப் பெறலாம்.

26. மாணவரிடையே தரிசன நோக்கினை (Vision) விருத்தி செய்து அதனை அடைவதற்கு இடையூறாக ஊக்குவித்தல்.

27. மாணவர்கள் மீது நம்பிக்கையும் விசுவாசத்தையும் கொண்டிருப்பதோடு உடன்பாடான மனப்பாங்குகளை வெளிப்படுத்தல் வேண்டும்.

28. மாணவர் அடையும் சிறுசிறு வெற்றிகளைக் கூட முதன்மைப்படுத்தின் கொண்டாடுதல் வேண்டும்.

29. சகிப்புத்தன்மை உதாரணம் நடத்தையும் நட்பு பண்புடமை நெகிழ்ச்சி ஜனநாயகப் பண்பு ஆகியவற்றையும் கொண்டிருப்பதோடு அவற்றை வெளிப்படுத்தல் வேண்டும்.

30. மாணவரின் கற்றலுக்கு அவர்களது பூரண விருத்திக்கும் பொறுப்புடமை மாத்திரமன்றி வகை கூறலையும் கொண்டிருத்தல் வேண்டும்.

31. ஆசிரியர் தன்னிடமுள்ள திறமைகளை ஒழுங்கமைப்பதுடன் மாணவர்களிடையே அமைதியின்மை, மனக்குழப்பம், உணர்ச்சி, விரக்தி, தவறான மனநிலை போன்றவற்றை இல்லாமல் செய்தலுடன் மற்றோரிடம் புரிந்துணர்வை ஏற்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்செயற்பாடுகளின் ஊடாக மாணவரின் உள்ளார்ந்த ஆற்றல்கள் தூண்டப்படுகின்றன. அவர்களின் இறுக்கமான நிலையினைக் களைவதற்கும் இலகுவான இலேசானதும் சுதந்திரமானதுமான மனநிலையை ஏற்படுத்து வதற்கும் கற்றலுக்குமான சூழ்நிலையை மாணவர்களுக்கு ஏற்படுத்தவும் உதவுகின்றது. சிறார்களின் கற்பனை, அவதானம், புலனுணர், மனவெழுச்சி, கருத்தூன்றல், சுதந்திர சிந்தனை, சமூக உணர்வு, உள முதிர்ச்சி, படைப்பாக்க இன்பம், இவ்வாறான பெறுபேறுகளின் மூலம் மாணவரின் அடைவு மேம்படுத்துவதற்கு உதவுகின்றது.

இவை போன்ற ஆலோசனைகளை கவனத்தில் எடுப்பதன் மூலம் ஓர் நிறைவாக வினைத்திறன் மிக்க மனித சமுதாயத்தினை முன்னேற்றுகின்ற சிறப்பான விளைவை எய்தமுடியும். அரங்க செயற்பாடு முறையைப் பயன்படுத்தி கற்பிக்கும்போது கற்பித்தலானது எளிதாகவும் இலகுவாகவும் அமைவதுடன் கற்பித்தலில் ஒரு திருப்தியும் ஏற்படுகிறது. அரங்க விளை யாட்டுக்கள், மனக்கணித விளையாட்டுக்கள் ஆடல், பாடல் இலத்திரனியல் உபகரணங்கள் செயற்பாடுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி கற்பித்தல் செயற் பாட்டை ஆரம்ப வகுப்புக்களில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் சிறந்த சுயதிறனுள்ள ஓர் எதிர்கால கல்விச் சந்ததியை உருவாக்க முடியும். அத்துடன் நேரடி அனுபவங்களையும் பூரண விளக்கத்தையும் பெற்றுக்கொள்ள முடியும்.

கற்பித்தல் என்பது ஒரு கலையாகும். மாணவர்களுக்கு தெளிவாக புகட்டல் என்பது பெறுமனே பேச்சினாலோ வெண்கட்டியாலோ மாத்திரம் நிறை வேறிவிடாது. ஓர் ஆசிரியருக்கு கற்பித்தலில் உள்ள ஆர்வம், திறன், இயலபுக்கும் அவரது கற்பித்தலில் இழையோடும்.

பாடசாலைகளில் நல்ல ஆசிரியர்களைக் கண்டு கொண்டிருந்தோம். ஏன் இன்றும் கூட கண்டு கொண்டிருக்கின்றோம். அவர்களின் பெயர்களை அவ்வப்போது உச்சரிக்கையில் எமது உள்ளம் புளாங்கிதம் அடையும். அவர் களிடம் காணப்பட்ட அந்த மந்திரம் தான் என்ன....? மாணவர்களுடனான நல்லுறவு, இணக்கம், பிணைப்பு, பரஸ்பர தொடர்பு அவர்களை வென்றிடக் காரணமாக இருந்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஆசிரியனுக்கு பல ஆளுமைகள் தேவைப்படுகின்றன. உங்களின் உச்சரிப்பு, பேச்சு தொனி உங்களை அவர்களின் வகிபங்கு பலவிதமானதாக உள்ளது. மிக நெருக்கமாக அக்குழந்தைகளுடன் தாயாக, தந்தையாக, சகோதரனாக, தாதியாக, நண்பராக, ஆசிரியராக பல வகிபங்குகளை அவர் ஏற்க வேண்டியுள்ளது. கதைக்கும் முறை அணுகும் முறை, தனது வகிபங்குக்கு இயைபாகி செயற்பட வேண்டியுள்ளது.



ஆசிரியரது மகிழ்ச்சிகரமான தோற்றம் அவரது கனிவான பார்வை, பொறுமையுடன் கேட்கும் சகிப்புத் தன்மை, தொடர்ந்து விடாது முயன்று மீண்டும் மீண்டும் ஆசிரியர் நோக்கத்தை அடைய செயற்படும் செயற்பாடு ஆசிரியர்களை மாணவர்களுடன் கலந்திடச் செய்யும் ஓர் ஆசிரியரின் உடல் அங்க செயற்பாடுகள் (Body Languages) மிக முக்கியமானவையாகும். ஆரம்பக் கல்விக்கு மாத்திரம் அல்ல உயர் வகுப்புக்களுக்கும் தெளிவான கூர்மையான ஆசிரியரின் விழிப்பார்வை உதட்டு, கன்ன, முக, கை அசைவுகள் தோற்றம் கற்பித்தலில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஆசிரியர் கற்பிக்கும்போது மாணவர்கள் ஜடமாக அமர்ந்திருக்க வில்லை என்பதையும் உயிர்த் துடிப்புடன் உணர்வுகளுடன் ஆசிரியரை அவர்கள் அவதானிப்பார்கள் என்பதையும் மனதில் கொள்ளவேண்டும். அவர்கள் ஆசிரியருடன் இருக்கிறார்கள் என்பதே ஆசிரியரின் கற்பித்தலின் வெற்றியாகும். அவர்கள் ஆசிரியரின் இல்லை எனில் அதுவே ஆசிரியரின் கற்பித்தலின் தோல்வியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் எவ்வாறு தங்களது பாடப் பகுதியை சமர்ப்பிக்கின்றார் என்பது மாணவரின் துலங்கலில் பிரதிபலிக்கும் எனலாம். மிக முக்கியமானது ஆசிரியர்கள் எவ்வாறு மாணவருடன் உரையாடுகின்றார்கள் என்பதாகும். "வளா கொழா" என்றாலும் அது வெற்றி பெறாது. நீங்கள் பேசும் பாணி மிக முக்கியமான தொன்றாகும். சுவருக்கும், கரும்பலகைக்கும், வெண் பலகைக்கும், கதிரை மேசைகளுக்கும் ஆசிரியர் கற்பித்தல் மாணவர்களான உயிருள்ள மனித பிராணிக்கு அது என்பதை நல்லாசிரியன் தெரிந்து வைத்திருப்பான்.

மாணவர்களுக்கும் ஆசிரயர்களுக்கும் இடையே ஒரு பிணைப்புச் சங்கிலி போல் தொடர்ந் வருகின்றன என்பது மிக முக்கியமானதாகும். ஆசிரியரின் சந்தம், ஒலி, தொனி மாணவனை கவர்ந்து ஈர்க்கும் ஆசிரியர்கள் தமது சத்தத்தினை தயார்படுத்தி செம்மைப்படுத்தி கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும். ஆசிரியர் தொழிலுக்கு குரல்தொனி அவசியமானதாகும்.

ஆசிரியர்கள் முன்னாயத்துடன் வகுப்பறைக்குச் செல்ல வேண்டும். முன்னாயத்தத்துடன் வகுப்பறைக்குச் செல்லல் என்பதை சட்டமாக, சுற்று நிரூபமாக, கட்டளையாக கொள்ளத் தேவையில்லை. ஆனால் சிறந்த கற்பித்த லுக்கு அதுவே வழி என்பதை சுயமாக ஆசிரியர்கள் உணர்ந்து செயற்பட வேண்டும்.

எனவே கற்பித்தல் தொடர்பாக ஆசிரியர்கள் அறிவையும் பெற்றிருப்பதுடன் செயற்படுத்தும் மனப்பாங்கு விழுமியமும் இருப்பது நன்று. கற்பித்தலில் திறன் கொண்ட ஆசிரியர்களின் மாதிரி வகுப்பறைக் கற்பித்தலை அவதானிப்பதால் கற்பித்தல் நுணுக்கங்களையும் உபகரணங்களையும் பாணியையும் தெரிந்திருத்தல் ஆசிரியர்களின் தம் பணிக்கு செழுமை சேர்க்கும் எனில் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏமாறாதே...

**செல்வி கீர்த்திகா அப்புத்துரை**
கிளி / முழங்காவில் மகா வித்தியாலயம்
(தேசிய பாடசாலை)

**நாடக மாந்தர்கள்**

1) உரைஞர் - 1
2) உரைஞர் - 2
3) உரைஞர் - 3
4) உரைஞர் - 4
5) உரைஞர் - 5
6) வழிப்போக்கன் - 1
7) வழிப்போக்கன் - 2
8) மாணவர்கள்
9) அதிபர்
10) ஆசிரியர்
11) பெற்றோர்

பார்வையாளரை நோக்கியபடி நடிகர்கள் வரிசையாக மேடையின் இடது பக்கமிருந்து பின்வரும் தாளக்கட்டினை இசைத்தவாறு அரைவட்ட வடிவமாக ஆடிக்கொண்டு மேடைக்கு வருவார்.

**தாளக்கட்டு:-** தனனன்னத் தானானனா – தனனன
தனனன்னத் தானானனா (2)

**உரைஞர் 1:-** சின்னஞ் சிறு வயதிலே தான் பென்னம் – பெரிய பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

**உரைஞர் 2:-** ஓம்...! பென்னம் பெரிய பிரச்சினைகள் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரைஞர் 3:-** இந்த நாட்டி... நா... ளைய தலைவர்கள் தான் இந்த சிறுசுகள்.

**உரைஞர் 4:-** ஓ.....! இந்த சிறுசுகள் தான் நாளைய தலைவர்கள்.

**உரைஞர் 5:-** இந்த சிறுசுகளை சில மோசமான மனிதர்கள் நாசமாக்கு கின்றார்கள்.

**உரைஞர் 1:-** ஓ...,! நாசமாக்குகிறார்கள்

**உரைஞர் 4:-** எங்கள் சமுதாயத்தை ஒழுக்கமற்றதாக மாற்றுகிறார்கள்.

**உரைஞர் 2:-** பாசமாக வலைவீசி பாழாக்குகிறார்கள்!

**உரைஞர் 5:-** சபையோரே நாம் என்ன கூற வந்துள்ளோம் என்பதை நீங்களே நேரில் காண்பீர்கள்.

(உரைஞர்கள் வெளியேற மேடையின் இடது பக்கமிருந்து இருவர்கள் பயங்கரமான தோற்றத்துடன் வருகிறார்கள். அவ்வேளை மாணவர்கள் சிலர் இவர்களை எதிர்கொள்கின்றனர்)

**வழி 1:-** (மாணவர்களை கூர்ந்து பார்த்து விட்டு) வாங்கோ வாங்கோ!

**வழி 2:-** (தங்களுக்குள் இருவரும் இவர்கள் மூலம் நாங்க வந்த வேலையை பார்க்கலாம்) ஓ பிள்ளையள் வாங்கோ, வாங்கோ

**வழி 1:-** (ஏளனத்துடன்) என்ன பிள்ளையள் படிச்சுட்டே வாறீயள்.

**வழி 2:-** படிச்சு படிச்சு சரியா தேய்ஞ்சு கொண்டு போறியள்

**வழி 1:-** ஓம்! தேஞ்சு கொண்டு தான் போறீயள்

**வழி 2:-** உங்கள நாங்க இதில இருந்து காக்க தான் வந்திருக்கம். (மாணவர்கள் வியப்புடனும், கலவரத்தோடும் இவர்களை நோக்கு கின்றார்கள்)

(மாணவர்கள்தமக்குள் பேசிக் கொள்கிறார்கள்)

**மாணவர் 1:-** (பரபரப்பாக) எனக்கு உதுகள பாத்தா ஏதோ வித்தியசமாய் இருக்கு.

**மாணவர் 2:-** (நக்கலாக) உனக்கு எல்லாத்துக்கும் பயன் தான்.

**மாணவர் 3:-** ஓ..... அவனை விடுங்கோ நாங்க என்னன்டு பாப்பம்.

**மாணவர் 4:-** நான் முதல் அவைக்கு கிட்டப்போய் பாக்கிறன்.

(மாணவர் 4 வழி போக்கர்களுக்கு கிட்டப்போய்)

**மாணவர் 3:-** அடேய் கிட்டப்போகத

**மாணவர் 1:-** நான் சொன்ன கேளுங்கோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழி 1 :- கிட்ட வாங்கோ. இந்தாங்கோ இதைப் பிடியுங்கள்.

(மாணவர் 2 கிட்டப்போய் அதை வாங்கி மணந்து பார்த்துவிட்டு)

மாணவர் 2:- (மூக்கைச் சுழித்து) என்ன வாசணை, என்ன அருமை

மாணவர் 3:- எனக்கும் தாடா நானும் மணந்து பார்க்க.
(இழுத்து பறிக்கின்றான்)

வழி 1:- மணந்து பார்க்க வேண்டாம்! சாப்பிட்டு பாருங்கோ.

வழி 2:- சாப்பிட்டா விடமாட்டியள்.

(வழிபோக்கர்கள் இருவரும் சபையோரைப் பார்த்து) நாங்கள் வந்த வேலை முடிஞ்சுது நீங்கள் நல்லா மகிழுங்கோ.

மாணவர் 3:- எனக்கு சொர்க்கம் தெரியுது (தள்ளாடியபடி)

மாணவர் 4:- ஓ... உனக்கு சொர்க்கம்தான் தெரியுது உலகமே என்னை சுத்தி வருகுது.

மாணவர் 5:- (கீழே விழுந்து புரண்டு) என்னடா, என்னை உருட்டுறியள் கீழே போட்டு.

மாணவர் 1:- அப்பவும் நான் சொன்னன் கேட்டிங்களாடா.

மாணவர் 1, 2, 3, 4, 5 :- (பின்வரும் பாடலை பாடியவாறு மேடையின் நடுவே நின்று ஆவேசமடைந்து ஆடுகின்றார்கள்)

பாடல்

அதோ அந்த பறவை போல பறக்க வேண்டும்.
இதோ இந்த ஆடல் போல ஆட வேண்டும்.
தலை சுற்றவே, கால்கள் மாறாவே, கீழே
புரண்டு, புரண்டு ஆட வேண்டுமே (2)

(இவ்வாறு இவர்கள் ஆடியவாறு நிற்க பின்னால் ஏதோ ஓசை கேட்க இவர்கள் சிலையாகின்றனர். ஆசிரியர், அதிபர் இருவரும் வருவார்கள்)

ஆசிரியர்:- (உற்று மாணவர்களை பார்த்துவிட்டு) இஞ்ச பாருங்கோ.

அதிபர்:- இது என்ன?

ஆசிரியர்:- இப்ப தான் வகுப்பில நல்லா இருந்திட்டு வந்ததுகள் வழியில இப்பிடி கிடக்குதுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அதிபர்:-** (கிட்ட நெருங்கி ஆசிரியர் கையை பிடித்து இழுத்தவாறு) விடுங்கோ நான் என்ன நடந்தது எண்டு பாக்கிறன்.

**ஆசிரியர்:-** (நடுக்கத்துடன்) இவர்களை பார்க்க பயமாய் கிடக்குது.

**அதிபர்:-** ஒண்டுக்கும் பயப்பிடதாய் நான் பொலிசை கூப்பிடுறன்.

**ஆசிரியர்:-** ஓம், ஓம்..... வேகமா Call Po பண்ணுங்கோ.

**அதிபர்:-** (போனை அழுத்தி) ஹலோ பொலிஸ் ஸ்ரேசன் (ஏதோ சைகைகளால் மாணவர்களை பாட்டிப் பரபரப்பாக கதைத்து விட்டு போனை hat பண்ணுகின்றார்.)

**ஆசிரியர்:-** (கிட்ட ஓடிப்போய் அதிபரின் கையை பிடித்து) என்னவாம்.

(அந்த கணம் மாணவர்களின் பெற்றோரும் பொலிசும் மேடைக்கு அவசரமாக வருகை தருகின்றார்கள். அவர்களை அதிபர் ஓடிச் சென்று கூட்டி வருகின்றார்)

**ஆசிரியர்:-** இஞ்ச வாங்கோ, இதால வாங்கோ!

பொலிஸ் இருவர் அவசரமாக வந்து கீழே கிடக்கும் மாணவர்களை பார்த்து ஏதோ தமக்குள் கதைத்துக் கொள்கிறார்கள். மாணவர்களை தட்டி எழுப்புகிறார்கள். எழுப்பி அவர்களுக்கு தண்ணீர் கொடுக்கின்றனர்)

**பொலீஸ் 1:-** இவையள் நல்லா யாரிட்டையோ ஏமாந்திருக்கினம்.

**பொலீஸ் 2:-** ஓ! இவையளுக்கு நல்ல போதையை யாரோ குடுத்திருக்கினம்.

**பொலீஸ் 1:-** (கோபத்துடன்) அவங்களை பிடிச்சு நல்ல தண்டனை வாங்கிக் குடுக்கோணும்

**பெற்றோர்:-** எங்கடை பிள்ளையள நாசமாக்கினவங்களை சும்மா விடக்கூடாது. (உரக்க)

**ஆசிரியர்:-** (ஆவேசத்துடன்) இப்பிடித்தான் எங்கட சமூகத்தை நாசமாக்கிறவங்களை சும்மா விடக்கூடாது.

**அதிபர்:-** ஓ சும்மா விடக் கூடாது.

**பெற்றோர்:-** இப்படி எத்தினை பிள்ளையள் சமூகத்தில் கெட்டுப் போகுதுங்கள்.

**ஆசிரியர்:-** ஒழுக்கமில்லாத சமூகமா! இந்த கெட்ட மனிதர்களை எங்கட பலத்தால அழிக்க வேணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொலிஸ் :-** இனிமேல் தான் தீவிரமான நடவடிக்கைகளை நாங்க எடுக்க வேணும்.

**மாணவர்கள் எல்லோரும்:-** இனிமேல் நாங்க யாரிட்டையும் ஏமாறமாட்டம். எங்களை எல்லோரும் மன்னிச்சுக் கொள்ளுங்கோ.

**உரைஞர் 1:-** ஏமாறதே, ஏமாறதோ.

**உரைஞர் 2:-** (ஆவேசமாக) பாசம் காட்டி மோசம் செய்பவர்களை

**உரைஞர் 3:-** நம்பாதே, நம்பாதே!

**உரைஞர் 4:-** இனம் தெரியா நபரை கண்டால்

**உரைஞர் 5:-** விலகி விடு, விலகி விடு

**உரைஞர் 3:-** சபையோரே இங்கே நடந்தவற்றை பார்த்தீர்களா.

**உரைஞர் 2:-** உங்களுக்கே பார்க்க விளங்கியிருக்கும்.

**உரைஞர் 4:-** இந்த பிஞ்சுகளை பிடுங்கி எறிந்திருக்குற.

**உரைஞர் 5:-** அந்த விசக் கிருமிகளை அடியோட எல்லோரும் சேர்த்து அழிப்போம்.

**உரைஞர் 1:-** வாங்கோ, வாங்கோ

(மேடையில் அனைவரும் அரைவட்ட வடிவமாக வந்து பின்வரும் பாடலை பாடி ஆடியவாறு மேடையை விட்டு செல்கின்றார்கள்)

பாடல்

ஏமாறாதே ஏமாறாதே உன் வாழ்வை இழப்பாய்
ஏமாறாதே உன்னை ஏமாற்றும் நபர்களை
என்றும் நம்பாதே.

**முற்றும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம அலுவலர்கள் பிரிவு



நிற்பவர்கள் : இடமிருந்து வலமாக : திரு.கு.கணேசமூர்த்தி (கி.அ), திருமதி.க.துர்காயினி (கி.அ), செல்வி.சி.செந்துசா (கி.அ), செல்வி.மு.பாரியகபாசினி (கி.அ), திருமதி.ச.பாத்திமாசனா (கி.அ), திருமதி.ந.வாசுகி (கி.அ), திரு.பு.மோகனராஜ் (கி.அ) ,

இருப்பவர்கள் இடமிருந்து வலமாக : திரு.த.மகாபரன் (கி.அ), திரு.கு.நாகலிங்கம் (கி.அ), திரு.R.ஜேமஸ்ராஜ் (உதவி பிரதேச செயலாளர்), திரு.சி.ச.கிருஸ்ணேந்திரன் (பிரதேச செயலாளர்) திரு.ச.தவராசா (நி.கி.அ), திரு. பா.நந்தலேஸ்வரன் (கி.அ), திரு.ம.ராஜகோபல் (கி.அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊனம்

(நாடகம்)

**திரு. S. யசிந்தன்**
அன்புபுரம், முழங்காவில்.

**(நாட்டில் யுத்தம் நிறைவு பெற்று மீள்குடியேற்றப்பட்ட பின் மன்னாரிலிருந்து யாழ் செல்லும் பேரூந்தில் பயணம் செய்யும் சசியின் பழைய நினைவுகள்)**

**காட்சி 01 :-** பேரூந்தில் சரி நடத்துனராக பணியாற்றிய காலத்தில்

**ஓட்டுனர் :-** சசி வஸ்ல பின்னுக்கு ஏதோ சத்தம் கேட்குது என்னென்டு பாரு.

**சசி :-** சரி அண்ணை வருற சந்தி இறக்கம் இருக்கு அப்ப பாப்பம்.

**பயணி :-** தம்பி இறக்கம் இதிலான் நில்லப்பா.

**ஓட்டுனர் :-** அம்மா அவசரப்படாதீங்க. வஸ் நிக்கட்டும். (பஸ் மெதுவாக நின்றது. பயணி இறங்கினார்)

**சசி :-** அம்மா பாத்து கவனம் அண்ணை றைட்டு. ரிக்கேட், ரிக்கேட் எடுக்காத ஆட்கள் ரிக்கேட்டை கேட்டு வாங்குங்கோ.

**ஓட்டுனர் :-** என்ன சசி முகம் ஒரு மாதிரி இருக்கு?

**சசி :-** ஒண்டும் இல்லை அண்ணை சும்மா......

**ஓட்டுனர் :-** என்ன சசி இண்டைக்கு உங்கட ஆளக் காணல்ல?

**சசி :-** சும்மா இரு அண்ணை நீ வேற...... அண்ணை நிக்கட்டும் ஒரு ஆள் ஓடி வருது. வரட்டும் பின்னுக்கா போங்க. அண்ணை தயவுசெய்து புட்போட்ல நிக்காதீங்க. ரிக்கேட் எடுக்காத ஆக்கள் ரிக்கேட் எடுங்கோ.

**ஓட்டுனர் :-** என்ன சசி புது வேகம் கலைகட்டுது? ஏதோ நடக்கட்டும்.

**தர்மி :-** கிளிநொச்சி ஒன்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சசி :- என்ன சர்மி இன்டைக்கு புதிசா கிளிநொச்சி?

தர்மி :- அது கச்சேரில ஒரு அலுவல் அதுதான்.

சசி :- அது சரி தர்மி அண்டைக்கு உங்கட வீட்டை வந்தனான் நீங்கள் இல்லை.

தர்மி :- நாங்கள் தானே ஒவ்வொரு நாளும் சந்திக்கிறம்.

(இவ்வாறு கடந்த கால நினைவுகள் இனிமையாக ஓடிக் கொண்டிருக்க பேரூந்து திடீரென நின்றது. கனத்த நினைவு களுடன் சசியின் தூக்கம் கலைந்து எழுந்த பார்த்தான். பஸ் பூநகரியில் நின்றது. அங்கிருந்து சில பயணிகள் ஏறினர். அவர்களுடன் நாதன் அண்ணனும் ஏறினார். நாதனை கண்ட சசி)

சசி :- ஆ.... அண்ணை நாதனண்ணை எப்பிடி சுகம் எங்க வெளிக் கிட்டாச்சு? இந்தாங்கோ இதில இருங்கோ.

நாதன் :- நான் ஒருக்கா யாழ்ப்பாணம் போறன் என்ன தம்பி எல்லாரும் சுகமாய் இருக்கினமோ வீட்டில?

சசி :- ஓம் அண்ணை நல்ல சுகம்.

நாதன் :- தம்பி சரி. அதுசரி இவள் தர்மி எங்கு இருக்கிறாள் எண்டு தெரியுமோ?

சசி :- நல்லூரில இருக்கிறதா அறிஞ்சனான். ஆனநான் என்னும் அவளைப் பாக்கேல்ல. அது சரி. அண்ணை தர்மிக்கு கல்யாணம் முடிஞ்சுதா?

நாதன் :- இல்லை. அது குழப்பத்தில் போனதாய் கதையொன்டு அடிபட்டது. நானும் இப்ப அங்கால போய் இரண்டு, மூன்று மாதம் ஆச்சு.

சசி :- ஏணண்ணை முதல் பார்த்த மாப்பிளை?

நாதன் :- என்னெண்டு தெரியல்ல.

(இவ்வாறு இவர்கள் இருவரும் பேசியவாறு இருக்க சாவகச்சேரி வந்தது)

சசி :- அண்ணை நான் சாவகச்சேரில இறங்கப் போறன். பிறகு சந்திப்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாதன்** :- ஓம் தம்பி சந்தோசம் போட்டுவாங்கோ.
(சசி தனது அலுவலை முடித்துவிட்டு வீடு திரும்பினான்)

## காட்சி 02

**இடம்** :- **முழங்காவில்**

**பாத்திரம்** :- **சசியின் தாய்**

**சசியின் தாய்** :- என்னப்பு பத்திரிக்கை எல்லாம் அடிச்சாச்சோ?

**சசி** :- ஓம் அம்மா

**தாய்** :- நாளைக்கு எல்லா இடமும் நோட்டீஸ் கொடுக்க வேணும். அண்டைக்கு ஒரேயிதா அடிச்சிருந்தா அலுவல் வேகமாய் முடிஞ்சிருக்கும். கலியாண வேலை தலைக்கு மேலை இருக்கு.
(மறுநாள் நோட்டீஸ் வழங்கல்)

தர்மியின் வீடு

**பாத்திரம்** :- சசியின் வீடு, தாமி வீடு

**சசியின் தாய்** :- கலா அக்கா..... கலா அக்கா.....

**கலா** :- ஓம் ஓம் ஆர் வாங்கோ அட அக்கா நீங்களோ? என்ன திடீரென்டு இந்தப் பக்கம்?

**சசியின் தாய்** :- அது ஒன்டுமில்லை அக்கா. நாளண்டைக்கு மகனுக்கு கலியாணம் மறக்காமல் வாங்கோ. அதுதான் சொல்லிட்டு போவம் என்டு வந்தனான்.
(கலா செய்வதறியாது திகைத்து நின்றார்)

**சசியின் தாய்** :- என்ன கலாக்கா யோசினை

**கலா** :- (திடுக்கிட்டவாறு) ஒன்டுமில்லையக்கா வந்து இருக்காம நிக்கிறீங்கள். நான் வேற இருக்காம நிக்க வைச்சு கதைச்சுக் கொண்டு வாங்க அக்கா ரீ குடிச்சிட்டு போகலாம்.

**சசியின் தாய்** :- நீங்க கேட்டதே ரீ குடிச்ச மாதிரி இருக்கு. இன்னொரு நாளைக்கு பாப்பம் இப்ப நிறைய வேலை இருக்கு.
(இருவரும் பேசிக் கொண்டிருந்தது சசியின் காதில் விழுந்தது)

**சசியின் தாய்** :- அது சரி கலாக்கா எங்க மகள்ட சிலமனைக் காணல்ல?

**கலா** :- அவ வீட்டுக்குள்ள ஏதோ அலுவலாய் இருக்கிறா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை....

**சசியின் தாய்** :- சரியக்கா சரி இருக்கட்டும். நான் பிறகு ஒரு நாளைக்கு வாறன். சரியக்கா போட்டு வாரன் (என்று சசியின் தாய் புறப்பட்டார்)

(தர்மி கலியாணச் செய்தி அறிந்ததும் கதறி அழுதாள்)

**கலா** :- என்ன பிள்ளை ஏன் அழுகிறாய்?

**தர்மி** :- நீங்கள் ஒண்டும் கதைக்காதிங்கம்மா எல்லாம் உங்களால தான் இனி நான் உயிரோடு இருந்து என்ன பிரயோசனம்?

**கலா** :- என்ன புள்ள கதைக்கிறாய்? நான் உன்ர நல்லதுக்காகத் தானே செய்தனான். யாருக்குத் தெரியும் இப்பிடிக்காலை வாருவினம் எண்டு? இனம் , சனம் எண்டு நம்பி உன்ர வாழ்க்கையை பாழாக்கிட்டன் நான் வேணுமெண்டா சசிட அம்மாவோட ஒருக்கா கதைச்சுப் பாக்கிறன். எப்பிடியாச்சும் இந்தக் கலியாணத்தை நிப்பாட்டச் சொல்லி காலை விழுவம். சாட்சிக்காரன் காலில் விழுறதைவிட சண்டைக் காரன் காலில விழுறது மேல்.

**தர்மி** :- அம்மா நீங்கள் ஒண்டும் கதைக்க வேண்டாம். இதைக் கதைச்சு இனி எந்தப் பிரயோசனமும் இல்லை.

(மறுநாள் தர்மியின் தாய் சசி வீடு சென்று திருமணத்தை நிறுத்தக் கோரல்)

## காட்சி 03

**(சசியின் வீடு)**

**கலா** :- அக்கா தயவுசெய்து என்ர மகளுக்கு வாழ்கை கொடுங்க.... வாழ்க்கை கொடுங்க.... என்னை மன்னிச்சுடுங்க. அக்கா அந்தஸ்து பணம் எண்டு நான் செய்த தவறால என்ர மகள்ட வாழ்கை கேள்விக்குறியாகி நடுத்தெருவில நிக்குது. எப்பிடியாச்சும் நீங்கள்தான் அக்கா நல்ல முடிவெடுக் கோணும். (சசி வருகை)

**சசி** :- என்ன கதைக்கிறியள். நீங்கள் என்னதான் கெஞ்சிக் கூத்தாடினாலும் இந்தக் கலியாணம் நிக்காது. முடிஞ்சா நாளைக்கு வந்து அர்சனை போட்டுப் போங்க முடியாட்டி போங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(என்று கூற ... ின் தாய் என்னசெய்வதென்று தெரியாது வீடு திரும்பினார். தாயின் வருகையை எதிர் பார்த்திருந்த தர்மி தாயின் முகவாட்டத்தில் நடந்தவற்றை உணர்ந்து கொண்டாள்)

மறுநாள் திருமணத்தன்று

(தர்மியின் வீட்டில் கதறி அழும் சத்தம் கேட்டு அயலவர்கள் ஓடினர்)

**தர்மியின்தாய்** :- அடி பாவி மகளே இப்பிடிப் பண்ணிட்டியேடி... ஏன்டி இந்த முடிவு? (என்றவாறு அயலவர்களின் உதவியோடு தர்மியை வைத்தியசாலையில் சேர்த்தனர். உயிருக்கு போராடிக் கொண்டு இருந்த தர்மி சசி சசி என்று வாய் புலம்பிக் கொண்டிருந்தாள். மீண்டும் தர்மியின் தாய் திருமணத்தை நிறுத்தும் முடிவோடு சசியின் வீடு நோக்கிச் சென்றார். இவ்வாறு சென்றவர் அதிர்ச்சி அடைந்து நின்றார்.)

**சசி** :- என்ன அன்ரி ஆச்சரியமாய் இருக்கா கலியாணம் எனக் கில்லை என்ர அண்ணைக்கு.

**கலா** :- என்ன தம்பி பத்திரிகையில் சசி எண்ட பெயர் இருந்தது. இவரை எனக்கு தெரியாது. நான் காணவும் இல்லை?

**சசி** :- அது அன்ரி எனக்கு சசி. அவருக்கு சசிகுமார். அதுதான் அவர் வெளிநாட்டில் இருந்து ஒரு கிழமைக்கு முன்புதான் வந்தவர். அவரை ஒருவருக்கும் தெரியவும் மாட்டுது.

**சசியின் தாய்** :- என்ன கலாக்கா பதறி அடிச்சு வந்தமாதிரி இருக்கு?

**கலா** :- ஓம் அக்கா. அதை ஏன் கேக்கிறீங்க? ங்க தர்மி விசம் குடிச்சிட்டாள்.

**சசி** :- என்னன்ரி சொல்லுறியள்?

(என்றவாறே எல்லோரும் வைத்தியசாலை புறப்பட்டனர்)

## காட்சி 04

**இடம் :- வைத்தியசாலை**

**சசி** :- டொக்ரர் தர்மிக்கு எப்பிடி இருக்கு?

**டொக்ரர்** :- மிஸ்டர் ச...சி

**சசி** :- ஆமா டொக்ரர்

**டொக்ரர்** :- நோ பிறாப்ளம் நல்லா இருக்கிறா உங்க பேரைத்தான் அடிக்கடி புலம்பிக்கொண்டு இருக்கிறா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சசி :- நான் பாக்கலாமா டொக்ரர்?

டொக்ரர் :- திஸ் ஓகே

சசி :- தங்ன்கியு டொக்ரர்

(அனைவரும் தர்மியை பார்வையிடல்)

சசியின் தாய் :- என்ன தர்மி இது பைத்தியக்காரத்தனமா??? உயிருஷக் கொண்டு ஆயிருந்தா...?

தர்மி :- என்னன்ரி ஒன்டும் ஆகல்லையே எண்டு தான் கவலையா யிருக்கு அப்பிடி நடந்திருந்தா நிம்மதியாப் போயிருப்பேன் கடவுளும் என்னை ஓதுக்கிற்றான்.

சசி :- என்ன தர்மி இப்பிடிக் கதைக்கிறாய்

தர்மி :- என்னசெய்யிறது ஊனம் ஊனம் எண்டு என்னை ஒதுக்கியே வைச்சிட்டாங்க சண்டையில் கால் போன மாதிரி தலை போயிருந்தா யாருக்குமே தொல்லையில்லை எனக்கெண்டு யார் இருக்கிறது.

சசி :- ஏன் தர்மி நான் இல்லை???

தர்மி :- நீங்களா உங்க கல்யாணம்???

சசி :- அது அண்ணைக்கு

தர்மி :- என்னை மன்னிச்சிடுங்க அம்மாட கதையைக் கேட்டு அனியாயம உங்களை இழக்கப்பாத்தன் ஏதோ கடவுள் தான் என்ர காலைப் பறிச்சு கடைசி மட்டும் உங்க காலடியில கிடக்கச் சொல்லி பண்ணிற்றாரு கடவுளுக்குத்தான் நன்றி சொல்லனும்.

**(தர்மியின் தாய் சசியின் காலில் விழல்)**

கலா :- அக்கா என்னை மன்னிச்சுடுங்க காலம் பூர உங்கள நான் மறக்க மாட்டேன்.

தர்மி :- ஆமா அது சரி அன்ரி தர்மிக்கு முதல் பாத்த மாப்பிள்ளை.....

கலா :- அது தம்பி கனடாலா நிக்கிற என்ர அண்ணைன்ர மகனுக்கு தர்'மியை சம்பந்தம் கேட்டவை நானும் காசு பணம் எண்டு ஆசைப்பட்டு பிள்ளைன்ர வாழ்க்கையை நாசம் பண் ணிட்டன்.

**(கலாவீன் பழைய நினைவு)**

தர்மி :- அம்மா கோல் வருது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலா :- ஆரெண்டு பாரம்மா

தர்மி :- மாமா கதைக்கிறார் உங்களோட கதைக்கோணுமாம்

கலா :- அட அண்ணையே தா தா தா... ஹலோ அண்ணை எப்படி சுகம் (நலம் வசரித்துவிட்டு தர்மியின் திருமணத்தைப் பற்றி கேட்டல்)

கலா :- அண்ணை வர்ற மாதம் 2ம் திகதி நல்ல நாளாம் நீங்க பேசி ஒரு முடிவுக்கு வந்திட்டா கலியாணத்தை நல்லபடியா முடிச்சிடலாம்.

**கலாவின் அண்ணா** :- ஓம் அம்மா அது சரி பிள்ளை எப்பிடி இருக்கிறாள்? கால்ல காயப்பட்டது சுகமோ?

கலா :- அது அண்ணை ஒரு காலை எடுத்திட்டாங்க ஒரு காலை இழந்து புள்ளை சரியா கஸ்ரப்படுது.

**கலாவின் அண்ணா** :- என்னம்மா? கால் இல்லையோ... ஹலோ... ஹலோ.... சரி சரி நான் அவசரமா வெளிய போகோணும் நான் பிறகு எடுக்கிறன்.

கலா :- சரி அண்ணை

**(மீண்டும் சில நாட்களின் பின்)**

கலா :- ஹலோ..... ஓ..... அண்ணை..... நான் கலா கதைக்கிறன்....

**கலாவின் அண்ணன்** :- ஓ.... சொல்லு...

கலா :- அது அண்ணை.... பிள்ளைட கலியாண விசயமா.....

**கலாவின் அண்ணா** :- ஓம் அம்மா... ஓ... அவன் மகன்ர இஞ்சினியர் படிப்பு இன்னும் முடியல்ல என்னும் ரெண்டு வருசக் கோசோ இருக்காம். அவனிட்ட கலியாணக் கதையை எடுத்தா அவன் பாய்ஞ்சு விழுறான். படிப்பு முடியாம எதுவும் நடக்காது என்டு சொல்லுறான் அது தான்னம்மா என்ன செய்யிறதென்று தெரியல்ல பாப்பம்.... அது சரி... அவசரமெண்ட உங்கனேக்க நல்ல மாப் பிளையாப் பாத்து செய்து வையன் என்ன உதவியேணுமென்டாலும் நான் செய்யிறன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலா :- அப்படித் தான் அண்ணை இரண்டு மூண்டு பேர் கேட்டவை ஊணமாம் என்டு சொல்லி பிறகு வேணாம் எண்டினம் அதுதான் அண்ணை என்ன செய்யிறது எண்டு தெரியல்ல. நீ மனசு வைச்சா...

கலாவின் அண்ணன் :- ஓம் அம்மா அதுக்கு என்ன செய்யிறது.... எனக்கு விருப்பம் இல்லாம இல்லை நானும் ஒதுக்கிறன் என்டு நீ நினைக்காத பாத்து சீதனத்தால கூடக் குறைய கொடுத்து செய்து வை இல்லாட்டி வீட்டோட மாப்பிள்ளையா ஒன்டப்பாரன்...

கலா :- என்னண்ணை நீ ஓம் எண்டு சொல்லித் தானே சம்பந்தம் பேசினாங்கள் நீயே கைய விட்டா... நாங்கள் எங்கயண்ணை போறது....

கலாவின் அண்ணன் :- நான் என்னம்மா செய்யிறது....? பொடியன் ஏதோ பியுச்சர் அது இது எண்டு அவனுக்கு விருப்பமில்லாம இருக்கு சரியம்மா.... உங்கனேக்க வார சம்பந்தத்தை பார் முழுச் செலவையும் நானே பாக்கிறன் சரி சரி ஒரு ஐஞ்சு நிமிசத்தால எடுக்கிறன்.

கலா :- ஹலோ..... அண்ணை..... ஹலோ.... ச்சே கட்டாப் போச்சு... அரசன நம்பிக் புருசனக் கைவிட்டதாப் போச்சு போன் வேற வேலை செய்யிதில்லை.....

(என்றவாறு நடந்தவற்றைக் கலா கூற)

சசியின் தாய் :- அக்கா... ஊனம் என்றுறது உம்பில மட்டும் இல்லை சிலர் உள்ளத்திலையும் இருக்கு உள்ளம் ஊனப்பட்டு வாழுறதை விட உடம்பு ஊனப்பட்டு வாழும் வாழ்க்கை எவ்வளவோ மேல் ஏனென்டா உள்ளத்து உள்ளத்து ஊனம் வெளிய தெரியாது உடம்பிலிருக்கும் ஊனம் வெளிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியும் அதனால் உண்மை என்ன என்பது கண்ணுக்குத் தெரியும் நடந்ததை மறந்திடு இனி நடக்க வேண்டியதைப் பாப்பம்.

**கலா** :- என்னென்டு நன்றி சொல்லுறதென்டு தெரியல்லையக்கா நான் இப்பதான் ஊனத்திற்கும் உள்ளத்திற்கும் உள்ள தொடர்பை சரியாப் புரிஞ்சிருக்கிறன்.

**சசி** :- சரி சரி உங்கட பிளாஸ்பேக்' எல்லாத்தையும் நிப்பாட்டிட்டு எங்கட நிகழ்காலத்திற்கு வாங்க வா தர்மி நாங்க எங்க புது வாழ்க்கையை ஆரம்பிக்கலாம். (என்று கூற ஆனந்தக் கண்ணீர் வடித்தவாறு தர்மி தனது உதவிக்காலான ஊன்று காலைக் கையில் எடுக்க சசி அதனைப் பறித்து எறிதல்)

**சசி** :- ஏய் தர்மி இது உனக்கு இனி அவசியமில்லை

**தர்மி** :- அப்ப நான் எப்படி நடக்குறது?

**சசி** :- ஊனம் என்றதை மறந்து நம்பிக்கையோட வா உனது உதவிக்காலாக என்றைக்கும் நான் இருக்கிறன்.

**சசியின் தாய்** :- சரி சரி இனி என்ன சந்தோசம் தானே புறப்படுவம்

**கலா** :- சரி போட்டு வாரன்

**சசி** :- எங்க அன்ரி??

**கலா** :- வீட்டதானப்பு எனக்கிருந்த உறவையும் உங்களிட்ட ஒப்படைச்சிட்டன் இனி இந்த கட்டைக்கு என்ன ஆனாலும் கவலையில்லை சரி வாரன்.

**சசி** :- அன்ரி உறவென்பது உண்மையான சொர்க்கம் இந்த நிமிடத்திலிருந்து நீங்களும் எனக்கொரு தாய்தான் எங்களுடன் வரலாம்.

**முற்றும்**

உள்ளம் நல்லா இருந்தா ஊனம் ஒரு குறையில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாட்டார் வழிபாடும் நம்பிக்கையும்


**திரு. க. நிருஜன்**
இறுதி வருடம், தமிழ்த்துறை.
பேராதனைப் பல்கலைக்கழகம்.


**நா**ம் இப்பொழுது பற்றிக்கொண்டிருக்கும் தமிழ்ச்சூழலும், தமிழ் மக்கள் பின்பற்றி வரும் சமயச்சடங்குகளும் எவ்வாறு நம்மை கடந்து வந்துள்ளது என்பதை வரலாறு ரீதியாகவும், ஆய்வு ரீதியாகவும் திரும்பிப் பார்த்தல் மிகுந்த முக்கியத்துவமானது.

இப்பொழுதுள்ள சிவன் வழிபாடும் , வைணவ வழிபாடும் வேண்டு மென்றே கலந்த ஒன்றாகும். அரசர் எவ்வழி அவ்வழியே மக்கள் என்ற கூற்றுக்கிணங்க அரசர்களை குறிவைத்து கலக்கப்பட்ட மதம் சைவம் ஆகும். கிறிஸ்தவமும், இஸ்லாமும் எப்படி மக்களை கவர்ந்ததோ அவ்வாறே பௌத்த, சமண, சைவ, வைணவ வழிபாடுகளும் தமிழகமெங்கும் பரவியது.

நாட்டுப்புற மக்களால் மிக நீண்ட காலமாக வணங்கப்பட்டு வரும் கிராமக் கடவுள்கள் "சிறுதெய்வங்கள்" என்று அழைக்கப்பெறுகிறார்கள். இவர்களுக்கு நாட்டார் தெய்வங்கள் என்ற மறுபெயரும் உள்ளது. இந்த தெய்வங்களின் வழிபாடானது நாட்டார் மக்களின் நம்பிக்கை அடிப்படையிலும், அவர்கள் முன்னோர்கள் கற்று தந்த முறைப்படியும் இன்று வரை வாழ்கின்றது.

நாட்டார் என்பதற்கு தங்களுக்கெனத் தனித்துவமான அடையாளங் களையும் பொதுப் பண்புகளையும் கொண்டிருக்கும் குழு எனவும் இக்குழு குறைந்தபட்சம் இருவரையாவது கொண்டிருக்க வேண்டும் என்கிறார் ஆலன்டண்டிஸ். நாட்டார் வழக்காறு என்பது பொதுமக்களிடையே வழங்கும் வழக்காறுகளாகும். மனிதன் தொடக்கத்தில் இயற்கை உணவுகளையும்,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்குகளையும் வேட்டையாடி வாழ்ந்தாலும் இயற்கை சீற்றங்களுக்கு அஞ்சி, சில நம்பிக்கைகளையும், சடங்குகளையும் செய்தான். அடுத்தகட்ட வளர்ச்சியாக ஆற்றங் கரை ஓரங்களில் நிலையான குடியிருப்பை அமைத்து பயிர் செய்யும், உபரிகளைக் கொண்டு செழிப்பைப் போற்றும் விதமாக ஆடல், பாடல், சடங்குகளை நிகழ்த்தினான். இவற்றின் வழியே தோன்றியதாக நாட்டார் வழிபாடு காணப்படுகின்றது.

சிறு தெய்வங்கள் மக்களின் அன்றாடத் தேவைகளை நிறைவு செய்வனவாகவும் பாதுகாவல் தருவனவாகவும் மக்களால் பெரிதும் நம்பப்பட்டு வருகின்றன. நாட்டுப்புற மக்கள் சிறு தெய்வங்களை மட்டுமின்றி பெருந்தெய்வங்களை வழிபடுகின்றனர். ஆயினும் நாட்டுப்புற மக்களிடையே சிறு தெய்வங்களே ஒன்றிக் காணப்படும் சக்தியாக விளங்குகிறது. மக்கள் தாம் வழிபடும் சிறு தெய்வங்களின் தெய்வ நிலைக்குட்பட்ட பூசாரி, அருள் வந்தோரின் குறி கூறுவதன் மூலமாக தங்கள் வாழ்க்கைச் சிக்கல்கள், தமது விருப்பங்கள் நிறைவேறுவதாக கருதுகின்றனர். நிறைவேற்றப்பட வேண்டிய வேண்டுதல்கள் ஆகியவற்றை அறிந்து கொள்வதால் சிறு தெய்வங்கள் மீது மிகுந்த பற்றுடையவர்களாகின்றனர்.

நாட்டுப்புறச் சிறு தெய்வங்களில் பெண் தெய்வங்களைவிட ஆண் தெய்வங்கள் குறைவு என்றுதான் கூற வேண்டும். பெண் தெய்வங்கள் பல்வேறு சக்திகளைத் தங்கள் வசம் வைத்திருப்பதாகவும் ஆண் தெய்வங்கள் குறைந்த சக்தி உடையவையாகவும் நம்பப்படுவதே இதற்குக் காரணம் எனலாம். 'சக்தி இருந்தா வேலையைச் செய், இல்லையென்றால் சிவனேன்னு கிட' என்ற பழமொழி காணப்படுகின்றது. இது பெண் தெய்வங்களைச் சிறப்பிக்கவே உருவாக்கப்பட்டதாகும்.

இனக்குழு சமுதாயத்தில் தன்னுடைய சந்ததிகள் பெருகுவதற்கு, பெண்ணிடம் மிகை சக்தி இருப்பதை உணர்ந்து வழிபடத் தொடங்கினான். இதனுடைய எச்சமே இன்றைய அம்மன் வழிபாடாகவும் கொள்ளலாம். தொழில் சார்ந்து உருவான சாதியப் பிரிவினைகள் மேல் தட்டு, அடித்தட்டு என வலுப்பெற்று மேல் தட்டு மக்கள் அடித்தட்டு மக்களையும் சிதைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யத் தொடங்கினர். உதாரணமாக நாட்டார் சாமிகளான சிவன், திருமால் அவதாரமாக மாற்றுதலும் நாட்டார் சாமிகளுக்கே உரித்தான உயிர்பலியை தடுக்கும் பொருட்டு ஆகம விதிகளுக்கு உட்படாத நாட்டார் தெய்வ கோவில்களில் திருமால் போன்ற சிலைகளை நிறுவி உயிர் பலியைத் தடுத்தல் என்பது மறைமுகமாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

தமிழ் நாட்டில் 99 அம்மன் கோவில்கள் வடக்கு நோக்கி அமர்ந்திருக் கிறது. அதற்கான காரணமாக நம் மண்ணைச் சுற்றி மூன்று பக்கமும் கடலால் சூழ்ப்பட்டது. ஆபத்து என்று ஒன்று வந்தால் அது வடக்கு இருந்துதான் வரவேண்டும். தெய்வம் வடக்கு திசை நோக்கி தன் மக்களை காக்க ஆயுதம் ஏந்தி நிற்கின்றது என்பது மக்களின் நம்பிக்கை.



பொதுவாக அம்மன் போன்ற தாய் தெய்வ வழிபாடுகளில் பிராமணர்கள் அல்லாத பிற சாதியினரே பூசாரி யாக உள்ளனர். உலகம்மன், முத்தாரம்மன், மாசானி அம்மன், லோக நாயகி என வட்டாரத்திற்கு வட் டாரம் தெய்வங்கள் மாறுபடும். இருந்தாலும் தாய்த்தெய்வத்திற்கு தனித்தன்மைகள் உண்டு. வடக்கு நோக்கி அமர்ந்திருத்தல், கையில் ஆயுதம் ஏந்தியிருத்தல், பெரிய பொட்டு, மிரட்டும் விழி. வழிபாட்டு முறையில் பொங்கலும், முளைப்பாரியும், சாமியாடலும், இரத்தப்பலியும் இவற்றின் தனிக்கூறு. முன்பு காலத்தில் மரித்துப்போன அரசியரின் கல்லறைக்கு பள்ளிப்படை அமைத்து வழிப்படுவார்கள். வெம்மை நோய் வந்து இறந்து போன பள்ளிப்படைத்தான் சமயபுரம் மாரியம்மன் என்கிறார்கள்.

இவ்வாறே பல தெய்வங்கள் முளைத்துள்ளது. மணமாகி சுமங்கலி யாக இறக்கும் பெண்களையே தெய்வமாக்குகிறார்கள். மாலையம்மன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமங்கலியாக இறந்த ஒரு சாமானிய பெண் ஆவாள். ஆண் தெய்வ வழிபாடுகள் கருப்புசாமி, சுடலை, அண்ணமார், கருப்புசாமியுடன் நின்று போய்விடுகிறது. பூமணியின் அஞ்ஞாடி நாவலில் கருத்தையன் என்பவன் காவல் தெய்வமாக மாறுவதை அழகாக சித்தரிப்பார். நம் கூடவே வாழ்ந்தவர்களே நாட்டார் தெய்வங்கள் ஆக்கப்படுகிறார். கொலையால் மாண்டவர், மக்களுக்காக உயிர் நீத்தவர்களே இவ்வழியில் அடங்குவர்களாகும்.



சமண மதம் விட்டு சென்ற ஒரு தெய்வத்தை இன்னும் தமிழ்மக்கள் தமது தாய் தெய்வமாக வழிப்பட்டு வருகின்றனர். சமண மதத்தில் "அம்பிகா யட்சி" என்னும் புராணத்தில் வரும் இசக்கி நெல்லை, குமரி மாவட்டத்தில் பயந்து வழிபட்டு வரும் தெய்வமாகும். மேலும் பகவதி அம்மனும் சமண மதத்தின் எச்சங்கள். நெல்லை மாவட்டத்தில் சிங்கிகுளம் அருகே மலைக்கோயில் சமணப்பள்ளி ஒன்று உள்ளது. சமண மதத்தில் பள்ளி என்பது கோவில் ஆகும். இங்கு சமண கடவுளான தீர்த்தங்கரர் மற்றும் பகவதி அம்மன் உள்ளது. இம்மக்கள் இது சமண கோவில் என்று அறியாமல் தீர்த்தங்கரரை முனீஸ்வரர் என்று பெயரிட்டு வழிப்பட்டு வருகின்றனர். கி.பி ஏழாம் நூற்றாண்டில் மதுரையில் திருஞானசம்பந்தரால் கழுவேற்றப்பட்ட சமண மதம் பதிமூன்றாம் நூற்றாண்டு வரை நெல்லல மாவட்டத்தில் ஆங்காங்கே இருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளது. இதன் தொடர்ச்சியாகவே சமண வழிப்பாடு இன்னும் நம் வழக்கத்தில் சமண கடவுள் என்று தெரியாமல் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது.

தமிழ்க்கடவுளான முருகனின் மனைவிகளான தெய்வானையைப் பார்த்து வள்ளி கேட்கிறாள்.

" ஒழக்கு நெல்லுக்கு ஒழக்கு சள்ளை உணர்த்தி விக்கிறது
ஒங்க அண்ணணா எங்க அண்ணணா.."

உழக்கு நெல்லுக்கு மாற்றாக உழக்கு கருவாடு விற்றவர்கள் தெய்வானையின் சகோதரர்கள் என்று ஏளனம் செய்கிறாள் வள்ளி. தெய்வானை ஒரு மீனவப் பெண் என்பதை இந் நாட்டார் பாடல் விளக்குகிறது. இன்றைக்கும் திருச்செந்தூர் முருகன் கோவில் விசேஷங்களில் பக்கத்து மீனவ கிராமங்களில் உள்ளவர்கள் கலந்துக்கொண்டு மரியாதை செய்யப்படுகிறார். அங்குள்ள மீனவர்கள் அனைவரும் கிறிஸ்துவ மதத்தை தழுவியவர்கள் என்பது குறிப்பிடவேண்டியது. அங்குள்ள மீனவர்கள் முருகனை மச்சான் என்றழைக்கின்றனர். தெய்வானை இனத்துப்பெண் என்று உரிமை கொண்டாடுகின்றனர். ஜோ.டி. குரூஸின் ஆழி சூழ் உலகு நாவலிலும் கொற்கை நாவலிலும் ராஜம் கிருஷ்ணத்தின் அலைவாய்க்கரையில் நாவலிலும் இந்த தெய்வானை மீனவப் பெண் என்ற வரி வருகிறது.

பார்ப்பனுக்கு முன் பறையன் என்ற வார்த்தை உண்டு. பார்ப்பனர்களுக்கு முன்பு இவர்களே கோவில் வழிப்பாடுகளை நடத்தி வந்துள்ளனர். தாலி கட்டும் சடங்கில் ஈடுபடும் பார்ப்பனர்கள் ஆனால் தாலி அறுக்கும் சடங்குகளில் வண்ணார்கள் ஈடுபடுகிறார். ஒரு காலத்தில் சடங்குகளால் முன்னின்றவர்கள் இன்று ஒன்றுமில்லாமல் இருக்கிறார்கள்.

பெரிய கோவில்கள் சுற்று வீதிகளில் பிராமணர்களும், ரதவீதிகளில் வேளாளர்களும், தெருக்களில் பிற்படுத்தப்பட்டவர்களும், வயல்வெளிகளில் ஒடுக்குப்பட்டவர்களும் வாழும் இடமாக இருக்கிறது. கோவில்களில் மேல் சாதியினர் மட்டுமே அனுமதி என்ற நிலை மக்களின் நம்பிக்கையாக காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோத்த பொய் வேதங்களும்– மதக்
கொலைகளும் அரசர்தம் கூத்துக்களும்
மூத்தவர் பொய் நடையும் –சில
மூடர் தம்..................

வரலாறு என்பது மதக்கொலைகளும் அரசர்களின் கூத்துக்களால் ஆனது. வேதங்களில் பொய் வேதங்களும் உண்டு. மூத்த தலைமையினரில் பொய் நடைக்காரர்களும் இருப்பர் என்பது பாரதியின் கருத்தாகும்.

தீச்சட்டி எடுத்தல், மாவிளக்கு எடுத்தல், ஆயிரங்கண் பானை எடுத்தல், சேத்தாண்டி வேடமிடுதல், முளைப்பாரி எடுத்தல் போன்றவை மாரியம்மனுக்காக மேற்கொள்ளப்படும் சடங்குகளாகவும் நேர்த்திக் கடன்களாகவும் விளங்குகின்றன. இவற்றை மேற்கொள்வதன் மூலம் தங்களுடைய துன்பம் நீங்குவதாக மக்கள் நம்புகின்றனர்.

இயல்பாகவோ அல்லது கொலை செய்யப்பட்டோ இறக்கும் பெண்களைக் கன்னித் தெய்வமாக வழிபடும் மரபு பரவலாகக் காணப்படுகிறது. இறந்த கன்னிப் பெண், தன் வீட்டாருக்கு வளமையும் பாதுகாப்பும் அளிப்பதாகவும், அவள் கன்னிப் பெண்கள் மீது இறங்கி அருள்வாக்குச் சொல்வதாகவும் நம்பப்படுகிறது.

ஐய்யனாரினை கும்பிடும்போது பக்தர்கள் மண்குதிரைகளைக் காணிக்கையாகச் செலுத்தும் வழக்கம் காணப்படுகிறது. இது குதிரையெடுப்பு, புரவியெடுப்பு, புரவிக்காணிக்கை என்று குறிப்பிடப்படுகிறது. காணிக்கைக் குதிரைகள் ஒரே இடத்தில் எடுக்கப்பட்ட மண்ணால் உருவாக்கப்பட்டு இருத்தல் வேண்டும், கும்பிடு முடிந்ததும் அக்குதிரைகள் உடைக்கப்பட வேண்டும் என்பது மரபாக உள்ளது. ஆண்டு தோறும் பல நூறு குதிரைகள் காணிக்கையாகச் செலுத்தப்படுகின்றன. முடிவில் உடைக்கப் படுகின்றன. பலி கொடுத்தல் என்ற சடங்கிற்காக மண் குதிரைகளை உடைக்கும் வழக்கம் காணப்படுவதாகக் கூறலாம். ஐய்யனாருக்குச் செய்யப்படும் அத்தனைச் சிறப்புகளும் அவரது வாகனமான குதிரைக்கும் செய்யப்படுகிறது. பல இடங்களில் குதிரையையே ஐய்யனாராக வழிபடும் நிலையும் காணப்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. தங்களுக்கும் குடும்பத்தாருக்கும் கிராமத்தார்க்கும் தீங்கு வரும்போது அய்யனார் இக்குதிரைகளில் ஏறி, விரைந்துவந்து காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை காணப்படுகிறது.

சுடலை மாடன் கோயில்கள் சுடுகாட்டிற்கு அருகிலேயே அமைந் திருக்கும். சுடலை மாடனுக்கான கொடைவிழா மூன்று நாட்கள் வெகு சிறப்பாக நடத்தப்படும். சுடலை மாடன் வழிபாடு இரவிலேயே நிகழ்த்தப்படும். ஆடு, சேவல், பன்றி ஆகியவை பலி கொடுக்கப்படும். பூசாரி குருதி கலந்த உணவைச் சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்று குருதிச் சோற்றை ஆவிகளுக்கு வானை நோக்கிச் சூறையிடும் சடங்கு தவறாது இடம்பெறும். இது மக்களின் நம்பிக்கையின் வெளிப்பாடாகவே காணப்படுகின்றது.

தெய்வாக மாறியவர்களுக்கு பிடித்தமான உணவு வகைகளை செய்தோ, பொங்கல் வைத்தோ குடும்ப தெய்வத்திற்கு பூஜை செய்யப்படு கிறது. குடும்பத்தின் தலைவரே பூஜையை செய்கிறார். வீட்டில் நடக்கின்ற நல்ல காரியங்களுக்கு குடும்ப தெய்வத்திடம் அனுமதி வாங்கிய பின்னரே செயலில் ஈடுபடுகின்றனர். சில வசதி படைத்தவர்கள் சாமி வீடு என சிறு குடிசையை கட்டி அதிலும் இந்த தெய்வத்தை வைத்து வணங்குகின்றனர். இவை மக்களின் நாட்டார் தெய்வத்தின் மீதான நம்பிக்கையின் வெளிப்பாடாக காணப் படுகின்றது.

திருவிழா நாட்களில் குல தெய்வ சிறப்பு பூஜைகளையும் ஒன்றாக இணைந்து செய்கிறார்கள். கொல்லிமலை தெய்வமான பெரியசாமியை கொங்கு வெள்ளாளர், சோழிய வெள்ளாளர் என பல சாதிகளை சார்ந்த மக்கள் வணங்குகின்றார்கள். இவர்களுக்கு கோவில் பங்காளிகள் என்று சிறப்பு பெயர் கிராமத்தில் நிலவுகின்றது. அவர்களின் குடும்பத்தில் நடைபெறும் பிறந்தநாள் விழா, காதணி விழா, பூப்புனித நீராட்டு விழா, திருமண விழா போன்ற விஷேச நாட்களில் குலதெய்வத்திற்கு முதல் அழைப்பிதழ் வைக்கும் பழக்கம் இருக்கிறது. திருமண நிச்சயம் குலதெய் வத்தின் முன்பு நடக்கும் வழக்கமும் சில இடங்களில் இருக்கிறது. வருடத்திற்கு ஒரு முறை சுற்றமும், கோவில் பங்காளிகளும் ஒன்றாக இணைந்து ஆட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட வெட்டி பொங்கல் வைத்து விழாவை போல சிறப்பாக வழிபாடு செய்கின்றார்கள். இச்செயற்பாடுகளால் குலதெய்வங்கள் தான் தம்மைக் காப்பதாக ஒவ்வொரு குலத்தவரும் நம்புகின்றனர்.

மனிதன் இயற்கையோடு இணைந்ததாக தமது வாழ்வு முறையை மேற்கொள்ளும்போது, இயற்கையின் பல்வேறு ஆற்றல்களையும், அதீத தன்மைகளையும் கண்டு அஞ்சியும், அதன் சீற்றத்திற்கு ஆளாகாமல் இருக்கவும் இயற்கையைச் சக்திகளான நிலம், நீர், காற்று, ஆகாயம், இடி, மழை, மின்னல், சூரியன், சந்திரன் போன்றவற்றை வழிபடலானான். இதன் தொடர்ச்சியாக விலங்கு, செடி, சடப்பொருள்களையும் வணங்கச் செய்தது. இந்த நம்பிக்கைகள்தான், ஆற்றங்கரை ஓரங்களில் குடியமர்த்தல், பயிரிடுதல் போன்ற செயல்களில் ஈடுபடவும் தூண்டியது. இந்நம்பிக்கையுடையவர்களின் செயற்பாடுகளிலும் நாட்டார் தெய்வ வழிபாட்டிற்கான அடிப்படை நம்பிக்கைத் தன்மை காணப்படுவதனைக் காணலாம்.

குலதெய்வ வழிபாட்டில் இறந்து போன தனது முன்னோர்களையும், தாய், தந்தையரையும் வழிபடத் தொடங்கினர். அவர்களை அடக்கம் செய்த இடத்தில் கல்லை நட்டும் வணங்கி வந்தனர். பழங்கதை ஒன்றில் ஒன்பது அக்கா தங்கைகள் இறந்த பின் அவர்கள் வாழ்ந்த ஒவ்வொரு ஊரிலும் கிராம தேவதைகளாக இருந்து ஊரைக் காக்கின்றனர் என்றும் அவர்கள் செல்லி, வில்லி, வைணவி, பூஞ்சோலை, துர்க்கை, புரையாறு, இருச்சம்மா, பொன்னி, கங்கை என்பவர்களாகும். இவர்கள் தமது ஊரை காப்பாற்றுவர்கள் என்று மக்கள் நம்பிக்கையின் அடிப்படையில் வழிபட்டு வந்தனர்.

மனிதன் தன்னுடன் வாழ்ந்த ஒருவன் இறந்துவிட்டால் அவனின் ஆவி பூமியில் உலவும் என நம்பினான். ஆவிகள் மனிதனின் அனைத்து செயல்களையும் இயக்க வல்லவை என்ற எண்ணமே ஆவி வழிபாட்டுக்கு அடிகோலியது எனலாம். இதனை "சமயத்தின் தொடக்கம் ஆவிகளின் பால் ஏற்பட்ட நம்பிக்கையிலிருந்து தோன்றியது" என்பர் டைலர். இதனால் ஆவிகளை அமைதிபடுத்தவும், நன்மைகளைப் பெறவும் இறந்தவர்களுக்கு வழிபாடு செய்தனர். இவ்வழிபாட்டுத் தன்மைக்கும் நாட்டார் தெய்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாட்டின் நம்பிக்கைக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருப்பதனை அறிந்து கொள்ளலாம்.

நம் முன்னோர்கள் இறந்த பின்னர் நம்முடன் காற்று வடிவில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் வாழ்ந்த காலத்தில் நமக்குச் செய்த நன்மைகளுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக வழிபடுகின்றனர். நடுகல் வழிபாடே முன்னோர்கள் வழிபாடு. பிற்காலத்தில் நடுகல் வழிபாட்டின் வளர்ச்சியே கோயில்களாக மாறியதாக கூறப்படுகின்றது. ஆவி வழிபாட்டி லிருந்து தெய்வ வழிபாடும், தெய்வ வழிபாட்டிலிருந்து சிறுதெய்வ வழிபாடும் தோன்றின என்றும் சிறுதெய்வ வழிபாட்டிலிருந்தே பெருந்தெய்வ வழிபாடு தோன்றியது என்றும் கூறப்படுகின்றது.

சிறுதெய்வ வழிபாடு ஓர் வரையறைக்கு உட்படாதது, இரத்தபலி கொடுத்தல், சடங்குகளைச் செய்தல், நிகழ்த்திக் காட்டுதல், நேர்த்திக்கடன் செலுத்துதல் போன்ற வழிபாட்டு முறைகளைக் கொண்டது. தெய்வங்களுக்கு விலங்குகளைப் பலியிட்டு இரத்தத்தைக் காணிக்கை செலுத்துவது சிறப்பாகக் கருதப்படுகிறது. ஆடு, மாடு, கோழி, பன்றி, நரி முதலிய விலங்குகளைப் பலியிடுகின்றனர். தெய்வங்களுக்கு பலியீடு செய்வதனால் மக்கள் தமக்கு நன்மை உண்டாகும் என நம்பி பலியிடுகின்றனர். தெய்வங்கள், இரத்த தாகம் கொண்டவை. ஆனால் இரத்தத்தைக் கடவுளுக்குப் பலியிட்டு உடலை மனிதன் சாப்பிடுகிறான்.

அங்காள அம்மன் கோயிலில் குட்டிபோடாத பெண் ஆட்டைக் கூட்டி வந்து பக்கவாட்டில் ஈரலை எடுத்துக் கோயிலை ஈரலுடனும் ஆட்டுடனும் சுற்றி வருவர். வழியில் ஆடு இறந்துவிட்டால் ஊருக்குக் கேடு என்றும், இறக்கவில்லை என்றால் ஊர் அவ்வருடம் செழிப்படையும் என்றும், மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

பரண் பூஜை என்பது நான்கு கல்லை நட்டு அதில் கருங்கிடாயை வைத்துக் கத்தியால் பிளப்பர். கிடாயின் இரத்தத்தில் வாழைப்பழத்தைப் போட்டு பிசைந்து பூசாரிகள் உண்பர். இதனைப் பரண்பூஜை என்பர். இப்பழத்தைச் சாப்பிடும் பெண்களுக்குக் குழந்தைபேறு கிடைக்கும் என்று நம்புகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுதெய்வ வழிபாட்டில் பன்றி வேட்டை சடங்காகக் கருதப்படுகிறது. பண்டைய காலத்தில் மக்கள் ஒன்றுகூடி பயிர்களை நாசம் செய்யும் பன்றியை அழித்தனர். அதனை நினைவு கூறும் முகமாக இன்னும் கிராம தேவதைக்குப் "பன்றிகுத்து" சடங்கைச் செய்கின்றனர். கொங்கு நாட்டில் இப்பன்றி குத்தைச் "சலகை குத்தல்" என்று அழைக்கின்றனர். பொதுவாக மனிதனின் தீமைகளை விலங்குகளுக்கு ஏற்றி அதனை இறைவனுக்குப் பலியிட்டு விடுவதால் மனிதனின் தீமைகள் மறைந்து விடுவதாக நம்புகின்றனர். கோயிலில் பலியிடப்படும் விலங்குகளின் இறைச்சியை உண்பதால் இறைவனின் அருள் கிடைக்கும் என்று நம்புகின்றனர். இதனால் சிறுதெய்வ வழிபாட்டில் பலியிடல் ஒரு புனிதச் சடங்காகக் கருதப்படுகிறது.

மாரியம்மன் கோயில்களில் தீச்சட்டி எடுத்தல் ஒரு சடங்காக இன்றும் நடைபெறுகிறது. மக்களைக் காக்கும் பொருட்டு அம்மன் அக்கினி பகவானைக் கையிலேந்தினாள் என்றும் அம்மனுக்கு நேர்த்திக்கடனாக மக்கள் அதே அக்னியைக் கையிலேந்துகிறார்கள் என்று புராணங்கள் கூறுகின்றன. தீச்சட்டி எடுத்தல் அம்மனின் சினத்தைத் தவிர்ப்பதற்காகச் செய்யப்படும் வழிபாடாகும். தீச்சட்டி சூரியனைக் கையிலேந்தும் குறியீடு என்பர். இதன் மூலம் அம்மனின் கோபம் இல்லாமல் போய் நன்மை ஏற்படும் என்று நம்புகின்றனர்.

முளைப்பாலிகை மந்திரத்துடன் தொடர்புடைய பாவனை நடனம் என்பர். பாவனை நடனத்தின் மூலம் மழை வேண்டுவது மட்டுமின்றி, தானியங்களின் செழிப்பையும் மானுடச் செழிப்பையும் தூண்டும் செழிப்புச் சடங்காகவும் முளைப்பாலிகை அமைந்துள்ளது. முளைப்பாலிகை நன்கு செழித்து வளர்ந்தால் அவ்வாண்டு விளைச்சல் பெருகும் என்ற நம்பிக்கை கொண்டனர்.

இவ்வாறாக நாட்டார் வழிபாடும் நம்பிக்கையும் சமூகத்தில் காணப்படுவதனைக் காணலாம். மனிதன் செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் அர்த்தங்கள் இருக்கின்றன. அச்சத்தின் அடிப்படையில் இறைவழிபாடு தொடங்கினாலும் நன்றி உணர்வில் முடிவடைகிறது எனலாம். கடவுளிடம் ஒரு செயலை எதிர்பார்க்கும்போது கைமாறு செய்யவேண்டும் என்பதற்காகப் பல நேர்த்திகடன்களை உருவாக்கி கொண்டனர். காரணம் தெரியாமலேயே நாட்டார் வழிபாட்டுடன் பல மருத்துவத்தையும், உளவியலையும், விஞ் ஞானத்தையும் கையாண்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்கந்த புராணத்தின் தனித்துவம்

**கோ. அரியநாயகம்**
ஓய்வுபெற்ற கிராம அலுவலர்
ஜெயபுரம், பூநகரி

இந்து சமயத்திலே தோன்றிய பதினெண் புராணங்களுள் முருகப் பெருமானின் வரலாற்றைக் கூறும் ஸ்கந்த புராணம் தனித்துவமுடையதாக மிளர்கின்றது. ஏனெனில் ஸ்கந்த புராணம் முழுமுதற் கடவுளாகிய முருகனாலேயே அடியெடுத்துக் கொடுக்கப்பட்டு அவராலே பிழை திருத்தம் செய்யப்பட்டு அவராலேயே அரங்கேற்றப்பட்ட சிறப்புப் பெற்ற மேலான புராணம் ஆகும்.

இப்புராணம் நைமிசாரண்ய வனத்திலே வாழ்ந்த முனிவர்கள் கர்ண பரம்பரைக் கதையாக தோன்றிய முருகனின் வரலாற்றை அவ்வனத்திலே வாழ்ந்த சூத மகா முனிவரைப் பார்த்து புராணமாக பாடுமாறு வேண்டுதல் செய்ய சூத மகா முனிவர் சமஸ்கிருதத்திலே சுலோகங்களாக செய்தருளினார். பிற்காலத்திலே காஞ்சி மாநகரத்திலே குமா கோட்டத்திலே உள்ள ஆலயத்தின் அர்ச்சகராக விளங்கிய சிவகோச்சாரியாரின் மகனாகிய முருகனின் மேல் இடையறாத பக்தி உடையவாராக விளங்கினார். இவர் ஒரு நாள் முருகனை வழிபாடு செய்து விட்டு இரவு படுத்து நித்திரை கொள்ளும்போது முருகன் அவரின் கனவில் தோன்றி தன்னுடைய வரலாற்றை தமிழிலே புராணமாக பாடுமாறு திருவாய் மலர்ந்தருளினார்.

அப்பொழுது அதனை எப்படிப் பாடுவது என வேண்டுதல் செய்ய தமிழ் தெய்வமாகிய முருகன் "திகட சக்கரம்" என அடியெடுத்துக் கொடுத்து மறைந்தருளினார். நித்திரைவிட்டு எழுந்து கச்சியப்பர் எம்பெருமானின் கருணைத் திறத்தை எண்ணி வியந்து ஸ்நானம் செய்து குமர கோட்டத்திலே உள்ள முருகன் ஆலயத்திலே சென்று வணங்கி அவரது ஆணையை நினைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்து வணங்கி முருகனின் வரலாற்றை தமிழிலே "திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்" என்று தொடங்கி புராணமாக பாடினார். ஒரு நாளைக்கு 100 பாடலாக 10345 பாடலாக (செய்யுள்) பாடினார். ஒவ்வொரு நாளும் 100 பாடல் பாடி முடிந்ததும் குமர கோட்டத்திலே உள்ள முருகன் ஆலயத்தில் தான் எழுதிய பாடல்களை எம்பெருமான் ஆலயத்தின் வாசல் படியில் வைத்து தாளிடுவார். அடுத்த நாள் ஆலயத்தை திறந்து தான் எழுதிய பாடல்களை வாசித்து பார்க்கும் பொழுது சில பிழை திருத்தங்கள் செய்யப்பட்டிருப்பதைப் பார்த்து சந்தோஷ் மிகுதியினால் இறைவனின் அருளை எண்ணி வியந்து வணங்கி இப்புராணத்தை பாடி முடித்தார்.

இப்புராணம் உற்பத்தி காண்டம் (சம்பவ), மகேந்திர காண்டம், தேவ காண்டம், அசுர காண்டம், யுத்த காண்டம், தஷ காண்டம் என ஆறு காண்டங்களை உள்ளடக்கிய 10345 செய்யுள்களை உள்ளடக்கியுள்ளது கச்சியப்பர் தான் பாடிய ஸ்கந்த புராணத்தை அக்கால நடைமுறையின்படி அரங்கேற்றுவதற்காக அரச சபைக்கு கொண்டு சென்றார். பல அறிஞர்களும் புலவர்களும் நிறைந்த அந்தச் சபையிலே அப்புராணத்தை பாடுமாறு அரசன் பணித்தான். கச்சியப்பர் "திகடசக்கரச் செம்முகம் ஐந்துளான்" என தொடாங்கி புராணத்தை பாட ஆரம்பிக்கும் பொழுது சபையிலே உள்ள ஒரு புலவர் எழுந்து நிகழ் + தசம் என்பது திகடசம் என முருகனே அடியெடுத்து கொடுத்தார். அதற்கு விளக்கம் சொல்லுவதற்கு ஒரு நாள் அவகாசம் தரும்படி அரசனிடம் வேண்டிக் கொண்டார்.

அரசனும் அதற்கு சம்மதிக்க சபை அன்று கலைந்தது. கச்சியப்பர் ஏட்டை எடுத்துச் சென்று ஆலய வாயிலில் வைத்து தாங்கள் பாடிய பாடலில் இப்படி பிழை கண்டு பிடித்தார்கள் என கண்ணீர் மல்க வேண்டுதல் செய்து இரவு துயில் கொள்ளச் சென்றார். அன்று இரவு முருகன் அவரின் கனவில் தோன்றி அடுத்த நாள் உனக்கு வெற்றியாக அமையும் ஏட்டை எடுத்துக் கொண்டு அரச சபைக்கு செல்லுமாறு பணித்தருளினார். அதிகாலையிலே எழுந்த கச்சியப்பர் எம்பெருமானின் கருணைத்திறத்தை எண்ணி வியந்து ஸ்நானம் செய்து ஆலயத்திற்கு சென்று வணங்கி ஆனந்த கண்ணீர் சொரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையோடு ஏட்டை எடுத்துக் கொண்டு அரச சபைக்குச் சென்றார். அன்று புராணத்தை வாசிக்க தொடங்கியபோது சபையின் நடுவனிடமாக ஒரு இளமையும் அழகும் நிறைந்த ஒரு புலவர் திரிபூடக வீபூதி தரித்தவராக உருத்திராக்க மாலையோடு கையிலே ஏட்டுடன் அங்கு தோன்றி "திகடசம்" என்பதற்கு விளக்கமளித்தருளினார். சோழ நாட்டிலே உள்ள வீரசோழியம் என்ற ஒரு இலக்கண நூலை காண்பித்து அதிலே உள்ள சந்திப் படலத்தில் 15ம் செய்யுளில் திகடசம் (திகழ் + தசம்) என புணருவதற்கு விதி உண்டு என காண்பித்து மறைந்தருளினார். அரசனுக்கு சபையில் உள்ளோரும் முருகனே இப்படி புராணத்தை அரங்கேற்றுவதற்காக வந்தார் என்பதை உணர்ந்து உணர்ச்சி மேலீட்டினால் முருகனை வணங்கி ஆனந்தக் கூத்தாடி ஸ்கந்த புராணம் முழுவதையும் கச்சியப்பர் சபையில் பாடி விளக்கமளித்தார். அரசன் கச்சியப்பரையும் ஏட்டையும் பட்டத்து யானையில் ஏற்றி தொண்டை மண்டலம் முழுவதும் கொண்டு சென்று விழா எடுத்து புராணம் அரங் கேற்றப்பட்டது.

இப்படிப்பட்ட சிறப்புமிக்க கந்தபுராணம் இது பாசுரங்களை அளிக்கவல்லது. மனிதன் இவ்வுலக வாழ்வுக்கு தேவையான பக்தி, வீரம் சகோதர பாசம், நன்றியுணர்வு, கடமையுணர்ச்சி, குருபக்தி, கற்பு, காதல் என பலவற்றை புராணம் முழுக்க காணலாம். இப்புராணத்திலே பக்தி என்பது பல இடங்களில் காணப்பட்டாலும் சூரபதுமனுடன் யுத்தம் நடைபெற்ற சமயத்தில் வீரபாகு முதலான இலட்சத்தெட்டு வீரர்களும் முருகப் பெருமானின் அஸ்திரத்தினுள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு முருகன் முன் வந்து நின்ற போது முருகன் வீரபாகு தேவரைப் பார்த்து நீ பல துன்பங்களை அனுபவித் தாய் விரும்பியதை கேள் என திருவாய் மலர்ந்தருளியபோது வீரபாகு தேவர் இப்படிக் கூறுகின்றார்.

"கோல நீடிய நீதிபதி வாழ்க்கையும் குறியேன்
மேலை இந்திர அரசினை கனவிலும் வெஃகேன்
மால் அயன் பெறும் பதத்தினை பொருளென மதியேன்
சால நின் பதத் அன்பையே வேண்டுவன் தமியேன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது தனக்கு குபேர பதவியோ, இந்திர பதவியோ, பிரம விஷ்ணுவின் பதவியோ எதனையும் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை எனவும் தங்களுடைய பாதகமலங்களின் மேல் எக்காலத்திலும் நீங்காத பக்தி அன்பு உடையவனாக விளங்க வேண்டும் என்ற வரத்தையே தர வேண்டும் எனக் கேட்டார்.

சூரபதுமன் சிறந்த சிவபக்தன், சிறந்த வீரன். முருகனுடன் சண்டை செய்து எல்லாவற்றையும் இழந்து தனித்தவனாக யுத்த களத்தில் நின்ற போதும்தான் பரம்பொருளாகிய முருகனுடன் சண்டை செய்கின்றேன். அவரை வெல்ல முடியாது என்பதை தெரிந்திருந்தும் அவனுடைய வீரம், தன் மானம் காரணமாக முருகனுடன் சண்டையை நிறுத்தி பணிய மறுத்து விட்டான். அதனை கச்சியப்பர்:-

"ஆகுதல் வேண்டும் நாள்கள தொழுதிடல் வேண்டும் அங்கை தாழுதல் வேண்டும் சென்னி தளருதல் வேண்டும் தாலு ஆழுதல் வேண்டும் தீமை அகன்று நாணி வற்களாகி வாழுதல் வேண்டும் நெஞ்சைத் தடுத்தது மானம் ஒன்றே" யுத்த களத்தில் எல்லாவற்றையும் இழந்து தனித்தவனாக நின்ற சூரன் முருகனின் விஸ்வரூபத்தைப் பார்த்தபோது அவரின் பாத கமலங்களை பணிய வேண்டுமெனவும் கைகளை சிரசின்மேல் வைத்து வணங்க வேண்டுமெனவும் நாவால் அவரை புகழ்ந்து பாட வேண்டும் எனவும் அவருக்கு அடிமையாகி பணிந்து வாழ வேண்டுமெனவும் எண்ணினான். ஆனால் அவனின் தன் மானமும் வீரமும் அதனை தடுத்து விட்டது என கூறுகின்றார்.

சூரனுடைய பிள்ளைகள் சகோதரர்கள் அவன் மீதுபாசம் உடையவர் களாக சிறந்த ஞானம் உடையவர்களாகவும் விளங்கினார்கள். அவனின் இளைய மகனாகிய இரணியனை சூரன் மறந்தது யுத்த களத்திற்கு சென்று முருகனை வென்று வா என கட்டளை இட்டபோது இரணியன் குழந்தை வடிவான முருகன் பரமேஸ்வரன்தான் அவனை யாராலும் வெல்லமுடியாது என பல அறிவுரை கூறினான். அப்போது சூரன் தன்னுடைய வாளால் வெட்ட எழுந்தான். அப்போது இரணியன் இச்சண்டையில் எல்லோரும் இறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவார்கள் கடைசியில் இவர்களுக்கு ஈமக் கிரியைகள் செய்வதற்கு கூட ஆட்கள் இல்லாமல் போய்விடுவார்கள் என எண்ணி சண்டைக்கு செல் கின்றான். அங்கே இடைநடுவில் சண்டையை முடித்து கடலில் மீனாக வடிவெடுத்து ஒழித்துக் கொள்கின்றான். சண்டை முடிந்தபின் இவனே எல்லோர்க்கும் ஈமக் கிரியை செய்கின்றான். அதனை கச்சியப்பரின் சிவாச்சாரியாரின்:-

"நன்றென்பதை உணராய் நானுரைத்த வாசகங்கள்
ஒன்றும் சிறிதும் உறுதி எனக் கொண்டிலையே
பொன்னும் படிக்கோ பொருதாய் புரவலனே
என்றுன்னை முன் போல் இனிதாக காண்பதுவோ"

என்னும் பாடல் மூலம் எடுத்துரைத்தார். சூரனின் சகோதரனாகிய சிங்கமுகாசுரன் ஆயிரம் தலைகளையும் இரண்டாயிரம் கைகளையும் உடைய சிறந்த வீரன், ஞான அறிவுடையவன். அவனைப் பார்த்து முருக னோடு சண்டை செய்து தனக்கு வெற்றியைப் பெற்றுத் தரவேண்டும் என கேட்டபோது சிங்கன் சொல்லுகிறார் "முருகனை குழந்தை என எண்ணிவிடாதே பரமேஸ்வர மூர்த்தி தான் குழந்தை வடிவாக உன்னுடன் சண்டை செய்கின்றார். அவரை யாராலும் செல்ல முடியாது எனவே தேவர்களை சிறை விடுத்து அவரை பணிந்து வாழ்வதே உனக்கும் எமக்கும் நல்லது" என பல அறிவுரை கூறினான். அப்போது சூரன் நீ எனக்கு சகோதரன் இல்லை நானே சண்டைக்கு செல்கின்றேன் என எழுந்த போது சகோதர பாசத்தின் மேலீட்டினால் சூரன் சண்டைக்கு சென்று இறப்பதன் முன் தானே சண்டைக்கு சென்று இறக்க வேண்டும் என எண்ணி நன்றியுணர்வுடைய வனாகி தான் சண்டைக்கு செல்கிறேன் என கூறிவிட்டு அங்கே சென்று பல மாயப் போர்களை புரிந்து உக்கிரமாக முருகப் பெருமானுடன் சண்டையிட்டு வீர சுவர்க்கமடைகின்றான். அவன் கூறிய ஞான உரைகளை கச்சியப்பரின்:-

"அருவமாகுவன் உருவமுமாகுன்
அருவு மருவுமில்லதோர் தன்மையுமாருவன்
ஊழின் கருமமாகுவன் நிமித்தமுமாகுவன் கண்டாய்
பரமனாடலை யாவரே பகர்ந்திடற் பாலார்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பாடலால் பரமேஸ்வரமூர்த்தி உருவம் இல்லாத பொருளாகவும் உருவம் உள்ளவராகவும் அருவுருவத் திருமேனி உடையவராகவும் உலகம் அழிகின்ற கடைசிக் (ஊழிக்காலம்) காலத்தில் தோன்று உருத்திர வடிவாகவும் எழுந்தருவார். அவரின் திருவிளையாடலை யாராலும் சொல்லமுடியாது என சிங்கன் கூறுவதாக விளங்குகின்றார்.

சூரபதுமனின் முதன் மந்திரியாகிய தருமகோபன் என்பான் நன்றி யுணர்வும் கடமையுணர்வும் மிக்கவனாகி சூரனின் முன் தானே சண்டைக்கு சென்று இறக்க வேண்டும் என எண்ணி யுத்தகளம் சென்று சண்டையிட்டு இறக்கின்றான்.

ஸ்கந்த புராணத்தில் குரு பக்தி எப்படி இருக்க வேண்டும் என்பதை குழந்தை வடிவான முருகன் ஆணவ மேலீட்டோடு சென்ற பிரம தேவரை பார்த்து பிரணவத்தின் பொருளைக் கூறுமாறு கேட்டபோது அது தெரியாது நின்றபோது அவரை பிடித்து சிறையிலடைத்தார். அப்போது பிரமனை சிறை யிலிருந்து விடுவிப்பதற்காக சென்ற சிவபெருமானுக்கு முருகன் குருவடிவாக எழுந்தருளி சிவபெருமான் சிஷ்யனாக கைகட்டி வாய்பொத்தி கீழ் இருக்க பிரணவ உபதேசம் செய்தருளினார் சிவகுருவாகிய முருகப் பெருமான்.

தலையாய கற்பு நெறி எப்படி இருக்க வேண்டும் என்பது ஸ்கந்த புராணத்தில் பல இடங்களில் காணப்பட்டாலும் சூரபதுமன் யுத்தகளத்தில் இறந்துவிட்டான் என்ற செய்தி அவனுடைய மனைவியாகிய பதுமகோமளை என்பவளுடைய காதுத்துவாரத்துக்கு எட்டியபொழுது இடியோசை கேட்ட நாகம் போல இறந்து விட்டதாக கச்சியப்பசுவாமிகள் கூறுவதன் வாயிலாக துலாம்பரமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

ஸ்கந்த புராணத்தில் மூன்று திருக்கல்யாணங்களை நாம் காணலாம் அவற்றில் பார்பதி பரமேஸ்வரர் திருக்கல்யாணம் முருகன் தெய்வநாயகி அம்மையார் திருக்கல்யாணம் மணம் பேசி செய்யப்பட்ட கற்பியல் நெறியை உலகுக்கு எடுத்துக்காட்டும் திருக்கல்யாணங்களாக அமைகின்றன. முருகன் வள்ளிநாயகி அம்மையார் திருக்கல்யாணம் களவியல. நெறி (காதல்) எப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைய வேண்டும் என்பதை பறைசாற்றி நிற்கின்றது. தனது மாமன் மகளாகிய சுந்தரவல்லி என்பார் நம்பிராசன் மகளாக இளமையோடும் அழகோடும் வள்ளி மலையில் வளர்ந்து வருகின்றார் என்பதை நாரதர் வாயிலாக அறிந்த முருகப் பெருமான் காதல் மீது பெற்றவராகி தான் முருகன் என்பதை காண்பிக்காது வள்ளி நாயகியாரையும் காதல் வயப்படுத்த வேண்டும் என்பதற்காக பல லீலைகளை, திருவிளையாடல்களைப் புரிகின்றார். வேடனாக கிழவனாக வடிவெடுத்து அவர்களது கையைப் பிடிக்க வேண்டும் என்பதற்காக பல லீலைகளைப் புரிகின்றார். அதனை கச்சியப்பர்:-

"ஆகத்தை வருத்துகின்ற அரும்பசி அவித்தாய்
தண்ணீர் தாகத்தை தவிர்த்தாய் இன்னும் .... தளர்ச்சி மண்ணோ மேகத்தை
அனைய கூந்தல் மெல்லியல் வினையென் கொண்ட மேகத்தை
தவிர்த்தியாயின் முடிந்ததென் குறை......

கிழவடிவம் கொண்ட முருகப் பெருமான் பசிக்கிறது எனக் கேட்ட போது வள்ளிநாயகியார் தேனையும் திணைமாவையும் கலந்து ஊட்டி விடுகின் றார். தனக்கு விக்கிவிட்டது தண்ணி தா என முருகன் கேட்டபோது கையைப் பிடித்து கூட்டிச் சென்று நீர்ச்சுனையில் தண்ணீர் கொடுத்து தாகம் தீர்க்கின்றார்.

இப்படி லீலைகளைப் புரிந்த முருகப் பெருமான் காதலின் உச்சமாக இப்படிக் கூறுவதாக கச்சியப்ப சுவாமிகள்:-

"மொளியொன்று புகலாயின் முறுவலும் புரியாயின்
விழியொன்று நோக்காயாயின் விரகமிக்குழல் வேன் உய்யும்
வழியொன்று காட்டாயின் மனமும்' கூற்றுருகாயாயின்
பழியொன்று நின்பாற் சூழும் பாரமுகம் தவிர்தி என்றார்"

அதாவது வள்ளிநாயகியாரும் காதல் வயப்பட வேண்டும் என்பதற் காக அவரை பார்த்து முருகன் என்னைப் பார்த்து ஒரு இனிய காதல் வார்த்தை கூறாவிட்டால் என்னைப் பார்த்து புன்சிரிப்பு சிரிக்காதுவிட்டால் என்னை கண்ணினால் இனிமையாகப் பார்க்காவிட்டால் துன்பத்திலே அலைகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு நீ ஒரு வழி காட்டாவிட்டால் நான் இறந்துவிட்டேன் என்ற பழிச்சொல் உன்னை வந்து சேர்ந்துவிடும் என கூறி லீலை புரிவதாக இச்செய்யுள் கூறுகின்றது.

எனவே இப்படி பலவாறான சிறப்புக்கள் பொருந்திய ஸ்கந்த புராணமானது பக்தி இலக்கியம் என்று சொல்லுவதற்கு அப்பால் இறைவனால் அருளப்பட்ட அருட்பாக்கள் என்று கூறின் மிகையாகாது. இது தமிழர் வாழும் இடம் எல்லாம் போற்றி வழிபடுவதற்குரிய தமிழ் வேதமாகும். இதனை பக்தியோடு படிப்பவர்களும் கேட்பவர்களும் இம்மை மறுமைப் பயனைப் பெற்று வீடுபேறு அடைவார்கள் என கச்சியப்ப சுவாமிகள் கூறுகின்றார்.

"இந்திரராகியார் மேல் இன்பமுற்றினிது மேவி
சிந்தையுள் நினைந்த முற்றி சிவ கதி தனிற் சேர்வர்
அந்தமிலவுணர்தங்கள் அடல் கெட முனிந்த செவ்வேள்
கந்தவேள் புராணந்தன்னைக் கா... தோது வோரே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூநகரிப் பிரதேச சிறுதெய்வ வழிபாட்டில் மரவடியும் பண்டமெடுத்தலும்

திரு. காசிப்பிள்ளை குலசேகரம்
B.A. Geo. Dip. in Ed.
சித்தன்குறிச்சி, பூநகரி.

பூநகரிப் பிரதேசத்தில் சிறு தெய்வ வழிபாடு தொண்மைக் காலம் முதல் மக்கள் மத்தியில் முக்கிய தெய்வ வழிபாடாக இருந்து வருகிறது. சிறு தெய்வ வழிபாட்டிற்குரிய முறைகள் பூநகரியின் வடக்குப் பிரதேசத்தில் காணப்படும் பெரும்பாலான கோவில்களிலேயே விசேடமாக வித்தியாசமாகக் காணப்படுகின்றன. இப்பிரதேசம் நீர்ப்பற்றாக்குறை உடைய பிரதேசம் கோவில்களின் மடைக்குரிய (பூசைப் பொருட்கள்) முக்கனிகள் (வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம்) ஏனைய சிறு தானியப் பொருட்கள், அபிசேகப் பொருட்கள் என்பன சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களிலிருந்தே அக்காலத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

போக்குவரத்து சிரமமான அக்காலத்தில் மடைக்குரிய பொருட்களை சந்தைகளில் கொள்வனவுசெய்து மாட்டு வண்டில்களிலும், கால்நடையாகவும், கடலைக் கடப்பதற்கு வள்ளம், தோணி என்பன பயன்படுத்தப்பட்டன. மிகவும் தெய்வ பயபக்தியோடு மேற்கொள்ளப்படும் இச்செயற்பாடு விரதமிருந்தே மேற்கொள்வர். பின்னர் கேரதீவு சங்குப்பிட்டி கடலைக் கடப்பதற்கு பாதைச் சேவை இருந்தது. இதனால் மாட்டு வண்டில்களில் சந்தையிலிருந்து நேரடியாக ஏற்றி பாதையூடாகக் கடலைக் கடந்து பூநகரியை அடைவர். பிற்காலத்தில் இச்செயற்பாடு உழவு இயந்திரம் இணைந்த பெட்டி பயன் படுத்தப்பட்டன.

இப்போது கேரதீவு, சங்குப்பிட்டி பாலமிடப்பட்டிருப்பதால் நேரடியாக சந்தையிலிருந்து பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு எடுத்து வரப்படும். தற்போது பூநகரிப் பிரதேசத்தில் எல்லாப் பொருட்களும் கிடைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் பழைய முறைமை இன்னமும் பின்பற்றப்படுகின்றன. காலவோட்டத்தில் பொருட்கள் (பண்டமெடுத்தல்) கொள்வனவில் மாற்றமேற்படலாம். கால் நடையும், மாட்டு வண்டிகளின் பிரயோகமும் இருந்த காலத்தில் சந்தைகளில் பொருட்களை வாங்கி மாட்டு வண்டிகளில் ஏற்றி, கடலை கடப்பதற்கு தோணிகளைப் பயன்படுத்தி பின்னர் திரும்பவும் மாட்டு வண்டிகளில் ஏற்றி பொருட்கள் குறித்தொதுக்கப்பட்ட மர நிழலில் பாதுகாப்பாக வைக்கப்படும். அவ்வாறான இடம் மரவடி என அழைக்கப்பட்டது.

மரவடியில் பொருட்கள் பாதுகாப்பாக காக்கப்படும்போது பொருட்களைப் பாதுகாக்க, பூசாரி, துணைக் பூசாரி (முன்னோடி), வளந்துக்காரர், உதவியாளர், வண்டில்காரர் என்போர் தங்கியிருப்பர். இவர்களுக்கான உணவு மரவடியில் தயாரிக்கப்படும். எனவே மரவடி என்பது உணவு தயாரித்துப் பரிமாறும் இடமாகவும், பண்டமெடுத்தலிடமாகவும் காணப்படும். மரவடி முறையானது பூசைக்குரிய பொருட்கள் கொள்வனவிலிருந்து பூசை நடைபெறும் தினம் வரையான காலங்கள் நீண்டிருப்பதால் தெய்வங்களை வேண்டி பொருட்கள் கொள்வனவு செய்யும் நாளிலிருந்து விரதமிருந்து பூசை முடியும் வரை புனிதத் தன்மையோடு பூசாரி தொடக்கம் மற்றையோரும் செயற்படுவர். சில கோவில்களிற்கு மரவடி இரண்டிருந்திருக்கிறது. அதாவது பொருட்கள் (பண்டம்) கொண்டு வரப்பட்டு பொது இடத்தில் பாதுகாக்கப்பட்டு பூசை நடைபெறும் தினத்தன்று கோவிலுக்கு அருகாமையிலுள்ள மரவடிக்கு எடுத்துச் செல்லப்படும். இது படையெடுத்தல் என்ற சொற்றொடரால் அழைக்கப்படும்.

பண்டம் கொண்டு வரப்பட்டு பாதுகாப்பது தொடக்கம் பூசையன்று பண்டம் எடுத்துச் செல்லும் வரை ஊர் மக்கள் தமது வேலைகளுக்காக காடுகளுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்வர். ஏனெனில் தெய்வக் குற்றம் நிகழ்ந்திடும் என்ற கருத்தாகும்.

முற்காலத்தில் கோவில்கள் பெரும்பாலும் தெய்வ உருவங் களுக்குப் பதிலாக கல் (பிள்ளையார், அம்மன்) சூலம் (வைரவர்) பொல்லுகள் (குறிப்பன்) பயன்படுத்தப்பட்டன. இவை பெரிய மரத்தின் அடி நிழலில் வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கப்பட்டன. எனவே அதுவும் மரவடி என்ற பெயர் பெறக் காரணமா யிருக்கலாம். பிற்காலத்தில் அவை பனை ஓலைக் கொட்டில்களாகவோ, தென்னை ஓலைக் கொட்டில்களாகவோ பரிணமித்தன. அதன் பின் தகரப் பாவனை காலத்தில் தகரமும் பின்னர் ஓடு, சீமெந்துக் கட்டிடங்களாக கோவில்கள் மாறியுள்ளன. ஆயினும் மரவடியும் பண்டமெடுத்தலும் மரபு மாறாத செயற்பாடுகளாக இன்றுமுள்ளன.

மரவடி பெரும்பாலும் பெரும் விருட்சங்கள், அதன் கூடமான இடங்களிலேயே பயன்படுத்தப்பட்டன. மேலும் அவை காடுகளினால் காற்றொதுக்குப் பிரதேசங்களாகவும் காணப்பட்டன. அவ்மரவடிகள் பூசைக் காலங்களிலேயே மக்களால் சருகுகள் இல்லாமல் துப்பரவு செய்யப்படும். பூசை நேரத்தில் மரவடி எல்லா வகையிலும் பாதுகாப்பான இடமாக மாற்றப்பட்டிருக்கும்.

பொதுவாக சிறு தெய்வ வழிபாட்டு பெரும்பாலான கிராமங்களின் எல்லா மக்களும் இணைந்து செயற்படுவது சிறப்பம்சமாகும். உதாரணமாகு பத்திப்பாய் (பத்தினித்தாய்) கோவில் வழிபாடு, தெங்கு றோட்டு கோவில் வழிபாடு, செல்லையா தீவு அம்மன் வழிபாடு என்பவற்றைக் குறிப்பிடலாம். இதனால் பண்டமெடுத்தலும், மரவடியும் இரண்டு கோவில் பூசகர்களால் ஒன்று சேர்ந்து செயற்படும் மரபும் காணப்படுகிறது. குறிப்பாக தெங்குறோட்டு பெரும்படையும், வில்லடி ஐயனார் கோவில் பூசைச் செயற்பாடுகள் ஒன்றாகவே முன்னெடுக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமது சைவசமயம் வளரவும் வாழ்வியல் சிறக்கவும் சிந்திப்போம் செயற்படுவோம் பயன்பெறுவோம்


சைவசிவாச்சாரியார், ஈழவூர் சைவப்புலவர்,
சைவசித்தாந்த பண்டிதர், இந்து தர்மாசிரியர்,
**சிவஸ்ரீ கதிர் குமாரசாமி சுமுகலிங்கம் ஐயா**
B.A.(தமிழியல்) MA Sp. (சைவசித்தாந்தம்)


**கோ**வில் இறைவனின் சின்னம். அதுவே அவனுடைய இல்லம். படைப்பும் படைத்தவனும் மனிதனும் அவனுடைய உண்மை இயல்பான ஆன்மாவும் உணரப்படும் இடம் இதுவே. சைவ சமுதாயத்தில் கோவிலுக்கு அளிக்கப்பட்டுள்ள முக்கிய இடத்தை முழுவதுமாக விளங்குவது இயலாது. இக்காலத்தில் கோவில்களின் செல்வாக்கு குறிப்பிடத்தக்க அளவு குறைந்திருக்கிறது என்று வருத்தத்துடன் கூறவேண்டி இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்பதையும், இந்தக் குறைபாடுகளைக் கண்டுபிடித்து அவற்றைத் தீர்க்கும் வழிகளை ஆராய்வதும் நன்மை தரும்.

முதல் பிரச்சனை கோவில் நிர்வாகம். அது சீர்கெட்டால் குழப்பம் தான் ஏற்படும். ஆனால் சைவ சமூகமே ஒரு குழப்பமான கலவை. உலகத்திலே இம் மாதிரியான ஒரு கலப்புச் சமூகத்தை காணமுடியாது என்று சொல்லலாம். வித விதமான பண்பாடுகள், பற்பல வகையினர், வெவ்வேறான பழக்கவழக்கங்கள் போன்றவற்றின் நடுவில் ஓர் ஒழுங்குமுறையையும் கட்டுக்கோப்பான அமைப்பையும் ஏற்படுத்தும் முயற்சி மிகவும் சிரமமானது. இங்குமங்குமாக சில சீரான அமைப்புக்களும் நிர்வாகமும் காலம் காலமாகத் தொடர்ந்து வந்துள்ளன.

சைவ சமூகத்தில் பல பிரிவுகள் கட்டுக்கோப்புடனும் சீர்சிறப்புடனும் செயல்பட்டு வந்துள்ளன. ஆனால் ஒட்டு மொத்தமாக பார்த்தால் ஒழுங்கீனமும் தெரிகிறது. பிற சமயங்களைப் போல் ஒரு மத்திய அமைப்பு இருந்திருந்தால் அது எல்லாப் பிரிவினரையும் ஒரு குடையின்கீழ் கொண்டு வந்திருக்கக்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடும். ஒரே விதமான நிர்வாக ஒழுங்கு எங்கும் இருந்திருக்கும். மத்திய கட்டுப்பாட்டிற்கு அனைத்துப் பிரிவினரும் பணியும்போது குழப்பத்திற் கும் சீர்கேட்டிற்கும் இடமிராது. இப்போது உள்ள பிரச்சினை பெரிது. மேலும், அது அவசரமாய்த் தீர்க்கப்பட வேண்டிய ஒன்று ஆகும். மிகுந்த செல்வாக்கும் மக்களின் நன்மதிப்பும் பெற்ற சைவசமயத் தலைவர்கள் ஒருங்கிணைந்து ஒரு போர்க்கால அடிப்படையில் சைவசமயம் தொடர்பான பிணிகளை விரட்ட வேண்டும். இது எவ்வளவு விரைவில் செய்யப்படுகிறதோ அவ்வளவு நல்லது.

உலகில் உள்ள மதங்கள் எல்லாமே சமமானவை, உண்மையானவை என்ற தாராள மனமும் சகிப்புத் தன்மையும் சைவர்களுக்கு உண்டு. சைவ சமயத்தில் இருக்கும் பல பிரிவினரும் தமக்குள் அதே மனநிலையோடு நடந்து கொண்டால் எந்த அளவு ஒருங்கிணைப்பும் ஒருமைப்பாடும் ஏற்படும். சைவர் களுக்கிடையிலேயே ஒருவருக்கொருவர் தாராளமான மனப்பாங்கும் சகிப்புத் தன்மையும் கருணை காட்டினால்தானே உலகளாவியதொரு ஒருமைப்பாட்டை ஏற்படுத்தமுடியும்.

கோவில்களைப் பண்டைய பெருமைமிகுந்த நிலைக்கு கொண்டு வர வேண்டும். தொன்றுதொட்டு இருந்து வந்த முக்கியத்துவம் மற்றும் சமுதாயத்தில் இருந்த முதலிடம் ஆகியவை மீண்டும் கிடைக்க வேண்டும். பழம்பெரும் சீரும் சிறப்பும் கைபட வேண்டும். தீர்க்க வேண்டிய முதல் பிரச்சினை பாழடைந்த கோவில்களைப் பற்றியது. வரலாற்றுப் புகழ் பெற்ற கோவில்கள் எத்தனையோ இப்போது இடிந்து காணப்படுகின்றன. அங்கெல்லாம் நித்திய பூஜை என்றோ நின்றுவிட்டது. அதற்கு என்ன செய்ய வேண்டும் என்று எண்ணுவதற்கே பிரமிப்பாக இருக்கிறது. சில பழைய கோவில்களில் பூஜை நடக்கிறது. ஆனால், கட்டடங்கள் நிறைய பழுது பார்க்க வேண்டியிருக்கிறது.

புதிய நகர்களும், நகரங்களும் உருவாகிக் கொண்டே இருக்கின்றன. அங்கெல்லாம் புதிய கோவில்கள் தேவைப்படுகின்றன. தொழில் வளர்ச்சி விரைவாக ஏற்படும் பகுதிகளில் இது இன்றியமையாத ஒரு தேவையாக இருக்கிறது. இதற்காக அகில இலங்கை கோவில் அறக்கட்டளை என்ற ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பான நிர்வாக அமைப்பை ஏற்படுத்தலாம். சற்று நிதி வசதி உள்ள கோவில்களிலிருந்தும் பக்த பெருமக்களிடமிருந்தும் இதற்கு வேண்டிய நிதியை வசூலிக்கலாம். இந்த அமைப்பு சுதந்திரமாகச் செயல்பட்டுத் தேவைக்கேற்ப ஆலயப் பணிகளுக்கு உதவ வழி செய்ய வேண்டும்.

இரண்டாவது பிரச்சனை, அர்ச்சகர்களையும் கோவிலின் பிற பணி யாளர்களையும் பற்றியது. ஆகம நூல்களில் முறையாக தேர்ச்சி பெற ஆர்ச்சகர்களுக்கு என்று போதுமான கல்வி நிறுவனங்கள் வேண்டும். முழுமையாக பயிற்சி பெற்றவர்களே பொறுப்பில் அமர்த்தப்பட வேண்டும். எளிய வாழ்க்கை வாழ்பவர்களாகவும் சீரிய சிந்தனையாளர்களாகவும் அவர்கள் சிறக்க இத்தகைய பயிற்சிகள் பயன்படும். அவர்களுக்கு நல்ல ஊதியம் தர வேண்டும். பார்த்தாலே இவர் ஒரு பூசாரி, காசு பிடுங்குபவர் என்று மக்கள் பல இடங்களில் பயப்படும் நிலைமை மாற வேண்டும். இவருடைய பிரச்சனைகளைப் பரிவோடு புரிந்து கொண்டு அவர்களுக்கு தக்க ஊதியம் ஏற்பாடு செய்து தந்தால் குறை கூறுவதற்கு வாய்ப்பு இருக்காது.

கோவிலில் அருட்காற்று வீசுவதையும் நாம் எளிதில் உணரும்படி புறச் சூழல் இருக்க வேண்டும். உள்ளும் புறமும் தூய்மையாக இருக்க வேண்டும். சுற்றுப்புறச் சூழல் என்ற புறத்தூய்மைக்கும் மனிதனின் அகத் தூய்மைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பொதுவாக, மசூதிகளும் கிறிஸ்தவ தேவாலயங்களும் தூய்மையாகக் காணப்படுகின்றன. சமூகத் திலும், பண்பாட்டிலும் அவற்றில் பின்தங்கியிருப்பதாகக் கருதப்படும் பகுதி களில் கூட நேர்த்தியான பராமரிப்பு இருக்கிறது. கூட்டுப் பிரார்த்தனைகளிலும் வழிபாட்டுச் சடங்குகளிலும் அவர்கள் சிறந்த ஒழுங்கைக் கடைப்பிடிக் கிறார்கள். இது சைவர்களிடையே இல்லை என்பது பெரிய குறை.

முன்பு சொன்ன இரண்டு பிரச்சனைகளுக்குப் பிறகு மூன்றாவது, கோவிலையும் சுற்றுப் புறத்தையும் தூய்மையாக வைத்திருப்பது ஆகும். வரிசைப்படி பக்தர்கள் தரிசனத்திற்கு வருவது, ஒழுங்கையும் மௌனத்தை யும் காப்பது, வழிபாட்டில் கவனம் செலுத்துவது ஆகியவற்றில் அதிக அக்கறை காட்ட வேண்டும். பூஜை நேரம் தவிர மற்ற சமயங்களிலும் முடிந்தவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌனமாகவும் அமைதியாகவும் இருக்க பழகிக் கொள்ளவேண்டும். கோவில் பணியாளர்கள் குறைந்த அளவில்தான் இருப்பார்கள். எல்லா வற்றையும் கவனிப்பதும் கட்டுப்படுத்துவதும் அவர்களால் இயலாத செயல்.

ஒழுங்கிற்கும் கட்டுப்பாட்டிற்கும் ஒரே வழி பக்தர்களிடம்தான் இருக் கிறது. கோவிலருகே வசிக்கும் பக்தர்களாவது தாமாக மனமுவந்து முன்வந்து சில முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். ஆண்களும், பெண்களும், மாணவர்களும் குழுக்களாக அமைத்து சில பணிகளை மேற்கொள்ளலாம். கோவிலைத் தூய்மையாக வைத்திருப்பது, வருகின்ற பக்தர்களுக்கு நல்ல முறையில் தகவல்களை வழங்குவது ஆகிய பணிகளைச் செய்யலாம். மனமு வந்து முன்வரும் இப்பணியாளர்களுடைய இலவச சேவை சிறப்பாக அமை யத்தக்க பயிற்சிகளை சைவசமய நிறுவனங்கள் தரலாம். திருவிழாவின் போதும் தேர் உலாவரும் காலங்களிலும் இவர்கள் மிகவும் பயனுள்ளவர் களாக இருப்பார்கள். பக்தர்களின் பாதணிகளைப் பார்த்துக் கொள்வது, ஒழுங் காக வாகனங்களை நிறுத்துவது, கைப்பை முதலிய உடைமைகளை வாங்கி பாதுகாப்பாக வைப்பது, தரிசனத்திற்கு போகும் பக்தர்கள் வரிசையைச் சீர் படுத்துவது, முதியவர்களுக்கும் நலிந்தவர்களுக்கும் தரிசனம் செய்ய வழி செய்வது, குடிநீர் விநியோகம், அவசர மருத்துவ உதவி ஆகிய எத்தனையோ பணிகளில் இவர்கள் ஈடுபடுவார்கள். ஊதியம் எதையும் எதிர்பார்க்காமல், பக்தர்களுக்கு சேவை செய்வதையே பெரும் பேறாகக் கருதுவார்கள்.

சைவ சமயத்தின் உயரிய நோக்கங்களை உலகெங்கும் பரப்புவது ஒரு புறம் இருக்கட்டும். முதலில் சைவர்கள் மத்தியிலே அவற்றைப் பரப்புவதுதான் உடனடி வேலையாகத் தோன்றுகிறது. சைவர்களை உண்மையான சைவகளாக்குவது எப்படி? என்பதுதான் கேள்வி. இதற்கு விடை சைவக் கோவில்கள் தான். கோவில்கள் தொடர்பான பாடல்களையும் இலக்கியங்களையும் புகழ் பெறச் செய்ய வேண்டும். மகான்களின் இறை வார்த்தைகளை எல்லாம் பாமர மக்களுக்கும் புரியும் வண்ணம் அச்சிட்டு மலிவான விலையிலோ இலவசமாகவோ கிடைக்கச் செய்ய வேண்டும். இந்தப் பணிக்கு நம்முடைய மக்கள் நலப் பணியாளர்கள் உதவி செய்வார்கள். குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் இந்து சமயப் பாடங்கள் முறையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தப்பட வேண்டும். குழந்தைகளை விட பெரியவர்களுக்குத்தான் இத்தகைய பயிற்சி வகுப்புக்கள் அதிகமாகத் தேவைப்படுகின்றது. அவற்றை யெல்லாம் கோவில்களில் நடத்தலாம். சமயச் சொற்பொழிவுகள், கூட்டுப் பிரார்த்தனை, பஜனை, சமய இலக்கியப் பேருரைகள், பொருள் பொதிந்த நாடகங்கள் ஆகியவையெல்லாம் மேலும் அதிகமாக நடைபெற வேண்டும். தகவல் அறிந்து எல்லோரும் வந்து பார்க்க, கலந்து கொள்ள நல்ல அமைப்புக்கள் ஏற்பாடு செய்துதர வேண்டும்.

தெய்வ வடிவங்களுக்குப் பொன்னாலான நகைகளைக் காணிக்கை யாகக் கொடுத்து வருகிறார்கள். இது வேண்டாமே. போதுமான ஆடை ஆபரண அலங்காரங்கள் ஏற்கனவே இருக்கும்போது இருக்கும் செல்வத் தைப் பயனுள்ளதாகச் செலவிடலாமே. பக்தர்களுக்கும் பயணிகளுக்கும் அதிக வசதிகளைச் செய்து கொடுக்கலாம். ஊழியர்களின் ஊதியத்தை உயர்த்தலாம். மலர்செடி, கொடிகளும், கலைப் பொருட்களும் சேர்த்து கோவிலை மேலும் அழகுபடுத்த லாம். மனதுக்கு இன்பமாகவும் பக்தி ஆர்வத்தைத் தூண்டும்படியும் கோவில் சூழ்நிலை இருக்குமாறு செய்யலாம்.

தம்முடைய சமயச் சிறப்பை தாமே தெரிந்து கொள்ளாமல் இருந்தால் அது ஒரு பெருந்தவறாகும். இதற்காக வெட்கித் தலைகுனிய வேண்டி யிருக்கும். சற்றே அதிக வருவாய் உள்ள கோவில்கள் நிரந்தரக் கண்காட்சி களை ஏற்படுத்தலாம். சைவப் பண்பாட்டுக் களஞ்சியமாக இவை விளங்கும். வருகை தரும் கோடிக் கணக்கான பக்தர்கள் இந்தக் கண்காட்சிகளில் தம்முடைய மதத்தின் அடிப்படைத் தத்துவங்களையும் பேருண்மைகளையும் உணர்ந்து கொள்ளமுடியும். இத்துடன் முடிந்தால், இந்தப் பெரிய கோவில்கள் பண்பாட்டு நிலையம் மற்றும் மருத்துவ நிலையங்களை மக்களுக்காக அதிக அளவில் நிறுவி உதவலாம்.

ஓர் சைவனின் வாழ்க்கையில் மேன்மையான புனிதச் சடங்கு திருமணமாகும். மேலைநாட்டு நாகரிகம் பரவி வருவதால் அதில் வேண்டாத விபரீதங்கள் நுழைகின்றன. திருமணங்கள் கட்டாயமாக கோவிலில்தான் நடக்க வேண்டும் என்று இருந்தால் நன்றாய் இருக்கும். திருமணச் சடங்கின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதமும் காப்பாற்றப்படும். திருமணம் வேறு எங்காவது நடக்க வேண்டி இருப்பினும் கோவிலிலும் மற்றொரு சடங்கு என்றாவது வைத்துக் கொள்ளலாமே. மற்றொரு முக்கியமான ஒன்றைக் கூறவேண்டும். திருவிழாக் காலங்களில் கண்டிப்பாக எல்லோரும் கோவிலுக்கு வரவேண்டும். மேலும் தங்கள் குடும்பத்துக்குரிய சிறப்புப் பூஜையென்று கருதி ஒரு பூஜையாவது செய்யலாம்.

சைவ சமுதாய ஒருமைப்பாட்டை காலங் காலமாக காத்து வந்துள்ளது கோவில் என்ற ஒன்றுதான். சைவர்களின் வாழ்வியல் மையம் இது. ஆகவே, கோவில்களுக்குப் புனரமைப்பும் புதுப்பெருமையும் சேர்த்து சைவர் தம்மை வலுப்படுத்திக் கொள்ள வேண்டாமா? அப்படிச் செய்தால் வளம் பல பெருகும். சைவ சமுதாயத்தின் தலைவர்களெல்லாம் இப்பணிகளை தங்களுடைய கடமையாக ஏற்றுக்கொண்டு தம்மால் இயன்ற பெரும் முயற்சியை மேற்கொள்வார்கள் என்ற நம்பிக்கையும் மக்களிடம் இருக்கின்றது.

இதனைக் காப்பாற்றுவது ஆலயங்களின் அடியார்கள், தொண்டர்கள், பூசகர்கள், குருமார்கள், ஆலய அறங்காவலர்கள், தனவந்தர்கள், ஆலய பங்காளிகள், ஆலய உபயகாரர்கள், அரச அரசசார்பற்ற உண்மைச் சமய நிறுவனங்கள் இதில் அளப்பரிய அர்ப்பணிப்பான சிவப்பணியை "மக்கள் சேவை மகேசன் சேவை" என்று செய்தால் எவ்விதமான சோர்வும் இன்றி இளஞ் சமுதாயம் மேல் நிலைபெறும். சைவம் மேலோங்கும் எவ்விதமான மனச் சோர்வும் அடையத் தேவை ஏற்படாது, எல்லோரும் உணருவோம் உய்வடைவோம்.

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரண் நாமமே
சூழ்க வையகம் முந்துயர் தீர்க்கவே.

திருச்சிற்றம்பலம்.

சைவநன்மக்கள் வாழ்க, வளர்க
வாழ்க வையகம், வாழ்க வளமுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இருப்பவர்கள் இடமிருந்து வலமாக : செல்வி.வி.கோபிகா(அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு.வி.சிவாஸ்கரன் (முகாமைத்துவ உதவியாளர்) திரு.R.C.அமல்ராஜ் (உதவிப்பிரதேசசெயலர்), திரு.சி.ச.கிருஷ்ணேந்திரன் (பிரதேசசெயலர்), செல்வி.சி.சங்கவை (மேலதிகமாவட்டப்பதிவாளர்), செல்வி.கு.டர்மினி (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திருமதி.க.நித்தியா (அபிவிருத்தி உத்தியோகத்தர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோயில்களும் பண்பாட்டு வளர்ச்சியும்

**திருமதி கிரிஜா பத்மராஜ்**
முதுகலைமாணி சைவசித்தாந்தம்,
இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், பூநகரி

இறைவனை இரு நிலைகளில் வைத்து இந்துசமயம் வணக்க வழிபாடுகளை ஒழுங்கமைந்துள்ளது. அதாவது இறைவனுக்கு உருவ மில்லாப் பெருநிலையைக் கொடுத்து காட்சியால் அறியமுடியாத இறைவனை மனதிலே இருத்தி வழிபடும் அகவழிபாடு. மற்றையது இறைவனுக்கு உருவம் கொடுத்து உருவத்திலிருந்து அருளை வெளிப்படுத்தும் நோக்கில் அமைந்த புறவழிபாடு. இவ்விரு வழிபாட்டாலும் மனிதனுக்குரிய புறவழிபாடானது சிறப்புப் பெறுகிறது. இவ்வழிபாட்டிற்குரிய ஸ்தானமாக ஆகமங்கள் அறிமுகப்படுத்தியமையே கோயில்களாகும்.

அதாவது இறைவன் எனும் தலைவன் உள்ளிருத்தப்பட்டு ஆன்மாக் களுக்கு அருள்பாலிக்கும் இடம் தேவகிருகம், கோயில், ஆலயம் என்ற பெயர் களில் அழைக்கப்பட்டது. ஆன்மாக்கள் இறைவனோடு இணைப்பதற்குரிய இடமாக ஆலயங்கள் விளங்குகின்றன என ஆகமங்கள் அறிமுகப்படுத் தினாலும் அந்த ஆலயத்தின் நடைமுறைகளும், கிரியை முறைகளும், சடங்கு முறைகளும் சமயத்தை மட்டுமன்றி அது சார்ந்த பண்பாட்டையும் வளர்த் தெடுக்கும் மையங்களாக வளம் பெற்று நிற்பதனை இற்றைவரை காண் கின்றோம்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்றே" என்று ஆலயத்தை தொழுவது நன்மையானது என்ற கருத்தை மூதறிவாளர்கள் ஆகமத்துக்கு பின்னர் உரைத்து சமூகத்தவர்களுக்கு ஆலயத்திலே பற்றுநிதியை ஏற்படுத்தினர். இதனால் "ஆலயம் இல்லாத ஊர் அடவி காட்டிற்கு சமனானது" கோயிலில்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம்" என்றெல்லாம் கோயில் சமூகத்திலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாவசியம் உடைய ஒரு நிறுவனம் என்கின்ற உணர்வு நிலையானது ஊட்டப்பட்டதன் விளைவாக சமூக மையமாக கோயில்கள் முக்கியத்துவம் பெறத் தொடங்கின. கோயில்களை நிரந்தர அமைப்பு நிறுவனங்களாக செல்வந்தர்களும், அரசியலாளர்களும் உருவாக்கும் பணியிலே ஈடுபட்டதன் விளைவாக கோயில்கள் ஆகம விதியைத் தழுவி கோபுர விமானங்களும், மண்டபங்களும் சிற்ப ஓவிய அலங்காரங்களும் கொண்டவையாக எழுச்சி பெற்றமையை வரலாற்றுக் காலங்களில் எழுந்த ஆலயங்கள் சான்றுபடுத்து கின்றன. இதனால் ஊர்கள் தோறும், கிராமங்கள் தோறும், நகரங்கள் தோறும் ஏனைய நிறுவனங்களைவிட கோயில் என்ற நிறுவனம் மிகுதியான இடத் தினைப் பெற்று விளங்கின. பார்க்கின்ற பக்கங்கள் எல்லாமே ஆலயங்கள் எழுந்து நிற்கின்றன என்று கூறும் அளவிற்கு ஆலயங்களின் எழுச்சியை அதன் பொலிவு நிலையை கண்குளிர நாம் காண முடிகின்றது.

இக்கோயில்கள் சமூகத்தின் முக்கிய ஸ்தானங்களாக விளங்கி சமயம் வளர்க்கும் களங்களாக மட்டுமன்றி அது சார்ந்த பண்பாட்டையும் வளர்ப் பதனால் அவற்றின் கட்டட அமைப்பு மட்டுமன்றி பணிகளின் விரிவாக்கமும் ஏற்பட்டு கோயில் அமைப்பு முறை என்கின்ற ரீதியிலே பல அங்கத்துவ அம்சங்களோடு விரிவானதோர் நிறுவன அமைப்பாக கோயில்கள் செயற்படு கின்றன. இவை துயர்துடைக்கும் நிறுவனங்களாகவும், அறிவு வளர்ச்சி களங்களாகவும், கலை கலாசார வெளிப்பாட்டு நிறுவனமாகவும், சமூக ஒற்றுமையை வளர்க்கும் களங்களாகவும், சமூகத் தேவைகளை நிறைவு செய்யும் நிறுவன அமைப்புக்களாகவும் பரந்துபட்ட ரீதியிலே தம் சேவை களை பகிர்ந்து ஆற்றி வருவதன் காரணமாக சமூகப் பண்பாட்டு மையங்களாக கோயில்கள் விளங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

பண்பாட்டின் சிகரமாகவும் வளர்ந்த நாகரிகத்தின் சின்னமாகவும் விளங்குவது கலைகள். அந்தக் கலைகளின் உறைவிடமாகவே கோயில்கள் விளங்குகின்றன. சமயம் சார் கலைகள் என்று சிறப்புப்படுத்தப்படும் கட்டடம், சிற்பம், ஓவியம் என்பவற்றோடு இயல், இசை, நாடகம் முதலான கலைகள் வளர்ச்சி பெற்று விளங்கும் சிறப்பை கோயில்களில் காண முடிகிறது. எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துப் பண்பாட்டு விழுமியங்களில் ஒன்றாக விளங்கும் கலை கோயில்களை மையமாகக் கொண்டே வளர்ச்சி பெற்றன என்பதில் ஐயமில்லை.

மனிதனை வழிப்படுத்தும் அல்லது நெறிப்படுத்துவது சமயம், சமயத்தை ஒழுங்குபடுத்துவது வழிபாடு. வழிபாட்டை ஒழுங்குபடுத்துவது கிரியைகள். இந்தக் கிரியைகளை சிறப்புற ஆற்றுதற்குரிய ஸ்தானமாக கோயில்கள் விளங்குகின்றன. கோயிலில் நடைபெறுகின்ற விழாக்கள் ஒவ்வொன்றுமே தத்துவார்த்தப் பின்னணிகளைக் கொண்டுள்ளன. உதாரணமாக கோயில் அமைப்பு மனித உடலமைப்பை நினைவுபடுத்துவதாக அமைகின்றது. இதேபோன்று மூர்த்தி பேதங்கள் ஒவ்வொன்றின் அமைப்பில் உள்ளார்த்தமான பல தத்துவ உண்மைகள் அடக்கம் பெற்றன. சிறப்பாக ஐந்தொழில் தத்துவத்தை உணர்த்தும் நடராஜமூர்த்தி, தெற்கே முகம் திருப்பி இருக்கும் தட்ஷணாமூர்த்தி குரு தத்துவத்தை உணர்த்துமாறும் காணப்படுகின்றதை போன்று இறை உருவங்கள் தத்துவார்த்த உண்மைகளை உணர்த்துகின்றன. கும்பாபிஷேகம், மஹோற்சவம் முதலானவற்றில் நடைபெறும் கிரியைகளுமே அடிப்படை தத்துவார்த்த உண்மைகளை சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றன.

இவை மட்டுமல்லாமல் கோயில்கள் சமூக நல்லுறவை வளர்க்கும் களங்களாகவும் விளங்குகின்றன. மன்னர்களும், மக்களும் சந்திக்கும் இடமாக கோயில்கள் விளங்குகின்றன என்பதை முடியாட்சிக் காலக் கோயில்களில் காண்கின்றோம். கிராமத்ததவர்கள் விழாக் காலங்களில் கோயில்களில் ஒன்று கூடி உறவை வளர்த்துக் கொள்ளும் நிலையான பண்பாட்டைக் காணலாம். கலைஞர்கள் ஒன்றிணைந்து செயற்படுகின்றனர். அனைத்துக்குமே பிரதான ஒரு களமாக கோயில்கள் காணப்படுகின்றன.

மனித வாழ்வியலுக்குத் தேவையான அடிப்படை வசதிகளாகிய அடியார்கள் தங்குமிடமாக, வளங் குன்றியவர்களுக்கு வளமூட்டும் நிறுவனமாக கோயில்கள் விளங்குவதோடு இதனோடு இணைந்த மட நிறுவன அமைப்புக்கள் அடியார்களின் போசிப்பிற்குத் தேவையான பெரியளவிலான உதவிகளை வழங்கி உணவிடுதல், தாகசாந்தி முதலான பசிபோக்கும் முயற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் ஈடுபடுதல் சமய உணர்வை வளர்க்கும் பணிகளில் சமூகத்தவர்களுக்கு பிணி போக்கும் நிறுவனங்களாகவும் கோயில்கள் செயற்பட்டு வருகின்றன.

ஆரம்ப காலங்களிலிருந்து மனித வாழ்வியலுக்கு தேவையாக போசிப்புப் பணிகளில் ஈடுபட்டு கோயில் திருப்பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு ஊதியங்கள் வழங்க அவர்களை பராமரிக்க அறக்கொடைகள், நிலத் தானங்கள் என்பன வழங்கி தொழில்சார் நிறுவனமாகவும் பயன்மிக்கதொரு நிறுவனமாக கோயில்கள் விளங்கின. கோயில் மண்டபங்கள் சமூகத்தவர்கள் சமயக் கைங்கரியங்களுக்கு பயன்படுத்தும் தன்மையையும் காணலாம். இறைவன் வீற்றிருக்கும் திருக்கோயில்களில் திருமணம் முதலான சடங்கு முறைகளுக்கு மக்கள் ஒருங்கிணைந்து செயற்படும் மைய நிலையங்களாக கோயில்கள் சிறப்புற்று காணப்பட்டன.

கோயில்கள் குருத்துவத்தை பேணும் நிறுவனமாக காணப்படு கின்றன. ஆச்சாரிய ஆபிஷேகம் உபநயனம், வித்தியாரம்பம் முதலான சமஸ்காரங்களை கோயில் குருக்களோடு தொடர்புபடுத்தி ஆற்றி வரும் பிரதான நிகழ்வுகளாக கோயில்கள் ஆதரித்தன. நந்தா விளக்கு என்ற பெயரிலே கோயில்களை மையப்படுத்தும் இடங்களில் விளக்கெரிக்கும் வழக்கம் காணப்பட்டு வந்தது. கிராமம் வெளிச்சடைய கோயில்கள் உதவின. ஊர் மக்கள் ஒன்றுகூடி கோயில்களில் பொழுதைக் கழித்தனர். எனவே பரந்த சிந்தனையோடு கோயில்கள் விக்கிரங்களை உட்தாங்கி நிற்கும் வெறும் வழிபாட்டு நிறுவனங்களாக மட்டும் அல்லாமல் சமூகப் பண்புகளை வளர்த் துக் கொள்வதற்கு ஏதுவான வகையில் செயற்பட்டு வந்துள்ள சமூக நிறுவனங் களாகவும் விளங்கி இருந்தமையை மேற்குறித்த ஆலயங்களின் சமயப் பணிகள் உணர்த்தி நிற்கின்றன. ஆகவே கோயில்கள் மூலமாக பண்படுத்தப் பட்ட சமூகம் உருவாக்கலாம். "சமூகப் பண்பாட்டின் கருவூலங்கள் ஆலயங்கள்" என்பதனை நிலை நிறுத்திக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேச வழமைச் சட்டம் – ஓர் அறிமுகம்

**திரு. ஞா. போல் அன்ரன்**
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், பூநகரி.

**தேசவழமை அறிமுகம்**

தேசவழமைச் சட்டமானது யாழ்ப்பாணத்தைக் குடியுரிமை யாகக் கொண்ட தமிழருக்கு ஏற்புடையதான சட்டமாகக் காணப்படுகிறது. "தேசவழமை" எனப்படுவது நிலம் சார்புடைய வழக்காறுகள் எனக் கொள்ளப் படுகிறது. பண்டைய அரசர் காலப்பகுதியில் தென்னிந்தியாவில் வாழ்ந்த தமிழர்கள் பலர் இலங்கையில் வந்து குடியேறினார்கள். இவர்களில் பெரும் பாலானவர்கள் இந்தியாவின் "மலபார்" மாவட்டத்திலிருந்தும், ஏனையோர் தென்னிந்தியாவைச் சேர்ந்த சோழர் மற்றும் பாண்டிய இராசதானிகளி லிருந்தும் வந்து குடியேறியவராவர். அவர்கள் தம்முடன் அவர்களது வேறு பட்ட வழக்காறுகளையும் இங்கு கொண்டு வந்தனர்.

இந்த வழக்காறுகளின் கலப்பானது இலங்கையில் தேசவழமையை உருவாக்கியது எனவும் கருதப்படுகிறது. மலபார் பகுதியினரின் வழக்காறு களும் பயன்பாடுகளும் மருமக்காட்டயம் (Marumakattayam) எனும் சட்டத்தினால் கொண்டு வரப்பட்டது. இதுவே தேசவழமையின் மிகவும் அடிப்படையான வேலைத் திட்டங்களைத் தொடர்வதற்கான சட்டமாகும். மருமக்காட்டய சட்டமானது "தாய்வழி சமூக அமைப்பின்" உறுப்பினர்களை நிர்வகிக்கின்றது. இரண்டாவது எண்ணக் கரு உருவானது "கொறமென்டல்" (Coramondel) கரையிலிருந்து குடியேறிய "தந்தை வழி சமூக அமைப்பை" கொண்டிருந்தது. இவ்வண்ணம் தேசவழமையானது அங்குலம் அங்குலமாக தாய்வழி முறையினதும், தந்தை வழி முறையினதும் கலப்பினக் கொள்கை களைக் கொண்டிருந்தமையைக் காணக்கூடியதாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கேயர் யாழ்குடாநாட்டை ஆட்சி செய்த காலப்பகுதியில் தேசவழமை தொகுக்கப்படாமலேயே பிரயோகிக்கப்பட்டுள்ளது. ஆனால் டச்சுக் காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தை ஆண்ட Zwardacoom என்ற படைத்தளபதி 1697ம் ஆண்டில் தேசவழமைத் தொகுப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார். ஏனெனில் இம்முறைமையின் கொள்கைகளை உறுதிப் படுத்துவதில் காணப்பட்ட சிக்கலான தன்மையை டச்சுக்காரர் அறிந்திருந்தனர். டச்சுக் கவர்னர் சைமன்ஸ் (Simons) என்பவரின் கட்டளைப்படி 1706 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தின் தலைவராக இருந்த கிளாஸ் ஐசாக் (Claaz Isaacsz) என்பவருக்கு யாழ்ப்பாணப் பட்டணத்தின் பண்டைய வழக்காறு களும், சட்டமும் பற்றிய தொகுப்பைச் சேகரிக்கவும், கோவைப்படுத்துவதற்கு மான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இக்கோவையின் மூலப்பிரதி யானது முதலில் டச்சு மொழியிலேயே உருவாக்கப்பட்டிருந்தது. பின்னர் இது Jan Pirus என்பவரால் தமிழுக்கு மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டது. இக் கோவையானது 12 முதலியார்களிடம் வழங்கப்பட்டு அவை சரியானவை என அவர்களால் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் டச்சுக் கவர்னரால் குடியியல் பிணக்குகளை 1707 முதல் 1800 வரை தீர்ப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டது. கோவைப்படுத்தப்பட்ட இச்சட்டமானது உண்மையில் தேசவழமையின் மூலப் பிரதியே அல்ல. அதனுள் போர்த்துக்கேயரினாலும், டச்சுக்காரர்களினாலும் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களும் அதனுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தேசவழமைச் சட்டத்தின் நடைமுறையானது பிரித்தானியர் காலப் பகுதியிலும் பின்பற்றப்பட்டமை 1799 ஆம் ஆண்டு பிரகடனத்தில் பிரித்தானிய ஆட்சியாளர்களால் வழங்கப்பட்ட உறுதிமொழிகள் மூலமாகத் தெளிவா கின்றது. 1806 ஆம் ஆண்டு இல.18 ஒழுங்குமுறை விதியின் 6ஆம், 7ஆம் சட்டக் கூறுகளானவை, "மலபார் குடியேற்றவாசிகள் அல்லது அவர்களுக் கிடையேயான வழக்குகள் யாவும் இந்த வழக்காறுகளின்படியே தீர்க்கப்பட வேண்டும்" எனக் கூறியுள்ளன.

### தேசவழமை அறிமுகம்

தேசவழமைச்சட்டமானது பொதுவாக யாழ்ப்பாண மாகாணத்திற்கு உட்பட்ட மலபார் பிரதேசவாசிகளிற்கு ஏற்புடையது என்றும் வடமாகாணத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்பட்ட நிலப்பகுதியானது யாழ்ப்பாண மாகாணத்திற்கு உட்பட்ட மலபார் பிரதேச வாசிகள், சிங்களவர், ஆங்கிலேயர் அல்லாத யாராக இருந்தாலும் தேசவழைமையால் ஆளப்படுவர் என்றும் கூறப்படுகின்றது. அவ்வகையில் நிலம் தொடர்பான முன்வாங்கு உரிமை (Pre-emppion), ஒன்றியீடு(Otti mortgage), சேவகம்(Sevitudes) என்பவை எல்லாக் காணி உரித்தாளர் களுக்கும் ஏற்புடையது.

தேசவழமைக்கு உட்பட்ட பெண் ஒருவர் தேசவழமைக்கு உட்படாத ஆண் ஒருவரை திருமணம் செய்யும்போது தேசவழமையால் ஆளப்பட மாட்டார் எனவும் தேசவழமைக்கு உட்பட்ட ஆண் ஒருவர் தேசவழமைக்கு உட்படாத பெண் ஒருவ[illegible] திருமணம் செய்யும்போது தேசவழமையால் ஆளப்படுவார் எனவும் [illegible]1 ஆம் ஆண்டு திருமண உரிமைகளும், வழி யுரிமைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 3இன் படி கூறப்படுகின்றது. மேலும் தேசவழமையின் ஏற்புடைய நடைமுறை உதாரணங்களுடன் நோக்குகையில்,

Veluppillai vs Sivagamipillai (1910), 13NLR/74 என்ற வழக்கிலே யாழ்ப்பாணத் தமிழ்வாசி ஒருவர் 35வருடங்களிற்கு மேலாக மட்டக்களப்பில் வசித்து இறந்தார். மட்டக்களப்பிலே சொத்துக்களைக் கொள்வனவு செய்த பின்பு 1891இல் யாழ்ப்பாணத்தில் திருமணம் புரிந்து குடும்பத்தினரை யாழ்ப்பாணத்திலே விட்டுவிட்டு இடையிடையே வந்து சென்றார். 1910இல் இருந்து மட்டக்களப்பிற்கு தனது குடும்பத்தை அழைத்துச் சென்று இறக்கும் வரை அங்கு வாழ்ந்து வந்தார். இவருடைய திருமண உரிமைகள் தேசவழமை யினாலா அல்லது றோமன் டச்சுச் சட்டத்தினாலா ஆளப்படவேண்டியது என்ற வினாவுக்கு வடமாகாணத்திற்கு உட்பட்ட மலபார் வாசி என்ற அடிப்படையில் தேசவழமைச் சட்டத்திற்கு உட்பட்டவர்கள் என்ற அடிப்படை யில் தீர்ப்பளிக்கப் பட்டிருந்தது. அதேவேளை King vs Perumal (1911 14NLR.496) என்ற வழக்கிலே இந்து தமிழ் ஒருவர் இந்தியாவில் பிறந்து இலங்கை மத்திய மாகாணப் பகுதியில் குடியேறினார் இருக்கு தேசவழமை ஏற்புடையதாகாது எனத் தீர்ப்பளிக்கப்பட்டமை நோக்கற்குரியது.

செட்டி VS செட்டி (1935 -37 NLR 253) என்ற வழக்கில், தேச வழமையானது 1806 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தின் நிரந்தரவாசிகளான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலபார் இனத்தவருக்கே ஏற்புடையது எனவும், அது 1806 இன் பின்னர் யாழ்ப்பாணத்தில் குடியேறிய இலங்கைவாழ் தமிழர்களுக்கோ, இந்தியத் தமிழர்களுக்கோ ஏற்புடையது அல்ல எனவும் மலபார் என்பது தமிழர் என்பதன் ஒத்தசொல் எனவும் எனவே இக்கோவையானது யாழ்ப்பாண மாகாணத்தைச் சேர்ந்த அனைத்து தமிழ் நிரந்தரவாசிகளுக்கும் ஏற்புடைய தாகும் என்பதால் நீதிமன்றத்தால் இது மறுக்கப்பட்டது.

தர்மலிங்கம் செட்டி VS அருணாச்சலம் செட்டி (1945 - 45 NLR 414) என்ற வழக்கில் தேசவழமைக் கோவையானது அனைத்து யாழ்ப்பாணத் தமிழ் நிரந்தரவாசிகளுக்கும் ஏற்புடையது என்ற முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

சவுந்தரநாயகம் VS சவுந்தரநாயகம் (1917 - 20 NLR 274) என்ற வழக்கில், சவுந்தரநாயகம் என்பவர் தேசவழமைக்கு உட்பட்டவரா? இல்லையா? என்பதே இவ்வழக்கின் சாரமாகும். அவரது பெற்றோர் கொழும்பில் பிறந்த கொழும்பு செட்டிகள் ஆவர். இருப்பினும் இவர்கள் பின்னர் யாழ்ப்பாணத்தில் குடியேறினார்கள். சவுந்தரநாயகம் என்பவர் தென்னிந்தியாவில் திருச்சிராப்பள்ளி எனுமிடத்தில் சட்டத்தரணியாக இருந்து அங்கேயே இருந்ததால் அவர் தேசவழமைக்கு உட்படமாட்டார் என தீர்க்கப்பட்டது. அதாவது, கொழும்பு செட்டிகள் யாழ்ப்பாண நிரந்தர வதிவுடமையைக் கொண்டிருப்பதில்லை.

"நிரந்தரவாசி" என்தற்கு முறையான சட்ட வரைவிலக்கணம் ஏதும் வரையறுக்கப்படவில்லை. வேலுப்பிள்ளை எள சிவகாமிப்பிள்ளை (1910 - 13 NLR 74) என்ற வழக்கில், Wood Renton C.J கூறுகையில், "நிரந்தரவாசி என்ற வார்த்தையானது யாழ்ப்பாணத்தை நிரந்தர வாழ்விடமாகக் கொண்ட மக்களுக்கே ஏற்புடையது" என்றும், Middleton.J கூறுகையில் "யார் ஒருவருடைய சொந்த வீடு யாழ்ப்பாணத்தில் இருப்பின் அவர்களுக்கு ஏற்புடையது" என்றும் கூறினார்கள்.

**தேசவழமையில் பெண்கள்**

ஆதனக் கைமாற்றம் தொடர்பிலும், சிவில் வழக்கினைத் தாக்கல் செய்வதில், எதிர்வாதிடுவதில் கணவரின் பெயரை இணைத்துக் காட்டவேண்டும் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பிலும் தேசவழமைக்கு உட்பட்ட பெண்களிற்கு உள்ள உரிமைகளை நோக்குகையில் சமத்துவமான உரிமை என அரசியல் அமைப்பில் வரையறுக்கப்பட்டவை மற்றும் CEDAW போன்ற சர்வதேச பெண்கள் உரிமைகள் சமவாயக் கோட்பாடுகளை எந்தளவுக்கு நாம் மதிக்கின்றோம் என்பதும் ஆயவிற்குரியது.

பொதுவாக தேசவழமைக்கு உட்பட்ட பெண் திருமணத்திற்கு முன்பாக ஆதனக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் போது அல்லது இறுதி விருப்பாவணம் எழுதும்போது கணவரின் சம்மதம் பெறுதல் அவசியமில்லை எனினும் திருமணமான பின்பு, திருமணம் நிலைத்திருக்கும் காலம் வரை கணவரின் சம்மதத்துடனேயே ஆதனக் கொடுக்கல் வாங்கல்களை மேற் கொள்ள முடியும் என 1911ஆம் ஆண்டு திருமண உரிமைகளும்இ வழியுரிமை களும் கட்டளைச் சட்டத்தின் பிரிவு (6)இன் ஊடாக அறிய முடியும்.

இருப்பினும் 1911 ஆம் திருமண உரிமைகளும்இ வழியுரிமைகயும் கட்டளைச் சட்டத்தின் பிரிவு (8) இன் படி மாவட்ட நீதிமன்றின் அனுமதியுடன் பின்வரும் சந்தர்ப்பங்களில் கணவரின் அனுமதியின்றிச் சொத்தினைக் கைமாற்ற முடியும். அவையாவன:

- அவள் கணவனால் கைவிடப்படும்போது
- பரஸ்பர இணக்கத்தின் அவள் தனது கணவனை விட்டுப்பிரிந்து வாழ்ந்துவரின்
- நீதிமன்றத்தின் ஏதாவதொரு கட்டளையால் இரண்டு வருடங்களிற்கு மேற்பட்ட காலத்திற்கு அவள் கணவன் சிறையில் இருப்பின்
- அவளது கணவன் ஒரு பைத்தியக்காரனாக அல்லது முட்டாளாக அல்லது அவன் எங்கு வாழ்ந்து வருகிறான் என்பது தெரியாதவிடத்து
- அவளது கணவன் நியாயமற்ற முறையில் சம்மதம் தர மறுத்திருப்பின்
- மனைவியனதும், பிள்ளைகளினதும் நலனுக்காக கணவனின் சம்மதம் தேவையில்லை என்று தெரியுமிடத்து கணவனின் அனுமதியின்றி சொத்தினைக் கைமாற்றுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதன வகைப்பாடு

தேசவழமைக்கு உட்பட்ட ஆதனமானது முதுசம், சீதனம், தேடிய தேட்டம், உரிமை என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

## முதுசம்

முதுசம் என்பது மூதாதையர் வழி ஆதனமாக ஆரம்பத்தில் ஆண் வழி வந்தடைவதாகக் கொள்ளப்பட்டாலும் 1911 ஆம் ஆண்டு திருமண உரிமைகளும், வழியுரிமைகளும் கட்டளைச் சட்டத்தில் 1947 ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தின் பிரிவு 15இன் படி Mudusam is defined as patrimonial inheritance, being property devolving on a Person by descent at the death of his or her parent or any other ancestor in the ascending line" என்பதற்கமைய ஒருவன் அல்லது ஒருத்தியின் பெற்றோர் இறப்பதனால் அல்லது பெற்றோர் வழி மூதாதையர் இறப்பதனால் வந்தடையும் ஆதனமே முதுசம் எனப்படும்.

முதுசமாக வந்தடைந்த ஆதனத்தினை ஒருவர் விற்றுப் பணமாக்கும் போது அல்லது வேறு வழியில் சொத்தின் வடிவத்தினை மாற்றும்போது அது தேடிய தேட்டமாகக் கொள்ளப்படமாட்டாது என Jevaratnam Vs Murukesu (INLR 251, 1895) என்ற வழக்கிலே "Under the law of Thesawalamai, momey inherited by a husband and converted into lands does not form part of thediatettam. Such lad Should be treated as his separate property provided that the money can be earmarked" எனக் கூறப்பட்டதனூடாக அறியலாம்.

ஏதேனும் ஒரு வாழ்க்கைத் துணையானது முதுச ஆதனத்தினைப் பாராதீனப்படுத்தாது இறப்பின் அது பிள்ளைகளுக்கு சமபங்காகச் சென்றடையும். பிள்ளைகள் இல்லை எனின் தாய் வழி வந்த ஆதனமா அல்லது தந்தை வழி வந்த ஆதனமா என நோக்கப்பட்ட சொத்து பெறப்பட்ட இடத்தனை மீண்டமைந்து விடும். தாய் தந்தை அல்லத மூதாதையர் இல்லாவிடின் சகோதரங்களைச் சென்றடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாராதீனப்படுத்தாது இறப்பின் முதுசம் பகிரப்படும் முறை**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சீதனம்**

சீதனம் என்பது பொதுவாகத் திருமணத்தின்போது அல்லது திருமணத்தின் முன் அல்லது பின்னராக மனைவியால் கொண்டுவரப்படும் சொத்தாகக் காணப்பட்டாலும் ஆரம்பத்தில் திருமணத்தின்போது ஆண் வழியாக வரும் சொத்து முதுசம் எனவும் பெண் வழியாக வரும் சொத்து சீதனம் எனவும் பொருள் கொள்ளப்பட்டது.

பழைய தேசவழமையின் கீழாக பெண்ணிற்கு வாரிசுரிமையாக வரும் சொத்து சீதனம் உட்பட தாய்வழி வந்ததாகவும், ஆண்களிற்கு வாரிசுரிமையாக வரும் சொத்து தகப்பன் வழி வந்ததாகவும் கொள்ளப் பட்டது. ஆயினும் பிற்காலத்தில் இவ்வேறுபாடு நீக்கப்பட்டு சீதன ஆதன மானது தந்தையின் தனிப்பட்ட சொத்து அல்லது தாயின் தனிப்பட்ட சொத்து அல்லது தேடிய தேட்டத்திலிருந்து கொள்ளலாம் எனக் கூறப்படுகின்றது.

தற்காலச் சட்டவரப்பில் சீதன ஆதனம் பற்றி நோக்குகையில் சீதன ஆதனமானது மனைவியின் தனிப்பட்ட சொத்தாகவே கருதப்படுகிறது. சீதன உறுதியில் கணவனின் பெயரைச் சேர்த்து எழுதுவது வழக்கமாகக் காணப் பட்டாலும்

உதாரணமாக "இதன் பின்னால் காணும் ஆதன இடாப்பின் நன்கு விபரிக்கப்படும் ஆதனத்தையும் அதற்குச் சேர்ந்தவைகளையும் இங்கு சொல் லப்பட்ட வைத்தியசிங்கம் கமலநாதனுக்கும் எனது மகள் துரைசிங்கம் நிர்மலாவிற்கும் நடந்தேறிய விவாகம் காரணமாகவும், எங்களிற்கு இயல்பாக உள்ள அன்பு நேசம் காரணமாகவும்,"

இவ்வாறு குறிப்பிடுவதால் சீதன ஆதனத்தில் கணவருக்கும் பங்கு உண்டு எனக் கூறமுடியும். ஆயினும் 1911 ஆம் ஆண்டு 1ஆம் இலக்க திருமண உரிமைகளும், வழியுரிமைகளும் கட்டளைச் சட்டத்தின் சட்டப்பிரிவு (6)இன் படியாக தேசவழமைக்கு உட்பட்ட பெண்ணின் ஆதனப் பரிமாற்றங்களுக்கு கணவரின் சம்மதம் அவசியம் எனக் கூறப்பட்டுள்ளதால் சீதன ஆதனம் மனைவியின் தனிப்பட்ட சொத்தாக இருந்தாலும் அதனை விற்பதற்கோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது கைமாற்றம் செய்வதற்கோ அல்லது வேறு ஏதேனும் கொடுக்கல் வாங்கலிற்கோ கணவரின் சம்மதத்தினை எதிர்நோக்கி இருக்க வேண்டிய தேவை காணப்படுகிறது. இருப்பினும் (8)இன் படி மாவட்ட நீதிமன்றின் சம்மதத்துடன் சொத்துக் கைமாற்றம் இடம்பெறலாம் எனக் கூறப்பட்டாலும் நடைமுறையில் எவ்வளவு தூரம் சாத்தியமாகும் என்பது கேள்விக் குறியே. சீதன ஆதனத்தை மனைவி கைமாற்றாது இறப்பாராயின் அச்சீதன ஆதனத்தில் கணவருக்கோ அல்லது கணவரது உறவினர்களுக்கோ உரிமை இல்லை. மனைவியின் வாரிசுகளிற்கே அவ்வாதனம் சென்றடையும். வாரிசு இல்லா விடின் மீண்டும் அவ்வாதனம் தாய்வழியிலா அலது தந்தைவழியிலா வந்தடைந்தது என நோக்கப்பட்டு அவர்களுக்கே மீளச் சென்றடைந்துவிடும். ஆயினும் சீதன ஆதனத்தில் செய்யப்பட்ட திருத்தங்களுக்குரிய பணத்தினை கணவன் மீளப்பெறவும் தேசவழமை இடமளிக்கின்றது.

மேலும் பழைய தேசவழமையின் படியாக இறந்துபோன வாழ்க்கைத் துணையின் ஆதனத்திலிருந்து தப்பியிருக்கும் வாழ்க்கைத் துணை மகளிற்கு சீதனம் வழங்க முடிந்தது. ஆனால் 1911 ஆம் ஆண்டு திருமண உரிமைகளும் வாழ்வுரிமைகளும் கட்டளைச் சட்டத்தின் படியாக இவ்வுரிமை நீக்கப்பட்டு குறிப்பிட்ட விகிதாசாரத்தின் படியாக பிள்ளைகளிற்கு பகிர்ந்தளிக்கப்படு கின்றது.

## தேடிய தேட்டம்

தேடிய தேட்டம் என்பது பொதுவாகத் திருமணம் நிலைத்திருக்கும் காலத்தில் கணவனாலும் மனைவியாலும் பிரதிபலன் கொடுத்துக் கொள் வனவு செய்யப்பட்ட ஆதனமாகக் கருதப்படும். இது வாழ்க்கைத் துணையால் தனிப்பட்ட ஆதனமாகக் கொள்ளப்படமாட்டாது. ஆயினும் இரு வாழ்க்கைத் துணைகளினதும் சொத்திலிருந்தும் பெறப்பட்ட லாபங்கள் தேடிய தேட்ட மாகவே கொள்ளப்படும். ஆயினும் சீதனம் மற்றும் முதுசு ஆதனத்தை விற்றுப் பெறப்படும் பணம் தேடிய தேட்டமாகக் கொள்ளப்பட மாட்டாது.

பொதுவாகத் தேடிய தேட்டமானது கணவருக்கும் மனைவிக்கும் உரிய சமபங்கான சொத்தாகக் கொள்ளப்படும். கணவன் அல்லது மனைவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது தனிப்பட்ட ஆதனமாகத் தமது பெயரில் கொள்வனவு செய்திருந்தாலும் திருமணம் நிலைத்திருக்கும் காலத்தில் கொள்வனவு செய்யப்படின் மற்றைய நிறத்திற்கு அரைப்பங்கு சென்றடைந்துவிடும். உதாரணமாக மனைவி தனது பெயரில் ஒரு வீட்டைக் கொள்வனவு செய்திருந்தாலும்கூட அதில் ½ பங்கிற்கு கணவன் உரித்துடையவன் ஆகின்றான். அத்துடன் கணவருக்குரிய தேடிய தேட்டப் பங்கினை மனைவியின் சம்மதம் இன்றிப் பரிமாற்றம் செய்ய முடியும்.

ஆரம்பத்தில் தேடிய தேட்டப் பங்கினை பராதீனப்படுத்தாத இறப்பில் தப்பியிருக்கும் வாழ்க்கைத் துணைக்கு மொத்த தேடிய தேட்டத்தில் அரைப் பங்கும் ஏனைய அரைப்பங்கு பிள்ளைகளிற்கும் பகிரப்பட்டது. ஆனால் Manikkavasagar Vs Kandasamy (1986) 2SLR என்ற வழக்கின் பிற்பாடு தப்பியிருக்கும் வாழ்க்கைத்துணைக்கு தனக்குரிய அரைப்பங்கு உட்பட இறந்த வாழ்க்கைத் துணையின் ½ பங்கில் அரைவாசியான ¼ பகுதியினையும் இணைத்து தேடிய தேட்டம் உரித்துடையதாகின்றது. பிள்ளைகளிற்கு ¼ பங்கு சென்றடைகின்றது.

**தேசவழமைச் சட்டத்தின் பண்புகள்**

தேசவழமைச் சட்டமானது நாட்டில் இருக்கும் குறித்த ஒரு தமிழ் சமூகத்திற்கு ஏற்புடையதாகும் எனக் கருதப்படுகிறது. அதனால் இது ஓர் ஆள் சார் சட்டமாக (Personal law) கருதப்படுகிறது. இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு தேசவழமையானது குறித்த வட்டாரத்தின் அடிப்படையில் பிரயோகிக்கப்படுகின்றமை மற்றொரு முக்கிய அம்சமாகும். அதாவது வட மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கும் தமிழர்களுக்கே தேசவழமை பிரயோ கிக்கப்படுகிறது என்பதாகும். ஆகவே தேசவழமை எனப்படுவது ஆட்புல அடிப்படையிலான (Territorial basis) ஆள்சார் சட்டமாகும் (Personal law). தேசவழமையால் ஆளப்படும் நபரொருவர் தமது தனிப்பட்ட சட்டத்தை வட மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்து இலங்கையில் வேறொரு மாகாணத்தில் குடியேறுவதன் மூலமாக மாற்றக்கூடியதாக உள்ளது.

ஆள்சார் சட்டமானது தேசவழமையினால் ஆளப்படும் வட மாகாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட தமிழ் நபரொருவரின் வழியுரிமை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னுரிமை மற்றும் தம்பதிகளுக்கிடையிலான திருமணம்சார் சொத்துரிமைகள் என்பன தொடர்பில் அச் சொத்துக்கள் அவர் வடமாகாணத்திலோ அல்லது வேறு மாகாணத்திலோ இருப்பினும் அவை தேசவழமையாலே ஆளப்படும். மறுவார்த்தையில் கூறுவதானால் தேசவழமையால் ஆளப்படும் நபரொருவரின் சொத்துக்கள் கொழும்பில் இருந்தாலும் அச்சொத்துக்கள் தொடர்பான பின்னுரிமை, தம்பதிகளுக்கிடையிலான திருமணம்சார் சொத்துக்கள் அனைத்தும் தேசவழமைச் சட்டத்தாலேயே ஆளப்படும்.

சீலாட்சி VS விசுவநாதன்செட்டி (1972 – 23 NLR 97) என்ற வழக்கில் சீலாட்சி என்பவர் தேசவழமையால் ஆளப்படுபவர். வியாபார நோக்கத்திற்காக கொழும்பை வதிவிடமாகக் கொண்டிருந்தாலும் யாழ்ப்பாணத்தில் நிரந்தர வதிவிடத்தை (இல்லத்தை) கொண்டிருந்தார். அவரின் மனைவியும், பிள்ளைகளும் கூட யாழ்ப்பாணத்தில் வசித்தனர். சீலாட்சி கொழும்பில் சொத்தொன்றை வாங்கி பின்னர் தனது மகனான நாகலிங்கம் என்பவருக்கு அதனைக் கையளித்தார். பின்னர் சீலாட்சி தனது சொத்துக்கள் அனைத்தையும் இறுதி விருப்பாவணத்தின் மூலமாக மனைவிக்கு எழுதிவிட்டு இறந்துவிட்டார். நாகலிங்கம் தனது தந்தை தனக்களித்த சொத்தை அடகு வைத்தார். பின்னர் அச்சொத்தை தீர்ப்பாணையை நிறைவேற்று விற்பனை மூலமாக மீட்க வகையில்லாமல் விற்பனை செய்ய முயன்றபோது அதனை எதிர் கொள்வனவு செய்துள்ளார். சீலாட்சியின் விதவை மனைவி அச்சொத்தில் அரைவாசி உரிமை கோரி "தேடிய தேட்டத்தின்" அடிப்படையிலான சொத்து அது என்பதால் தனதுரிமைப் பங்கிற்காக வழக்குத் தாக்கல் செய்தார். அத்துடன் அச்சொத்தானது கணவன், மனைவி இருவரும் திருமணத்திற்குப் பின் சேர்ந்து சேர்த்த சொத்து என்பதால் (தேடிய தேட்டம்) மனைவியின் அனுமதி இல்லாமல் அரைப்பங்கை விட மேலதிகமாக யாருக்கும் தானமாக வழங்க உரிமையில்லை என்று வாதாடினார். நீதிமன்றம் இதனை ஏற்கவில்லை. இருப்பினும் தேசவழமைக் கொள்கையின் பிரகாரம் உயிலற்ற பின்னுரிமை (Intestali Succession) தொடர்பில் தேசவழமையால் ஆளப்படுபவரின் சொத்துக்கள் வடமாகாணத்திற்கு வெளியே இருந்தாலும் அவர்களுக்கே உரியது என்பதையும் இனங்கண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானலிங்கம் VS சுந்தரலிங்கம் (1988 – 1 SLR 86) என்ற வழக்கில் சர்வானந்தா C.J கூறுகையில் "வடமாகாணத்தில் வாழும் தமிழ் நிரந்தரவாசிகள் தேசவழமை என்னும் ஆள்சார் சட்டத்தால் ஆளப்படுவார்கள் என்றும், அவர்கள் எங்கிருந்தாலும் அவர்களின் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் இலங்கையின் எப்பகுதியில் இருந்தாலும் இச்சட்டம் பிரயோகிக்கப்படும்" என்றார்.

மாணிக்கவாசகர் VS கந்தசாமி (1986 -2 SLR8) தேசவழமைச் சட்டத்தின் பிரகாரம் அது ஆட்புல சட்டத்தின் (Ferritorial law) அடிப்படையில் வடமாகாணத்தில் இருக்கும் சொத்துக்கள் தொடர்பில் அது சிங்களவர், முஸ்லீம்கள், தமிழர்கள் மற்றும் ஏனைய இனத்தவர்கள் யாருடைய சொத்துக்களும் அம்மாகாணத்தில் இருக்குமாயின் அச்சொத்துரிமை தொடர்பில் அவ்வினத்தவர்களும் தேசவழமையாலேயே ஆளப்படுவார்கள்.

Betram C.J, சீலாட்சி எதிர் விசுவநாதசெட்டி என்ற வழக்கில், வடமாகாணத்தில் இருக்கும் அனைத்து அசையாச் சொத்துக்களும் சில காரணங்களின் அடிப்படையில் தேசவழமையால் ஆளப்படுகிறது எனக் கூறியுள்ளார். வடமாகாணத்தின் எல்லா ஆதனங்கள் தொடர்பிலும் பின்பற்றப்பட வேண்டிய கோட்பாடாக "முற்கொள்ளுரிமை" (Pre – emption) என்பது காணப்படுகிறது. Pre – emption என்றால் வடமாகாணத்திலுள்ள ஆதனங்களைப் பொறுத்தளவில் அசையா ஆதனங்களை விற்கும்போது அதனை முதலில் யாருக்கு விற்க வேண்டும் என்ற விடயத்தை இது ஒழுங்குபடுத்துகின்றது. இச்சட்டக் கோப்பானது சுப்பையா ஏள தம்பையா (1904–7NLR151) என்ற வழக்கில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

எனவே சுருங்கக்கூறின் பல வகைப்பட்ட சட்டமுறைகள் காணப்படுகின்றபோது தேசவழமை தனித்துவமானதாக இருக்கிறது என்றால் அதை யாரும் மறுப்பதற்கில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக சேவை மற்றும் சிறுவர் பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள்



நிற்பவர்கள் , இடமிருந்து வலமாக : P.சுரேந்திரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) K.சத்தியப்பிரியா (பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்) S.காயத்திரி (முகாமைத்துவ உதவியாளர் - III), T.தேனுஜா (முகாமைத்துவ உதவியாளர்-III) T.ராஜசிறி (ஆரம்ப முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்) T.சுதர்சன் (சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்)

இருப்பவர்கள் இடமிருந்து வலமாக : Y.ஞானசேந்தினி (அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர்) R.தர்சினி (சமூக சேவை உத்தியோகத்தர்) R.C.அமல்ராஜ் (உதவிப்பிரதேச செயலர்) S.C.கிருஸ்ணேந்திரன் (பிரதேச செயலர்) S.சிவபால சுந்தரம் (நன்னடத்தை உத்தியோகத்தர்) K.வினோ (பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்) K.பவானந்தன் (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சித்தர்களின் நாடி வைத்தியம்

**திரு. சு. உஷாகாந்தன்**
விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
திருகோணமலை.

தமிழ் மருத்துவமான சித்த மருத்துவம் தமிழ்மொழி தோன்றிய காலத்திலேயே தென்பகுதி திராவிட மக்களிடம் தோன்றி வளர்ந்த ஒரு சிறப்பான மருத்துவமாகும். சிவனை முதலாகக்கொண்ட சித்தமருத்துவ மானது சித்தர்களால் வளர்க்கப்பட்டதே இதன் சிறப்பம்சமாகும். இம் மருத்துவத்தில் முக்குற்றங்களான வளி, அழல், ஐயம் ஆகியவற்றின் ஏற்ற தாழ்வே நோய்க்கான காரணமாக கருதப்படுகிறது. பிணியை அறியும் வழி முறைகளில் ஒன்றாக எண் வகைத் தேர்வு வகுக்கப்பட்டுள்ளது.

" நாடிப்பரிசம் நாநிறம் மொழிவிழி
மலம் மூத்திரமிவை மருத்துவராயுதம்"

என்பதனாலும்

"மெய்குறி நிறந்தொனி விழிநாவிருமலம் கைக்குறிஎன்னும் தேரையர் வாக்கினாலும் அறிக.

நோயாளியை பார்க்கும் பொழுது நாடி ,ஸ்பரிசம், நாக்கு, கண், பேச்சு, நிறம், மலம், மூத்திரம் முதலான எட்டு வகை பரீட்சைகளையும் செய்து நோயை நிதானிக்க வேண்டும். எனினும் சித்தமருத்துவத்தில் நாடி மூலம் நோயை நிதானிக்கும் முறை முதன்மையானதாக கருதப்படுகின்றது.

"நாடியின் துடிப்பே இதயத்தின் துடிப்பாகும்"

"நோய் நாடி நோய் முதனாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்ப செயல்"என்ற வள்ளுவரின் கருத்துப்படி உணவாதி செயல்களால் உண்டாகும் நோயினை அறியும் பொருட்டு நோய் களுக்கான காரணத்தை அறிந்து உணவாதி செயல்களால் வளி, அழல், ஐயம் ஆகிய மூன்றில் எந்த குற்றம் கேடடைந்துள்ளது என்பதை அறிந்து உணவுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்கங்கள், செயல்கள் முதலியவற்றுடன் மருந்துகளை வழங்குவதே வைத்தியரின் கடமையாகும்.

எனவே நாடியை முதன்மையாக கொண்டே நோயை நாட வேண்டும் என சித்த மருத்துவம் வலியுறுத்துகின்றது.

நாடிநடையை பரிசோதிக்க கூடிய இடங்களாவன:

"கூர்ந்திடவே கன்னமது சுழியிற் றானும்
குறிப்பான கைகளிலும் மர்மஸ்தானந் தன்னில்
சார்ந்திடவே கணுக்காலி னுட்பு றத்தில்
சார்வாகப் பெருவிரற்கால் மேல தாக
தேர்ந்திடவே நாடிதனை யுபயோ கிக்கத்
தெளிவாக மாந்தருக்குச் செப்ப லாச்சு
பேர்ந்திடவே சகலருக்குங் கரத்தி னாடி
பேசினார் பிரமதுனி பேசினாரே"

மனிதர்களில் எழுபத்திரண்டாயிரம் நாடி நரம்பு இரத்தக் குழாய் களிலும் நாடி உணரப்படும். நாடியைக் கணிப்பதற்குப் பத்து முக்கிய புள்ளிகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. குறிப்பாக கைகளிலும், கன்னச் குழிகளிலும், மர்ம ஸ்தானங்களிலும், கணுக்கால்களின் உட்புறத்திலும் கால் பெருவிரலின் மேல் பாகத்திலும் நாடி நடையைப் பரிசோதிக்கலாமெனவும் அவற்றுள் முக்கிய மாகக் கை நாடியே சிறந்ததெனப் பிரமமுனி கூறியுள்ளார்

எல்லோருக்கும் வலது இடது கைகளில் நாடியை ஆராயலாமெனி னும், ஆண்களுக்கு வலது கையிலும் .பெண்களுக்கு இடது கையிலும், பேடி யாக இருந்தால் அவனது குறியை அனுசரித்து வலது அல்லது இடது கை நாடிகளை ஆராய்வது சாத்திரக்கிரமமென்பர்.

"நானெனும் புருடர்க்கெல்லாம்
நாடிதான் வலக்கையாகும்
தேனெனும் மடவார்க் கெல்லாந்
திடம்பெற விடக்கை சித்தே" என்பதால் அறிக

புருடருக்கு வலது கரமும் பெண்களுக்கு இடது கரமும் நாடியை ஆராய்வது ஏன்?

ஏனெனில் நாபிக் கூர்மமானது பெண்களுக்கு மேல் நோக்கியும் ஆண்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ் நோக்கியும் இருக்கிறபடியால் ஆண் பெண்களுக்குக் கைநாடி வித்தியாசமாக இருக்குமெனு நூல்களில் கூறப்பட்டிருக்கிறது.

**கை நாடி பார்க்கும் முறை**

"கேளப்பா புருடருக்கு வலது கையைக்
கிருபையுடன் தான்பிடித்து நெட்டை வாங்கி,
சூளப்பா பெருவிரலோ ரங்குலத்துக் கப்பாற்
சுகமாக மூவிரலா லழுத்திப் பார்க்க
வாளப்பா முதல்விரலே வாத நாடி
வன்மையுடன் நடுவிரலே பித்த நாடி
கேளப்பா அணிவிரலே சேத்தும நாடி
திறமாக நின்னறிவாற் றெளிந்து காணே".

என்பதனாலும்



வைத்தியன் தனது வலது கையால் நோயாளியின் வலது உள்ளங்கையை கோர்த்து பிடித்து நெட்டை வாங்கி வைத்தியனின் இடது கை விரல்களால் பெரு விரல் பக்கமாக மணிக்கட்டுக்கு ஒரு அங்குலம் மேலாக மூன்று விரல்களால் சமமாக மெல்ல அழுத்தி பார்க்க ஆட்காட்டி விரலிலுணர்ந்தது வாதம் எனவும் நடு விரலிலுணர்ந்தது பித்தமென வும், மோதிர விரலிலுணர்ந்தது ஐய மெனவும் அறியலாம்.

கரத்தின் நாடியே சிறந்ததெனவும் எளிதில் பார்த்தறியக் கூடியதெனவும் அறிகிறோம். எங்ஙனமெனில் கையில் ஆரை என்பின் மேலாக இரத்தக்குழாயானது, துலக்கமாக இருப்பதால் மூன்று விரல்களால் வளி, அழல், ஐயமாகிய நாடி நடையை எளிதில் அறியலாம். மற்ற இடங்களில் இரத்தக்குழாய்கள் இதைப் போலல்லாது உள்ளே ஆழமாக இருப்பதால் எளிதில் நாடி நடை அறியக் கடினமாகும்.

**ஆரோக்கிய நாடி நடைகள்**

வாதம் ஒரு பங்கும், பித்தம் அரைப்பங்கும், கபம் கால் பங்கும், நமது உடலில் நிறைந்துள்ளது. அதற்கேற்றாற் போல் நாடியும் வாதநாடி ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கும், பித்த நாடி அரைப்பங்கும், கப நாடி கால் பங்கும், துடிப்புறுகிறது. இதனை கரத்தில் நாடி பார்ப்பதன் மூலம் நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

"வழங்கிய வாதம்மாத்திரை யொன் றாகில்
தழங்கிய பித்தந்தன் னிலரை வாசி
அழங்குங் கபந்தா னடங்கியே காலோடில்
பிறங்கிய சீவர்க்குப் பிசகொன்று மில்லையே"

**குணவாகட நாடி**

தமது இயற்கை அளவான வாதம் ஒரு மாத்திரை, பித்தம் அரை மாத்திரை கபம் கால் மாத்திரை , என்ற அளவில் நடைபெறுவதால் நோயின்றி மனிதர் இயல்பாக ஆரோக்கியமான நிலையில் காணப்படுவர்.

மாத்திரை என்றால் நாடியின் துடிப்பு அதாவது நாடியானது ஒரு கோதுமையரிசிப் பிரமாணம் உயரம் எழுந்து அடங்குவதற்குரிய கால அளவு எதுவோ அதுவே நாடி நடையின் மாத்திரையளவை குறிக்கும் என சித்தமருத்துவ நூல்கள் குறிப்பிடுகின்றன.

அரைந்தார் முனிவர் யளவுகேள் தோற்றும்
விரை கோதுமையாம்வியந்து (கண்ணுசாமியம் )

நமது நாடியானது காலை மதியம் மாலை என மூன்று நேரங்களில் சூரிய உதயம் மற்றும் சூரிய அஸ்தமனத்தை தொடர்ந்து சில மாறுபாடுகளை அடைகிறது. அதாவது

"காலையில் வாதநாடி கடிகையில் பத்தாகும்
பாலையில் பித்தநாடி பகருச்சி பத்தாகும்
மாலையாம் சேத்மநாடி மதிப்புடன் பத்தாகும்
வாலையா மனோன்மணிக்கு வகுத்துமே தொகுத்ததாமே"

என்ற பாடலின்படி சூரிய உதயம் முதல் பத்து நாழிகையில் வாத நாடி அதிகரித்தும் நண்பகல் பத்து நாழிகையில் பித்த நாடி அதிகரித்தும் மாலை பத்து நாழிகையில் கப நாடி அதிகரித்தும் காணப்படும். அதேபோல் இரவு சூரிய அஸ்தமனம் முதல் பத்து பத்து நாழிகையில் வாத நாடி அதிகரித்தும், நடு இரவு பித்த நாடி அதிகரித்தும், பின் இரவு பத்து நாழிகையில் கப நாடி அதிகரித்தும் காணப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாடி நடைகளும் நோய்களும்**

வாத பித்த கப நாடிகள் நமது உடலில் மிகும் பொழுது அதாவது மீறி நடக்கும்போது அவற்றின் குறி குணங்களும் நோய்களும் உடலில் உண்டாகின்றன.

வாத நாடி மிகும் போது நாவறட்சி, வயிறுப்பல், வாயுத் திரட்சி, தேக மெல்லாம் குத்தல், குடைச்சல், கைகால்கள் ஒரு பக்கமாக முடங்கல், குடற்புரட்டல், மலக்கட்டு, மூலரோகம் மகோதரம், அண்ட வாதம், விந்து நட்டம், சிறு நீர் தறுத்துக்கடுத்துச் சிறுத்து இறங்கல், போன்றவற்றை தோற்று விக்கும்.

பித்தநாடி மிகும் பொழுது தேகவெப்பு, அத்தி சுரம், அதிசாரம், கிறுகிறுப்பு, வாந்தி, இரைப்பு, தாகம், தலை வலி, அரோசகம், விக்கல், வயிறு எரிதல், காமாலை போன்ற நோய்கள் தோன்றுகின்றன.

கபநாடி மிகும்பொழுது வாய் நீறுறல், மூக்கில் நீர் ஒழுகுதல், தொண்டைக்கட்டு, வயிறு பொருமல், இருமல், காசநோய், இரைப்பு நோய், குளிர்சுரம், சளியாக கழிச்சல், மந்தார காசம், கரப்பான், ஆகிய உபாதைகள் தோன்றுகின்றன.

**முடிவுரை**

நம் உணவு, பழக்க வழக்கம், மனநிலை, வேலை பழு, உடல்வாகு, குணம், பண்பாடு என்பவற்றை பொறுத்து முக்குற்றங்களும் மாறுபடுகின்றன. இதனால் நோய் தோன்றுகின்றன.

"மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலாய் எண்ணிய மூன்று"

வளி என்னும் வாதத்தை முதன்மையாக கொண்ட மூன்று நாடிகளும் மிகுந்தாலும் குறைந்தாலும் நோயுண்டாகும் என வள்ளுவரும்

"வாதமாய்ப் படைத்து பித்த வன்னியாய்க்காத்து
சேட்ப சீதமாய்த் துடைத்து"

அதாவது வாத நாடியானது உடல் தோன்றுவதற்கு அடிப்படையாகவும், பித்த நாடியானது நிலைத்து வாழ அடிப்படையாகவும், கபமானது இறப்பிற்கு அடிப்படையாகவும், காணப்படுவதாக தேரையரும் குறிப்பிடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இந்நவீன யுகத்தில் நோயை நிதா னிக்க பல்வேறு உபகரண சாதனங்கள் இருந்த போதும் நாடி நடையை ஒழுங்காகக் கற்றுணர்தல் மூலம் நோய் வராமல் தடுக்கவும், நோயாளியின் ஆயுளை கூட துல்லிய மாக கணிக்கவும் முடியும்.



எனவே வைத்தியர்கள் மருத்துவம் சரிவர செய்ய நாடி நடையை ஒழுங்காகக் கற்றுணர்தல் அவசியம். காலம் தேசம் வயது வன்மை முதலியவற்றை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு ஒருமுறைக்கு இரு முறை வெவ்வேறு காலங்களில் நாடி நடையின் தன்மையை சிரத்தையுடன் பகுத்து அறிதல் வேண்டும். நாடி நடையை பழகுவோன் அறிவைச் சிதறவிடாமல் மனதை ஓர்மையுடன் திடப்படுத்திக் கூர்ந்து கவனித்து தக்கபடி முக்குற்றங்களின் வன்மை மென்மைகளையும் விசேட குறிகளையும் குரு பரம்பரையாக நன்குணர்ந்த தேசிகரிடம் சென்று பழகி நுண்ணறிவாலும் அனுபவத்தாலும் அறிதல் வேண்டும்.

இங்கு நாடியின் அடிப்படை விடயம் மட்டுமே ஆராயப்பட்டுள்ளது அன்றியும் சித்தர்களியற்றிய நாடி சாத்திரச் செய்யுட்களை செவ்வனே அறிந்த பின்னர் ஒவ்வொரு குற்றத்தையும் குறிக்கின்ற நாடியுடன் வேறு கலப்புகளிருக்கின்றனவா என்பதனையும் அறிய வேண்டும். இவ்வாறு நாடி நடையை சரியாக கணித்தால் நோய் வராமல் தடுக்கவும், நோயினை தீர்க்கவும் முடியும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்கள்

நிற்பவர்க்ள இடமிருந்து வலம் : மு.வியூலா (DDO), தா.நிர்மலா லியோனஸ் (DDO), ந.புவிதன் (DDO), ச. ஜோர்ச் இராஜேந்திரகுமார் (DDO), சி.டிலக்ஷன் (DDO), க.கிருஸ்ணகுமார் (DDO), ஆ.கிருஸ்ணராசா (DDO), டெ.டெனிறொபின்சன் (DDO), கி.புனேஸ்வரி (DDO), கி.கேமலதா (DDO), கை.கோமதி(DDO), பி.பானுகா(DDO), அ.பியமென்டிகிளாசன் (DDO), ச.சுதாகரன் (DDO), ம.கஜேந்திரன் (DDO), யோ.இமயணன் (DDO), ஆ.ஊ.ஆ.ஸஷ்ரான் (DDO), க.பத்மராசா (DDO), ம.உதயசங்கர் (DDO), த.யசோதரன் (DDO), அ.ஜெனகன் (DDO), கா.குகராசா (DDO), து.ஜெயக்குமார்(DDO), இ.தீபாஜினி (DDO),

இருப்பவர்கள் இடமிருந்து வலம் : கொ.சிந்து (DDO), சீ.செல்வநாயகம் (DM), R.C.அமல்ராஜ் (உதவி பிரதே செயலர்). சி.ச.கிருஸ்ணேந்திரன் (பிரதேச செயலர்) க.சந்திரகாசன்(DM), மு.மங்களேஸ்வரி (DM), பு.சுகிதா (DM), சி.சபித்திரா(DDO), ல.அருந்ததி (DDO),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவாக உண்ணக்கூடிய காட்டுத் தாவரங்கள் பூ வகைகள்

தகவல் : காசிப்பிள்ளை குலசேகரம்

பிரண்டை தண்டு, குருவித் தணல் பாகல் (காய்), காரை இலை, தும்பை (காய்), முசுட்டை இலை, தூதுவளை(இலை, காய்), காத்தோட்டி யங்காய், வட்டுக்கத்த காய்), கொவ்வை இலை,பொன்னாங்கானி (இலை), முல்லை இலை, குமுட்டில் (இலை), கத்தாளம்பூ, கண்டல் கத்தரி, அல்லைக் கிழங்கு, முள்முருக்கம் துளிர், உமிரி இலை (உலர் நிலங்களில் வளர்வது)

பாலைப்பழம், நாவல் பழம், ஈச்சம்பழம், காரைப்பழம், வீரைப்பழம், கூழாம் பழம், கிழாப்பழம், இலந்தைப்பழம், தவிட்டப்பழம், விளாம்பழம், துவரம் பழம், புல்லாந்திப் பழம், வில்வம்பழம், மகிழம்பழம்

எச்சரிக்கை:– நச்சுத்தன்மையுடைய தாவரங்கள், பழவகைகள் காட்டில் ஏராளமாக உள்ளன. சிறுவர்கள் அவதானமாக இனங்கண்டு உண்ணுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருகிவரும் கிளை மொழிகள்

**திரு. சி.ஸ்ரீரஞ்சன்**
கிளி / முழங்காவில் ம.வி.

கொத்து :- நெல் அளவிடுவதற்கு பயன்படும் மரத்தினாலான உருளை வடிவிலமைத்த கருவி.

பறை :- நெல் அளவிடுவதற்கு பயன்படும் மரத்தினாலான பெட்டி வடிவில் அமைத்த கருவி.

புசல் :- நெல்லை அளக்கும் அலகு மூன்று புசல் ஒரு மூடையைக் குறிக்கும்.

சும்மாடு :- பொருட்களை தலையில் சுமக்கும்போது தலைக்கு மேல் வைக்கும் வளையமாக்கப்பட்ட பொருள் (நார், ஓலை, துணி போன்றவற்றால் செய்யப்படுவது)

திருகணை :- சமயற் பாத்திரங்களை நிறுத்தி வைப்பதற்கு பயன்படுவது (பனை ஈர்க்கு, பனை நார் முதலியவற்றில் செய்யப்படும்)

உறி :- உணவுப் பாத்திரங்களை அந்தரத்தில் தொங்க வைத்து பாதுகாப்பதற்கு பயன்படுவது (பனை ஈர்க்கு, நார் வகைகளால் செய்யப்படும்)

நுகம் :- வண்டி இழுத்தல், உழவு வேலைகளில் காளைகளின் தொழில் பொருத்துமாறு குறுக்கே வைக்கும் சீவி எடுக்கப்பட்ட தடி.

கிட்டி :- எருதுகளின் தோள் விலகாதபடி நுகத்தில் அறையப்பட்ட சிறு தடிகள்.

நந்தை :- நுகத்தையும் ஏர்க்காலையும் இணைக்கப் பயன்படும் பலமிக்க கயிறு.

மேழி:- கலப்பையுடன் இணைந்து கைபிடிக்க உதவும் தடி.

படவாள் :- கலப்பையில் உழும் பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கொழு இரும்புப் | :- | ப[illegible]ாளின் நுனியில் பொருத்தப்பட்ட கூரான பட்டம். |
| ஏர்க்கால் | :- | படவாளை நுகத்துடன் தொடுக்கப்பயன்படும் நீண்ட தடி. |
| ஓரணை | :- | ஒரு சோடி எருதுகள் |
| ஈரணை | :- | இரண்டு சோடி எருதுகள் |
| மூவணை | :- | மூன்று சோடி எருதுகள் |
| கூடை | :- | நெல் சேமிக்கப்படும் பனை ஓலையினால் செய்யப்படுவது (பத்து முதல் 20 மூடை வரை சேமிக்கலாம்) |
| மூக்கணாங்கயிறு | :- | எருதுகளின் மூக்கைத் துளையிட்டு கொம்பின் பின் பக்கம் வரை சுற்று கட்டப்பட்ட கயிறு (ஆத்தி, உலரி போன்ற நாரால் செய்யப்படுவது) |
| நாணயக்கயிறு | :- | வண்டிசெலுத்தும் போதும் ஏர் உழும் போதும் எருதுகளைக் கட்டுப்படுத்தும் கயிறு |
| பிடி கயிறு | :- | (2 1/2 m வரை நீளமானது) |
| மூக்கு வளையம் | :- | எருதுகளின் மூக்குத்துளைக்குள் கயிற்று முடிச்சு செல்லாதவாறு உதவுவதற்கு பித்தளையிலான சிறு வளையம் (இரண்டு மூக்கின் வெளிப்பக்கமும் கயிற்றில் கொழுவப்பட்டிருக்கும்) |
| ஊத்துப்பெட்டி | :- | எள்ளிலிருந்து எண்ணையைப் பிளிவதற்கு பனை நாரினால் பின்னிச் செய்யப்படும் ஐங்கோண வடிவப் பெட்டி. |
| ஊத்துப் பெட்டி | :- | எண்ணையைப் பிளிந்தெடுக்கப் பயன்படும் இரண்டு பலகை தடி முதலியவற்றால் ஆக்கப்படும் ஒரு பொறி. |
| இற மரம் | :- | வயலில் நீரை வெளியேற்றவும். தோட்டத்தில் நீரை இறைப்பதற்கும் பயன்படும் மரத்தில் கோதி எடுக்கப்பட்டு நீண்ட பிடியுடன் அமைந்த கருவி. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| கடவான்:- | வயல் வரம்பில் நீரை வெளியேற்ற வெட்டி விடுவது |
| வக்கடை | :- கடவானில் குறித்த அளவு நீருக்கு மேல் வெளி யேறும் வகையில் பதிவாகவோ சற்று உயர் வாகவே மண்ணை வைப்பது. (மண் அரித்துச் செல்லாதவாறு புல் வைக்கோலை மேல் பகுதியில் அழுத்தி விடப்படும்) |
| உப்பட்டி | :- வயலில் வெட்டப்பட்ட நெல் அரிதாக் கூறு |
| மாவக்க | :- பல உப்பட்டியை சேர்த்த கூறு |
| போர் | :- சிறிய சூடு |
| சூடு | :- நீர் புகாதவாறு அடுக்கப்பட்ட நெல் அருவிக் கூறு |
| பொலி | :- நெல் மணிகளின் தொகுதி |
| பொலிக்கொடி | :- வைக்கோல் |
| சிறப்பை | :- ஆநிரைகள் நிற்கும் இடத்தை இனம் காண்பதற்கு மாடு ஒன்றின் கழுத்தில் ஒலியெழுப்பக் கூடிய வாறு மரத்தினால் பெட்டி வடிவில் அமைக்கும் ஒரு பொறி. |
| மத்து | :- பாலில் இருந்து நெய்யை வேறாக்குவதற்கு பாலைக் கலக்குவதற்கு பயன்படும் மரத்தாலானது. |
| உழண்டி | :- மாடுகளை பிணைத்து விடும் போது பிணைக்கும் கயிறு முறுகாது இருக்குமாறு சுழரக்கூடியதாக மரத்தில் ஆக்கப்படுவது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூநகரிப் பிரதேசத்தின் வேளாண்மைச் சடங்குகள்

**செல்வி பிரதீபா சுப்பிரமணியம்**
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

ஒவ்வொரு சமூகத்தினதும் சமய நம்பிக்கை சமூக மரபுகளின் அடித்தளங்களில் இருந்து பெறப்பட்டவையே சடங்குகளாகும். இச்சடங்குகள் பொதுவாக இன்னும் பேணப்பட்டு வருகின்றன. இவை நம்பிக்கைகளோடு தொடர்புபட்டும் சமய நிகழ்வுகளுக்கு அப்பாற்பட்டும் நடைமுறை வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்தும் சாதாரண வாழ்க்கை வட்டத்தில் தவிர்க்க முடியாதனவாக அமைந்துள்ளன. அந்த வகையில் வேளாண்மைச் சமூக மக்களின் நம்பிக்கைக்குரிய சடங்குகளில் ஒன்றாக வேளாண்மைச் சடங்குகள் அமைந்துள்ளன.

பூநகரிப் பிரதேசத்தில் கிடைக்கப்பெற்ற தொல்பொருட் சான்றாதாரங்கள் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளிற்கு முன்னரே மக்கள் வாழ்ந்தமையை உறுதிப்படுத்துகிறது. கிளிநொச்சி மாவட்டத்தில் நிலப்பரப்பில் பரந்த பிரதேசமாக விளங்கும் பூநகரிப் பிரதேசம் முப்பதிற்கு மேற்பட்ட கிராமங்களை உள்ளடக்கியுள்ளது. பரந்தளவிலான நிலப்பகுதியினை உள்ளடக்கியிருப்பதாலும் நாகரீகம் அடைந்த பிரதேசங்களிற்கு தூரத்தே தனிந்தமைந்து இருப்பதனாலும் பண்டைய காலம் முதல் இன்று வரை பண்பாட்டு அம்சங்கள் பேணப்படுவதற்கு இப்பிரதேசத்திற்கு வாய்ப்பு கிட்டுகிறது. அந்தவகையில் பூநகரிப் பிரதேசம் சடங்கு சார் மரபுகளையும் அதிகம் பின்பற்றும் இடமாக காணப்படுகிறது.

நெல் வேளாண்மையை தமது முதன்மை வாழ்வாதாரமாக கொண்டுள்ள பூநகரிப் பிரதேச மக்கள் வேளாண்மையுடன் இணைந்த வகையில் பல்வேறு சடங்குகளை காலம் காலமாக பின்பற்றி வருகின்றனர் அவ்வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏர் பூட்டும் சடங்கு

வித்து நாள் கொத்தும் சடங்கு

மழை அபிசேகச் சடங்கு

பயிர்ப் பொங்கல்

கொடும்பாவி எரிக்கும் சடங்கு

காய்ச்சல் பொங்கல் (நாகர் பொங்கல்)

புதிர் எடுக்கும் சடங்கு

புதிர் உண்ணும் சடங்கு

பொலிச் சடங்கு

வேள்விச் சடங்கு (முத்தரிசி தண்டல்)"

போன்ற பல சடங்குகள் குறிப்பிட்டு கூறத்தக்கன.

மழை பெய்ததும் விவசாயிகள் விதைப்புக்கான பொருட்களை ஆயத்தம் செய்வர் நெல், கடகம், விதைப்பெட்டி, மாடு, ஏர் முதலான பொருட்களுடன் உழவுகாரர்களுக்கு சொல்லி வைப்பர். நெல்லை தெரிவு செய்யும் போது பாரம்பரிய நெல் இனங்கள், 3½ மாதம் முதல் 5 மாதம் வரை நின்று விளையக்கூடிய நெல் வகைகளையும கூடிய பலனை தரவல்ல நெல் இனங்களையும் தெரிவு செய்வர் மொட்டைக் கறுப்பன், பச்சைப் பெருமாள் ஆட்டக்காரி, 400/6 சம்பா போன்ற நெல்லினங்கள் காலபோகத்தின் போது பெரும்பாலும் தெரிவு செய்யப்படுகின்றது. தற்கால நவீனமயமாதலின் உச்ச பயன்பெறும் நோக்கத்தால் பாரம்பரிய நெல் இனங்கள் தெரிவு செய்வது குறைவாக உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மழை பெய்ய ஆரம்பித்ததும் ஒவ்வொரு கமக்காரனும் தனது வயலிலே மாட்டை இறக்கி உழுவதற்கு சுபவேளை பார்த்துக் கொள்வான். பொதுவாக அட்டமி, நவமி, கரிநாள், ராகுகாலம், பஞ்சமி முதலான நாட்களைத் தவிர்த்து அமிர்தயோகம், சக்தியோகம் முதலான சுபவேளையில் மாடுகளையும் கொண்டு செல்வர் சுபமுகூர்த்தம் பார்த்தலை பஞ்சாங்கம் பார்த்தல் என்று அழைப்பர். வயலுக்கு செல்லும் பொழுது ஒரு பெட்டியில் கற்பூரம், தேங்காய், வெற்றிலை, பாக்கு , பழம் ஆகிய பொருட்களை கொண்டு செல்வர். அங்கு கமக்காரன் தலைப் பாகையை கட்டி வீபூதி சாத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கு முகமாக நின்று கொண்டு பண்டங்களை முன்னே வைத்து கற்பூரம் கொழுத்தி தேங்காய் உடைத்து சூரியனை கும்பிட்டு தனது வயலுக்கு நாடும் நல் விளைச்சலைப் பெற நற்கதி அருள் வேண்டி நிற்பார்கள். பின்னர் பூட்டப்பட்ட ஏரினை வாங்கி உழவைத் தொடக்கி வைப்பார்கள். இந்நிகழ்ச்சி சில வேளைகளில் கூட்டாக இடம் பெறுகிறது. தனிமனிதனும் சூரியனை வேண்டியே விவசாய நடவடிக்கைகளை ஆரம்பிக்கின்றான். ஏர்பூட்டல் சடங்கு தற்காலத்தில் எண்ணக்கூடிய அளவில் இடம்பெறுவது குறிப்பிடத் தக்கது. பெருமளவானோர் உழவு இயந்திரத்தினாலேயே உழுகின்றனர்.

பருவ மழை பெய்து வயல் நன்கு பண்படுத்தப்பட்டு ஒரு நல்ல நாளில் ஊர்ப் பொதுக் கோயிலுக்குச் சென்று அபிஷேகம் செய்த பின்னர் அந்தணர் உட்பட ஊரவர்கள் அனைவரும் குறித்த கோயிலுக்கு சொந்தமான வயலில் ஒன்றுகூடி தாம் கொண்டு செல்லும் விதை நெல் பூசைப் பொருட்களை (தேங்காய், கற்பூரம், ஊதுபத்தி, பழம், வெற்றிலை, பாக்கு) வைத்து பூசை செய்த பின்னர் முதலில் பெரியவர் மண்வெட்டியால் வயலில் ஒரு மூலையில் கொத்தி நெல்லைத் தூவி விதைப்பர். அதன் பின்னர் நெல்லை வீட்டுக்கு கொண்டு சென்று வீட்டில் ஒழுங்குபடுத்தப்பட்டு வைக்கப்பட்டிருக்கும் நெல் பூவைப் பொருட்களுடன் தமக்கு சொந்தமான வயலுக்கு சென்று கற்பூரம் கொழுத்தி தேங்காய் உடைத்த பின்னர் வயல் மூலையில் கொத்தி நெல்லைத் தூவிய பின்னர் உடைத்த தேங்காய்ப்பாதி கவிழாத வண்ணம் கொண்டு வந்து சாமித்தட்டில் வைப்பர். இச்சடங்கு தனித்தனியாகவும் சில வேளைகளில் ஒன்றாகவும் இடம்பெறுகிறது.

விதைப்பு முடிவடைந்த இரண்டு அல்லது மூன்று வாரங்களின் பின் மழை வேண்டி அபிஷேகம் செய்வார்கள். ஒன்று அல்லது இரண்டு நாட்களுக் குள் மழை பெய்துவிடும் அதாவது அவ் அபிஷேகம் பயிர் முளைத்தாலும் முளைக்காவிட்டாலும் இடம்பெறும் இவ் அபிஷேகத்தின் போது ஒன்பது கும்பங்கள் வைத்து பூசைகள் இடம்பெறும். இவ் அபிஷேகத்தின்போது தெய்வமாடுதல் இடம்பெறும். தெய்வமாடுபவர் அவ்வருட வேளாண்மை நிலை பற்றி கூறுவதும் குறிப்பிடத்தக்கது. மழை அதிகம் ஆனாலும் நிறுத்துவதற்கும் மழை அபிடேகம் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து பயிரானதும் பயிர்கள் செழித்து வரவும் நோய்கள் இடம்பெறாமலும் இருக்க பொங்கல் செய்து வழிபாடுகள். அடுத்து பயிர்கள் வளர்ந்து வரும் வேளையில் போதிய பருவ மழை இல்லாது பயிர்கள் வாடுவதும் அரிவதுமாக காணப்பட்டு கிராமங்கள் தோறும் வறுமையும் கவலையும் தலைகாட்டும் வேளையில் காளி தெய்வத்தை வேண்டி ஊரவர்கள் (ஆண்கள்) கூடி பொம்மையொன்றை வைக்கோலால் செய்து அதனை கயிற்றில் கட்டி ஒவ்வொரு வீட்டு முன்றிலிலும் கொண்டு சென்று ஒப்பாரி வைத்து உழுது வீதியால் இழுத்து வந்து மக்கள் கூடும் பொது இடம் அல்லது சந்தியில் வைத்து சில மணி நேரம் உழுது இறுதிக் கிரியைகளை செய்த பின் ஏற்கனவே தயார்படுத்தப்பட்டிருக்கும் பாடையில் போட்டு சவ ஊர்வலம் போவது போலவே வெடி கொழுத்தியடி சுடலையை நோக்கி கொண்டு சென்று அங்கு உரிய முறையில் உருவப் பொம்மையை கொழுத்தி காடாத்திய பின்னர் நீராடி வீடு வருவார்கள். இது கொடும்பாவி கட்டல் அல்லது பாடை கட்டல் என்னும் வேளாண்மைச் சடங்காகும். கொடும்பாவி கட்டல் சடங்கு மேற்கொள்வது என்றால் உரிய முறையில் நிகழ்த்தப்படல் வேண்டும் இல்லாவிடில் கிராமத்திற்கு கூடாது என்பதனால் தற்காலத்தில் இச்சடங்கு மேற்கொள்ள ஒருவரும் முன் வருவதில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது.

புதிர் எடுக்கும் சடங்கு அன்றும் இன்றும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. நல்ல சுபதினத்தில் இக்கருமத்தை நடத்துவர். "வியாழன் அனுப்பும் வெள்ளி அடிப்பும்" என்ற பழமொழி இப்பிரதேசத்தில் நடைமுறையில் உள்ளது. பெரிதும் வியாழக்கிழமைகளிலேயே இச்சடங்கினை நடத்த முயல்வர் அல்லது தைப்பூச நன்னாளிலேயே புதிர் எடுப்பர். புதிர் எடுக்கச் செல்வதற்கு முன்பாக தமது உறவினர் சிலருக்கு புதிர் காச்சப் போகிறோம் என்பதனை அறிவிப்பர் புதிர் எடுக்கப் போகும்போது புதிய பெட்டி, தாழ்க்கத்தி, கற்பூரம், தேங்காய், வாழைப்பழம் என்பவற்றை எடுத்து பெட்டியினுள் வைத்து வெள்ளைத்துணியால் மூடிச்செல்வர். வயலில் சாணத்தால் பிள்ளையார் பிடித்து வைத்து கிழக்கு முகமாக நின்று கற்பூரம் கொழுத்தி தேங்காய் உடைத்து நன்கு வளர்ந்த தலை சாய்ந்த அருவியைப் பார்த்து உடப்பட்டிகளாக வெட்டிக் கொண்டு விடுவார்கள். பிறரின் கண்ணூறுபடக் கூடாதென்பது இதன் நோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயலில் இருந்து புதிரை கொண்டு வரும் போது வீட்டிலுள்ளோர் மாவிலைத் தோரணம் கட்டி பிள்ளையார் பிடித்து கும்பக் குத்து விளக்கேற்றி வரவேற்பர் புதிரை குடும்பத்தின் முன் வைத்து வணங்கிய பின்னரே அதில் சிறு பகுதியை எடுத்து வீட்டின் தலைவாசலின் முன்போ நடுவீட்டிலோ வட்டமாக கட்டித் தொங்கவிடுவர். மறுபகுதியை புதிர் காய்ச்சுவதற்கு எடுத்து கொள்வர். அடுத்து புதிர் காய்ச்சுவதற்காக வைக்கப்பட்ட புதிரை தட்டிக் கசக்கி நெல்லாக்கி மாவிலை கட்டி உரலில் போட்டு இடித்து அரிசியாக்கி அதைப் புதுப்பானையில் பால் சக்கரை முதலியவற்றுடன் கலந்து பொங்குவர் அல்லது அரிசியாக்கிய புதிரைக் கலந்து சோறு கறி சமைப்பார்கள் சமைக்கப்பட்ட புதிரை வீட்டினுள் படைப்பர் படைக்கும் போது

தமது முன்னோர்களுக்கு ஒரு படைப்பு

வீட்டிற்காக ஒரு படைப்பு

வயல் காவல் தெய்வத்திற்காக ஒரு படைப்பு

என மூன்று படைப்புகள் படைப்பர் சில சமயங்களில் எல்லாவற்றிற்கும் பொதுவாக ஒரு படைப்பையே படைப்பர் படைப்பை வயதில் முதிர்ந்த ஆண்கள் அல்லது கமக்காரர் படைப்பர் படையலில் தயிர், நெய், பழவகைகள் யாவும் வைக்கப்படும். படைப்பின் பின் திருமுறைகள் ஓதி படைப்பினை முடிப்பர் பின்னர் அவற்றில் ஒரு படைப்பினை எடுத்து படைப்பிலே படைக்கப்பட்ட ஏனைய பொருட்களையும் ஒன்றாக பிசைந்து குழைத்து வீட்டினுள்ள முதியவருக்கு முதல் குழையலை கொடுப்பர். அவரும் தம்முன்னோர்களையும் இறைவனையும் நினைத்து கிழக்கு, வடக்கு நோக்கிய வண்ணம் நின்று மிகுந்த பக்தியுடன் வாங்கிக் கொள்வார்கள் பின்னர் படிப்படியாக எல்லோருக்கும் கொடுத்துவிட்டு மகிழ்வர். அயல் வீடுகளுக்கும் புதிர் உணவை கொடுப்பர். கமக்காரர்கள் தங்கள் புதிரை உண்ட பின்பே ஏனையோரின் புதிர் உணவை உண்பர் என்பது குறிப்பிடத்தக்கது.

வீட்டிற்கு துடக்கு இருக்கும் காலங்களில் புதிர் காய்வுதலை ஆலயங் களிலே நடத்துவர். உடனடித் தேவைக்கு நெல் தேவைப்பட்டால் முறைப்படி புதிரை எடுத்து வந்து கும்பத்தில் வைத்து எடுத்து கசக்கி கழுவிய பின் அந்நெல்லினை பாலில் போட்டு கலந்து குடிப்பதன் மூலம் முடித்து கொள்வர். சூடடிக்குபவர் காலத்தில் பொலிச்சடங்கு இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது வெள்ளிக்கிழமை சுபவேளையிலும் செவ்வாய், அமாவாசை, கரிநாள், அட்டமி, நவமி முதலான நாட்களை தவிர்த்து சூடடித்தல் இடம்பெறும் பொலி அதிகமாக வருவதற்கும் தேவகணங்களை அமைதிப்படுத்துவதற்கும் இச்சடங்கு மேற் கொள்ளப்படுகிறது. பிள்ளையாருக்கு பொங்கலும் ஏனைய தெய்வங்களுக்கு மடையும் போடுவார்கள் இங்கும் கமக்காரர் கிழக்கு முகமாக நின்று கற்பூரம் கொழுத்தி தேங்காய் உடைப்பதும் குறிப்பிடத்தக்கது. இப்பொலிச்சடங்கு சூடு தள்ளி பொலி விட ஆரம்பமாகும் போது இடம்பெறும். சூடடிப்பவர்கள் பொலி பொலி தாயே! என்று அழைப்பதும் இடம் பெறுகிறது.

இவ்வேளாண்மை காலத்தில் காச்சல் பொங்கலும் நாகர் பொங்கலும் இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கது. வேளாண்மைக்காலம் மழைக்காலம் ஆகையால் ஈடுபடும் விவசாயிகளுக்கு நோய் ஏற்படாமல் காத்து கொள்வதற் காகவே மேற்கொள்ளப்படுகிறது. செல்லையா தீவு அம்மன் ஆலயத்தில் காச்சல் பொங்கல் இடம்பெறுகிறது. இதே போன்று விசங்களில் இருந்து காப்பாற்றி கொள்ள நாகர் பொங்கல், வளர்ந்து நேர்ந்து வைத்தலும் இடம்பெறுகிறது. இதற்கு உதாரணமாக கறுக்காய்த் தீவு கல்வெட்டுத்திடல் கந்தன் ஆலயத்தை குறிப்பிடலாம்.

அறுவடையெல்லாம் முடிந்த பின்னர் ஆலயங்களிலே வேள்வி நடைபெறும் இவ்வேள்வி கிராமத்திற்கு கிராமம் வேறுபடும் குறிப்பாக கறுக்காய்த்தீவு மக்கள் முன்னர் வைக்கப்பட்ட வளர்ந்தை எடுப்பதற்கு விளக்கு வைத்து "முத்தரிசி தண்டல்" எனும் நிகழ்வு இடம்பெறும் இங்குள்ள பெரும்படை தெய்வக் கோயிலில் இருந்து இறைவனுடன் பக்தி அடியார்கள் மேள வாத்தியங்களுடன் புறப்பட்டு வீடுகளின் வாயிலில் வைக்கப்பட்டிருக்கும் கும்பங்களில் பூசை செய்து புனித நீர் கொண்டு வீடுகளுக்கு ஆசிர்வாதம் செய்யப்பட்டு அங்கு கும்பத்தின் முன்வைக்கப் பட்டு இருக்கும் அரிசியை எடுத்து செல்வார்கள். அவ்வாறு சேகரிக்கப் பட்ட அரிசியை ஆலயத்தில் பொங்கல் செய்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூநகரிப் பிரதேசம் பாரந்தளவில் வேளாண்மைத் தொழிலில் ஈடுபடுகிறார்கள். மக்களின் வாழ்வியல் முற்றுமுழுதாக வேளாண்மையுடன் தொடர்புபட்டதாக அமைகிறது. பூநகரிப் பிரதேசத்தின் தொண்மை, புவியியல் பின்னணி, சமயம், நம்பிக்கைகள் ஆகிய பின்புலங்கள் வேளாண்மை தொழிலுக்கு சாதகமாக அமைகின்றன. இவ் வேளாண்மையுடன் இணைந்ததான சடங்குக்காக தெளிவுபடுத்தி நிற்கிறது.

வேளாண்மைத் தொழிலுக்கு உதவி புரிந்த நிலம், நீர், சூரியன் போன்றவற்றிற்கு நன்றி தெரிவிப்பதற்காகவும் உச்ச பயனை பெறும் நோக்கத்தோடும் மேற்கொள்ளப்படும் வேளாண்மைச் சடங்குகள் பூநகரிப் பிரதேசத்தின் பழக்கவழக்கங்கள் நம்பிக்கை முறைகள், குடும்ப முறைகள் (திருமண முறைகள், கூட்டுக்குடும்பம்) பொருளாதார முறைகள், சொத்துக்கள், உரிமைகள், சகோதர ஒற்றுமை, பொழுது போக்கு, மகிழ்ச்சி, ஊர்பக்தி, இறை பக்தி போன்ற சமுதாய்ம் சார் கருத்துக்களை தெளிவுபடுத்தி பூநகரிப் பிரதேசத்தின் தனித்துவத் தன்மையை காட்டி நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைநகரி விருதுபெறும் கலைஞர் - 2016



| | | |
|---|---|---|
| பெயர் | : | யோசேப் பிரான்சிஸ் |
| பிறப்பு | : | 03-05-1957 |
| பிறந்த இடம் | : | நாவாந்துறை |
| வதிவிடம் | : | பள்ளிக்குடா, பூநகரி |
| விருதின் தன்மை | : | படைப்பிலக்கியப் பணி |

1976 ஆம் ஆண்டு பூநகரிக்கு பிரவேசித்த இவர் பள்ளிக்குடா கிராம அலுவலர் பிரிவில் வசித்து வருகிறார். இவர் ஒரு கடற்றொழிலாளி ஆவார். இவரது தந்தை அண்ணாவியாரும் நடிகரும் ஆவார். அண்ணாவியார் பரம்பரையில் உதித்த இவர் நாடகம், நாட்டுகூத்து, கவிதை முதலிய கலைத்துறைகளில் பங்காற்றிவருகிறார்.

பாடசாலைக் காலத்தில் "ஒருதுளி இரத்தம்" எனும் நாடகத்தில் முதல்முதல் நடித்த இவர் நாட்டுக்கூத்துகளில் பாலசஞ்சுவாம்(யுவானியா), சேனாதிபதி, கட்டியக்காரர், பிரபு, வைசூரராசன் போன்ற பல்வேறு வேடங் களிலும் நடித்துள்ளார். இவரது கவிதைப் படைப்புகள் சங்குநாதம் பத்திரிகை யில் வெளிவந்துள்ளன. இவரது "ஆறா(ய்)வலி" எனும் கவிதைத் தொகுப்பு பூநகரி கலாசாரப் பேரவையால் 2012 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

இப்பிரதேசத்தின் எழுத்தாளரும், நடிகரும், நாடக இயக்குனரும் என தனிமனித சாதனையாளனாகத் திகழ்வதுடன் ஆலய நிர்வாக அமைப்புக்கள், கடற்றொழில் கூட்டுறவு அமைப்பு, இணக்க சபை உறுப்பினர், சமாதான நீதவான், உள்ளூர் நிறுவன அமைப்புக்களின் தலைவர், செயலாளர், உறுப்பினர் போன்ற பதவிகள் வகித்து 1978 இலிருந்து இற்றைவரை சமூகம் சார் நற்பணியில் ஈடுபட்டு சமூகத்தின் நன்மதிப்புப்பெற்று பணியாற்றி வருகின்ற சிறந்த சமூகசேவையாளரும் ஆவார். இவரது கலைப் பணியினையும், சமூகப்பணியினையும் பாராட்டி பூநகரி பிரதேச கலாசாரபேரவை இவருக்கு "கலைநகரி" எனும் விருது வழங்கி கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைநகரி விருதுபெறும் கலைஞர் – 2016



| | | |
|---|---|---|
| பெயர் | : | காசிநாதர் கார்த்திகேசு |
| பிறப்பு | : | 13-01-1952 |
| பிறந்த இடம் | : | கறுக்காய்த்தீவு, பூநகரி |
| வதிவிடம் | : | கறுக்காய்த்தீவு, பூநகரி |
| விருதின் தன்மை | : | சமூகப் பணி |

இவர் தனது ஆரம்பக் கல்வியை கறுக்காய்த்தீவு அ.த.க.பாடசாலையிலும் உயர்கல்வியினை யாழ்/இந்து கல்லூரியிலும் கற்றார். இவர் அரசாங்க பொதுஎழுதுனர் சேவை தரம் – 1 இலிருந்து தற்போது ஓய்வுநிலை பெற்றுள்ளார். இவர் கவிதை, கட்டுரை, சொற்பொழிவு, புராணபடலம் முதலிய கலைத் துறைகளிற்கு மிகுந்த பங்காற்றிவருகிறார்.

காந்தியம் சிற்றிதழ், ஞானச்சுடர் சஞ்சிகை, மற்றும் உதயன், வலம்புரி, தினக்குரல் ஆகிய பத்திரிகைகளில் இவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. செஞ்சிலுவை சங்கதலைவராக இருந்த காலத்தில் செஞ்சிலுவைச் சங்க செய்திகள் சிற்றிதழ் வெளியீடு செய்து செஞ்சிலுவை சங்க குறிக்கோள்கள் மற்றும் அதனது மனிதாபிமான பணிகளை வெளிக்கொணர்ந்தவர். அத்துடன் அகில இலங்கை காந்திசேவா சங்கம் மூலம் கண்டி பேரின்பநாயகம் மில்வைற் க. கனகராசா, சி.க.வேலாயுதப்பிள்ளை, வினோபாஜி போன்றோரின் நினைவுப் பேருரைகளை நாடத்திவருவதும் காந்தியம் பற்றிய சொற்பொழிவுகளை ஆற்றுவதுடன் ஆலயங்களிலும் சமய சொற்பொழிவளராக பணியாற்றி வருகிறார்.

இவர் செஞ்சிலுவைசங்கம், கூட்டுறவுசங்கம், இந்து இளைஞர் பேரவை, அகில இலங்கை காந்திசேவா சங்கம், தமிழ்சங்கம் (கிளிநொச்சி), காந்தியில்லம் (உருத்திரபுரம்), கமக்கார அமைப்பு (சாமிப்புலம்) என பொது அமைப்புகளிலும் பல்வேறு நிலைகளிலிருந்து சமூகபணி புரிந்து வருபவர். பூநகரி பிரதேசசெயலக கலாசாரபேரவையின் தற்போதைய உபதலைவரான இவர் பூநகரி பிரதேசசெயலக வெளியீடான பூந்துணர் சஞ்சிகையிலும் பலகட்டுரைகளை எழுதியுள்ளார். இவரது கலைச்சேவையை பாராட்டி பூநகரி கலாசாரபேரவை "கலைநகரி" விருது வழங்கி கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைநகரி விருதுபெறும் கலைஞர் – 2016



| | | |
|---|---|---|
| பெயர் | : | குமாரசாமி சுழுகலிங்கம் |
| பிறப்பு | : | 04-07-1948 |
| பிறந்த இடம் | : | வேரவில், பூநகரி |
| வதிவிடம் | : | வேரவில், பூநகரி |
| விருதின் தன்மை | : | ஆன்மீகப் பணி |

இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ்/வேரவில் இந்து அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும் உயர்கல்வியை யாழ்/சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் கற்றார். 1974,1975 காலப்பகுதிகளில் தொண்டரா சிரியர் நியமனத்தில் விஞ்ஞான ஆசிரியராக தொழிற்பட்டார். இவர் ஆலயம் தொடர்பான நூல் வெளியீடுகள், சயமசொற்பொழிவுகள், சைவநெறி சார்ந்த இறுவட்டு வெளியீடுகள், மற்றும் ஆலய நிர்வாகப்பணிகள் என பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருபவர். கிளிநொச்சி மாவட்டத்தில் உதவி சாரணர் ஆணையாளராக இருந்துள்ள இவர் தற்போது இலங்கை முதலுதவி சங்கத்தின் தென்மராட்சி உதவி மாவட்ட ஆணையாளராக செயற்பட்டு வருகிறார்.

தென்மராட்சி கல்வி வலயத்தில் சைவ சமய ஆசிரியராக கடமை யாற்றி சைவத் திருமுறைகளை இறுவட்டாக வெளியிட்டிருந்தார். பாடசாலை, ஆலயங்களில் சமய தீட்சை வழங்கல், சமய தீட்சைக்குரிய புத்தகங்களை இலவசமாக வழங்கியமை 2015 ஆம் ஆண்டு உலக சைவத்திருச்சபையின் இலங்கைக்கான தலைமைப்பொறுப்பை ஏற்று இலங்கையின் அனைத்து மாகாணங்களிலும் சைவத்தமிழ் சமூகப்பணிகள், சர்வமதங்களுக்கான பணிகள், மனிதநேயமிக்க சமூகத்தை உருவாக்குதல் முதலிய செயற்றிட்டங் களை மேற்கொண்டு வருபவர். 23.05.2016 அன்று அகில இலங்கை சர்வோதய சங்கம்(யாழ்மாவட்டம்), சர்வோதய தேசியோதய சபை இணைந்து "தேசோதய தீபம்" எனும் விருதைப் பெற்றுக்கொண்டார். இவர் முன்னேஸ்வரம் தேவஸ்தானம் தலயாத்திரை சென்று திருவாசக முற்றோதல், திருவாசக வெளியீடு என்பன செய்யப்பட்டன. சிலா/ வடிவாம்பிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துக்கல்லூரி மாணவர்களுக்கு அதிபர், அசிரியர்களின் ஒத்துழைப்புடன் பரீட்சைகள் நடாத்தி பரிசில்கள், பாராட்டுக்கள் முன்னேஸ்வர தேவஸ் தானத்தில் வைத்து வழங்கப்பட்டது.

2016 துர்மகி வருட நல்லூர் மகோற்சவ பெருவிழா காலத்தில் 25 நாட்கள் 25 சொற்பொழிவாளர்கள் தெரிவு செய்து நல்லூர் முத்தவிநாயகர் அலயத்தில் செற்பொழிவு ஆற்றப்பட்டது. இதில் ஆன்மீக சேவை செய்த 80 வயதிற்கு மேற்பட்ட 8 பேர் சைவநெறி சன்மார்க்க விருதி வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தனர். 01.09.2016 அன்று நயகந்தரனுபூதி எனும் சிறப்பு நூல் வெளியீடு செய்துள்ளார்.

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் மகோற்சவ காலத்தில் 17 நாட்கள் சொற்பொழிவுகள் நடாத்தப்பட்டது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ் சேவையில் விசேட காலங்களில் நற்சிந்தனைகளை ஆற்றியுள்ளார். ஓம் தொலைக்காட்சி, சிவன் தொலைக்காட்சிகளில் இவரது பணிகள் இடம்பெற்றன.

19.09.2016 அன்று கிராஞ்சி மொட்டையன்குள பெரியதம்பிரான் ஆலய கும்பாபிஷேக நிகழ்வுகளை நெறிப்படுத்தி 12 நாள் மண்டலாபிஷேகம் செய்து ஆலய வரலாற்றுடன் சைவசமய வழிபாடு எனும் நூல் வெளியீடு செய்யப் பட்டது. 25.09.2016 கச்சாய் தம்பு தோட்ட ஞானவைரவப்பெருமான் கும்பாபிஷேகத்தின்போது சிறப்புச் சொற்பொழிவு ஆற்றப்பட்டது. அன்று மண்டலாபிஷேக வைரவ சாந்தியின் பொது ஞானவைரவம் எனும் நூல் இவரால் வெளியீடு செய்துள்ளார்.

**இவரால் வெளியிடப்பட்ட நூல்கள் பின்வருமாறு**

1. கபிலானந்தம்
2. கணேச கலசம்
3. அத்திமுகன் அருள் அமிர்தம்
4. சைவவாழ்வியலும் இடர்களை பதிகமும்
5. புகர்முகப் புங்கவன் புகழ்நாதம்
6. சிவசக்தி ஞானனந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. நித்தியகரும விதியும் நமச்சிவாய மாலையும்
8. மங்கலநாதம்
9. ஹரிகர சங்கமம் ஐயப்பன்
10. திருநீலகண்ட சந்திரசேகர தரிசனம்
11. முத்தமாரி அம்மன் தரிசனம்
12. ஹரிகாரானந்தம்
13. சபரிநாதம்
14. கேதாரகௌரி தோத்திரத்திரட்டு
15. முருக வழிபாடு
16. பரமநாதன்
17. சபரி தரிசனம்
18. சாமி ஐயப்பன்
19. மணிகண்ட நாதம்
20. சபரீஷபாஷம்
21. சிவதர்ம சாஸ்தாமிர்தம்
22. சபரி கிரீஸ்வரம் 1,2

இத்தகைய பெருமைவாய்ந்த படைப்பாக்கங்களையும், நற்பணிகளையும் ஆற்றி பிரதேசத்தின் தனித்துவத்தை வெளிப்படுத்தும் ஆன்மீக இலக்கிய பணியைக் கௌரவிக்கும் முகவாக "கலைநகரி" விருது வழங்கப் படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைநகரி விருதுபெறும் கலைஞர் – 2016



பெயர் : மாதர் சுப்பிரமணியம்
பிறப்பு : 11-01-1949
பிறந்த இடம் : ஊர்காவற்றுறை
வதிவிடம் : முழங்காவில், பூநகரி
விருதின் தன்மை : கூத்துக்கலைப் பணி

தனது ஆரம்பக் கல்வியை யாழ்/கரம்பன் சண்முகநாதன் மகாவித்தியாலயத்தில் தரம் 8 வரை கல்வியினை மேற்கொண்டார். இவர் சிறு வயதிலிருந்து கலையில் ஆர்வம் உள்ளவர். பாடசாலைக் காலத்தில் இரண்டு நாடகங்களில் நடித்து மேடையேறினார். பின்னர் தாமகவே சில நாடகங்கள் எழுதி நடித்துள்ளார்.

**அவர் எழுதிய நாடகங்களாவன**

| | |
|---|---|
| மதுக்கிண்ணம் | ஒருதரம் சிந்தித்துப்பார் |
| இலட்சாதிபதி | சங்கிலியன் |
| தாலிமேல் ஆணை | தெய்வநீதி |
| நல்ல சூடு | பாதளத்து பைங்கிளி |
| சமர்ப்பணம் | |

**மேலும் அவர் நடித்த நாடகங்கள் வருமாறு**

| | |
|---|---|
| திருநீலகண்டன் | பாகம் |
| பண்டாரவன்னியன் | வெற்றிவிழிம்பில் |
| பண்டியன் பரிசு | கோவலன் கண்ணகி |
| மார்க்கண்டியன் | இனிநீதிசெய்வோம் |
| தீயின் போர் | காத்தவரயர் |
| கன்னிவயல் | தூக்குமேடை |

இப்பிரதேசத்தின் நடிகரும், நாடக எழுத்தாளருமாகிய இவருடைய சேவையை பாராட்டி பூநகரி கலாசார பேரவை "கலைநகரி" விருதுவழங்கி கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் விருதுபெறும் கலைஞர் – 2016



| | | |
|---|---|---|
| பெயர் | : | தவராசா கௌரீஸ்வரன் |
| பிறப்பு | : | 13-08-1983 |
| பிறந்த இடம் | : | இரணைமாதா நகர் |
| வதிவிடம் | : | இரணைமாதா நகர் |
| விருதின் தன்மை | : | இசையமைப்புப் பணி |

இவர் இரணைமாதா நகர் கிராமஅலுவலர் பிரிவில் வசித்து வருகிறார். 1996இல் நடிகராக கலைப் பணியை தொடர்ந்த இவர் ஓகன் வாத்தியக் கலைஞராக திகழ்பவர், நாடகம், குறும்படம் மற்றும் வானொலி நாடகங்கள் எனப் பல துறைகளில் இசையமைப்பை மேற்கொண்டு வரும் சிறந்த இசையமைப்பாளர் ஆவார். 2012 ஆம் ஆண்டு தென்னிந்தியக் கலைஞர் களுடன் இணைந்து இசையமைப்புக்களை மேற்கொண்டுள்ளார். மேலும் இவர் 50 பக்திப் பாடல்களுக்கு இசையமைத்துள்ளார் என்பதும் குறிப்பிடத் தக்கது. இவர் கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டுமல்லாது மாவட்டத்திற்கு வெளியேயும் யாழ்ப்பாணம், வவுனியா பிரதேசங்களிலும் தனது பணியினைத் தொடர்ந்துவரும் கலைஞர், கலைவளர்ச்சிக்கு பெரிதும் பங்காற்றி வருகின்ற இவரது கலைப்பணியை பாராட்டும் முகமாக முதன் முதலாக இம்முறை "இளங்கலைஞர்" எனும் விருதுவழங்கி கௌரவிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைபெறும் தருணம் விழிபார்க்கும் உங்களுடன்

"திரைகடலோடி திரவியம் தேடு"பூநகரிப் பிரதேசத்தின் பண்பாட்டு எழுத்தியல் வரலாற்றை தொகுத்தளிப்பதற்காக அயராது அரும் பணியாற்றும் பூநகரிப்பிரதேச கலாசார பேரவையின் வருடாந்த வெளியீடாகிய "பூந்துணர்" சஞ்சிகையினை வெளியிடுவதற்கு அருள் தந்த இறைவனுக்கு நன்றி கூறி பல வகைகளிலும் பணியாற்றிய எழுத்தாளர்கள், பேரவையின் உறுப்பினர்கள், நலன் விரும்பிகள், சான்றோர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதோடு "உள்நுழையும் போது ஏற்பட்ட உணர்வுகள் வெளியேறும் போது கசப்பாக அமையாது இனிப்பாக அமைய வேண்டும் என்பது இலக்கிய விருப்பு. கசப்பாக அமைந்தாலும் கலைநயத்தோடு கலந்துரையாடுதல் மானிடத்தின் அழகாகும்". எனவே இம்மலரைப் பிரசவிப்பதற்கு வழிகாட்டிய பிரதேச செயலாளருக்கும் பேரவையினருக்கும், மலர்க்குழுவினருக்கும் நன்றி கூறுவதோடு இம்மலர் தொடர்பாக ஆக்கபூர்வமான விமர்சனங்களையும் கருத்துக்களையும் எதிர் பார்ப்பதுடன் எதிர் காலத்தில் இம்மலரானது வீறு நடை போட்டு பார் போற்ற வெளி வர வேண்டுமென வாழ்த்தி விடை பெறுகின்றோம்.....

**நன்றி**

-மலர்க்குழு-





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Ealilnila
Studio
எழில்நிலா ஸ்ரூடியோ
077 5279742, 076 6581513
ealilnilavideovision23@gmail.com
முழங்காவில், வெள்ளாங்குளம்.


அம்மன் அழகுசாதனப்
புடவையகம்
AMMAN
TEXTILES
தரமான பொருட்களை
மலிவாகப் பெற்றுக் கொள்ளும் இடம்
மன்னார் சாலை, நாச்சிக்குடா,
சந்தை முன்னால்.


விநாயகபுரம் விவசாயிகள் கூட்டுறவுச் சங்கம்
Vinayakapuram Farmers CO-OP Society Ltd.
(பதிவு இல. 154)
முழங்காவில்
Mulankavil.

ation.
rg










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KARACHCHI ☆ PUBLIC LIBRARY ☆ KILINOCHCHI
015173

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவு
சங்கங்களின் சமாசம்
மீன் தீவனம்
படகு கட்டுமானம்
ஜெயபுரம்
பூநகரி.
ஸ்ரீ மாருதி பிறிண்டேர்ஸ் - 0777 917680